
டிசம்பர் 2021


WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

# நடப்பு நிகழ்வுகள்







**1.** Dr கமல் ரணதிவேவுடன் தொடர்புடைய துறை எது?



அ) கதிரியக்க பொருட்கள்

ஆ) கனரக பொறியியல்

**இ) செல் உயிரியல் ☑**

ஈ) ஆயுர்வேதம்

✓ Dr கமல் ரணதிவே ஓர் இந்திய செல் உயிரியலாளராவார். அவர் புற்றுநோய் துறையில் ஆராய்ச்சியை மேற்கொண்டார். இந்திய புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தில் நாட்டின் முதல் திசு வளர்ப்பு ஆய்வகத்தை நிறுவுவதில் முக்கிய அவர் பங்காற்றினார். இந்தியப் பெண் அறிவியலாளர்கள் சங்கத்தை நிறுவுவதில் அவர் முக்கியப் பங்காற்றினார்.

✓ அண்மையில், Dr கமல் ரணதிவேவின் 104ஆவது பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் கூகுள் ஒரு டூடுலை அவருக்காக அர்ப்பணித்தது.

---

**2. உலகின் 2ஆவது பெரிய நிலக்கரித்தொகுதியான தியோச்சா பச்சமி ஹரின்சிங்க தேவாங்கஞ்ச் அமைந்து உள்ள இந்திய மாநிலம் எது?**



அ) ஜார்கண்ட்

**ஆ) மேற்கு வங்கம் ☑**

இ) சத்தீஸ்கர்

ஈ) ஒடிஸா

✓ உலகின் 2ஆவது பெரிய நிலக்கரி சுரங்கமான தியோச்சா பச்சமி ஹரின்சிங்க தேவாங்கஞ்ச் மத்திய அரசால் மேற்கு வங்க மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

✓ மேற்கு வங்க மாநில முதலமைச்சர் மம்தா பானர்ஜி சமீபத்தில் பிர்பூம் மாவட்டத்தில் உள்ள தியோச்சா–பச்சாமி நிலக்கரி சுரங்கத் திட்டத்தால் இடம்பெயர்ந்து அல்லது பாதிக்கப்படும் மக்களுக்கு ₹10,000 கோடி இழப்பீடு வழங்குவதாக அறிவித்தார்.

---

**3. சமீப செய்திகளில் இடம்பெற்ற வருண் தாக்கர் மற்றும் K C கணபதி ஆகியோருடன் தொடர்புடைய விளையாட்டு எது?**



அ) கிரிக்கெட்

ஆ) கபாடி

**இ) படகோட்டம் ☑**

ஈ) கோல்ப்

✓ இந்திய படகோட்டிகள் வருண் தாக்கரும் KC கணபதியும் ஓமனில் நடந்த ஆசிய 49er படகோட்ட சாம்பியன்ஷிப் 2021'இல் தங்கப்பதக்கம் வென்றுள்ளனர்.

✓ இவ்வெற்றியின்மூலம், அவர்கள் 2021 நவம்பரில் நடக்கும் உலக சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் சார்பாக பங்கேற்கவுள்ளனர். இவ்விரட்டையர் அணி நிகழ்வை 10ஆவது இடத்தில் முடித்தது. முதல் 10 இடங்களுக்குள் இருக்கும் ஒரே ஆசிய அணியாக இது உள்ளது.

---

**4. இந்தியக் கடற்படைக் கப்பல் கார்முக், இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே நடைபெறும் 32ஆம் CORPAT பயிற்சியில் பங்கேற்கிறது?**



அ) இலங்கை

ஆ) பிரான்ஸ்

**இ) தாய்லாந்து ☑**

ஈ) ஓமன்

✓ இந்திய கடற்படைக்கும் இராயல் தாய்லாந்து கடற்படைக்கும் இடையிலான இந்தியா–தாய்லாந்து ஒருங்கிணைந்த ரோந்துப் பயிற்சியின் (இந்தோ–தாய் CORPAT) 32வது பதிப்பு 2021 நவம்பர் 12 முதல் 14 வரை நடத்தப்படுகிறது.

✓ இந்தியக் கடற்படைக் கப்பல் (INS) கார்முக், உள்நாட்டில் உருவாக்கப்பட்ட ஏவுகணை கார்வெட் மற்றும் தாய்லாந்தின் HTMS தயான்சோன், இரு கடற்படைகளின் கடற்புற ரோந்து விமானங்கள் ஆகியவை இப்பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. இரு கடற்படைகளும் 2005 ஆம் ஆண்டு முதல் தங்கள் பன்னாட்டு கடல் எல்லைக் கோட்டில் (IMBL) CORPAT'ஐ ஆண்டுக்கு இருமுறை நடத்துகின்றன.

---

**5. குர்பச்சன் சிங் ரந்தாவாவின் வாழ்க்கை வரலாறு சமீபத்தில் வெளியிடப்பட்டது. அவர் சார்ந்த துறை எது?**



**அ) விளையாட்டு ☑**

ஆ) வணிகம்

இ) அரசியல்

ஈ) சமூக சேவை

✓ பஞ்சாப் விளையாட்டு மற்றும் உயர்கல்வி அமைச்சர் பர்கத் சிங், ஒலிம்பிய தடகள வீரர் குர்பச்சன் சிங் ரந்தாவாவின் வாழ்க்கை வரலாறான 'உத்னா பாஸ்' என்ற நூலை வெளியிட்டார். இந்நூலை விளையாட்டுத் துறை எழுத்தாளர் நவ்தீப் சிங் கில் எழுதியுள்ளார்.

✓ அர்ஜுனா விருது பெற்ற முதல் தடகள வீரர் குர்பச்சன் சிங் ரந்தாவா, 1964ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்திய அணியின் கொடியை ஏந்தியவர். அவருக்கு 1961' இல் 'அர்ஜுனா' விருதும், 2005'இல் 'பத்மஸ்ரீ' விருதும் வழங்கப்பட்டது.

---

**6. கீழ்கண்ட எந்த அச்சு ஊடக நிறுவனத்திற்கு, 2021ஆம் ஆண்டிற்கான "செய்தித்தாள்களுக்கான SIREN திட்ட விருது" வழங்கப்பட்டுள்ளது?**

அ) இந்தியா டுடே

**ஆ) தி இந்து ☑**

இ) டைம்ஸ் ஆப் இந்தியா

ஈ) தி ஹிந்துஸ்தான் டைம்ஸ்

✓ முன்னணி தேசிய நாளிதழான – 'தி இந்து'வுக்கு 2021ஆம் ஆண்டிற்கான "செய்தித்தாள்களுக்கான SIREN திட்ட விருது" வழங்கப்பட்டுள்ளது.

✓ SIREN'இன் மதிப்பெண் அட்டையில் நிலையான உயர் செயல்திறன் பெற்றமைக்காக இவ்விருது வழங்கப்பட்டு உள்ளது. மனநலச்சட்டம் மற்றும் கொள்கை மையத்தின் கீழ் இந்திய மனநலக் கண்காணிப்பகத்தால் SIREN

திட்டம் தொடங்கப்பட்டது. இது தற்கொலைபற்றிய ஊடக அறிக்கைகளைக் கண்காணித்து மதிப்பீடு செய்கிறது.

---

**7. ஐநா அவையால், "ஆப்பிரிக்கா தொழில்மயமாக்கல் நாள்" அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ) 20 நவம்பர் ☑**




ஆ) 22 நவம்பர்

இ) 23 நவம்பர்

ஈ) 25 நவம்பர்

✓ ஒவ்வோர் ஆண்டும், நவ.20ஆம் தேதியை "ஆப்பிரிக்கா தொழில்மயமாக்கல் நாளாக" ஐநா அவை அனுசரிக்கிறது.

✓ மேலும் இந்த நாளில் ஆப்பிரிக்காவின் தொழில்மயமாக்க –லின் முக்கியத்துவம் மற்றும் இது தொடர்பான சவால்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த பல்வேறு நிகழ்வுகள் உலகம் முழுவதும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இந்நாள் 1989ஆம் ஆண்டில் ஐநா'ஆல் ஆப்பிரிக்காவிற்கான 2ஆம் தொழிற்துறை வளர்ச்சி பத்தாண்டு (1991–2000) என்ற கட்டமைப்பின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

---

**8. போர் தயார்நிலையை சோதிப்பதற்காக கட்ச்சில் இந்தியா மேற்கொண்ட பிரம்மாண்ட இராணுவப் பயிற்சியின் பெயர் என்ன?**

அ) ஆத்மநிர்பார் ஜவான்



**ஆ) சாகர் சக்தி ☑**

இ) இந்தியா சக்தி

ஈ) தீவிர சக்தி

✓ போர் தயார்நிலையை சோதிப்பதற்காக இந்தியாவால் 'சாகர் சக்தி' என்ற பிரம்மாண்ட இராணுவப் பயிற்சி சமீபத்தில் கட்ச்சில் நடத்தப்பட்டது. கட்ச் தீபகற்பத்தின் கிரீக் செக்டரில் நடத்தப்பட்ட நான்கு நாள் அதி தீவிர இராணுவப் பயிற்சியில் இந்திய ராணுவம், இந்திய கடற்படை, இந்திய விமானப்படை, இந்திய கடலோர காவல்படை, எல்லைப் பாதுகாப்புப் படை, குஜராத் காவல்துறை மற்றும் கடற்புற காவல் படை ஆகியவை பங்கேற்றன. இந்தப் பயிற்சியை இந்திய இராணுவத்தின் தென்படை ஏற்பாடு செய்தது.

---

**9. நிதிநிலைப்புத்தன்மை வாரியத்தின்படி, அமைப்பு ரீதியாக உலகின் முக்கியமான வங்கி எது?**

**அ) JP மோர்கன் சேஸ் ☑**

ஆ) மோர்கன் ஸ்டான்லி

JPMorganChase

இ) கோல்ட்மேன் சாக்ஸ்

ஈ) பேங்க் ஆப் அமெரிக்கா

✓ நிதிநிலைப்புத்தன்மை வாரியத்தின் (FSB) ஒரு சமீபத்திய வருடாந்திர தரவரிசையின்படி, JP மோர்கன் சேஸ் உலகின் மிக முக்கியமான வங்கியாக மாறியுள்ளது.

✓ FSB, G20 நாடுகளின் ஒழுங்காற்றுநர்களால் ஆனதாகும். அது உலகின் முக்கியமான 30 வங்கிகளின் பட்டியலை சமீபத்தில் வெளியிட்டது. BNP பரிபாஸ் மற்றும் கோல்டு மேன் சாக்ஸ் ஆகியவையும் மிகவும் முக்கியமான வங்கியாக கருதப்படுகிறது.

**10. 'தோஸ்தி' என்பது இந்தியாவிற்கும் எந்த நாடு / நாடுகளுக்கு இடையேயான ஒரு கடற்பயிற்சியாகும்?**

அ) இலங்கை



**ஆ) மாலத்தீவுகள் & இலங்கை ☑**

இ) நேபாளம்

ஈ) வங்காளதேசம் & ஜப்பான்

✓ 'தோஸ்தி' என்பது இந்தியா, மாலத்தீவு மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் கடலோரக் காவல்படையினருக்கு இடையே இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் முத்தரப்பு கடற்சார் பயிற்சியாகும். இந்த ஆண்டு 'தோஸ்தி' பயிற்சியின் 15ஆவது பதிப்பு மாலத்தீவில் நவ.20–24 வரை நடத்தப்பட்டது. இந்தியக் கடலோரக் காவல்படை கப்பல்களான ICGS வஜ்ரா மற்றும் ICGS அபூர்வா இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 2020–ல் ஊரடங்கு அமலான முதல் 3 மாதங்களில் – அமைப்புசார் துறையில் வேலைவாய்ப்பு 7.5% சரிவு:**

கரோனா ஊரடங்கு காரணமாக 2020–ம் நிதி யாண்டின் முதல் காலாண்டில் அமைப்புசார் துறைகளில் வேலைவாய்ப்பு 7.5 சதவீதம் சரிந்துள்ளது என்று மத்திய அரசு கூறியுள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இந்தியாவில் கரோனா பரவல் வேகமெடுக்கத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து மார்ச் இறுதி வாரத்தில் நாடு தழுவிய ஊரடங்கை மத்திய அரசு நடைமுறைப்படுத்தியது. இதனால், பல கோடி மக்கள் வேலையிழந்தனர்.

இந்நிலையில், ஊரடங்கின் காரணமாக ஏற்பட்ட வேலையிழப்பு தொடர்பாக மக்களவையில் பாஜக உறுப்பினர் பிரிஜேந்திர சிங் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளிக்கும் விதமாக, திங்கள்கிழமை அன்று நாடாளுமன்றத்தில் மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம், 2020–2021 நிதி ஆண்டின் முதல் காலண்டின் வேலைவாய்ப்பு தொடர்பான அறிக்கையைக் குறிப்பிட்டுக் காட்டியது.

உற்பத்தி, கட்டுமானம், போக்குவரத்து உள்ளிட்ட 9 துறைகளில் வேலைவாய்ப்புப் பெற்றிருந்த இருந்த ஆண்களின் எண்ணிக்கை, சென்ற நிதி ஆண்டின் முதல் காலாண்டில் 2.1 கோடியிலிருந்து 2 கோடியாகவும், பெண்களின் எண்ணிக்கை 90 லட்சத்திலிருந்து 83 லட்சமாகவும் குறைந்துள்ளது என்று மத்திய வேலைவாய்ப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும், ஜூன் மாதத்துக்குப் பிறகு ஏற்பட்ட வேலையிழப்பு தொடர்பான தகவல் இல்லை என்றும் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையானது அமைப்புசார் வேலைகளை மட்டுமே கணக்கில் கொண்டுள்ளது. இந்தியாவில் வெறும் 6.5 சதவீதம் மக்கள் மட்டுமே அமைப்புசார் வேலைகளில் உள்ளனர். 80 சதவீதத்துக்கு மேலான மக்கள் அமைப்புசாரா துறைகளிலே வேலைவாய்ப்பு பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**2. இந்திய ராணுவத்தில் சேர்க்கப்பட்டது: இஸ்ரேலின் அதிநவீன உளவு விமானம்**

இஸ்ரேலின் அதிநவீன ஹெரோன் உளவு விமானங்கள் இந்திய ராணுவத்தில் சேர்க்கப்பட்டு உள்ளன.

ஆளில்லா உளவு விமானங்களை தயாரிப்பதில் அமெரிக்காவும் இஸ்ரேலும் முன்னோடிகளாக உள்ளன. இந்திய ராணுவத்தில் இஸ்ரேலின் ஹெரோன் உளவு விமானங்கள் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ளன. இவை லடாக் எல்லையில் உளவு பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளன.

இந்த சூழலில் மேம்படுத்தப்பட்ட அதிநவீன ஹெரோன் உளவு விமானங்களை இஸ்ரேலிடம் இருந்து மத்திய பாதுகாப்பு அமைச்சகம் வாங்கியுள்ளது. இதன்படி 4 ஹெரோன்கள் இந்திய ராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. சீனராணுவ அச்சுறுத்தல் அதிகரித்து வரும் நிலையில் இவை லடாக் எல்லையில் பறக்க விடப்படவுள்ளன.

நவீன ஹெரோன் உளவு விமானங்கள் 35,000 அடி உயரத்தில் தொடர்ந்து 52 மணி நேரம் பறக்கும் தன்மை கொண்டவை. தற்போது இவை உளவு பணிக்காக மட்டுமே பயன்படுத்தப்பட உள்ளன. நாளடைவில் இந்த உளவு விமானங்கள் மூலம் தாக்குதலும் நடத்தப்படும் என்று ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்காவின் பிரிடேட்டர் வகையை சேர்ந்த 2 உளவு விமானங்களை இந்திய கடற்படை குத்தகைக்கு எடுத்து பயன்படுத்தி வருகிறது. இந்த வகையை சேர்ந்த 30 உளவு விமானங்களை வாங்க அமெரிக்காவுடன் மத்திய அரசு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. அமெரிக்க உளவு விமானங்கள் முப்படைகளிலும் சேர்க்கப்படும் என்று பாதுகாப்புத் துறை வட்டா ரங்கள் தெரிவித்துள்ளன.

---

**3. பலோன் டி'ஆர் விருதை 7-ம் முறை வென்றார் மெஸ்ஸி:**

கால்பந்தின் கவுரமான விருதான பலோன் டி' ஆர் விருது வழங்கும் விழா நேற்று முன்தினம் பிரான்ஸ் தலைநகரான பாரீஸ் நகரில் நடைபெற்றது. இதில் அர்ஜெண்டினா அணியின் நட்சத்திர வீரரான 34 வயதான லயோனஸ் மெஸ்ஸி சிறந்த வீரராக தேர்வு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது. பலோன் டி' ஆர் விருதை மெஸ்ஸி வெல்வது இது 7-வது முறையாகும். இதற்கு முன்னர் 2009, 2010, 2011, 2012 மற்றும் 2015-ம் ஆண்டுகளிலும் அவர் விருதை பெற்றிருந்தார்.

இம்முறை விருதுக்கான இறுதித் தேர்வு வாக்களிப்பின் போது மெஸ்ஸிக்கு வலுவான போட்டியாளராக போலந்து நாட்டின் ராபர்ட் லெவன்டோவ்ஸ்கி திகழ்ந்தார். இவர்களுக்கு அடுத்த இடங்களில் ஜோர்ஜின்ஹோ, கரீம் பென்சிமா, என்'கோலோ காண்டே, கிறிஸ்டியானோ ரொனால்டோ ஆகியோர் இருந்தனர்.

பார்சிலோனா கால்பந்து கிளப்புடன் தனது கால்பந்து வாழ்க்கையை தொடங்கிய மெஸ்ஸி கடந்த ஆகஸ்ட் மாதம் அந்த அணியில் இருந்து விலகி பிரான்ஸில் உள்ள பிஎஸ்ஜி அணியில் இணைந்திருந்தார். மெஸ்ஸி தலைமையிலான அர்ஜெண்டினா அணி இந்த ஆண்டில் கோபா அமெரிக்கா கால்பந்து தொடரில் சாம்பியன் பட்டம் வென்றிருந்தது. பார்சிலோனா கிளப்பில் மெஸ்ஸி தனது இறுதி சீசனில் 48 ஆட்டங்களில் 38 கோல்கள் அடித்திருந்தார்.

---

**3. உயர் பிரிவினருக்கான 10 சதவீத இடஒதுக்கீட்டை ஆய்வு செய்ய 3 பேர் குழு**

பொருளாதாரத்தில் பின்தங்கிய உயர் பிரிவினருக்கு கல்வி, வேலை வாய்ப்பில் ஒன்றிய அரசு 10 சதவீத இடஒதுக்கீடு வழங்கியுள்ளது. இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்து வரும் உச்ச நீதிமன்றம், 'பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கான இடஒதுக்கீடு எந்த அடிப்படையில் அளிக்கப்பட்டது? எந்த அடிப்படையில் அவர்களுக்கான வருமான உச்ச வரம்பு (ஆண்டுக்கு ரூ.8 லட்சம்) நிர்ணயம் செய்யப்பட்டது?' என்று கேள்வி எழுப்பியது. இது பற்றி மறுஆய்வு செய்வதாக உச்ச நீதிமன்றத்தில் கடந்த வாரம் ஒன்றிய அரசு தெரிவித்தது. இந்நிலையில், இது குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிப்பதற்காக ஒன்றிய அரசு நேற்று குழு அமைத்தது. இதில், ஒன்றிய நிதித்துறை முன்னாள் செயலாளர் அஜய் பூஷன் பாண்டே, இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி கவுன்சிலின் உறுப்பினர் செயலாளர் வி.கே.மல்கோத்ரா, ஒன்றிய அரசுக்கான முதன்மை பொருளாதார ஆலோசகர் சஞ்சய் சன்யால் இடம் பெற்றுள்ளனர். தனது அறிக்கையை 3 வாரங்களில் சமர்ப்பிக்கும்படி இக்குழுவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

---

**4. இந்து சமய அறநிலையத்துறை சார்பில் – ஒட்டன்சத்திரம், விளாத்திகுளம், திருச்செங்கோட்டில் 3 புதிய கலை கல்லூரிகள்**

2021-22-ம் ஆண்டு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை மானிய கோரிக்கையில், 10 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, சென்னை கொளத்தூர், நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு, திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம், தூத்துக்குடி மாவட்டம் விளாத்திக்குளம் ஆகிய 4 இடங்களில் பி.காம்., பி.பி.ஏ., பி.சி.ஏ., பி.எஸ்.சி. கம்ப்யூட்டர் சயின்ஸ் ஆகிய 4 பாடப்பிரிவுகளுடன் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கிட உயர்கல்வித்துறையால் அனுமதி அளிக்கப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டது.

முதற்கட்டமாக சென்னை கொளத்தூரில் அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை 2.11.2021 அன்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்

அதன் தொடர்ச்சியாக பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் நிர்வாகத்தின் சார்பாக ஒட்டன்சத்திரம் சின்னயகவுண்டன்வலசில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் கீழ் இணைக்கப்பட்டு அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலை மற்றும் அறிவியல்

கல்லூரி சமய வகுப்புகளுடன் தற்காலிக கட்டிடத்தில் தொடங்கப்பட்டு இருக்கிறது.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் சார்பாக மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் கீழ் இணைக்கப்பட்ட விளாத்திக்குளம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலுக்கு சொந்தமான கட்டிடத்தில் சமய வகுப்புகளுடன் தொடங்கப்பட்டுள்ளது.

திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோவில் நிர்வாகத்தின் சார்பாக பெரியார் பல்கலைக்கழகத்தின் கீழ் இணைக்கப்பட்ட அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதுப்புளியம்பட்டி கிராமத்தில் தற்காலிக கட்டிடத்தில் சமய வகுப்புகளுடன் தொடங்கப்பட்டு இருக்கிறது.

மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

மேற்சொன்ன 3 புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை சென்னை தலைமை செயலகத்தில் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். கிராமப்புற மாணவ–மாணவிகள் உயர்கல்வி பெறுவதற்காகவும், வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார முன்னேற்றத்துக்காகவும் இந்த கல்லூரிகள் பெரிதும் உதவியாக அமையும்.

---

**5. நவம்பர் மாத ஜிஎஸ்டி வசூல் ரூ.1.31 லட்சம் கோடி:**

சரக்கு மற்றும் சேவை வரியாக (ஜிஎஸ்டி) நவம்பர் மாதத்தில் ரூ.1,31,526 கோடி வசூலாகி உள்ளது.

இறக்குமதி பொருட்கள் மீதானசுங்க வரி வசூல் 43% அதிகரித்துள்ளது. ஜிஎஸ்டி வசூல் ஆண்டுதோறும் அதிகரித்து வரும் சூழலில்இப்போது வசூலாகியுள்ள தொகைஎதிர்பார்த்ததைவிட குறைவு என்றுஇக்ரா நிறுவன பொருளாதார நிபுணர் அதிதி நாயர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரலில் ஒட்டுமொத்த மாக வசூலான ஜிஎஸ்டி தொகை ரூ.1,41,384 கோடி. ஆனால் திருத்திய மதிப்பீட்டில் ரூ.1,676 கோடி குறைந்து வசூலான நிகர தொகை ரூ.1,39,708 கோடியாக இருந்தது. அதற்குப் பிறகு 2–வது முறையாக நவம்பர் மாதத்தில் ரூ.1.30 லட்சம் கோடியை ஜிஎஸ்டி வசூல் கடந்துள்ளது.

ஜிஎஸ்டி வசூல் தொகை ரூ.1.3 லட்சம் கோடியைக் கடந்துள்ளபோதிலும் இதில் ரிட்டர்ன் தொகை காலாண்டு முடிவில்தான்கணக்கிடப்பட்டு திருப்பித் தரப்படும். அப்போது வசூலான தொகை குறையும் என நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. வரி வசூல் அதிகரிப்பு பொருளாதாரம் மீண்டு வருவதன் அறிகுறி என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

---

**6. சென்னை–மும்பை அதிவிரைவு ரயிலின் நூற்றாண்டு விழா கொண்டாட்டம்**

சென்னை–மும்பை அதிவிரைவு ரயிலின் (22159–60) நூற்றாண்டு விழா சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் புதன்கிழமை கொண்டாடப்பட்டது. இந்த பிரபலமான ரயில் சேவையானது, 1921–ஆம் ஆண்டு டிச.1–ஆம் தேதி இதே நாளில் மெட்ராஸ்–பம்பாய் விரைவு பாசஞ்சா' ரயிலாக, முதல் இயக்கத்தைத் தொடங்கியது. இந்தப் பயணிகள் ரயில் சேவை கடந்த 1930–ஆம் ஆண்டு மாா'ச் 1–ஆம் தேதியில் இருந்து விரைவு ரயில் சேவையாக மாற்றப்பட்டது. தற்போது, இந்த ரயில் மும்பை சத்ரபதி சிவாஜி மகாராஜ் முனையம்–சென்னை சென்ட்ரல் அதி விரைவு ரயில் என்ற பெயரில் இயக்கப்படுகிறது. இந்த அதிவிரைவு ரயில் 1,284 கி.மீ. தொலைவை கடக்கிறது. சென்னை–மும்பை இடையே 31 ரயில்நிலையங்கள் வழியாக இந்த ரயில் இயக்கப்படுகிறது.

இந்த பிரபல ரயில் சேவையின் நூற்றாண்டு விழா சென்னை சென்ட்ரல் ரயில்நிலையத்தில் புதன்கிழமை கொண்டாடப்பட்டது. சென்னை சென்ட்ரலில் இருந்து மும்பை சிஎஸ்எம்டி–க்கு புறப்பட தயாராக இருந்த ரயிலின் என்ஜின் மற்றும் கடைசி இரண்டு பெட்டிகள் அலங்கரிக்கப்பட்டன. இதையடுத்து, சென்னை ரயில்வே கோட்ட கூடுதல் மேலாளா'கள் ஆா'.ஆனந்த், சச்சின் புனிதா, எஸ்.சுப்ரமணியன் ஆகியோா' முன்னிலையில், ரயில் பயணிகளால் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. தொடா'ந்து, ரயில் பயணிகளுக்கு கேக் வழங்கப்பட்டது.

நூற்றாண்டு ரயிலின் முதல் பயணத்தை குறிப்பிடும் வகையில், மூத்த ஊழியா'கள் கொடியசைத்தனா'. நிகழ்ச்சியில், ரயில்வே அதிகாரிகள், ஊழியா'கள் மற்றும் பயணிகள் கலந்து கொண்டனா'.

---

**7. தமிழகத்தில் எய்ட்ஸ் தாக்கம் 0.18 சதவீதமாக குறைந்தது: மா. சுப்பிரமணியன் பேச்சு**

தமிழகத்தில் 1.13 சதவீதமாக இருந்த எய்ட்ஸ் தாக்கம் தற்போது 0.18 சதவீதமாக குறைந்துள்ளது என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை எழும்பூரில் நடந்த உலக எய்ட்ஸ் தின நிகழ்வில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது:

“ தமிழக முதல்வா' வழிகாட்டுதலின்படி, மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் மூலம் செயல்படுத்தப்படும் எச்.ஐ.வி /எயட்ஸ் பற்றிய விழிப்புணர்வு திட்டங்கள் கடைநிலை மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில் சிறப்பாக செயல்படுத்தப்படுகின்றது. மேலும் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றுள்ளோரை புறக்கணிக்காமல் அரவணைத்துச் செல்லும் நோக்கத்திலும் பல நல திட்டங்கள் தமிழக அரசின் மூலம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழகத்தில் 1.13 சதவீதமாக இருந்த எய்ட்ஸ் தாக்கம் தற்போது 0.18 சதவீதமாக குறைந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை 1988 முதல் டிசம்பர் மாதம் முதல் தேதியை உலக எய்ட்ஸ் தினமாக அனுசரிக்க வேண்டுமென்று முடிவெடுத்து உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் முதல் நாள் உலக எய்ட்ஸ் தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. இந்த

ஆண்டின் உலக எய்ட்ஸ் தின மையக் கருத்து எச்.ஐ.வி / எயட்ஸுடன்

வாழும் மக்களுக்கு ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை முடிவுக்குக் கொண்டு வருவோம்.

இந்திய திருநாட்டின் 75–வது சுதந்திர தின பொன்விழாவினை முன்னிட்டு – 9 மற்றும் 11 வகுப்பு பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணாவை

ஏற்படுத்தும் வகையில் "புதிய இந்தியா எO 75" என்ற தலைப்பில் ஓவியம், இணையதள வினாடி வினா போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் எச்.ஐ.வி. தொற்றை கண்டறிய அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள் மற்றும் வட்டார சுகாதார மையங்களில் 2953 நம்பிக்கை மையங்கள் ஏற்படுத்தப்பட்டு எச்.ஐ.வி. இலவச பரிசோதனைகள் செய்யப்பட்டு,எயட்ஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவாகளுக்கு இலவசமாக மருந்து வழங்கிட 55 கூட்டு மருத்துவ சிகிச்சை மையங்கள் 174 இணை கூட்டு மருத்துவ சிகிச்சை மையங்கள் இயங்கி வருகின்றன.

தாயிடமிருந்து குழந்தைகளைக்கு எய்ட்ஸ் தொற்று பரவுதலை தடுக்கும் பொருட்டு – தேசிய சுகாதார திட்டத்தின் (1/1) கீழ் இனப்பெருக்கம் மற்றும் குழந்தை நலத்திட்டத்துடன் இணைந்து இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

எய்ட்ஸ் தொற்று ஏற்பட அதிகம் வாய்ப்புள்ளவார்கள் கண்டறிந்து தடுப்பு நடவடிக்கை மற்றும் சிகிச்சை அளிக்க "85 இலக்கு பணிகளுக்கான திட்டங்கள்" செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பெண் பாலியல் தொழிலாளர்கள், ஒரினச்சேர்க்கையாளர்கள், போதை ஊசி பயன்படுத்துவோர், தொலைதூர லாரி ஒட்டுநர்கள் என பல்வேறு வகையில் கண்டறிந்து விழிப்புணாவு மற்றும் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எயட்ஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் புறக்கணிக்கப்படக்கூடாது என்ற உயரிய நோக்கில் தமிழக அரசு இக்குழந்தைகளுக்கு உதவி செய்யும் வகையில் – 25கோடி வைப்பு நிதியுடன் தமிழ்நாடு அரசின் அறக்கட்டளை ஏற்படுத்தப்பட்டு, நிதியிலிருந்து பெறப்படும் வட்டித்தொகையைக் கொண்டு, பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு – மருந்து, ஊட்டச்சத்து, கல்வித்தொகை வழங்கப்படுகிறது, மேலும் எய்ட்ஸ் பாதிக்கப்பட்டோருக்கு, இலவச பஸ் பாஸ், விதவைகளுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது’ ’ என்று தெரிவித்தார்.

இந்நிகிழ்ச்சியில் எழும்பூர் சட்டப்பேரவை உறுப்பினா் இ.பரந்தாமன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் முதன்மைச் செயலாளர் மரு.இராதாகிருஷ்ணன்,தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்க இயக்குநர் ஹரிஹரன், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.எஸ்.குருநாதன் மற்றும் உயர் அலுவலா்கள் கலந்து கொண்டனர்.

**1. மத்திய எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் முதலீடுகள் திரும்பப் பெறப்படவுள்ளன. இது எந்த மத்திய அமைச்சகத்தின் கீழ் உள்ள CPSE ஆகும்?**

**அ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

ஆ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

இ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஈ) மின்சார அமைச்சகம்

✓ போட்டி ஏலச்செயல்முறைக்குப்பிறகு, மத்திய எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் முதலீடுகளைத் திரும்பப் பெற மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

✓ மத்திய எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் என்பது அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சி துறையின், அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் உள்ள CPSE ஆகும்.

---

**2. தேசிய தொழிற்துறை வழித்தட மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஆதரவளிப்பதற்காக எந்த நிறுவனம் இந்தியாவுடனான $250 மில்லியன் கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**

அ) ஜஎம்எப்

**ஆ) ஏடிபி ☑**

இ) ஏஐஐபி

ஈ) பிரிக்ஸ் வங்கி

✓ ஆசிய வளர்ச்சி வங்கியும் (ஏடிபி) இந்திய அரசாங்கமும் தேசிய தொழிற்துறை வழித்தட மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஆதரவளிப்பதற்காக $250 மில்லியன் டாலர் கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இத்திட்டம் உலகத் தரம் வாய்ந்த தொழிற்துறை முனையங்களை மேம்படுத்துவதையும், உயர்தர வேலைவாய்ப்பை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**3. இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



அ) சுப்பிரமணியன் சுவாமி

**ஆ) சம்பித் பத்ரா ☑**

இ) லால் சிங் ஆர்யா

ஈ) ஜமால் சித்திக்

✓ பாஜக செய்தித்தொடர்பாளர் சம்பித் பத்ரா, இந்திய சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் தலைவராக அமைச்சரவை நியமனக்குழுவால் நியமிக்கப்பட்டார்.

✓ இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் பதவியை தலைவர், ITDC மற்றும் நிர்வாக இயக்குநர், ITDC எனப் பிரிப்பதற்கான சுற்றுலா அமைச்சகத்தின் முன்மொழிவுக்கு ACC ஒப்புதல் அளித்து உள்ளது. ஐஏஎஸ் அதிகாரியான ஜிகேவி ராவ் ஐடிடிசியின் நிர்வாக இயக்குநராக பதவி வகிப்பார்.

---

**4. பாலஸ்தீன மக்களுடனான சர்வதேச ஒற்றுமை தினம் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ) நவம்பர் 27

**ஆ) நவம்பர் 29 ☑**

இ) நவம்பர் 30

ஈ) டிசம்பர் 1

✓ ஐநா அவை 1978ஆம் ஆண்டு முதல் நவ.29ஆம் தேதியை பாலஸ்தீன மக்களுடனான சர்வதேச ஒற்றுமை தினமாக கடைபிடிக்கிறது. பாலஸ்தீனத்தை இரண்டு நாடுகளாக பிரிப்பதற்கான ஐநா தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதை குறிக்கும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

---

**5. 'ஃபின்டெக் குறித்த சிந்தனை தலைமை மன்றத்தை' இந்தியாவில் நடத்துகிற நிறுவனம் எது?**

அ) RBI

ஆ) NITI ஆயோக்

**இ) IFSCA ☑**

ஈ) SEBI

✓ ஃபின்டெக் குறித்த சிந்தனை தலைமைத்துவ மன்றத்தை பிரதமர் மோடி மெய்நிகராக தொடங்கி வைக்கிறார். GIFT நகரம் மற்றும் புளூம்பெர்க் உடன் இணைந்து சர்வதேச நிதிச்சேவை மையங்கள் ஆணையம் (IFSCA) இந்த 2 நாள் நிகழ்வை நடத்துகிறது.

✓ இந்த மன்றத்தின் முதல் பதிப்பில் இந்தோனேஷியா, தென்னாப்பிரிக்கா மற்றும் UK ஆகியவை பங்குதாரர் நாடுகளாக உள்ளன.

---

**6. உலகின் சிறந்த 300 கூட்டுறவு நிறுவனங்களில் 'நம்பர் ஒன் கூட்டுறவு' தரநிலையில் உள்ள கூட்டுறவு நிறுவனம் எது?**

அ) இந்திய தேசிய கூட்டுறவு ஒன்றியம் லிமிடெட்

**ஆ) இந்திய விவசாயிகள் உர கூட்டுறவு லிமிடெட் ☑**

இ) தேசிய கூட்டுறவு நில மேம்பாட்டு வங்கிகள் கூட்டமைப்பு லிமிடெட்

ஈ) இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு லிமிடெட்

✓ இந்திய விவசாயிகள் உரக் கூட்டுறவு லிமிடெட் (IFFCO) உலகின் முதல் 300 கூட்டுறவு நிறுவனங்களில் 'நம்பர் 1 கூட்டுறவு' என அறிவிக்கப்பட்டுள்ளது. IFFCO நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்து வருகிறது என்பதை இந்தத் தரவரிசை குறிக்கிறது.

---

**7. ஆண்டுதோறும் இந்திய கடற்படை தினம் கொண்டாடப்படுகிற தேதி எது?**




அ) டிசம்பர் 1

**ஆ) டிசம்பர் 4 ☑**

இ) டிசம்பர் 10

ஈ) டிசம்பர் 14

✓ 1971ஆம் ஆண்டு இந்தியா–பாகிஸ்தான் போரின்போது 'ஆபரேஷன் ட்ரைடென்ட்' நடவடிக்கையில் இந்திய கடற்படையின் எதிர்த்தாக்குதலுக்கு மதிப்பளிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் டிச.4ஆம் தேதி இந்திய கடற்படை தினமாக கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு "ஸ்வர்னிம் விஜய் வர்ஷ்" என்ற கருப்பொருளின்கீழ் கடற்படை விழாவை கொண்டாடியது.

---

**8. பெல்ட் அண்ட் ரோடு முன்முயற்சியின் ஒருபகுதியாக சீனா எந்த நாட்டுடன் முதல் எல்லை தாண்டிய ரயில் போக்குவரத்தை தொடங்கியது?**



**அ) லாவோஸ் ☑**

ஆ) ரஷ்யா


இ) பாகிஸ்தான்

ஈ) மலேசியா

✓ பெல்ட் அண்ட் ரோடு முன்முயற்சி, ஒரு பெல்ட் ஒன் ரோடு முன்முயற்சி என்றும் அழைக்கப்படுகிறது, இது சீனாவின் உள்கட்டமைப்பு மேம்பாட்டு உத்தி ஆகும், இது 2013 ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சமீபத்தில், பெல்ட் அண்ட் ரோடு முன்முயற்சியின் ஒரு பகுதியாக சீனா முதல் எல்லை தாண்டிய ரயில் போக்குவரத்தை தொடங்கியது. சீனாவையும் நிலத்தால் சூழப்பட்ட தென்கிழக்கு நாடு லாவோஸையும் இது இணைக்கிறது.

---

**9. 'சென்ட்ரி–II – சிறுகோள் தாக்க கண்காணிப்பு அமைப்பை' உருவாக்கியுள்ள விண்வெளி நிறுவனம் எது?**



அ) ISRO

**ஆ) NASA ☑**

இ) ESA

ஈ) JAXA

✓ NASA வானியலாளர்கள் சமீபத்தில் சென்ட்ரி–II எனப்படும் அடுத்த தலைமுறை தாக்க கண்காணிப்பு அல்காரிதத்தை உருவாக்கியுள்ளனர். இது பூமிக்கு அருகில் உள்ள சிறுகோள்கள் தாக்க நிகழ்தகவுகளை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இப்புதிய அமைப்பு NASA JPL'இன் 'பூமிக்கு அருகில் உள்ள பொருள் ஆய்வுகளுக்கான மையத்தின்' திறன்களை மேம்படுத்துகிறது. இது நமது கிரகத்திற்கு அருகில் வரக்கூடிய சிறுகோள்களின் தாக்க அபாயத்தை மதிப்பிடுகிறது.

---

**10. 'நை மன்சில்', 'சீகோ அவுர் கமாவோ' மற்றும் USTTAD ஆகிய திட்டங்களை செயல்படுத்துகின்ற மத்திய அமைச்சகம் எது?**

அ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

**ஆ) சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகம் ☑**

இ) சமூக நீதி அமைச்சகம்

ஈ) கல்வி அமைச்சகம்

✓ 'நை மன்சில்', 'சீகோ அவுர் கமாவ்' மற்றும் யுஎஸ்டிடிஏடி உள்ளிட்ட பல்வேறு திறன் மேம்பாட்டுத் திட்டங்களை 'மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகம்' செயல்படுத்தி வருகிறது. அவ்வமைச்சகத்தின் கூற்றுப்படி, சிறுபான்மையினருக்கான திறன்மேம்பாட்டு மையத்தின் திட்டங்களின்கீழ் இதுவரை 6.5 இலட்சம் இளைஞர்கள் பயிற்சிபெற்றுள்ளனர்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஓட்டுநா் உரிமம், குடும்ப அட்டை எண்ம முறையில் பெற புதிய வசதி**

ஓட்டுநா் உரிமம், குடும்ப அட்டை ஆகியவற்றின் நகல்களை எண்ம முறையில் பெறும் வசதி செயல்படுத்தப்பட உள்ளது.

இது தொடா்பாக தகவல் தொழில்நுட்பவியல் துறை முதன்மைச் செயலாளா் நீரஜ் மிட்டல் வெளியிட்ட உத்தரவு விவரம்:

எண்ம லாக்கா் முறையை அறிமுகப்படுத்துவது தொடா்பாக தமிழ்நாடு மின் ஆளுமை முகமை இயக்குநா் தரப்பில் இருந்து அரசுக்குக் கடிதம் அனுப்பப்பட்டது. ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களை எண்ம முறைப்படி வழங்கவும், அவற்றைப் பாா்வையிட்டு சரிபாா்த்திடவும் வகை செய்வதே எண்ம (டிஜிட்டல்) லாக்கா் முறையாகும். சான்றிதழ்களை வழங்குநா் என்ற அடிப்படையில் எண்ம லாக்கா் முறையைப் பதிவு செய்து கொள்ளலாம். உதாரணத்துக்கு, வாகன ஓட்டுநா் உரிமம், வாக்காளா் அடையாள அட்டை, குடும்ப அட்டை, மதிப்பெண் சான்றிதழ்கள் ஆகியவற்றின் மின்னணு நகல்களை மக்களுக்கு இந்த எண்ம லாக்கா் முறையின் மூலமாக வழங்கிடலாம். இதனை பொது மக்களின் எண்ம லாக்கருக்கு நேரடியாக அனுப்பும் போது அது மிகவும் பாதுகாப்பான முறையில் இருக்கும் என மின் ஆளுமை முகமையின் இயக்குநா் தெரிவித்துள்ளாா்.

அரசுத் துறைகளிடம் பொது மக்கள் அளிக்கும் இணைய விண்ணப்பங்களை எண்ம லாக்கா் முறையுடன் ஒருங்கிணைக்கலாம். இதன்மூலம் குடிமக்கள் ஆன்லைன் வழியாக விண்ணப்பிக்கும் போது அதற்குத் தேவையான ஆதார ஆவணங்களை எண்ம லாக்கா் வசதியில் இருந்தே எடுத்து இணைத்துக் கொள்ளலாம். இதைக் கருத்தில் கொண்டு அனைத்து அரசுத் துறைகளும் எண்ம லாக்கா் முறையைப் பின்பற்ற உத்தரவிட வேண்டுமென அரசினை மின்ஆளுமை முகமை இயக்குநா் கேட்டுக் கொண்டிருந்தாா்.

அவரது இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, தமிழக அரசின் அனைத்துத் துறைகளும் எண்ம லாக்கா் முறையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதன்மூலம், எண்ம முறையிலான சான்று ஆவணங்களைப் பொது மக்களுக்கு வழங்கிட முடியும். மேலும், நடைமுறையில் உள்ள, வருங்காலத்தில் பயன்படுத்தப்பட வேண்டிய மென்பொருள்களையும் எண்ம லாக்கா் முறையுடன் இணைக்கலாம். எனவே, நடப்பிலுள்ள அனைத்து மென்பொருள்களையும் எண்ம

லாக்கா் முறையுடன் இணைக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இந்தப் பணிக்கான உரிய உதவிகளை தமிழக அரசின் அனைத்துத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், தன்னாட்சி பெற்ற அமைப்புகள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு வழங்கிட வேண்டுமென மின் ஆளுமை முகமை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

---

**2. டேராடூனில் ரூ.18,000 கோடி திட்டங்கள்: டிச.4–இல் பிரதமா் தொடங்கி வைக்கிறாா்**

உத்தரகண்ட் மாநிலம், டேராடூனில் ரூ.18,000 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டங்களை பிரதமா் நரேந்திர மோடி டிசம்பா் 4–ஆம் தேதி தொடங்கி வைக்க இருக்கிறாா்.

ஒரு காலத்தில் மிகவும் தொலைவில் உள்ளவை என்று கருதப்பட்ட பகுதிகளுக்கு போக்குவரத்துத் தொடா்பை அதிகப்படுத்தவும் எளிதாக சென்றடைவதை விரிவுபடுத்தவுமான பிரதமரின் தொலைநோக்குப் பாா்வையின் அடிப்படையில் இந்தத் திட்டங்கள் அமைகின்றன. இதில் தில்லி–டேராடூன் பொருளாதார வழித்தடம் பயண நேரத்தை இரண்டரை மணி நேரமாகக் குறைக்கும்; வன விலங்குகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தாத வகையில் ஆசியாவிலேயே மிகப்பெரிய உயா்மட்ட பாதையாக இது இருக்கும்.

சாா்தாம் உள்ளிட்ட பகுதிகளுக்குத் தடையில்லாப் போக்குவரத்தை அளிப்பதாக சாலைத் திட்டங்கள் தொடங்கப்படுவது சுற்றுலாத் துறையை ஊக்கப்படுத்தும். அடிக்கடி மண்சரிவு ஏற்படும் பகுதியான லம்பாகட் மண்சரிவை கட்டுப்படுத்தும் திட்டம் பயணத்தை சுமுகமாகவும், பாதுகாப்பாகவும் மாற்றும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**3. காகிதமில்லா நிர்வாகத்தை உருவாக்க அனைத்து அரசு துறைகளும் 'டிஜிலாக்கர்' முறையை பயன்படுத்த வேண்டும்**

தகவல் தொழில்நுட்பத்துறை முதன்மைச் செயலாளர் நீரஜ் மிட்டல் வெளியிட்ட அரசாணையில் கூறப்பட்டு இருப்பதாவது:–

மக்களுக்கு ஆவணங்கள், சான்றிதழ்களை மின்னணு (டிஜிட்டல்) முறையில் வழங்குவதற்கும், அதன் மூலம் அரசு அலுவலகங்களில் காகிதத்தின் உபயோகத்தை நீக்குவதற்கும் 'டிஜிலாக்கர்' என்ற புதிய முறையை மத்திய அரசு கடந்த ஆண்டு மார்ச் மாதம் தொடங்கியது.

மின்னணு முறையில் ஆவணங்களையும், சான்றிதழ்களையும் எந்த இடத்தில் இருந்தாலும் மக்கள் பெற்றுக்கொள்ள முடியும். அதுபோல அவற்றை மின்னணு முறையில் சரிபார்க்கவும் முடியும். இதன் மூலம் காகித சான்றிதழ்கள், ஆவணங்களை தூக்கிக்கொண்டு செல்வது தவிர்க்கப்படும்.

இந்த புதிய முறை மூலம் அரசுத்துறைகள் வழங்கும் ஓட்டுனர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, மதிப்பெண் சான்றிதழ்கள், ரேஷன் அட்டைகள், பல்வேறு உரிமங்கள் போன்றவை குடிமக்களின் 'டிஜிலாக்கர்' கணக்கில் சேர்ந்துவிடும்.

இந்த நிலையில் இதுகுறித்து தமிழக அரசுக்கு மின்னாளுமை முகமையின் தலைமை செயல் அதிகாரி கடிதம் எழுதினார். அதில், அனைத்து அரசு துறைகளும் காகிதமில்லா நிர்வாகத்தை முன்னெடுப்பதற்காக 'டிஜிலாக்கர்' முறையை பின்பற்றுவதற்கான அரசாணையை வெளியிட வேண்டும் என்று கோரியுள்ளார்.

மத்திய அரசின் இந்த வேண்டுகோளை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதைத்தொடர்ந்து தமிழக அரசின் அனைத்து துறைகள் மற்றும் அதன் கீழ் வரும் முகமைகளும் 'டிஜிலாக்கரை' பயன்படுத்த உத்தரவிடப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

**4. செயற்கை கருத்தரிப்பு மையங்களை ஒழுங்குபடுத்தும் மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல்**

செயற்கை கருத்தரிப்பு மையங்களை ஒழுங்குபடுத்தும் மசோதா, நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. முறைகேடுகளில் ஈடுபடுபவர்களுக்கு 12 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்க இம்மசோதா வகை செய்கிறது.

மேலும், நாடு முழுவதும் உள்ள செயற்கை கருத்தரிப்பு மையங்களை ஒழுங்குபடுத்தவும், மேற்பார்வையிடவும் அந்த மையங்களுக்கும், இத்துறை சார்ந்த மருத்துவ நிபுணர்களுக்கும் தேசிய பதிவு ஆணையம் அமைக்க இந்த மசோதா வழி வகுக்கிறது.

மசோதாவை தாக்கல் செய்து மத்திய சுகாதார மந்திரி மன்சுக் மாண்டவியா பேசியதாவது, "நாடு முழுவதும் ஏராளமான செயற்கை கருத்தரிப்பு மையங்கள், எவ்வித ஒழுங்கு விதிகளுக்கும் உட்படாமல் இயங்கி வருகின்றன. செயற்கை கருத்தரிப்புக்கு வரும் தம்பதிகளின் உடல்நிலையில் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். எனவே, இத்தகைய மசோதாவை கொண்டு வருவது அவசியம் ஆகிறது.

இந்த மசோதா, கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தாக்கல் செய்யப்பட்டது. நிலைக்குழு பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. நிலைக்குழு பல்வேறு சிபாரிசுகளை தெரிவித்தது. மத்திய அரசு அவற்றை பரிசீலித்து, இறுதியாக இம்மசோதாவை உருவாக்கி இருக்கிறது"

இவ்வாறு அவர் பேசினார்.

இதுகுறித்து பா.ஜனதா எம்.பி. ஹீனா கேவிட் பேசியதாவது, "80 சதவீத செயற்கை கருத்தரிப்பு மையங்கள் பதிவு செய்யப்படவில்லை. செயற்கை கருத்தரிப்பு மையங்களுக்கும், கருமுட்டை, விந்தணு வங்கிகளுக்கும் குறைந்தபட்ச நன்னடத்தை விதிமுறைகள், இம்மசோதாவில் இடம்பெற்றுள்ளன.

செயற்கை கருத்தரிப்புக்கு வரும் தம்பதிகளின் விவரங்கள் ரகசியமாக வைக்கப்படும். கருமுட்டை

தானமாக வழங்குபவர்கள், அதை பெறுபவர்களும் மசோதாவின் வரம்புக்குள் கொண்டுவரப்படுவார்கள்.

கருமுட்டை விற்பனையில் ஈடுபடுபவர்கள், முதல் தடவை தவறு செய்திருந்தால் ரூ.10 லட்சம் அபராதம் விதிக்கப்படும். மறுபடியும் பிடிபட்டால், அவர்களுக்கு 12 ஆண்டுகள் வரை சிறை தண்டனை கிடைக்கும்".

---

**5. 1975ம் ஆண்டு வரையிலான வில்லங்கச் சான்றுகளை ஆன்லைனில் பெறலாம்**

பொதுமக்கள் நேரில் சென்று விண்ணப்பம் அளிப்பதில் உள்ள சிரமத்தை கருத்தில் கொண்டு 1975ம் ஆண்டு வரையிலான வில்லங்க சான்றுகளை ஆன்லைன் மூலம் பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது. தமிழக அரசின் வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் ஜோதி நிர்மலாசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி வழிகாட்டுதலின்படி பதிவுத்துறையின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காக அத்துறையில் பல சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது 1975ம் ஆண்டு முதல் நாளது தேதி வரையிலான காலத்திற்கான வில்லங்கச் சான்றுகள் விரைவுக்குறியீடு மற்றும் சார்பதிவாளரின் மின்கையொப்பமிட்டு அலுவலகம் வராமல் ஆன்லைன் வழி வழங்கப்பட்டு வருகிறது.

ஆவணத்தில் உள்ள விவரத்திற்கும் வில்லங்கச்சான்றில் உள்ள விவரத்திற்கும் ஏதேனும் மாறுபாடுகள் இருக்கும் பட்சத்தில் பொதுமக்கள் சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு நேரில் சென்று உரிய சான்றுகளுடன் விண்ணப்பங்களை அளிக்கும் நடைமுறை தற்போது உள்ளது. இதனால் பொதுமக்களுக்கு காலவிரயமும் சிரமமும் ஏற்படுகிறது. நேரில் சென்று விண்ணப்பம் அளிப்பதில் உள்ள சிரமத்தை கருத்தில் கொண்டு வில்லங்கச்சான்றில் உள்ள விவரங்களில் திருத்தங்கள் செய்ய ஆன்லைன் வழி விண்ணப்பிக்கும் புதிய நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. வில்லங்கச்சான்றில் உள்ள விவரங்களில் திருத்தங்கள் செய்ய பதிவுத்துறையின் இணையதளத்தில் 'அட்டவணை தரவு திருத்தம்' என்பதன் வழி சென்று ஆன்லைன் வழி விண்ணப்பிக்க பொதுமக்கள் கோரப்படுகிறார்கள். விண்ணப்பங்கள் ஆன்லைன் வழி பெறப்பட்டு சார்பதிவாளரால் சரி பார்க்கப்பட்டு மாவட்டப்பதிவாளரின் ஒப்புதலுடன் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.

---

**6. ஓய்வு பெற்றார் கோன்டா**

இங்கிலாந்து டென்னிஸ் வீராங்கனை ஜோகன்னா கோன்டா (30), தொழில்முறை டென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக நேற்று அறிவித்துள்ளார். காயம், அறுவை சிகிச்சை காரணமாக போட்டிகளில் பங்கேற்பதில் சிரமப்பட்டு வந்ததால் உலக தரவரிசையில் 4வது இடத்தில் இருந்து 113வது இடத்துக்கு தள்ளப்பட்டார். பிரிட்டனின் முன்னாள் நம்பர் 1 வீராங்கனையான கோன்டா, 4 கிராண்ட் ஸ்லாம் போட்டிகளிலும் தலா ஒருமுறை அரையிறுதி வரை முன்னேறியுள்ளார். டபுள்யூடிஏ தொடர்களில் 4 முறை சாம்பியன் பட்டங்களை வென்றுள்ளார்.

---

**7. உலகின் செலவு மிக்க நகரம் முதலிடத்தில் இஸ்ரேலின் டெல் அவிவ்**

இஸ்ரேலின் கடற்கரை நகரமான டெல் அவிவ், மக்களின் அன்றாட வாழ்விற்கு அதிகம் செலவிட வேண்டிய நகரமாக மாறியுள்ளதாக ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது.மத்திய கிழக்கு நாடான இஸ்ரேலின், 'எக்கனாமிஸ்ட்' என்ற பத்திரிகையின் பொருளாதார புலனாய்வு பிரிவு ஆய்வு அறிக்கையை சமீபத்தில் சமர்ப்பித்தது.

அதன் விபரம்:இஸ்ரேலின் கடற்கரை நகரமான டெல் அவிவ், வாழ்வதற்கு மிகவும் அதிகமாக செலவிட வேண்டிய நகரமாக மாறி வருகிறது. இந்த பட்டியலில் உலக அளவில் ஐந்தாவது இடத்தில் இருந்த டெல் அவிவ், தற்போது முதல் இடத்துக்கு வந்துள்ளது. பிரான்சின் பாரிஸ், சிங்கப்பூர் உள்ளிட்ட நகரங்களை விட டெல் அவிவில் அனைத்து பொருட்களின் விலையும் கடுமையாக அதிகரித்துள்ளது.

அமெரிக்க டாலருக்கு எதிரான இஸ்ரேலின் கரன்சியான ஷெகல் உயர்ந்து வருவதே இந்த விலை உயர்வுக்கு காரணம்.மளிகை மற்றும் போக்குவரத்து செலவுகள் இந்த நகரில் மிகவும் விலை உயர்ந்ததாக உள்ளது. இங்கு வசிப்பவர்கள் வீட்டு வாடகை செலுத்தி எளிமையான வாழ்க்கை வாழ்வதே கடும் சிரமமாக மாறி வருகிறது. இஸ்ரேலின் பொருளாதார மற்றும் கலாசார மையமான டெல் அவிவ் மாறி வருவதால், மிகப் பெரிய கார்ப்பரேட் நிறுவனங்கள் இங்கு உள்ளன.அழகிய நீண்ட கடற்கரை, உலக தரம் வாய்ந்த உணவகங்கள் இங்கு உள்ளன.

இதனால், இந்த நகரில் வசிப்பதை மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். ஷெகலின் மதிப்பு உயர்ந்து வருவதால், வெளிநாட்டு முதலீடும் இஸ்ரேலில் அதிகரிக்க துவங்கி உள்ளன. இதன் காரணமாக அதிநவீன நகரமாக டெல் அவிவ் மாறி உள்ளது.டெல் அவிவ் நகரில் வீடு வாங்குவது, இஸ்ரேல் மக்களால் முடியாத காரியமாகி வருகிறது. இங்கு, வீட்டின் விலை சராசரியாக 9 கோடி ரூபாய் வரை உள்ளன.இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

---

**1.** **2021இல் சர்வதேச அம்பேத்கர் மாநாட்டை நடத்துகிற நகரம் எது?**



அ) புனே

**ஆ) புது தில்லி ☑**

இ) வாரணாசி

ஈ) சென்னை

✓ சர்வதேச அம்பேத்கர் மாநாடு, இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தால் சமீபத்தில் புது தில்லியில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த மாநாட்டை எஸ்சி மற்றும் எஸ்டி சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மன்றமும் Dr அம்பேத்கர் வர்த்தக சபையும் ஏற்பாடு செய்துள்ளது.

---

**2.** **IMF'இன் முதல் துணை நிர்வாக இயக்குநராக நியமிக்கப்படவுள்ள இந்தியப் பொருளாதார நிபுணர் யார்?**



அ) உர்ஜித் படேல்

ஆ) ரகுராம் ராஜன்

**இ) கீதா கோபிநாத் ☑**

ஈ) உஷா தோரத்

✓ இந்தியாவில் பிறந்த, சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) முதல் பெண் தலைமைப் பொருளாதார நிபுணர் கீதா கோபிநாத், முதல் துணை நிர்வாக இயக்குநராக பொறுப்பேற்க உள்ளார். அவர் ஜெஃப்ரி ஒகமோட்டோவின் பாத்திரத்தை ஏற்கவுள்ளார்.

---

**3.** **விமான நிலையங்களில் பயன்படுத்தப்படவுள்ள இந்தியாவின் முதல் பயோமெட்ரிக்ஸ் அடிப்படையிலான டிஜிட்டல் செயலாக்க அமைப்பின் பெயர் என்ன?**




அ) டெக் யாத்ரா

**ஆ) டிஜி யாத்ரா ☑**

இ) டெக்னோ போர்டிங்

ஈ) டிஜி போர்டிங்

✓ இந்திய விமான நிலையங்கள் ஆணையம் (AAI) நாட்டின் முதல் முக அங்கீகார தொழில்நுட்பம் சார்ந்த பயோமெட்ரிக் போர்டிங் சிஸ்டத்தில் செயல்பட்டு வருவதாக உள்நாட்டு விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் வி கே சிங் அறிவித்தார். வாரணாசி, புனே, கொல்கத்தா & விஜயவாடா விமான நிலையங்களில் பயணிகளுக்காக இது சோதனை முறையில் செயல்படுத்தப்பட உள்ளது.

✓ இந்த பயோமெட்ரிக் போர்டிங் சிஸ்டம் 'டிஜி யாத்ரா' திட்டத்தின் முதல் கட்டத்தின் ஒருபகுதியாகும். இந்த அமைப்பு வரும் 2022ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தொடங்கப்படவுள்ளது.

---

**4.** **பின்வரும் எந்த மத்திய அமைச்சகத்தால், 'SRESHTA' திட்டம் தொடங்கப்பட உள்ளது?**

அ) கல்வி அமைச்சகம்

**ஆ) சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑**

இ) பழங்குடியினர் விவகார அமைச்சகம்

ஈ) சிறுபான்மை விவகார அமைச்சகம்

✓ சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் இலக்குப் பகுதிகளில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்கான குடியிருப்புக்கல்வி (SRESHTA) திட்டத்தைத் தொடங்க உள்ளது.

✓ இந்தத் திட்டம், பட்டியல் சாதி மாணவர்களின் சமூக–பொருளாதார மேம்பாடு மற்றும் ஒட்டுமொத்த மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

---

**5.** **'நிஜாமுதீன் பஸ்தி' என்பது எந்த இந்திய மாநிலம் / யூனியன் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு பாதுகாப்புத் திட்டமாகும்?**



அ) உத்தர பிரதேசம்

**ஆ) புது தில்லி ☑**


இ) பீகார்

ஈ) ஜம்மு காஷ்மீர்

✓ இந்திய தலைநகரத்தில் உள்ள 'நிஜாமுதீன் பஸ்தி'யில் பாதுகாப்பு முன்னெடுப்புகளுக்காக UNESCO சிறப்பு மற்றும் நிலையான வளர்ச்சிக்கான சிறப்பு அங்கீகார விருதை வழங்கியுள்ளது. நிஜாமுதீன் பகுதி ஹஸ்ரத் நிஜாமுதீன் பஸ்தியில் உள்ள பல நூற்றாண்டுகள் பழைமையான ஹுமாயூன் கல்லறை உள்ளிட்ட உலக பாரம்பரிய தளத்தை உள்ளடக்கியதாகும்.

---

**6.** **உலக எய்ட்ஸ் நாள் கடைப்பிடிக்கப்படும் தேதி எது?**




**அ) டிசம்பர் 01 ☑**

ஆ) டிசம்பர் 02

இ) டிசம்பர் 03

ஈ) டிசம்பர் 04

✓ உலகின் மிகக்கொடிய நோய்களுள் ஒன்றான AIDS (Acquired Immune Deficiency Syndrome) HIV (Human Immuno–deficiency Virus) என்னும் வைரஸால் ஏற்படுகிறது. இது மனித உடலின் வெள்ளை இரத்தவணுக்களை அழிக்கிறது. பின் நோயெதிர்ப்பு மண்டலத்தை தாக்கி, நோய்க்கெதிராக உடல் போராடமுடியாத நிலையை உண்டாக்குகிறது. இறுதியில் மரணத்தை நிகழ்த்துகிறது.

✓ இந்த நோய் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் டிச.1 அன்று உலக எய்ட்ஸ் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. "End Inequalities, End AIDS" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**7.** **சர்வதேச அடிமைமுறை ஒழிப்பு நாள் அனுசரிக்கப்படும் தேதி எது?**




அ) டிசம்பர் 01

**ஆ) டிசம்பர் 02 ☑**

இ) டிசம்பர் 10

ஈ) டிசம்பர் 14

✓ சர்வதேச அடிமைமுறை ஒழிப்பு நாள் (International Day for the Abolition of Slavery) ஐநா பொது அவையால்

அறிவிக்கப்பட்டு ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர்.2 அன்று கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த நாள் முதன்முதலில், கடந்த 1986ஆம் ஆண்டு கடைப்பிடிக்கப்பட்டது.

---

**8. இந்தியாவில் தேசிய பால் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

**அ) நவம்பர் 26 ☑**

ஆ) நவம்பர் 30

இ) டிசம்பர் 15

ஈ) டிசம்பர் 26




✓ இந்திய 'வெண்மைப்புரட்சியின் தந்தை'யான Dr வர்கீஸ் குரியனின் பிறந்தநாளைக்குறிக்கும் வகையில் ஆண்டு தோறும் நவ.26 அன்று தேசிய பால் நாள் கொண்டாடப்-படுகிறது. பால் உற்பத்தியில் உலகளவில் ஐம்பதாவது இடத்திலிருந்த இந்தியாவை, சில பத்தாண்டுகளிலேயே மிகப்பெரிய பால் உற்பத்தியாளராக மாற்றிய உலகின் மிகப்பெரிய பால் வளர்ச்சித்திட்டமான 'Operation Flood'ஐ உருவாக்கியவர் Dr வர்கீஸ் குரியன் ஆவார்.

---

**9. நடப்பாண்டில் (2021) வரும் சர்வதேச மாற்றுத்திறனா-ளிகள் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ) Empowering persons with disabilities

**ஆ) Leadership and participation of persons with disabilities toward an inclusive, accessible and sustainable post–COVID–19 world ☑**

இ) Transformation towards sustainable and resilient society for all

ஈ) Ensuring inclusiveness and equality

✓ மக்கள் அனைவரும் மாற்றுத்திறனாளிகளின் பிரச்சனைகளைப் புரிந்துகொள்வதற்கும், அவர்களுக்கு மேன்மையும், உரிமைகளும் வழங்கப்படவேண்டும் என்ற நோக்கத்துக்குமாக ஐநா அவை ஆண்டுதோறும் டிச.3 அன்று சர்வதேச மாற்றுத்திறனாளிகள் நாளை அனுசரிக்கிறது. 1992ஆம் ஆண்டு டிச.3 அன்று ஐநா இந்நாளை அறிவித்தது.

✓ நடப்பாண்டில் (2021) வரும் இந்த நாளுக்கான கருப் பொருள், "Leadership and participation of persons with disabilities toward an inclusive, accessible and sustainable post–COVID–19 world" என்பதாகும்.

---

**10. தேசிய மாணவர் படையின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?**

அ) மும்பை

**ஆ) புது தில்லி ☑**

இ) முசோரி

ஈ) அகமதாபாத்



✓ தேசிய மாணவர் படை (NCC) என்பது இந்தியாவின் புது தில்லியில் தலைமையகத்தைக் கொண்டுள்ள இந்திய ஆயுதப்படைகளின் இளைஞர் பிரிவு ஆகும். NCC என்பது உலகின் மிகப்பெரிய சீருடை அணிந்த இளைஞர் அமைப்பாகும். இது சமீபத்தில் அதன் 73ஆவது ஆண்டு நிறைவை நவ.28 அன்று அனுசரித்தது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வங்கக் கடலில் உருவானது ஜாவத் புயல்!**

வங்கக் கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்தது. அந்தமான் அருகே நிலைகொண்டிருந்த இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமானது புயலாக வலுப்பெறும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியிருந்தது. இந்த புயலுக்கு ஜாவத் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. இந்தப் புயலுக்கான பெயரை சவூதி அரேபியா வழங்கியுள்ளது.

இந்த நிலையில், மத்திய மேற்கு வங்கக்கடலில் ஜாவத் புயல் உருவானதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஜாவத் புயல் மத்திய மேற்கு வங்கக் கடலில் நிலை கொண்டுள்ளதாகவும், டிசம்பர் 5 ஆம் தேதி வடக்கு ஆந்திரா – ஒடிசா இடையே கரையைக் கடக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புயல் கரையைக் கடக்கும் போது மணிக்கு 100 கிலோ மீட்டர் வேகத்தில் சூறாவளிக் காற்று வீசும் எனவும், கனமழை பெய்யும் எனவும் இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

---

**2. 14–வது சர்வதேச மெஷின் டூல்ஸ் கண்காட்சி**

அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர் சங்கத்தில் 14–வது சர்வதேச மெஷின் டூல்ஸ் கண்காட்சியை அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, தா.மோ.அன்பரசன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இதுகுறித்து தமிழக அரசு இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

"சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்று (9.12.2021) அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் சார்பில் ACMEE 2021 14–வது சர்வதேச மெஷின் டூல்ஸ் கண்காட்சி நடைபெற்றது.

இதில் தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் கலந்துகொண்டு கண்காட்சியைத் தொடங்கி வைத்தனர். மேலும் கண்காட்சியில் இடம்பெற்று இருந்த பொருட்களைப் பார்வையிட்டனர்.

இந்நிகழ்வில், அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் மற்றும் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்."

இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.

---

**3. இந்திய கலாசார திட்டத்துக்கு யுனெஸ்கோவின் இரட்டை விருது**

தில்லியின் நிஜாமுதீன் பஸ்தி சமூகத்தினரின் கலாசார மரபுப் பாதுகாப்புத் திட்டத்துக்கு யுனெஸ்கோவின் 2 விருதுகள் கிடைத்துள்ளன.

ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் சிறப்பான மரபுப் பாதுகாப்புத் திட்டம், நீடித்த வளா்ச்சிக்கான திட்டம் ஆகிய இரு பிரிவுகளின் கீழ் இந்தத் திட்டத்துக்கு யுனெஸ்கோவின் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மக்கள் – அரசு – தனியாா் கூட்டணியின் மூலம் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் அபார வெற்றியடைந்துள்ள நிஜாமுதீன் பஸ்தி பாதுகாப்புத் திட்டம் யுனெஸ்கோ நடுவா்களை மிகவும் கவா்ந்துள்ளது.

மிகப் பெரிய சமூக–பொருளாதார சவால்களை எதிா்கொண்டாலும், பெண்கள், இளைஞா்கள் உள்ளிட்ட நிஜாமுதின் பஸ்தி சமூகத்தினரின் சுகாதாரம், கல்வி, நல்வாழ்வு ஆகியவற்றை இந்தத் திட்டம் மேம்படுத்தியிருக்கிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தில்லியில் பல நூற்றாண்டுகளாக வசித்து வரும் நிஜாமுதீன் பஸ்தி சமூகத்தினரின் கலாசார மரபைப் பாதுகாப்பதுடன், அவா்களது வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துவதற்காக பல்வேறு தன்னாா்வ அமைப்புகளும் நகர நிா்வாகம், தொல்லியல் துறை ஆகியவையும் இணைந்து கடந்த 2007–ஆம் ஆண்டிலிருந்து இந்த திட்டத்தை செயல்படுத்தி வருகின்றன.

---

**4. உதவித் தொகைகள், நலத் திட்ட உதவிகள் வழங்கும் வகையில் பத்திரிகை நல வாரியம் உருவாக்கம்: செய்தி துறை அமைச்சர் சாமிநாதன் தலைமையில் குழு அமைப்பு**

பத்திரிகையாளர்களின் நலன் காக்கும் வகையில் பத்திரிகையாளர்நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் குழுவையும் அமைத்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து செய்தித் துறை செயலர் மகேசன் காசிராஜன் வெளியிட்ட அரசாணையில் கூறியிருப்பதாவது:

'உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அனைத்து திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்துவதுடன், நல வாரிய உதவித் தொகைகள், நலத்திட்ட உதவிகள் அளிக்கும் வகையில் பத்திரிகையாளர்கள் நல வாரியம் அமைக்கப்படும்' என்று சட்டப்பேரவையில் செய்தித் துறை அமைச்சர் கடந்த செப்.6–ம் தேதி அறிவித்தார்.இதையடுத்து, பத்திரிகையாளர் நல வாரியம் அமைத்து ஆணையிடப்படுகிறது. நலிவுற்ற பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நலத்திட்ட உதவிகளுடன், பின்வரும் நலத்திட்ட உதவிகள் நல வாரியம் மூலம் வழங்கப்படும். குறிப்பாக கல்வி உதவித் தொகையாக 10–ம் வகுப்பு படிக்கும் பெண் குழந்தைகள், 10–ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற ஆண், பெண் குழந்தைகள், 11–ம்வகுப்பு படிக்கும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1,000 வழங்கப்படும்.

மேலும், 12–ம் வகுப்பு படிக்கும் பெண் குழந்தைகள், 12–ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மகன், மகள், முறையான பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு ரூ.1,500, விடுதியில் தங்கி பட்டப்படிப்பு படிப்பவர்களுக்கு ரூ.1,750,முறையான பட்ட மேற்படிப்பு பயில்பவர்களுக்கு ரூ.2,000, விடுதியில் தங்கிப் படிப்பவர்களுக்கு ரூ.3,000, தொழில்நுட்ப பட்டப் படிப்புக்கு ரூ.2,000, விடுதியில் தங்கிப் படிப்பவர்களுக்கு ரூ.4,000, தொழில்நுட்ப பட்ட மேற்படிப்பு படித்தால் ரூ.4,000, விடுதியில் தங்கிப் படித்தால் ரூ.6,000, ஐடிஐ, பாலிடெக்னிக் படிப்பவர்களுக்கு ரூ.1,000,விடுதியில் தங்கி படித்தால் ரூ.1,200வழங்கப்படும்.

திருமண உதவித் தொகை

இதுதவிர, திருமணத்துக்கு ரூ.2,000, மகப்பேறுக்கு ரூ.6,000,கருக்கலைப்பு, கருச்சிதைவுக்கு ரூ.3,000, கண் கண்ணாடிக்குரூ.500, இயற்கை மறைவு உதவித்தொகையாக ரூ.50 ஆயிரம், ஈமச்சடங்கு உதவித் தொகையாக ரூ.5ஆயிரம் வழங்கப்படும்.

மேலும், பத்திரிகையாளர் நல வாரிய உதவித் திட்டங்களை பரிசீலித்து செயல்படுத்த செய்தித் துறை அமைச்சரை தலைவராகவும், 7 பேரை அலுவல் சார்ந்த உறுப்பினர்களாகவும்,6 பேரை அலுவல் சாரா உறுப்பினர்களாகவும் கொண்ட குழுஅமைக்கப்படும்.

விளம்பரக் கட்டணத்தில்..

நல வாரியத்துக்கு நிதி ஆதாரம் திரட்ட, அரசு விளம்பரங்களுக்கான விளம்பர கட்டணத்தில் 1 சதவீத தொகை, நல வாரியத்துக்கு வழங்கப்படும். நடைமுறையில் உள்ள பத்திகையாளர் ஓய்வூதிய பரிசீலனைக் குழு கலைக்கப்பட்டு, நல வாரிய உதவித் திட்டங்களுக்கு அமைக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்டு புதிய பரிசீலனைக் குழு அமைக்கப்படும். இந்த நடவடிக்கைகள் அனைத்தும் நீதிமன்ற உத்தரவின்படி, அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு ஊடக மன்றத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாகும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

**5. சிபிஐ, அமலாக்க துறைகளின் – இயக்குநர் பதவிக் காலத்தை 5 ஆண்டாக நீட்டிக்கும் மசோதா :**

மத்திய புலனாய்வு அமைப்பு களான சிபிஐ, அமலாக்கத் துறை இயக்குநர்களின் பதவிக் காலம் 2 ஆண்டுகளாக இருந்தது. அந்த பதவிக் காலத்தை 5 ஆண்டுகளாக நீட்டிக்க கடந்த நவம்பர் 14–ம் தேதி அவசர சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன.

இந்த அவசர சட்டங்களுக்கு மாற்றாக மசோதாக்கள் மக்கள வையில் நேற்று அறிமுகம் செய்யப் பட்டது. மத்திய பணியாளர் நலத் துறை இணை யமைச்சர் ஜிதேந்திர சிங் இரு மசோதாக்களையும் தாக்கல் செய்தார்.

இந்த மசோதாக்களுக்கு எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். காங்கிரஸ் எம்.பி. சசி தரூர் கூறும்போது, "உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை மீறி சிபிஐ, அமலாக்கத் துறை இயக்குநர்களின் பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது" என்று குற்றம் சாட்டினார்.

திரிணமூல் காங்கிரஸ் எம்.பி. சவுகதா ராய் கூறும்போது, சிபிஐ, அமலாக்கத் துறையை மத்திய அரசு கைப்பாவையாக பயன்படுத்தி வருகிறது. இரு அமைப்புகளையும் ஏவி எதிர்க்கட்சி களை மத்திய அரசு பழிவாங்கி வருகிறது. இதன் ஒரு பகுதியாக இயக்குநர்களின் பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது" என்று குற்றம் சாட்டினார்.

மேலும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.பி.க்கள் சுரேஷ், ஆதிர் ரஞ்சன் சவுத்ரி உள்ளிட்டோரும் மசோதாக் களுக்கு எதிராக பேசினர். –பிடிஐ

---

**6. முன்மாதிரி முயற்சியாக ஆளில்லா விமான கழகம்: அரசாணை வெளியீடு**

தமிழகத்தில் ஆளில்லா விமான (ட்ரோன்) கழகம் தொடங்குவதற்கான அரசாணையை உயா்கல்வித்துறை முதன்மைச் செயலா் டி.காா்த்திகேயன் பிறப்பித்துள்ளாா்.

தமிழக நிதி அமைச்சா் பழனிவேல் தியாகராஜன் 2021–2022–ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் உரையில், புதிய முன்மாதிரி முயற்சியாக 'ஆளில்லா விமானங்களுக்கென (ட்ரோன்), தமிழ்நாடு 'ஆளில்லா விமான கழகம்' ஒன்று அண்ணாபல்கலைகழகத்தின் சென்னை தொழில்நுட்ப நிறுவனம் (எம்ஐடி) உடன் இணைந்து தொடங்கப்படும். இந்த நிறுவனம், தமிழ்நாடு மட்டுமல்லாது, பிற மாநிலங்களிலும் உள்ள அரசு மற்றும் அரசு சாா்ந்த முகமைகள் ஆளில்லாத விமானங்களை பயன்படுத்துவதற்கு உறுதுணையாக இருக்கும்' எனத் தெரிவித்திருந்தாா்.

இந்தநிலையில், ஆளில்லா விமான கழகம் தொடங்குவதற்கான அரசாணையை உயா்கல்வித்துறை முதன்மைச் செயலா் டி.காா்த்திகேயன் பிறப்பித்துள்ளாா். அதில் கூறியிருப்பதாவது: அண்ணாபல்கலைகழகத்தின் சென்னை தொழில்நுட்ப நிறுவனத்துடன் (எம்ஐடி) இணைந்து தமிழகத்தை ட்ரோன் தலைநகராக மாற்ற ஆளில்லா விமான கழகம் உருவாக்கப்படுகிறது.

இந்த கழகத்தின் தலைவராக உயா்கல்வித்துறை செயலா் செயல்படுவாா். மேலாண்மை இயக்குனராக ஐஏஎஸ் அதிகாரி ஒருவரும், வருவாய் மற்றும் பேரிடா் மேலாண்மை துறை, குடிநீா் வழங்கல் துறை, நகராட்சி நிா்வாகம், தொழில்நுட்ப கல்வி இயக்குநா், உட்பட 8 போ் உறுப்பினா்களா இருப்பா். முதல்கட்டமாக, ஆளில்லா விமான கழகத்துக்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**7. மாற்றுத் திறனாளிகளுக்கு சிறந்த சேவை– தமிழகத்திற்கு விருது வழங்கினார் ஜனாதிபதி**

மாற்றுத்திறனாளிகள் அதிகாரம் பெற சிறப்பாகப் பணியாற்றிய தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் மாநில/மாவட்ட நிர்வாகங்கள் போன்றவற்றிற்கு மத்திய அரசின் விருதுகள் வழங்கப்படுகின்றன. அவ்வகையில் 2020ஆம் ஆண்டிற்கான விருதுகள் வழங்கும் விழா இன்று டெல்லியில் நடைபெற்றது.

மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் மாற்றுத்திறனாளிகளுக்கான அதிகாரமளிப்புத் துறை சார்பில் டெல்லி விக்யான் பவனில் நடைபெற்ற 'சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தின' சிறப்பு நிகழ்ச்சியில் இந்த விருதுகளை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கினார்.

இந்தியாவில் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக சேவை வழங்கியமைக்காக தமிழகம் முதல் மாநிலமாக தேர்வு செய்யப்பட்டு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் விருது வழங்கினார். விருதினை தமிழக அரசு சார்பில் அமைச்சர் பி.கீதா ஜீவன் பெற்றுக்கொண்டார்.

மாற்றுத் திறனாளிகள் உரிமையேற்றத்திற்கான தேசிய விருதுகள் தமிழகத்தை சேர்ந்த 6 மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டன. மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு சேவைகளை வழங்குவதில் சிறந்த மாவட்டமாக சேலம் மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டு விருது வழங்கப்பட்டது.

விழாவில் மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் வீரேந்திர குமார் மற்றும் இணை அமைச்சர் ராம்தாஸ் அத்வாலே ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

**1. மீன்வள அமைச்சகத்தின் அண்மைய தரவுகளின்படி, 1990–2018 வரை கடற்கரையோரத்தில் 41% அரிப்புக்கு உட்பட்ட மாநிலம் எது?**



அ) தமிழ்நாடு

ஆ) குஜராத்

**இ) கேரளா ☑**

ஈ) மகாராஷ்டிரா

✓ 1990–2018ஆம் ஆண்டு வரையிலான செயற்கைக்கோள் தரவுகளின்படி, கேரளாவின் 41 சதவீத கடலோரப்பகுதி பல்வேறு அளவிலான அரிப்புக்கு உட்பட்டுள்ளது. இந்தத் தகவலை மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால் வளத்துறை அமைச்சர் பர்ஷோத்தம் ரூபாலா மக்களவை –யில் தெரிவித்தார்.

---

**2. '2021 – இந்தியப்பெருங்கடல் மாநாட்டை' நடத்தவுள்ள நகரம் எது?**




அ) புது தில்லி

ஆ) கொழும்பு

**இ) அபுதாபி ☑**

ஈ) டோக்கியோ

✓ ஐந்தாவது இந்தியப்பெருங்கடல் மாநாடு – 2021 டிச.4–5 ஆகிய தேதிகளில் அபுதாபியில் நடைபெறவுள்ளது.

✓ வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர் இந்த மாநாட்டில் உரையாற்றுகிறார். இந்தியப் பெருங்கடல் மாநாட்டின் கருப்பொருள் "Indian Ocean: Ecology, Economy, Epidemic". தொடக்கவுரையை இலங்கை அதிபர் கோத்தபய ராஜபக்ச ஆற்றுவார். மாலத்தீவுகள், பிஜி மற்றும் பிற நாடுகளின் பிரதிநிதிகள் இதில் பங்கேற்கவுள்ளனர்.

---

**3. பொலிவுறு நகர திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான புதிய காலக்கெடு என்ன?**

அ) 2022

**ஆ) 2023 ☑**

இ) 2025

ஈ) 2026

✓ COVID தொற்றுநோய் மற்றும் பிற காரணங்களால் மத்திய வீட்டுவசதி & நகர்ப்புற விவகார அமைச்சகம் பொலிவுறு நகர திட்டத்தைச்செயல்படுத்துவதற்கான காலக்கெடுவை 2023 ஜூன் வரை நீட்டித்துள்ளது.

✓ முந்தைய காலக்கெடுவின்படி, நகரங்கள் பொலிவுறு நகர திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 ஆண்டுகளுக்குள் தங்கள் திட்டங்களை முடிக்க எதிர்பார்க்கப்பட்டது. 2016 ஜனவரி முதல் 2018 ஜூன் வரை 4 சுற்று போட்டிகள் மூலம் நூறு ஸ்மார்ட் நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

---

**4. அண்மையில் வெடித்துச் சிதறிய செமேரு எரிமலை உள்ள நாடு எது?**

அ) ஜப்பான் **ஆ) இந்தோனேசியா ☑**

இ) பிலிப்பைன்ஸ் ஈ) ஆஸ்திரேலியா

✓ இந்தோனேசியாவின் ஜாவா தீவில் உள்ள செமரு மலை, சமீபத்தில் வெடித்துச்சிதறியது. இவ்வெரிமலை வெடித்துச் சிதறியதில் குறைந்தது 14 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் பலர் காயமடைந்துள்ளனர்.

---

**5. மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகமானது உள்ளூர் வணிகங்கள் மற்றும் சுய உதவிக்குழுக்களை மேம்படுத்த எந்த நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?**

அ) அமேசான்

**ஆ) பிளிப்கார்ட் ☑**

இ) ஸ்னாப்டீல்

ஈ) ஜியோமார்ட்

✓ பெண்கள் தலைமையிலான உள்ளூர் வணிகங்கள் மற்றும் சுயஉதவி குழுக்களை மேம்படுத்துவதற்காக பிளிப்கார்ட் உடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது.

✓ இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் சிறு வணிக பிரிவுகள் மற்றும் சுய உதவிக்குழுக்களை இ–காமர்ஸ் பகுதிக்குள் கொண்டுவர எண்ணுகிறது. இந்த ஒப்பந்தம் தீனதயாள் அந்த்யோதயா யோஜனா – தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கம் – DAY–NRLM உடன் இணைக்கப்பட்டுள்ளது.

---

**6. நிதி அமைச்சகத்தின் சமீபத்திய தரவுகளின்படி, நாடு முழுவதும் உள்ள ATM'களின் எண்ணிக்கை என்ன?**



அ) 50000

ஆ) 1.1 லட்சம்

**இ) 2 .1 லட்சம் ☑**

ஈ) 5.1 லட்சம்

✓ 2021 செப்டம்பர் இறுதி வரை நாடு முழுவதும் உள்ள ATM'களின் எண்ணிக்கை 2.13 லட்சத்துக்கும் அதிகமாக இருப்பதாக மத்திய நிதி அமைச்சகம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தது. 47 சதவீதத்திற்கும் அதிகமான ஏடிஎம்கள் கிராமப்புற மற்றும் புறநகர்ப்புறங்களில் உள்ளன.

✓ ரிசர்வ் வங்கியின் தரவுகளின்படி, திட்டமிடப்பட்ட வணிக வங்கிகள் 2021 செப்டம்பர் வரை 2.13 லட்சம் ATM'களை நிறுவியுள்ளன. இதுதவிர, 27,837 ஒயிட் லேபிள் ATM'களும் நிறுவப்பட்டுள்ளன.

---

**7. ஆத்மநிர்பார் கிரிஷக் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்துள்ள மாநிலம் எது?**



அ) குஜராத்

**ஆ) உத்தர பிரதேசம் ☑**

இ) மத்திய பிரதேசம்

ஈ) மகாராஷ்டிரா

✓ உத்தர பிரதேச அரசு 2021–22 முதல் மாநிலத்தில் ஆத்ம நிர்பார் கிரிஷக் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது.

✓ இத்திட்டத்தின்கீழ் அடுத்த 3 ஆண்டுகளில் மாநிலத்தின் ஒவ்வொரு தொகுதியிலும் 1475 உழவர் உற்பத்தியாளர்கள் அமைப்புகள் உருவாக்கப்படும்.

---

**8.** **'இ–சவாரி இந்தியா எலக்ட்ரிக் பேருந்து கூட்டணி'யை வெளியிட்ட நிறுவனம் எது?**

**அ) NITI ஆயோக் ☑**

ஆ) NHAI

இ) எரிசக்தி திறன் சேவைகள் லிட்

ஈ) NTPC லிட்

NITI Aayog

✓ அரசாங்க மதியுரையகமான NITI ஆயோக், இந்தியாவில் இ–பேருந்து பற்றிய அறிவைப் பகிர்ந்துகொள்வதற்காக, 'e–Sawaari India Electric Bus Coalition'ஐ அறிமுகப்படுத்துவதாக சமீபத்தில் அறிவித்தது.

✓ கன்வர்ஜென்ஸ் எனர்ஜி சர்வீஸ் லிமிடெட் (CESL) மற்றும் உலக வளங்கள் நிறுவனம், இந்தியா ஆகியவற்றுடன் இணைந்து, டிரான்ஸ்ஃபார்மேடிவ் அர்பன் மொபிலிட்டி இனிஷியேட்டிவ் ஆதரவுடன் கூட்டணி தொடங்கப்பட்டது.

---

**9.** **நடப்பாண்டுக்கான மனித உரிமைகள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ) Equality, Reducing Inequalities, Advancing Human Rights ☑**

ஆ) The ABCs of L.G.B.T.Q.I.A.+

இ) What are Human Rights

ஈ) Advocates– Torchbearers of human rights

✓ மனித உரிமைகள் நாளானது ஒவ்வோர் ஆண்டும் டிச.10 அன்று அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான (2021) கருப்பொருள் "Equality, Reducing Inequalities, Advancing Human Rights" என்பதாகும். ஐநா பொதுச்சபை 1948'இல் மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தை ஏற்றுக்கொண்டது.

✓ மக்களின் சமூக, கலாச்சார மற்றும் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அனைவரின் நலனை உறுதிசெய்யவும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

---

**10.** **FIDE உலக சாம்பியன்ஷிப்பை வென்ற செஸ் வீரர் யார்?**

**அ) மேக்னஸ் கார்ல்சன் ☑**



ஆ) விஸ்வநாதன் ஆனந்த்

இ) கோனேரு ஹம்பி

ஈ) நெபோம்னியாச்சி

✓ தற்போதைய உலக செஸ் சாம்பியனான நார்வேயின் மேக்னஸ் கார்ல்சன் தனது பட்டத்தை தக்கவைத்து துபாயில் நடந்த FIDE உலக சாம்பியன்ஷிப்பை வென்றார்.

✓ ஐக்கிய அரபு அமீரகத்தில் நடந்த துபாய் எக்ஸ்போ 2020 இல் நடந்த உலகளாவிய போட்டியை வெல்வதற்காக ஏழு புள்ளிகளைக் கடந்து ரஷ்யாவின் இயன் நெபோம்னியாச்–சியை கார்ல்சன் தோற்கடித்தார். இதன்மூலம் கார்ல்சன் தனது 5ஆம் உலக சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. அஞ்சு பாபி ஜார்ஜுக்கு உலக தடகள ஆண்டின் சிறந்த வீராங்கனை விருது**

உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலம் வென்ற இந்திய வீராங்கனை அஞ்சு பாபி ஜார்ஜுக்கு உலக தடகள சம்மேளனம் சார்பில் ஆண்டின் சிறந்த வீராங்கனை விருது வழங்கப்பட்டுள்ளது.

இரண்டு முறை ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற அஞ்சு பாபி ஜார்ஜ் கடந்த 2003–இல் பாரிஸில் நடைபெற்ற உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் நீளம் தாண்டுதலில் வெண்கலப் பதக்கம் வென்றார்.

இந்நிலையில் தடகளத்தில் அவர் ஆற்றிய சேவைக்காகவும், இந்தியாவில் இளம்பெண்கள் அதிகளவில் தடகளத்தில் ஈடுபட செய்தமைக்காவும், அவருக்கு ஆண்டு சிறந்த வீராங்கனை விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருதைப் பெறும் இரண்டாவது வீராங்கனை அஞ்சு ஆவார். எத்தியோப்பாவின் டேரட்டு டுலு கடந்த 2019–இல் இவ்விருதைப் பெற்றார்.

தற்போது இந்திய தடகள சம்மேளனம் (ஏஎஃப்ஐ)–இன் மூத்த துணைத் தலைவராக பதவி வகித்து வருகிறார். கடந்த 2016–இல் அஞ்சு பாபி ஜார்ஜ் தடகள பவுண்டேஷனை தொடங்கி 13 இளம் சிறுமிகளுக்கு பயிற்சி அளித்து வருகிறார். இவர்களில் நீளம் தாண்டுதலில் ஷைலி சிங் 20 வயதுக்குட்பட்டோர் உலக தடகளத்தில் வெள்ளி வென்றார்.

இந்த விருதுக்கு தேர்வு செய்யப்பட்டது மிகவும் மகிழ்ச்சி தருகிறது. இதன் மூலம் மகளிர் தடகளத்துக்கு மேலும் சேவை புரிய ஊக்கம் கிடைத்துள்ளது என்றார்.

---

**2. அதிக கோல்கள்: ரொனால்டோ சாதனை**

கால்பந்து விளையாட்டில் 800 கோல்கள் அடித்த முதல் வீரர் என்கிற சாதனையைப் படைத்துள்ளார் மான்செஸ்டர் யுனைடெட் கிளப்பைச் சேர்ந்த கிறிஸ்டியானோ ரொனால்டோ.

போர்ச்சுகல் நாட்டைச் சேர்ந்த கிறிஸ்டியானோ ரொனால்டோ, மான்செஸ்டர் யுனைடெட் அணிக்காக விளையாடி வருகிறார். லண்டனில் நடைபெற்ற பிரீமியர் லீக் போட்டி ஒன்றில் ஆர்செனல் அணிக்கு எதிராக விளையாடி இரு கோல்கள் அடித்து 3–2 என தன்னுடைய அணி வெற்றி பெற உதவினார்.

இதன்மூலம் தன்னுடைய நாட்டுக்காகவும் கிளப்புக்காவும் விளையாடிய ஆட்டங்களில் 800 கோல்கள் அடித்து சாதனை படைத்துள்ளார். இந்த இலக்கை அடைந்த முதல் வீரர் என்கிற பெருமையை ரொனால்டோ பெற்றுள்ளார். 1095 ஆட்டங்களில் 801 கோல்களை அடித்துள்ளார் 36 வயது ரொனால்டோ. சர்வதேச ஆட்டங்களில் 115 கோல்களுடன் அதிக கோல்கள் அடித்த வீரர்களின் பட்டியலில் முதல் இடத்தில் உள்ளார்.

---

3. டிசம்பர்.5 – சர்வதேச தன்னார்வலர் தினம் மற்றும் உலக மண் தினம்.

---

**4. தேசிய அளவில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்துக்கு 4–வது இடம்**

இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக தரவரிசையில், தேசிய அளவிலான மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகங்களில், கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 4–வது இடத்தை பிடித்துள்ளது.

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட அறிக்கை: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கடந்த 2020–ம் ஆண்டுக்கான இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகதரவரிசையில் 8–வது இடத்தைபெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகம், நாட்டில் உள்ள 67 வேளாண் நிறுவனங்களில் 8–வது இடத்தையும், தேசிய அளவிலான மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகங்களில் 4–வது இடத்தையும், தென்னிந்திய வேளாண்மைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையே 2–வது இடத்தையும் பெற்றுள்ளது.

இதுதொடர்பாக பல்கலைக்கழக துணைவேந்தர் (பொறுப்பு) அ.சு.கிருஷ்ணமூர்த்தி கூறியது:

பல்கலைக்கழக ஆசிரியர்களின் சீரிய பயிற்சி வகுப்புகள் மூலம், மாணவர்கள் அளவிலான இளநிலை, முதுநிலை ஆராய்ச்சி ஊக்கத்தொகை எண்ணிக்கையைப் பெற்றதன் வாயிலாக கல்விப் பரிமாணத்தில் அதிக மதிப்பெண் பெற முடிந்தது. பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், இதை ஒரு சவாலாக ஏற்று ஆராய்ச்சிக் கட்டுரைகளை சீரிய முயற்சிகள் மற்றும் திட்டமிடல் மூலம் அதிகளவில் பிரசுரித்து நிதி ஆதாரங்களையும் பெருக்கியதன் மூலம் ஆராய்ச்சிப் பரிமாணத்தில் குறிப்பிட்ட மதிப்பெண் பெற முடிந்தது. இளம் ஆராய்ச்சியாளர்களுக்கு, பல்வேறு விருதுகளைப் பெற தீவிர ஊக்குவிப்பு அளிக்கப்பட்டது.

மேலும், வேளாண் விரிவாக்கத்தில் அதிகளவிலான செயல் விளக்கங்கள், வானொலி உரைகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன. இடுபொருள் வணிகர்கள், அரசு சாரா அமைப்பினர், தொழில்நுட்ப நிபுணர்கள் ஆகியோருக்கு அதிக பயிற்சிகள் வழங்கப்பட்டன. அதிகளவிலான சர்வதேச மாணவர்களை ஈர்த்ததன் மூலம், மாணவர்களின் பன்முகத் தன்மையை அதிகரித்து, மதிப்பெண்களைக் கூட்ட முடிந்தது.

இந்த தரவரிசை மூலம் பல்கலைக்கழகம் நிதிகளை ஈர்ப்பதற்காகவும், இன்னும் கூடுதலாக சர்வதேச மாணவர்கள் சேர்க்கைக்காகவும், கூட்டு ஆராய்ச்சிக்கான கூடுதல் வழிகளுக்காகவும் உலக அரங்கில் தன்நிலையை மேம்படுத்தவும் முடியும். இனிவரும் நாட்களில் பல்கலைக்கழகம் முதல் 3 இடங்களில் இடம்பிடிக்க முனைப்புடன் செயல்பட்டு உச்சத்தை எட்டும்” என்றார்.

---

**5. ரோபோக்கள் இனிமேல் குழந்தைகளை பெற்றெடுக்கும்: உலகின் முதல் உயிருள்ள ரோபோக்களை உருவாக்கி அமெரிக்க விஞ்ஞானிகள் சாதனை**

உலகின் முதல் உயிருள்ள ரோபோவை அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இந்த ரோபோக்கள் தங்களை போன்றே குழந்தைகளை பெற்றெடுக்கின்றன. அமெரிக்காவின் வெர்மாண்ட், டப்ட்ஸ்,ஹார்வர்டு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த விஞ்ஞானிகள் பல ஆண்டுகளாக உயிரி ரோபோ ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 2020–ம் ஆண்டில் உலகின் முதல் உயிருள்ள ரோபோவை அவர்கள் உருவாக்கினர்.

ஆப்பிரிக்காவைச் சேர்ந்த ஜீனோபஸ் லேவிஸ் என்ற தவளை இனத்தின் ஸ்டெம் செல்களில் இருந்து உருவாக்கியதால் இதற்கு 'ஜீனோபாட்ஸ் 1.0' என்று பெயரிடப்பட்டது. இவை ஒரு மில்லி மீட்டருக்கும் குறைவான அகலம் கொண்டவை. பேக் மேன் வடிவிலான இந்த ரோபோக்களால் நகர முடியும். நீந்த முடியும்.

தொடர் ஆராய்ச்சியின் பலனாக கடந்த மே மாதம் ஜீனோபாட்ஸ் 2.0 ரோபோ உருவாக்கப்பட்டது. சில நாட்களுக்கு முன்பு ஜீனோபாட்ஸ் 3.0 ரோபோ குறித்த ஆய்வறிக்கையை அமெரிக்க விஞ்ஞானிகள் வெளியிட்டனர். அதில் கூறியிருப்பதாவது:

உலகின் பல்வேறு நாடுகளில் இரும்பு, பிளாஸ்டிக்கால் ரோபோக்கள் தயாரிக்கப்படுகின்றன. அவற்றில் இருந்து வேறுபட்டு உயிரி ரோபோக்களை உருவாக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வெற்றி பெற்றிருக்கிறோம். இப்போது ஜீனோபாட்ஸ் 3.0 ரோபாவை உருவாக்கியுள்ளோம். இவற்றால் தங்களைப் போன்றே குழந்தைகளை பெற்றெடுக்க முடியும். இந்த ரோபோ ஆராய்ச்சியின் மூலம் விபத்தில் படுகாயமடைந்த மனிதர்களை குணப்படுத்த முடியும். பிறவி குறைபாடுகள், புற்றுநோயை குணப்படுத்த முடியும். முதுமை பிரச்சினைக்கும் தீர்வு காண முடியும் என்று நம்புகிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ஜீனோபாட்ஸ் 3.0 ரோபாவை உருவாக்கியவிஞ்ஞானிகள் குழுவில் இடம்பெற்றுள்ள டப்ட்ஸ்பல்கலைக்கழக விஞ்ஞானி பிளாகிஸ்தான் கூறும்போது, "ஆய்வகத்தில் ஒரு ஜீனோபாட்ஸ் ரோபோ குழந்தையை பெற்றெடுக்க 5 நாட்கள் ஆகிறது. இதுவும் அச்சு, அசல் ஜீனோபாட்ஸ் ரோபோ போன்றே இருக்கிறது. எதிர்காலத்தில் அணுக் கழிவு, கடலில் சேகரமாகும் மைக்ரோபிளாஸ்டிக் கழிவு பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு ஜீனோபாட்ஸ் ரோபோவை பயன்படுத்த முடியும்" என்றார்

ஆபத்தான ரோபோ?

அமெரிக்காவின் டூக் பல்கலைக்கழக பேராசிரியர் நிடா பாராஹனி கூறும்போது, "ஜீனோபாட்ஸ் ரோபோவால் தன்னைப் போன்றே குழந்தையை பெற்றெடுக்க முடியும் என்றால் அது ஆபத்தானது. இவை ஆய்வகத்தில் இருந்து தப்பி பூமியில் பல்கிப் பெருக வாய்ப்புள்ளது. எதிர்காலத்தில் இவற்றின் இனப்பெருக்கம், செயல்பாடுகள் எவ்வாறு இருக்கும் என்பதை கணிக்க முடியாது. செயற்கையாக உருவாக்கப்பட்ட உயிரி ரோபாவால் மனித குலத்துக்கு ஆபத்து ஏற்படலாம். எனவே ஆபத்தான ஆராய்ச்சியை

நிறுத்த வேண்டும். மனித குலத்தின் நன்மைக்காக அனைத்து உயிரி ரோபோக்களையும் அழித்துவிட வேண்டும்" என்றார்.

---

**6. பாரதியார் நினைவு நூற்றாண்டு: திருவல்லிக்கேணியில் 44 வாரங்களுக்கு தொடர் நிகழ்ச்சி**

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

பாரதியார் மறைந்த நூற்றாண்டின் நினைவாக அவரது பெருமைகளை போற்றிடும் வகையில் 14 அறிவிப்புகளை முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். ஓராண்டுக்கு சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள பாரதியார் நினைவு இல்லத்தில் வாரந்தோறும் நிகழ்ச்சி ஒன்று செய்தித்துறையின் சார்பில் நடத்தப்படும் என்றும் அறிவித்தார்.

இதனை செயல்படுத்தும்விதமாக சென்னை திருவல்லிக்கேணி பாரதியார் இல்லத்தில் 4–ந் தேதி (இன்று) தொடங்கி 44 வாரங்களுக்கு தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, பள்ளிக்கல்வித்துறை, வானவில் பண்பாட்டு மையம் மற்றும் பாரதி புகழ் பாடும் பல்வேறு தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து தொடர்நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை மாலை 6 மணிக்கு இந்த நிகழ்ச்சி தொடங்கி நடைபெறும்.

முதல் நிகழ்ச்சியான தமிழ்நாடு இசைக்கல்லூரி மாணவர்கள் வழங்கும் பாரதியின் புகழ்பாடும் நாதஸ்வர இசை நிகழ்ச்சியை 4–ந் தேதி (இன்று) மாலை 5 மணிக்கு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைக்கிறார்.

---

**1.** அமலாக்க நிறுவனமான வருவாய் புலனாய்வு இயக்குநரகம், பின்வரும் எந்த அமைப்பின்கீழ் உள்ளது?

**அ) மத்திய மறைமுக வரிகள் & சுங்க வாரியம் ☑**

ஆ) செபி

இ) அமலாக்க இயக்குநரகம்

ஈ) மத்திய நேரடி வரிகள் வாரியம்



- ✓ வருவாய் புலனாய்வு இயக்குநரகம் என்பது மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியத்தின் (CBIC) கீழ், கடத்தல் எதிர்ப்பு விஷயங்களில் இந்திய அரசாங்கத்தின் உளவுத்துறை மற்றும் அமலாக்க நிறுவனம் ஆகும்.
- ✓ மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், 64ஆவது 'வருவாய் புலனாய்வு இயக்குநரகம் நிறுவன நாளில்' உரையாற்றினார். 2020–21ஆம் ஆண்டில் மத்திய கிழக்கிலிருந்து மியான்மருக்கு தங்கக்கடத்தல் நடந்தந்ததாக DRI அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

---

**2.** 2021'இல் டேவிஸ் கோப்பையை வென்ற நாடு எது?

அ) ஸ்பெயின்

**ஆ) ரஷ்யா ☑**

இ) குரோஷியா

ஈ) செர்பியா




- ✓ டேனியல் மெட்வெடேவின் சிறப்பான ஆட்டத்திற்குப்பிறகு, குரோஷியாவை வீழ்த்தி 2021'இல் ரஷ்யா டேவிஸ் கோப்பை பட்டத்தை வென்றது. 25 வயதான அவர், மரின் சிலிக்கை இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் தோற்கடித்து, 2006ஆம் ஆண்டுக்குப் பிறகு ரஷ்யாவுக்கு டேவிஸ் கோப்பையை முதன்முறையாக வென்று தந்து உள்ளார். ரஷ்யா தனது முதல் டேவிஸ் கோப்பையை கடந்த 2002இல் வென்றது.

---

**3.** 'கிரேட்டர் திப்ராலாந்து' என்ற பெயரில் பழங்குடியின சமூகங்களுக்கு தனி மாநிலம் உருவாக்கப்பட வேண்டும் என்று எந்த மாநிலத்தில் உள்ள பழங்குடி அமைப்புகள் கோரி வருகின்றன?

அ) சிக்கிம்

**ஆ) திரிபுரா ☑**

இ) நாகாலாந்து

ஈ) அருணாச்சல பிரதேசம்




- ✓ திரிபுரா மாநிலத்திலுள்ள பல பழங்குடியின அமைப்புகள் இப்பகுதியில் உள்ள பழங்குடியினருக்கு தனி மாநிலம் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கும் நோக்கில் இணைந்துள்ளன. அரசியலமைப்பின் இரண்டு மற்றும் மூன்றாவது பிரிவின்கீழ் திரிபுராவில் உள்ள பழங்குடியின சமூகத்தினருக்காக 'கிரேட்டர் திப்ராலாந்து' என்ற தனி மாநிலத்தை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.
- ✓ திரிபுரா மாநிலத்தில் அறிவிக்கப்பட்ட 19 பழங்குடியினரில், திரிபுரிஸ் (திப்ரா & திப்ராசா என்றும் அறியப்படுகிறது) மிகப்பெரிய பழங்குடியினமாகும்.

---

**4.** நாடாளுமன்றத்தின் பொதுக் கணக்குக் குழு தொடங்கி எத்தனை ஆண்டுகள் நிறைவாகியுள்ளன?

அ) 50

ஆ) 60

இ) 75

**ஈ) 100 ☑**



- ✓ நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழுவின் நூற்றாண்டு விழாவில் மேதகு குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் உரையாற்றினார். மக்கள் மன்றத்திற்கு நிர்வாகப் பொறுப்புடையவர்களாக அதிகாரிகள் இருப்பதை பொதுக் கணக்குக் குழு உள்ளிட்ட நாடாளுமன்றக் குழுக்கள் உறுதி செய்கின்றன என்று குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் கூறினார்.

---

**5.** ஐந்து பேர் கொண்ட மத்திய விஸ்டா மேற்பார்வைக் குழுவின் தலைவர் யார்?

**அ) ரத்தன் பி வாடல் ☑**

ஆ) விவேக் சிங்

இ) அஜய் பாண்டே

ஈ) சுபாஷ் சந்திர கார்க்



- ✓ 20,000 கோடி மதிப்பிலான இந்தத் திட்டத்தை இரண்டு ஆண்டுகளுக்கு நேரடியாகக் கண்காணிப்பதற்காக மத்திய விஸ்டா மேற்பார்வைக் குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது. வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின்படி, ஐந்து பேர் கொண்ட மத்திய விஸ்டா மேற்பார்வைக் குழுவின் தலைவராக முன்னாள் நிதிச் செயலர் ரத்தன் பி வாடல் நியமிக்கப்பட்டுள்ளார். இணைச் செயலாளர், MoHUA அக்குழுவின் ஒருங்கிணைப்பாளராக இருப்பார்.

---

**6.** BRICS திரைப்பட விழாவில் "சிறந்த நடிகர்" விருது பெற்றவர் யார்?

அ) ரஜினிகாந்த்

**ஆ) தனுஷ் ☑**

இ) குரு சோமசுந்தரம்

ஈ) சிவகார்த்திகேயன்



- ✓ வெற்றிமாறன் இயக்கிய தமிழ்த் திரைப்படமான 'அசுரன்' படத்தில் நடித்ததற்காக இந்திய நடிகர் தனுஷ் BRICS திரைப்பட விழாவில் சிறந்த நடிகருக்கான (ஆண்) விருது பெற்றார். இந்த ஆண்டு (2021) அதே படத்திற்காக சிறந்த நடிகருக்கான தேசிய விருதையும் அவர் வென்றார்.
- ✓ இத்திரைப்படம் இதுவரை மூன்று தேசிய விருதுகளை வென்றுள்ளது. பிரேசிலிய திரைப்படமான 'ஆன் வீல்ஸ்' திரைப்படத்தில் நடித்ததற்காக லாரா போல்டோரினி சிறந்த நடிகருக்கான (பெண்) விருது பெற்றார்.

---

**7. 'வித்யா தீவேனா' என்னும் கல்வி உதவித் திட்டம் செயல்படுத்தப்படுகிற மாநிலம் எது?**



அ) குஜராத்

**ஆ) ஆந்திர பிரதேசம் ☑**

இ) மத்திய பிரதேசம்

ஈ) மகாராஷ்டிரா

- ✓ ஜெகன் அண்ணா வித்யா தீவேனா திட்டத்தின் கீழ், பட்டியலினத்தவர், பழங்குடியினர் மற்றும் பிற சிறுபான்மை பிரிவைச் சேர்ந்த மாணவர்களின் கல்விக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படுகிறது.
- ✓ 'ஜெகனண்ணா வித்யா தீவேனா' கல்வி உதவித் திட்டத்தின் மூன்றாவது தவணையாக ஆந்திர பிரதேச மாநில அரசு ₹686 கோடியை வழங்கியுள்ளது. 11 லட்சம் மாணவர்களின் தாய்மார்களின் கணக்கில் இத்தொகை வரவு வைக்கப்பட்டுள்ளது.

---

**8. ஹிந்தி நடிகர் சஞ்சய் தத்தை அதன் பொன்விழா கொண்டாட்டங்களுக்கான விளம்பரத்தூதராக நியமனம் செய்துள்ள மாநிலம் எது?**



அ) சிக்கிம்

**ஆ) அருணாச்சல பிரதேசம் ☑**

இ) குஜராத்

ஈ) அஸ்ஸாம்

- ✓ அருணாச்சல பிரதேசத்தின் 50வது ஆண்டை குறிக்கும் பொன்விழா கொண்டாட்டங்களுக்கான விளம்பரத் தூதராக ஹிந்தி நடிகர் சஞ்சய் தத்தை அருணாச்சல பிரதேச மாநில அரசு அறிவித்துள்ளது.
- ✓ திரைப்படத் தயாரிப்பாளரான ராகுல் மித்ராவை தனது விளம்பர ஆலோசகராக அம்மாநிலம் அறிவித்துள்ளது. இதற்கான அறிவிப்பை அருணாச்சல பிரதேச மாநில முதலமைச்சர் பேமா கந்து வெளியிட்டார்.

---

**9. வங்காளதேசம் கீழ்காணும் எந்நாட்டுடன் இணைந்து வருடாந்திர "Cooperation Afloat Readiness and Training (CARAT)" என்ற கடல்சார் பயிற்சியை மேற்கொள்கிறது?**



**அ) அமெரிக்கா ☑**

ஆ) இந்தியா

இ) ஜப்பான்

ஈ) சீனா

- ✓ வங்காளதேச கடற்படை மற்றும் அமெரிக்க இராணுவ வீரர்கள் ஆண்டுதோறும் வருடாந்திர "Cooperation Afloat Readiness and Training (CARAT)" என்ற கடல்சார் பயிற்சியைத் தொடங்கினர். இந்தப் பயிற்சி வழக்கமாக வங்காள விரிகுடாவில் மேற்கொள்ளப்படுகிறது.
- ✓ வங்காளதேச கடற்படை 2011 முதல் CARAT பயிற்சியில் பங்கேற்று வருகிறது. இது பகிரப்பட்ட கடல்சார் பாதுகாப்பு மற்றும் பிராந்திய கடற்படைகளுக்கு இடையிலான கூட்டாண்மைகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**10. பின்வரும் எவ்வாண்டில் G20 தலைமைப்பொறுப்பை இந்தியா ஏற்கவுள்ளது?**




அ) 2022

**ஆ) 2023 ☑**

இ) 2032

ஈ) 2033

- ✓ இந்தியா சமீபத்தில் இந்தோனேசியா, இத்தாலி மற்றும் இந்தியாவை உள்ளடக்கிய 'G20 Troika'இல் இணைந்தது.
- ✓ G20 கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட இந்தோனேஷியா, 2022 அக்.30-31 ஆகிய தேதிகளில் நடைபெறும் G20 தலைவர்கள் உச்சிமாநாடு முடிவடைந்தபின் ஆண்டுமுழுவதும் G20 கூட்டங்களைக் கூட்டவுள்ளது.
- ✓ "Recover Together Recover Stronger" என்பது இந்த ஆண்டு உச்சிமாநாட்டின் கருப்பொருள் ஆகும். இந்தியா இந்தோனேசியாவிடமிருந்து G20'இன் தலைமைப் பொறுப்பை ஏற்றபின் 2023ஆம் ஆண்டில் இந்தியாவில் முதல்முறையாக G20 தலைவர்கள் உச்சி மாநாடு நடைபெறும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சென்னை வீரர் சபரி டபிள்யூபிசி சாம்பியன்**

உலக குத்துச்சண்டை கவுன்சில் (டபிள்யூபிசி) முதல் முறையாக நடத்திய டபிள்யூபிசி இந்தியா வெல்டர்வெயிட் சாம்பியன்ஷிப் போட்டியில் சென்னை வீரர் சபரி (24) சாம்பியன் ஆனார்.

தொழில்முறை ரீதியிலான இப்போட்டியில் 8 சுற்றுகள் கொண்ட இறுதிச் சுற்றில் அவர் சண்டீகரைச் சேர்ந்த அனுபவமிக்க வீரரான ஆகாஷ்தீப் சிங்கை (27) வீழ்த்தினார். போட்டி முடிவானது 76-76, 79-73, 79-73 என்ற பெரும்பான்மை புள்ளிகள் அடிப்படையில் அவருக்கு சாதகமாக அமைந்தது. தற்போது சாம்பியன் ஆகியிருக்கும் சபரி, அவ்வப்போது இந்தியாவின் இதர போட்டியாளர்களுடன் மோதி தனக்கான பட்டத்தை தக்க வைக்க வேண்டும்.

கடந்த ஆண்டு ஜனவரியில் தனது தொழில்முறை குத்துச்சண்டையை தொடங்கிய சபரி, முந்தைய மோதல்களில் 4 வெற்றிகளையும், 1 தோல்வியையும் பதிவு செய்துள்ளார். அவருடன் மோதி தோல்வியை சந்தித்த ஆகாஷ்தீப் கடந்த 3 ஆண்டுகளில் 8 வெற்றிகள், 1 தோல்வியை பதிவு செய்துள்ளவர்.

இதேபோட்டியில் ஆசிய சில்வர் லைட்வெயிட் பட்டத்துக்கான பிரிவில் இந்தியாவின் கார்த்திக் சதீஷ் குமார் – இந்தோனேசியாவின் ஹீரோ டிடோவை தோற்கடித்து பட்டம் வென்றார். இதில் அவர் 80-72, 79-73, 79-73 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றார். இத்துடன் 8 ஆட்டங்களில் பங்கேற்றுள்ள கார்த்திக், அனைத்திலும் வெற்றியை பதிவு செய்துள்ளார். டபிள்யூபிசி ரேங்கிங்கில் தற்போது 4-ஆவது இடத்தில்

இருக்கும் அவருக்கு இந்த வெற்றி முன்னேற்றத்தை அளிக்கும்.

---

**2. அந்நிய செலாவணி கையிருப்பில் இந்தியா 4–ம் இடம் :**

அந்நிய செலாவணி தொடர்பான கேள்விக்கு மத்திய நிதித் துறை இணை அமைச்சர் பங்கஜ் சவுத்ரி நேற்று மக்களவையில் கூறியதாவது.

கடந்த நவம்பர் 19–ம் தேதி நிலவரப்படி இந்தியாவின் அந்நிய செலாவணி கையிருப்பு 640.4 பில்லியன் டாலராக உள்ளது. அந்நிய செலாவணி கையிருப்பை அதிகம் கொண்டிருக்கும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 4–ம்இடத்தில் உள்ளது. சீனா, ஜப்பான்சுவிட்சர்லாந்து ஆகியவை முதல் 3 இடங்களில் உள்ளன.

2014–15 முதல் 2020–21 வரையிலான ஏழு ஆண்டுகளில் பெட்ரோலியப் பொருட்கள் மூலம் ரூ.16.7 லட்சம் கோடி கலால் வரி பெறப்பட்டுள்ளது. 2013–14–ல் பெட்ரோல் மீதான கலால் வரி லிட்டருக்கு ரூ.9.2, டீசலுக்கு ரூ.3.46 ஆக இருந்தது. தற்போது இது முறையே ரூ.27.9,ரூ.21.80 ஆக உள்ளது என அவர் தெரிவித்தார்.

---

**1. எந்த மாநிலத்தின் சுற்றுலாத் துறையானது STREET (Sustainable, Tangible, Responsible, Experiential, Ethnic, Tourism) திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது?**

அ) தமிழ்நாடு

ஆ) கோவா

**இ) கேரளா ☑**

ஈ) சிக்கிம்

✓ கேரள மாநில சுற்றுலாத்துறை அண்மையில் அதன் 7 மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் STREET (Sustainable, Tangible, Responsible, Experiential, Ethnic, Tourism) திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. இத்திட்டமானது பார்வையாளர்களுக்கு இந்த இடங்களில் கிடைக்கும் பல்வேறு வகையான சலுகைகளை அனுபவிக்க உதவும்.

✓ முதற்கட்டமாக கோழிக்கோடு கடலுண்டி, பாலக்காட்டில் திரிதாலா, பட்டிதாரா, கண்ணூரில் பினராயி, அஞ்சரக்கண்டி, கோட்டயத்தில் மறவந்துருத்து, மஞ்சிரா, காசர்கோட்டில் வலியபரம்பா, இடுக்கியில் காந்தளூர், வயநாட்டில் சேக்காடி ஆகிய இடங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

---

**2. "காற்றுத்தரம் & வானிலை முன்னறிவிப்பு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு" (SAFAR) என்பது எந்த நடுவண் அமைச்சகத்தின் முன் முயற்சியாகும்?**

அ) சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சகம்

**ஆ) புவி அறிவியல் அமைச்சகம் ☑**

இ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ) வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்

✓ புவி அறிவியல் அமைச்சகமானது "SAFAR" எனப்படும் "காற்றின் தரம் மற்றும் வானிலை முன்னறிவிப்பு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு" என்ற ஒரு பெரிய தேசிய முயற்சியை அறிமுகப்படுத்தியது. இது இந்தியாவின் பெருநகர நகரங்களுக்கு காற்றின் தரம் குறித்த குறிப்பிட்ட இருப்பிடத் தகவலை வழங்க உதவுகிறது.

✓ SAFAR'இன்படி, தேசிய தலைநகரில் ஒட்டுமொத்த காற்றுத்தரக்குறியீடு 'மிகவும் மோசமான' பிரிவில் 372 ஆக உள்ளது. சுழியத்திற்கும் 50க்கும் இடைப்பட்ட மதிப்பெண் 'நல்லது' எனவும், 51-100க்கு இடையிலான மதிப்பெண் 'திருப்திகரமானது' எனவும், 101 மற்றும் 200 இடையிலான மதிப்பெண் 'மிதமானது', 201 மற்றும் 300 இடையிலான மதிப்பெண் 'மோசமானது' எனவும், 301 மற்றும் 400 இடையிலான மதிப்பெண் 'மிகவும் மோசமானது' எனவும் மற்றும் 401 மற்றும் 500 இடையிலான மதிப்பெண் 'கடுமையானது' எனவும் கருதப்படுகிறது.

---

**3.தேசிய சுகாதார கணக்குகள் (NHA) மதிப்பீட்டின்படி, 2017-18'இல் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரசின் சுகாதார செலவினத்தின் பங்கு என்ன?**



அ) 1.2%

**ஆ) 1.35% ☑**

இ) 1.75%

ஈ) 2.5%

✓ 2017-18ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் தேசிய சுகாதார கணக்குகளின் (NHA) மதிப்பீட்டின்படி, 2013-14'இல் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.15% ஆக இருந்த அரசின் சுகாதார செலவினங்களின் பங்கு 2017-18'இல் 1.35% ஆக அதிகரித்துள்ளது.

✓ 2013-14 மற்றும் 2017-18'க்கு இடையில் சுகாதாரத்திற்கான அரசின் செலவினம் 3.78%'இலிருந்து 5.12% ஆக அதிகரித்துள்ளதாகவும் இந்தக் கண்டறிவுகள் காட்டுகின்றன. தனிநபர் OOPE'ஐப் பொறுத்தவரை, 2013-14 மற்றும் 2017-18'க்கு இடையில் ₹2,336 இலிருந்து ₹2,097ஆகக் குறைந்துள்ளது.

---

**4.'The India Young Water Professional' திட்டமானது பின்வரும் எந்த நாட்டுடன் இணைந்து முதன்முறையாக தொடங்கப்பட்டுள்ளது?**



அ) அமெரிக்கா

ஆ) ரஷ்யா

**இ) ஆஸ்திரேலியா ☑**

ஈ) ஜப்பான்

✓ இந்திய இளம் நீர் நிபுணத்துவ திட்டத்தின் முதல் பதிப்பு தேசிய நீரியல் திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்டுள்ளது. ஆஸ்திரேலிய நீர் கூட்டாண்மை -யின் ஆதரவில் இது உள்ளது. இது நீர்வளம், ஆற்று மேம்பாடு மற்றும் கங்கை புத்துயிர் துறையின் திட்டமாகும். தேசிய நீரியல் திட்டத்தின் மத்திய மற்றும் மாநில அமலாக்க முகவர்களிடமிருந்து மொத்தம் இருபது பங்கேற்பாளர்கள் (10 ஆண்கள் & 10 பெண்கள்) இந்தத் திட்டத்தின் முதல் பதிப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

---

**5. இந்தியாவின் முதல் சான்றளிக்கப்பட்ட ஆர்கானிக் பழம் எது?**



அ) ஆப்பிள்

ஆ) ஸ்ட்ராபெர்ரி

**இ) கிவி ☑**

ஈ) வாழை

✓ இந்தியாவின் முதல் சான்றளிக்கப்பட்ட ஆர்கானிக் பழமாக அருணாச்சல பிரதேச மாநிலத்தின் கிவிப் பழங்களை மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு அறிமுகப்படுத்தினார். வடகிழக்கு பிராந்தியத்திற்கான மிஷன் ஆர்கானி -க் வேல்யூ செயின் டெவலப்மென்ட் திட்டத்தின்கீழ் கிவிப்பழத்திற்கு ஆர்கானிக் சான்றிதழைப் பெற்ற முதல் இந்திய மாநிலமாக அருணாச்சல பிரதேசம் ஆனது.

---

**6. அண்மையில், 'கிரந்தி சூரிய கௌரவ் கலச' யாத்திரையைத் தொடங்கிய மாநிலம் எது?**



அ) மகாராஷ்டிரா

ஆ) குஜராத்

**இ) மத்திய பிரதேசம் ☑**

ஈ) பீகார்

✓ சுதந்திரப் போராட்ட வீரர் ஜனநாயக் தந்தியா மாமாவின் பிறந்த இடமான பரோட் அகிர் கிராமத்திலிருந்து 'கிரந்தி சூரிய கௌரவ் கலச யாத்ரா'வை மத்திய பிரதேசம் தொடங்கியது. இந்த யாத்திரையில் பொதுமக்கள் பங்கேற்க வேண்டும் என்று முதல்வர் சிவராஜ் சிங் சவுகான் அழைப்பு விடுத்துள்ளார். டிச.4 அன்று இந்தூரில் ஜனநாயக் தந்தியா மாமாவின் நினைவு நாளையொட்டி ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்யவுள்ளதாகவும் அம்மாநில அரசு அறிவித்திருந்தது.

---

**7. ஜீரோ டிஃபெக்ட், ஜீரோ எஃபெக்ட் (ZED) என்பது எந்த மத்திய அமைச்சகத்தால் செயல்படுத்தப்பட்ட திட்டம்?**

அ) வேளாண்மை & விவசாயிகள் நல அமைச்சகம்

**ஆ) MSME அமைச்சகம் ☑**

இ) வர்த்தகம் & தொழில்துறை அமைச்சகம்

ஈ) எஃகு அமைச்சகம்

✓ MSME அமைச்சகம் ஜீரோ டிஃபெக்ட், ஜீரோ எஃபெக்ட் (ZED) திட்டத்தை செயல்படுத்துகிறது. இது கடந்த 2016ஆம் ஆண்டு பிரதமர் மோடியால் தொடங்கப்பட்ட MSME சான்றிதழ் திட்டமாகும். இது MSME'கள் எந்த விதமான குறைபாடுகளும் இல்லாமல் மேலும் சூழலுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல் பொருட்களை உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கிறது.

✓ MSME அமைச்சர் நாராயண் ராணே, ராஜ்யசபாவில் பகிர்ந்துகொண்ட தரவுகளின்படி, இந்தத் திட்டம் சுமார் 25,000 MSME பதிவுகளைப் பதிவு செய்துள்ளது. மேலும் MSMEகள் பயனடைவதற்காக FY19'இல் இந்தத் திட்டம் உயர்த்தப்பட்டது.

---

**8. 'சமூக ஊடக (அடிப்படை எதிர்பார்ப்புகள் & அவதூறு) மசோதா - 2021'ஐ முன்மொழிந்த நாடு எது?**



அ) அமெரிக்கா

**ஆ) ஆஸ்திரேலியா ☑**

இ) சீனா

ஈ) இந்தியா

✓ ஆஸ்திரேலிய அரசாங்கம் 'சமூக ஊடக (அடிப்படை எதிர்பார்ப்புகள் மற்றும் அவதூறு) மசோதா - 2021'இன் வரைவை வெளியிட்டது. சமூக ஊடக நிறுவனங்கள் தங்கள் தளங்களில் இடுகையிடப்பட்ட உள்ளடக்கத்திற்கு பொறுப்பேற்பது மற்றும் பயனர்கள் கேலிக்கு

உள்ளாக்கப்படுவதிலிருந்து பாதுகாப்பதை இம்மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**9. இந்தியாவின் முதல் தனியாரால் உருவாக்கப்பட்ட முழு கிரை –யோஜெனிக் ஏவுகலமான தவான்–1, பின்வரும் எந்நிறுவனத்தால் உருவாக்கப்பட்டதாகும்?**

**அ) ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் ☑**

ஆ) ஸ்கந்தா ஏரோஸ்பேஸ்

இ) துருவ் ஸ்பேஸ்

ஈ) காலின்ஸ் ஏரோஸ்பேஸ்

✓ ஹைதராபாத்தைச்சார்ந்த விண்வெளி தொழில்நுட்ப துளிர் நிறுவனமா –ன ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ், இந்தியாவின் முதல் தனியாரால் உருவா –க்கப்பட்ட முழு கிரையோஜெனிக் ஏவுகல எஞ்சினை பரிசோதனை செய்துள்ளது. இந்திய ஏவுகல விஞ்ஞானி சதீஷ் தவானின் நினைவாக இந்த எஞ்சினுக்கு தவான்–1 எனப் பெயரிடப்பட்டுள்ளது.

✓ இது 3D பிரிண்டிங் தொழினுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டது திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு மற்றும் திரவ ஆக்ஸிஜனை இது தனது எரிபொருளாக பயன்படுத்தும்.

---

**10. வருவாய் புலனாய்வு இயக்குநரகமானது எந்த அமைப்பின்கீழ் அமலாக்க முகமையாக உள்ளது?**

**அ) மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் ☑**

ஆ) செக்யூரிட்டீஸ் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆஃப் இந்தியா

இ) அமலாக்க இயக்குநரகம்

ஈ) மத்திய நேரடி வரிகள் வாரியம்

✓ வருவாய் புலனாய்வு இயக்குநரகமானது, மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியத்தின் (CBIC) கீழ், கடத்தல் எதிர்ப்பு விஷயங்களில் இந்திய அரசாங்கத்தின் உளவுத்துறை மற்றும் அமலாக்க நிறுவனமாக உள்ளது. மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், வருவாய் புலனாய்வு இயக்குநரகத்தின் 64ஆவது நிறுவன நாளில் உரை நிகழ்த்தினார். 2020–21ஆம் ஆண்டில் மத்திய கிழக்கிலிருந்து மியான் –மருக்கு தங்கக்கடத்தல் நிகழ்ந்ததாக அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பறவைகள் சரணாலயமாகிறது 'கழுவேலி ஈரநிலம்': அரசாணை வெளியீடு**

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கழுவேலி ஈரநிலத்தை பறவைகள் சரணாலயமாக அறிவித்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் மாநிலத்தின் 16ஆவது பறவைகள் சரணாலயமாக கழு வேலி ஈரநிலம் உருவெடுத்துள்ளது. இதற்கான அறிவிக்கை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் விரைவில் அரசிதழில் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, பறவைகள் சரணாலயமாக மாற்றப்பட வேண்டிய பகுதிகளின் வரையறைகள் மற்றும் வரம்புகளை அரசு வெளியிட்டுள்ளது. அதன்படி, மொத்தம் 5151.60 ஹெக்டேர் நிலப் பரப்பில் அந்தச் சரணாலயம் அமையவுள்ளது.

விழுப்புரம் மாவட்டம் வானூர் மற்றும் மரக்காணம் தாலூகா பகுதிகளில் அமைந்துள்ளது கழுவேலி உவர்நீர் ஈரநிலம். இந்தியா மட்டுமல்லாது பல்வேறு நாடுகளிலிருந்தும் ஆண்டுதோறும் அரிய பறவைகள் இங்கு வலசை வருவது வழக்கம். அதன் சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் உயிரியல் முக்கியத்துவத்தை உணர்ந்து அவ்விடத்தை பறவைகள் சரணாலயமாக மாற்ற முடிவு செய்யப்பட்டு தற்போது அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

---

**2. இந்தியா–ரஷியா இடையே ₹5,000 கோடி பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்து**

₹5,000 கோடி மதிப்பில் ஏகே–203 ரக துப்பாக்கிகளை இணைந்து தயாரிப்பது உள்ளிட்ட பாதுகாப்பு துறைசார்ந்த 4 ஒப்பந்தங்கள் இந்தியா–ரஷியா இடையே கையெழுத்தாகின. இவைதவிர, 24 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இந்தியா–ரஷியா ராணுவம் மற்றும் ராணுவத் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஆணையத்தின் 20ஆவது கூட்டம் தில்லியில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், ரஷிய பாதுகாப்புத் துறை அமைச்சர் செர்கேய் ஷொய்கு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தின்போது நான்கு முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. உத்தர பிரதேச மாநிலத்தின் அமேதியில் 6,01,427 ஏகே–203 ரக தாக்குதல் துப்பாக்கிகளைத் தயாரிப்பதற்கு சுமார் ₹5,000 கோடி மதிப்பிலான ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்திய வீரர்கள் பயன்படுத்துவதற்கான இந்தத் துப்பாக்கிகளின் தொழில்நுட்பத்தை ரஷியா பகிர்ந்து கொள்கிறது. இந்தியாவுக்கும் ரஷியாவுக்கும் இடையேயான ராணுவ ஒத்துழைப்பை மேலும் 10 ஆண்டுகளுக்கு (2021–2031) நீட்டிப்பதற்கான ஒப்பந்தமும் கூட்டத்தின்போது கையெழுத்தானது.

'கலாஷ்னிகோவ்' ரக சிறிய ரக ஆயுதங்களைத் தயாரிப்பதற்காக இரு நாடுகளுக்கிடையே கடந்த 2019–ஆம் ஆண்டில் கையெழுத்தான ஒப்பந்தத்தில் தற்போது சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியா–ரஷியா ராணுவம் மற்றும் ராணுவத் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஆணையத்தின் 20ஆவது கூட்டம் தொடர்பான வழிமுறைகள் குறித்த ஓர் ஒப்பந்தமும் கையெழுத்தானது.

மொத்தம் உடன்பாடுகளில் ஒன்பது இரு நாட்டு அரசுகள் இணைந்து செயல்படுத்தும் திட்டங்கள் தொடர்பானவை. மீதமுள்ள 19 ஒப்பந்தங்கள் பல்வேறு துறைகளில் வணிக ரீதியிலான ஒத்துழைப்பு தொடர்பானவை.

---

**3. மானிய விலையில் மாடித் தோட்ட விதைகள்: புதிய திட்டத்தைத் தொடக்கி வைத்தார் முதல்வர் ஸ்டாலின்**

மானிய விலையில் மாடித்தோட்டத்துக்கான விதைகள் மற்றும் செடிகளை வழங்கும் திட்டத்தை முதல்வர் முக ஸ்டாலின் தொடங்கி வைத்தார். முதலமைச்சரின் ஊட்டந்தரும் காய்கறி தோட்டத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று வேளாண்மைத் துறைக்கான தனி நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் மானிய விலையில் மாடித் தோட்ட விதைகள், செடிகள் வழங்கப்பட உள்ளன. ஆறு வகையான காய்கறி விதைகள், 6 எண்ணிக்கையிலான செடி வளர்க்கும் பைகள், 6 எண்ணிக்கையிலான இரண்டு கிலோ அளவிலான தென்னை நார் கட்டிகள், 400 கிராம் உயிர் உரங்கள், 200 கிராம் உயிரி கட்டுப்பாட்டு காரணி, 100 மில்லி லிட்டர் இயற்கை பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் சாகுபடி முறைக்கான கையேடு ஆகியன ₹225 விலையில் மக்களுக்கு வழங்கப்பட உள்ளன. இதன் சந்தை விலை நகரப் பகுதிகளில் ₹900 ஆகும். நகரப்பகுதியைச்சேர்ந்த ஒருவருக்கு அதிகபட்சமாக இரண்டு மாடித்தோட்ட விதைகள் மற்றும் செடிகள் வரை வழங்கப்படும்.

**ஊரகப் பகுதிகள்:** ஊரகப் பகுதிகளில் காய்கறி தோட்டம் அமைப்பதை ஊக்குவிக்க கத்திரி, மிளகாய், வெண்டை, தக்காளி, அவரை, பீர்க்கன், புடலை, பாகல், சுரைக்காய், கொத்தவரை, சாம்பல்பூசணி, கீரைகள் ஆகிய பன்னிரு வகை காய்கறி விதைகளை வழங்கப்பட உள்ளன. ஒருவருக்கு இரண்டு தொகுப்புகள் அளிக்கப்படும்.

**நோய் எதிர்ப்பு சக்தி:** காய்கறிகளுடன், நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தும் வகையில் மூலிகைச் செடிகள், நோய் எதிர்ப்பு சக்தியுடைய பழங்கள் மற்றும் காய்கறிகளும் வழங்கப்படும். அதன்படி, பப்பாளி, எலுமிச்சை, முருங்கை, கறிவேப்பிலை, திப்பிலி, கற்பூரவல்லி, புதினா, சோற்று கற்றாழை ஆகிய எட்டுச் செடிகள் அடங்கிய தொகுப்பு ₹25 விலையில் வழங்கப்படும். ஒரு குடும்பத்துக்கு அதிகபட்சமாக ஒரு தொகுப்பு அளிக்கப்படும்.

---

**4. நாட்டில் 2.13 லட்சம் ஏடிஎம்'கள்!**

இந்த ஆண்டு செப்டம்பர் வரையிலான காலகட்டத்தில் நாட்டில் உள்ள மொத்த ஏடிஎம்களின் (தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரங்கள்) எண்ணிக்கை 2.13 லட்சத்துக்கு மேல் உள்ளதாக நாடாளுமன்றத்தில் திங்கள்கிழமை தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பான கேள்விக்கு மத்திய நிதித்துறை இணையமைச்சர் பாகவத் கராட் எழுத்துமூலம் அளித்த பதிலில் கூறியிருப்பதாவது:

இந்திய ரிசர்வ் வங்கி அளித்த தகவலின்படி நாட்டில் உள்ள வங்கிகள் 2021 செப்டம்பர் வரை 2,13,145 ஏடிஎம்களை நிறுவியுள்ளன. இதில் 47.4 சதவீத ஏடிஎம்'கள் கிராமப்புறங்கள் மற்றும் வளர்ந்துவரும் சிறிய

ஊர்களில் உள்ளன. இவைதவிர வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்களின்கீழ் 27,837 ஏடிஎம்'கள் உள்ளன.

ஆண்டுதோறும் குறைந்தபட்சம் புதிதாக 1,000 ஏடிஎம்களை நிறுவும் நோக்குடன் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்போதைய சூழ்நிலையில் பெருநகரங்களைவிட கிராமப்புறங்களில் ஏடிஎம்களை அமைக்க முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

---

**5. அந்நியச் செலாவணி கையிருப்பில் இந்தியாவுக்கு 4ஆவது இடம்**

அந்நியச் செலாவணி கையிருப்பை அதிகம் வைத்துள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா 4ஆவது இடத்தில் உள்ளது. மக்களவையில் மத்திய நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் செளதரி எழுத்துமூலம் திங்கள்கிழமை அளித்த பதிலில் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பான கேள்விகளுக்கான பதிலில் அவர் மேலும் கூறியதாவது:

நவம்பர் 19–ஆம் தேதி நிலவரப்படி அந்நியச் செலாவணி கையிருப்பு 640.4 பில்லியன் அமெரிக்க டாலராக (₹48.28 லட்சம் கோடி) இருந்தது. கடந்த 7 நிதியாண்டுகளில் பெட்ரோலியப் பொருள்கள் மீதான கலால் வரி, செஸ் வரியாக ₹16.7 லட்சம் கோடி வசூலாகியுள்ளது.

2013–14'இல் பெட்ரோல் மீதான கலால் வரி ஒரு லிட்டருக்கு ₹9.2–ஆக இருந்தது. டீசல் மீது ஒரு லிட்டருக்கு ₹3.46–ஆக இருந்தது. அது இப்போது ஒரு லிட்டர் பெட்ரோல் மீது ₹27.9 ஆகவும், ஒரு லிட்டர் டீசல் மீது ₹21.9 ஆகவும் அதிகரித்துவிட்டது.

இதன்மூலம் கிடைக்கும் வருவாய் பல்வேறு உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கும், வளர்ச்சித் திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. பங்கேற்பு ஆவணங்கள்மூலம் மூதலீடு செய்பவர்கள், அதன்மூலம் பயனடைபவர்கள் ஆகியோரின் விவரம் கருப்புப் பணத்தைத் தடுக்கும் விதிகளின்கீழ் கண்காணிக்கப்படுகிறது. இந்தியப் பங்குச் சந்தைகளில் நேரடியாக முதலீடும் செய்யும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் விவரம் மாதந்தோறும் இந்தியப் பங்குப் பரிவர்த்தனை வாரியத்திடம் (செபி) அறிக்கையாக அளிக்கப்படுகிறது என்று கூறியுள்ளார்.

---

**6. டேவிஸ் கோப்பை: ரஷியா சாம்பியன்**

டேவிஸ் கோப்பை இறுதிச் சுற்றில் குரோஷிய அணியை 2–0 என்ற கணக்கில் வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது ரஷியா.

ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட்டில் இறுதி ஆட்டம் நடைபெற்றது. முதல் ஒற்றையர் ஆட்டத்தில் ரஷியாவின் ஆன்ட்ரெ ரூப்லேவும்–குரோஷிய வீரர் போர்னா கோஜோவும் மோதினர்.

இதில் முதல் 6–4 என கைப்பற்றினார் ரூப்லேவ். இரண்டாவது செட்டில் 4–4 என சமநிலை ஏற்பட்ட போதிலும், சுதாரித்து ஆடிய ரூப்லே 7–6 என்ற செட் கணக்கில் போர்னாவை வென்றார். 2ஆவது ஒற்றையர் ஆட்டத்தில் டேனில் மெத்வதேவும்–மரின் சிலிக்கும் மோதினர். முதல் செட்டை டை பிரேக்கரில் 7–6 என வென்றார் மெத்வதேவ்.

தொடர்ந்து இரண்டாவது செட்டை எவ்வித எதிர்ப்பும் இன்றி 6–2 என கைப்பற்றினார். இதன்மூலம் 2–0 என வென்ற ரஷிய அணி 3ஆவது முறையாக டேவிஸ் கோப்பை சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

---

**1.** **2021ஆம் ஆண்டு சர்வதேச தன்னார்வலர் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

**அ) Volunteer now for our common future ☑**

ஆ) World needs Volunteers

இ) Volunteering during Pandemic

ஈ) Welcoming Volunteers

✓ ஆண்டுதோறும், நீடித்த வளர்ச்சி இலக்குகளை (SDGs) அடைவதற்காக தேசிய மற்றும் சர்வதேச அளவில் தன்னார்வலர்களின் பங்கை ஊக்குவிப்பதற்காக டிசம்பர் 5 அன்று சர்வதேச தன்னார்வலர்கள் நாள் அனுசரிக்கப்படுகிறது. இந்த நாள் உலகெங்கிலும் உள்ள தன்னார்வலர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கிறது. UNGA, கடந்த 2001 ஆம் ஆண்டை சர்வதேச தன்னார்வலர்களின் ஆண்டாக குறித்தது.

✓ "Volunteer now for our common future" என்பது இந்த ஆண்டுக்கான (2021) 'சர்வதேச தன்னார்வலர்கள் நாளுக்கான கருப்பொருள் ஆகும்.

**2.** **உலக மண் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ) டிசம்பர் 3

**ஆ) டிசம்பர் 5 ☑**

இ) டிசம்பர் 7

ஈ) டிசம்பர் 9

✓ மண்ணின் முக்கியத்துவம் மற்றும் அதன் நிலையான மேலாண்மை குறித்து மக்களின் கவனத்தை குவிப்பதற்காக, ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 5ஆம் தேதி உலக மண் நாள் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு பிரச்சாரமானது "Halt soil salinization, boost soil productivity" என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

✓ நலமான சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பராமரிப்பதன் முக்கியத்துவம் மற்றும் மனித நல்வாழ்வைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. கடந்த 2002'இல் சர்வதேச மண் அறிவியல் சங்கத்தால் (IUSS) இந்நாள் பரிந்துரைக்கப்பட்டது.

**3.** **'சிப்ரியன் ஃபோயாஸ் பரிசு'டன் தொடர்புடைய துறை எது?**

அ) விண்வெளி அறிவியல்



**ஆ) கணிதம் ☑**

இ) வைராலஜி

ஈ) வணிகம்

✓ புகழ்பெற்ற இந்திய-அமெரிக்க கணிதவியலாளரான நிகில் ஸ்ரீவஸ்தவா, முதன் முறையாக வழங்கப்படும் $5,000 டாலர் மதிப்புடைய சிப்ரியன் ஃபோயாஸ் பரிசுக்கு கூட்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ஆபரேட்டர் தியரியில் அவர் ஆற்றிய பங்களிப்பிற்காக அமெரிக்க கணித சங்கம் அவருக்கு இவ்விருதை வழங்குகிறது. பெர்க்லியிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஸ்ரீவஸ்தவாவுடன், ஆடம் மார்கஸ் மற்றும் டேனியல் ஸ்பீல்மேன் ஆகிய இருவரும் இவ்விருது பெற்றனர்.

**4.** **முதலாவது 'இந்தியா-ரஷ்யா 2+2' பேச்சுவார்த்தையை நடத்தும் நகரம் எது?**

அ) மாஸ்கோ



**ஆ) புது தில்லி ☑**

இ) அகமதாபாத்

ஈ) புனித பீட்டர்ஸ்பர்க்

✓ முதல் '2+2' அமைச்சர்கள் பேச்சுவார்த்தையானது தில்லியில் நடைபெற உள்ளது. வெளியுறவு மற்றும் பாதுகாப்பு அமைச்சர்கள் மட்டத்தில் நடைபெறும் இது "பரஸ்பர நலன்சார்ந்த அரசியல் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களை" உள்ளடக்கும். இதுவரை அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாற்கர பாதுகாப்பு பேச்சுவார்த்தையின் (குவாட்) உறுப்பு நாடுகளுடன் இந்தியா '2+2' வடிவ சந்திப்புகளை நடத்தியது.

✓ முன்னதாக, பிரதமர் மோடி மற்றும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் இடையேயான 21ஆவது இந்தியா-ரஷ்யா ஆண்டு உச்சிமாநாடு, 2021 டிச.6 அன்று புது தில்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் நடந்தது.

**5.** **அண்மையில் ஒரு இன்னிங்ஸில் 10 விக்கெட்டுகளை வீழ்த்திய அஜாஸ் படேல், எந்த நாட்டைச் சேர்ந்த கிரிக்கெட் வீரராவார்?**

அ) இங்கிலாந்து



**ஆ) நியூசிலாந்து ☑**

இ) வங்காளதேசம்

ஈ) தென்னாப்பிரிக்கா

✓ நியூசிலாந்தின் இடது கை சுழற்பந்து வீச்சாளரான அஜாஸ் படேல், 144 ஆண்டுகால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரே இனிங்சில் அனைத்து 10 விக்கெட்டுகளையும் வீழ்த்திய மூன்றாவது பந்துவீச்சாளர் ஆனார்.

✓ இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது போட்டியின் 2ஆவது நாளில் அவர் இந்தச் சாதனையைப் படைத்தார். இங்கிலாந்தின் ஜிம் லேக்கர் மற்றும் இந்தியாவின் அனில் கும்ப்ளே ஆகியோர் டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்தக் குறிப்பிடத்தக்க சாதனையைப் படைத்துள்ளனர். 33 வயதான அவர் தனது 11ஆவது டெஸ்டில் விளையாண்டு வருகிறார்.

**6.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற 'HAECHI-II' என்பது பின்வரும் எந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையாகும்?**

அ) மத்திய புலனாய்வுப் பணியகம்

**ஆ) இன்டர்போல் ☑**

இ) ஃபெடரல் பீரோ ஆஃப் இன்வெஸ்டிகேஷன்

ஈ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

✓ 'HAECHI-II' என்ற குறியீட்டுப் பெயரில் INTERPOL மேற்கொண்ட சமீப நடவடிக்கையின்கீழ், 20'க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள அமலாக்க முகவர்கள் 1000'க்கும் மேற்பட்ட நபர்களைக் கைது செய்து, சுமார் $27 மில்லியன் சட்டவிரோத நிதியைக் கைப்பற்றியுள்ளனர். இந்தத் திட்டம் சைபர் அடிப்படையான நிதிக் குற்றங்களை ஒடுக்கும் நடவடிக்கையின் ஒருபகுதியாகும். இந்த உலகளாவிய நடவடிக்கையில் இந்திய நாடும் பங்கேற்றது. காதல் மோசடிகள், முதலீட்டு மோசடி மற்றும் சட்டவிரோத ஆன்லைன் சூதாட்டத்துடன் தொடர்புடைய பணமோசடி போன்ற குறிப்பிட்ட வகையான ஆன்லைன் மோசடிகளை இது தனது இலக்காகக் கொண்டு செயல்பட்டது.

**7.** **சமீபத்தில் எந்த இந்திய கிரிக்கெட் வீரர், டெஸ்டில் அதிக விக்கெட் வீழ்த்திய மூன்றாவது கிரிக்கெட் வீரர் ஆனார்?**

அ) ரவீந்திர ஜடேஜா



**ஆ) R அஸ்வின் ☑**

இ) இஷாந்த் சர்மா

ஈ) முகமது ஷமி

✓ R அஸ்வின், சமீபத்தில் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய மூன்றாவது இந்திய கிரிக்கெட் வீரர் ஆனார். 35 வயதான அவர் நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது 418 ஆவது விக்கெட்டை வீழ்த்தி, மற்றொரு இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங்கின் சாதனையை முறியடித்தார்.

✓ அனில் கும்ப்ளே (619), கபில்தேவ் (434) ஆகியோர் மட்டுமே அஸ்வினை விட அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளனர்.

**8.** **பீட்டர் ஃபியாலா, எந்த நாட்டின் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்?**

அ) ஆஸ்திரேலியா



ஆ) இத்தாலி

இ) கிரீஸ்

**ஈ) செக் குடியரசு ☑**

✓ செக் குடியரசின் குடிமை ஜனநாயக கட்சியின் தலைவரான பீட்டர் ஃபியாலா அந்நாட்டின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். 200 இடங்களைக் கொண்ட அந்நாட்டின் நாடாளுமன்றத்தில் ஐந்து கட்சிக் கூட்டணியானது 108 வாக்குகள் பெரும்பான்மையைப் பெற்றதை அடுத்து அவர் பிரதமராக நியமனம் செய்யப்பட்டார். முன்னர் 2012 முதல் 2013 வரை அந்த நாட்டின் கல்வி, இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சராக பணியாற்றிய பீட்டர் ஃபியாலா 2014 முதல் குடிமை ஜனநாயகக் கட்சியின் தலைவராகவும் இருந்து வருகிறார்.

**9.** **கீழ்காணும் எந்த சர்வதேச அமைப்பின் தலைவராக அல் ரைசி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்?**



அ) ஐக்கிய நாடுகள்

ஆ) சர்வதேச நாணய நிதியம்

**இ) இன்டர்போல் ☑**

ஈ) யுனிசெஃப்

✓ ஐக்கிய அரபு அமீரகத்தின் உள்துறை அமைச்சகத்தின் காவல்துறைத் தலைவரான அல் ரைசி, 3 சுற்று வாக்கெடுப்புக்குப் பிறகு, இன்டர்போல் அமைப்பின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். உறுப்புநாடுகள் அளித்த வாக்குகளில் 68.9% வாக்குகளை அவர் பெற்றார். பொதுவாக 'INTERPOL' என அழைக்கப்படுகிற பன்னாட்டுக் காவலகம், உலகளாவிய காவல் துறை ஒத்துழைப்பில் உதவுகிறது. இதன் தலைமையகம் பிரான்சின் லியோனில் உள்ளது.

---

**10.** **சமீபத்தில் தனது முதல் சேலஞ்சர் நிலை ஒற்றையர் பட்டத்தை வென்ற இராம்குமார் ராமநாதனுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**



**அ) டென்னிஸ் ☑**

ஆ) டேபிள்–டென்னிஸ்

இ) பூப்பந்து

ஈ) வில்வித்தை

✓ இந்திய டென்னிஸ் வீரர் ராம்குமார் ராமநாதன் தனது முதல் சேலஞ்சர் நிலை ஒற்றையர் பட்டத்தை, ATP80 மனமா நிகழ்வின் இறுதி நிகழ்வில் வென்றார். ஆறாம் நிலை வீரரும், உலகத் தரவரிசையில் 222ஆவது இடத்திலுள்ளவருமான 27 வயதான இராம்குமார் இராமநாதன் தனது ரஷ்ய போட்டியாளரை 6–1 6–4 என்ற கணக்கில் 68 நிமிடங்களில் வீழ்த்தினார். இவர் இதற்கு முன்பு தனது வாழ்க்கையில் ஆறு சேலஞ்சர் இறுதிப்போட்டிகளில் தோல்வியடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 'டான்ஜெட்கோ'வுக்கு மத்திய அரசு ₹26,428 கோடி கடனுதவி**

கரோனா தொற்று காரணமாக எழுந்த பணப்புழக்கச் சிக்கல்களைத் தீர்க்கும் வகையில், தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மான நிறுவனத்துக்கு (டான்ஜெட்கோ) ரூ. 26,428 கோடி நீண்ட கால கடன் அளிக்கப்பட்டதாக மத்திய எரிசக்தித் துறை அமைச்சர் ஆர்.கே.சிங் மாநிலங்களவையில் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மான நிறுவனத்துக்கு மாநில அரசு கோரிய நிதியுதவியை மத்திய அரசு வழங்கியதா? அதன்விவரம், தமிழகம் உள்ளிட்டு நாடு முழுவதும் மின் நிறுவனங்களின் நிதி ஆதாரங்களைப் பெருக்க மத்திய அரசு எடுத்த நடவடிக்கை என்ன? ஆகியவை குறித்து மாநிலங்களவை திமுக உறுப்பினர் பி.வில்சன் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்து மத்திய மின்சாரம், மரபுசாரா எரிசக்தித் துறை அமைச்சர் ஆர்.கே.சிங் கூறியதாவது:

தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மான நிறுவனத்தின் திட்டங்களின் தகுதியைக் கருத்தில் கொண்டு கடன் அளிக்கப்படுகிறது. கடந்த நவம்பர் 30–ஆம் தேதி வரை மத்திய அரசின் நிறுவனமான பவர் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் லிட். (பிஎஃப்சி) நிறுவனம் ரூ. 34,936.64 கோடியும், ரூரல் எலெக்ட்ரிஃபிகேஷன் கார்ப்பரேஷன் லிட். (ஆர்இசி) ரூ. 36,970 கோடி வரையிலும் கடன் அளித்துள்ளது. இந்த வகையில் மொத்தம் ரூ. 71,906.64 கோடி கடன் நிலுவையில் உள்ளது.

இந்த நிலையில், தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மான நிறுவனத்துக்கு கரோனா தொற்று காரணமாக எழுந்த பணப்புழக்கச் சிக்கல்களைத் தீர்க்க, நீண்ட காலக் கடனுதவித் திட்டத்தின் கீழ், பிஎஃப்சி, ஆர்இசி மூலம் ரூ.26,428 கோடி வழங்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

மேலும், மற்றோரு கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், தமிழகத்தில் சூரிய எரிசக்தி உற்பத்தியில் 2019–20–இல் 6,447 மெகாவாட்டாக இருந்தது. இது, 2020–21–இல் 5,457 மெகாவாட்டாகக் குறைந்துள்ளது. இதேபோல், காற்றாலை மின் உற்பத்தியிலும் 2019–20–ஆம் ஆண்டை விட 2020–21–இல் 32 MW மின் உற்பத்தி குறைந்துள்ளது என்றார்.

---

**2. தமிழகத்தில் முழு கொள்ளளவை எட்டிய 8,690 ஏரிகள்**

தமிழகத்தில் பொதுப்பணித்துறை பராமரிப்பில் உள்ள 14,138 ஏரிகளில் இதுவரை 8,690 ஏரிகள் 100 சதவீதம் நிரம்பின.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. இதனால் தமிழகத்தில் உள்ள பெருவாரியான அணைகள், நீா்த்தேக்கங்கள், பாசன ஏரிகள், குளங்கள் நிரம்பி வருகின்றன. இதன் காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனா். இந்தநிலையில் பாசன ஏரிகள் குறித்து பொதுப்பணித்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் பொதுப்பணித்துறை பராமரிப்பில் உள்ள 14,138 ஏரிகளில் இதுவரை 8,690 ஏரிகள் 100 சதவீதம் நிரம்பின. 2,989 ஏரிகளில் 75 சதவீதம் நீா் நிரம்பியுள்ளது. 90 நீா்த்தேக்கங்களில் 212 டி.எம்.சி. அளவுக்கு தண்ணீா் இருப்பில் உள்ளது. இது முழு கொள்ளளவில் 94.5 சதவீதமாகும்.

சென்னைக்கு குடிநீா் வழங்கும் செம்பரம்பாக்கம் ஏரியில் 89சதவீதமும், புழல் ஏரியில் 90 சதவீதமும் நீா் நிரம்பி உள்ளது.

பூண்டி ஏரியில் 92 சதவீதம், சோழவரம் ஏரியில் 75 சதவீதம், தோ்வாய் கண்டிகை ஏரியில் 100 சதவீதம் நீா் நிரம்பியுள்ளது. அதேபோன்று மேட்டூா் அணையில் 100 சதவீதமும், பவானிசாகரில் 99 சதவீதமும், வைகையில் 96 சதவீதமும் நீா் நிரம்பியுள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**3. மாநிலத்துக்கு வெளியே வாழும் தமிழா் நலனுக்கு தனி இணையம்**

மாநிலத்துக்கு வெளியே வாழும் தமிழா்களின் நலனுக்கென தனி இணையதளத்தை அமைச்சா் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் தொடக்கி வைத்தா். தலைமைச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை அவா் புதிய இணையதளத்தை தொடக்கினாா்.

புலம்பெயா்ந்த தமிழா்கள், மாநிலத்தின் வளா்ச்சிக்கு ஆற்றி வரும் பங்களிப்பை சிறப்பிக்கும் வகையில் இனி ஆண்டுதோறும் புலம்பெயா்ந்த உலகத் தமிழா் நாளாகக் கொண்டாடப்பட உள்ளது. இதற்கான அறிவிப்பை சட்டப் பேரவையில் முதல்வா் மு.க.ஸ்டாலின் வெளியிட்டாா். அதன்படி, எதிா்வரும் ஜனவரி 12 மற்றும் 13 ஆகிய தேதிகளில் புலம்பெயா்ந்த உலகத் தமிழா் நாள், சென்னை கலைவாணா் அரங்கத்தில் கொண்டாடப்பட உள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புவோா் தங்களது பெயா்களைப் பதிவு செய்யலாம் என தமிழக அரசு அழைப்பு வெளியிட்டுள்ளது. மேலும், புலம் பெயா்ந்த தமிழா்களுக்காக முன்னெடுக்கப்படும் நலத் திட்டங்கள், அவா்களது பிரச்னைகளுக்கான தீா்வுகள் போன்றவற்றை அறிந்து கொள்ளும் வகையில் தனி இணையதளத்தை (www.nrttamils.tn.gov.in) வெளிநாடு வாழ் தமிழா் நலத் துறை அமைச்சா் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் தொடக்கி வைத்தா்.

---

**4. கிளாஸ்கோ ஒப்பந்தத்துக்கு இந்தியா உடன்படாதது ஏன்? அமைச்சர் விளக்கம்**

பருவநிலை மாற்றத்திற்கான கிளாஸ்கோ உச்சிமாநாட்டில், காடுகள், நிலம் ஆகியவற்றின் பயன்பாடுகளை வர்த்தகத்துடன் இணைத்து ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டதால், இந்தியா அந்த ஒப்பந்தத்துக்கு உடன்படவில்லை என மத்திய சுற்றுச்சூழல், வனம், பருவநிலை மாற்றத் துறைக்கான இணையமைச்சர் அஸ்வினி குமார் சௌபே மக்களவையில் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார். மேலும், இந்திய வனம், காடுகளின் பரப்பளவு 24.56 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதுகுறித்து மக்களவை திமுக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு செவ்வாய்க்கிழமை கேள்வி எழுப்பினார். இதற்கு மத்திய இணையமைச்சர் அஸ்வினி குமார் சௌபே அளித்த பதில்: கிளாஸ்கோ நகர் பருவநிலை மாற்றத்திற்கான உச்சிமாநாட்டு ஒப்பந்தத்தில், காடுகள் மற்றும் நிலத்தின் பயன்பாடுகளை வர்த்தகத்துடன் இணைத்து ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டது. இதை மத்திய அரசு ஏற்கவில்லை.

1988–ஆம் ஆண்டின் தேசிய காடுகள் கொள்கையின்படி, நாட்டின் மொத்த பரப்பளவில் மூன்றில் ஒரு பங்கு பரப்பளவில் வனத்தைப் பெருக்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. டேராடூன் இந்திய வனவள நில அளவை அறிக்கையின்படி தற்போது 8,07,276 சதுர கிலோ மீட்டரில் சுமார் 24.56 சதவீதம் அளவுக்கு வனநிலங்களின் பரப்பளவு

அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த 2015–ஆம் ஆண்டை விட 13,209 சதுர கி.மீட்டர் பரப்பளவு வனம் அதிகரித்துள்ளது.

பருவநிலை மாற்றத்திற்கான பாரீஸ் ஒப்பந்தத்தின்படி, 300 கோடி டன் கரியமில வாயுவை மூழ்கடிக்கத் தேவையான மரங்களுடன் கூடிய காடுகளின் பரப்பளவை, 2030–ஆம் ஆண்டுக்குள் அதிகரிக்க இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு, இதற்கான பல்வேறு திட்டங்களை மாநிலங்களுக்கு மத்திய சுற்றுச்சூழல், காடுகள், பருவநிலை மாற்றத் துறை அளித்தது என்றார் அமைச்சர்.

---

**5. சுகோய் போர் விமானம் மூலம் பிரமோஸ் ஏவுகணை சோதனை வெற்றி**

ஒடிஸா மாநிலம் சண்டிபூர் பிரமோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணையை சுகோய் 30 எம்கே–1 போர் விமானம் மூலம் செலுத்தி புதன்கிழமை வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.

பிரமோஸ் திட்டத்தில் இது ஒரு மிகப்பெரிய மைல்கல் என்று கூறியுள்ள பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) அதிகாரிகள், புதன்கிழமை காலை 10.30 மணிக்கு சுகோய் 30 எம்கே–1 போர் விமானத்தின் வாயிலாக இந்த ஏவுகணை விண்ணில் செலுத்தப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

மேலும் எதிர்காலத்தில் பிரமோஸ் ஏவுகணைகளை விண்ணில் செலுத்துவதற்கு இந்த சோதனை வழிவகுக்கும் எனவும் அவர்கள் கூறினர். இந்த ஏவுகணை சோதனையில் ஈடுபட்ட அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்த டிஆர்டிஓ தலைவரும், பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டுத் துறை செயலாளருமான சதீஷ் ரெட்டி, கல்வி நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்கள், இந்திய விமானப் படை ஆகியன இந்தப் பணியில் ஈடுபட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

ராஜ்நாத் சிங் பாராட்டு: இதனிடையே, பிரமோஸ் ஏவுகணை சோதனை வெற்றிக்கு டிஆர்டிஓ, விமானப் படை அதிகாரிகளுக்கு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்தார். சூப்பர்சோனிக் ஏவுகணைகள் தயாரிப்பு, சந்தைப்படுத்துதல், மேம்பாடு ஆகியவற்றுக்காக இந்தியாவும் ரஷ்யாவும் பிரமோஸ் திட்டத்தை கூட்டாக முன்னெடுத்து வருகின்றன.

இந்தியக் கடற்படையின் தாக்குதல் திறனை அதிகரிக்கும் பொருட்டு நிலத்தில் இருந்து வானில் குறைந்த தொலைவில் உள்ள இலக்கைத் துல்லியமாக தாக்கி அழிக்கும் விஎல்–எஸ்ஆர்எஸ்ஏஎம் ஏவுகணையை டிஆர்டிஓ செவ்வாய்க்கிழமை வெற்றிகரமாக பரிசோதித்தது குறிப்பிடத்தக்கது.

---

**6. ரூ.2,000 கரன்சி புழக்கம் 1.75% மட்டுமே: மத்திய அரசு**

நாட்டில் புழக்கத்தில் உள்ள மொத்த ரூபாய் நோட்டுகளில் ரூ.2,000 நோட்டுகளின் பங்கு வெறும் 1.75 சதவீதமே என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு நவம்பரில் ரூபாய் நோட்டு வாபஸ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது 2,000 ரூபாய் நோட்டுகள் மற்றும் புதிய ரூ.500 நோட்டுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இது தொடா்பான கேள்விக்கு மத்திய நிதித்துறை இணையமைச்சா் பங்கஜ் சௌதரி எழுத்து மூலம் மாநிலங்களவையில் அளித்த பதிலில் மேலும் கூறியதாவது:

2018 மாா்ச் மாதத்தில் நாட்டில் 336.3 கோடி என்ற எண்ணிக்கையில் 2,000 ரூபாய் நோட்டுகள் இருந்தன. இது அப்போது புழக்கத்தில் இருந்த ரூபாய் நோட்டுகளின் எண்ணிக்கையில் 3.27 சதவீதமாகும். ஆனால், இந்த ஆண்டு நவம்பரில் 223.3 கோடி என்ற எண்ணிக்கையில்தான் 2,000 ரூபாய் நோட்டுகள் உள்ளன. இது இப்போது புழக்கத்தில் உள்ள ரூபாய் நோட்டுகளின் எண்ணிக்கையில் 1.75 சதவீதம் மட்டுமே ஆகும்.

பொதுமக்களின் தேவை மற்றும் புழக்கத்துக்கு ஏற்ப இந்திய ரிசா்வ் வங்கியுடன் ஆலோசித்து மத்திய அரசு முடிவெடுப்பது வழக்கம்.

2018–19–ஆம் ஆண்டில் இருந்து புதிதாக ரூ.2,000 நோட்டுகள் அச்சிடப்படவில்லை. எனவே, புழக்கத்தில் இருந்து அந்த நோட்டுகள் குறைந்துள்ளன. அதிகம் சிதைந்துவிடுவது, அழுக்காகிவிடுவது போன்ற காரணங்களால் வங்கிகளுக்கு வரும் பழைய நோட்டுகள் மீண்டும் புழக்கத்துக்கு விடப்படுவதில்லை என்றாா்.

புதிதாக அச்சிடப்படாததும், பழைய நோட்டுகள் மீண்டும் புழக்கத்துக்கு வராததும் இப்போது மக்கள் கையில் அதிகஅளவில் ரூ.2,000 நோட்டு கிடைக்காமல் இருப்பதற்குக் காரணமாகும்.

---

**7. ஆசிய வளா்ச்சி வங்கியுடன் ரூ.2,074 கோடி கடன் ஒப்பந்தம்**

தமிழகம், உத்தரகண்டில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் ஆசிய வளா்ச்சி வங்கியுடன் (ஏடிபி) ரூ.2,074 கோடி மதிப்பிலான இரு கடன் ஒப்பந்தங்களில் மத்திய அரசு கையொப்பமிட்டுள்ளது.

இது தொடா்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில், 'தமிழகத்தின் நகரப் பகுதிகளில் வசிக்கும் ஏழைகளுக்கு வீடுகளைக் கட்டித் தருவதற்காக சுமாா் ரூ.1,132 கோடி மதிப்பிலான கடன் ஒப்பந்தம் ஆசிய வளா்ச்சி வங்கியுடன் கையொப்பமாகியுள்ளது.

நகரப்பகுதிகளை மேம்படுத்தும் நோக்கில் பிரதமரின் நகா்ப்புற வீட்டுவசதித் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. அத்திட்டத்துக்கான இலக்குகளை நிறைவேற்றும் வகையில் இந்த ஒப்பந்தம் கையொப்பமாகியுள்ளது.

தமிழகத்தின் 7.2 கோடி மக்கள்தொகையில் பாதிக்கும் மேற்பட்டோா் நகரப் பகுதிகளில் வசிக்கின்றனா். தமிழகத்தின் பொருளாதாரம் வளா்ந்து வருவதும், நகரமயமாக்கல் அதிகரித்து வருவதும் குறைந்த வருமானம் கொண்டவா்களுக்கு வீடுகளுக்கான தேவையை அதிகரித்துள்ளது.

ஆசிய வளா்ச்சி வங்கியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த ஒப்பந்தமானது, தமிழகத்தின் நகரப்பகுதிகளில் வசிக்கும் ஏழைகளுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய வீடுகளை கட்டித் தர உதவும். இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தின் 9 இடங்களில் வீடுகள் கட்டப்படவுள்ளன.

உத்தரகண்டில் வளா்ச்சித் திட்டங்கள்: உத்தரகண்டின் டேராடூன், நைனிடால் நகா்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பாதுகாப்பான குடிநீா் வசதியை ஏற்படுத்தவும், சுகாதார சேவைகளை மேம்படுத்தவும் சுமாா் ரூ.942 கோடி மதிப்பிலான கடன் ஒப்பந்தத்தில் மத்திய அரசு கையொப்பமிட்டுள்ளது.

இந்த ஒப்பந்தமானது மாநிலத்தின் முக்கிய சுற்றுலாத் தலங்களாகத் திகழும் டேராடூன், நைனிடால் ஆகிய நகரங்களை மேம்படுத்த உதவும். சுகாதார சேவைகள் மேம்படுத்தப்படுவதால், எதிா்காலத்தில் தோன்ற வாய்ப்புள்ள நோய்களின் தாக்குதலில் இருந்து நகரப்பகுதி மக்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும்.

இத்திட்டத்தின் கீழ் டேராடூனில் 136 கி.மீ.–க்கு குடிநீா் குழாய் அமைக்கப்படவுள்ளது. இதன் மூலம் 40,000 போ் பலனடைவா். குடிநீரின் பயன்பாட்டை அளப்பதற்கான கருவிகள் 5,400 வீடுகளில் பொருத்தப்படவுள்ளன. மேலும், 256 கி.மீ.–க்கு நிலத்தடி கழிவுநீா் அமைப்பு, 117 கி.மீ.–க்கு மழைநீா் வடிகால் வசதி ஆகியவையும் அமைக்கப்படவுள்ளன' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

**8. சென்னை வீரா் சபரி டபிள்யூபிசி சாம்பியன்**

உலக குத்துச்சண்டை கவுன்சில் (டபிள்யூபிசி) முதல் முறையாக நடத்திய டபிள்யூபிசி இந்தியா வெல்டா்வெயிட் சாம்பியன்ஷிப் போட்டியில் சென்னை வீரா் சபரி (24) சாம்பியன் ஆனாா்.

தொழில்முறை ரீதியிலான இப்போட்டியில் 8 சுற்றுகள் கொண்ட இறுதிச் சுற்றில் அவா் சண்டீகரைச் சோ்ந்த அனுபவமிக்க வீரரான ஆகாஷ்தீப் சிங்கை (27) வீழ்த்தினாா். போட்டி முடிவானது 76–76, 79–73, 79–73 என்ற பெரும்பான்மை புள்ளிகள் அடிப்படையில் அவருக்கு சாதகமாக அமைந்தது. தற்போது சாம்பியன் ஆகியிருக்கும் சபரி, அவ்வப்போது இந்தியாவின் இதர போட்டியாளா்களுடன் மோதி தனக்கான பட்டத்தை தக்க வைக்க வேண்டும்.

கடந்த ஆண்டு ஜனவரியில் தனது தொழில்முறை குத்துச்சண்டையை தொடங்கிய சபரி, முந்தைய மோதல்களில் 4 வெற்றிகளையும், 1 தோல்வியையும் பதிவு செய்துள்ளாா். அவருடன் மோதி தோல்வியை சந்தித்த ஆகாஷ்தீப் கடந்த 3 ஆண்டுகளில் 8 வெற்றிகள், 1 தோல்வியை பதிவு செய்துள்ளவா்.

இதேபோட்டியில் ஆசிய சில்வா் லைட்வெயிட் பட்டத்துக்கான பிரிவில் இந்தியாவின் காா்த்திக் சதீஷ் குமாா் – இந்தோனேசியாவின் ஹீரோ டிடோவை தோற்கடித்து பட்டம் வென்றாா். இதில் அவா் 80–72, 79–73, 79–73 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றாா். இத்துடன் 8 ஆட்டங்களில் பங்கேற்றுள்ள காா்த்திக், அனைத்திலும் வெற்றியை

பதிவு செய்துள்ளார். டபிள்யூபிசி ரேங்கிங்கில் தற்போது 4–ஆவது இடத்தில் இருக்கும் அவருக்கு இந்த வெற்றி முன்னேற்றத்தை அளிக்கும்.

---

**9. ஆசிய இளையோர் பாரா போட்டி: இந்தியா 41 பதக்கங்களுடன் நிறைவு**

பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் பாரா விளையாட்டுப் போட்டியில் இந்தியா மொத்தமாக 12 தங்கம், 16 வெள்ளி, 13 வெண்கலம் என 41 பதக்கங்கள் வென்று நிறைவு செய்துள்ளது.

இதில் அதிகபட்சமாக தடகள பிரிவில் 22 பதக்கங்கள் (8 தங்கம், 7 வெள்ளி, 7 வெண்கலம்) வென்று தந்துள்ளனர் இந்திய போட்டியாளர்கள். அடுத்தபடியாக பாட்மின்டனில் 16 பதக்கங்கள் (4 தங்கம், 7 வெள்ளி, 5 வெண்கலம்), நீச்சலில் 3 பதக்கங்கள் (1 வெள்ளி, 2 வெண்கலம்), பவர் லிஃப்டிங்கில் 1 வெள்ளியும் இந்தியாவுக்கு கிடைத்துள்ளன.

கடந்த 2–ஆம் தேதி தொடங்கி, திங்கள்கிழமையுடன் நிறைவடைந்த இப்போட்டியில் சுமார் 30 நாடுகளில் இருந்து 700–க்கும் அதிகமான போட்டியாளர்கள் கலந்துகொண்டனர். இப்போட்டியில், மாற்றுத் திறனின் வகைப்படுத்துதல் அடிப்படையில் ஒரே விளையாட்டில் பல பிரிவுகளில் பந்தயங்கள், ஆட்டங்கள் நடைபெற்றன.

இந்திய விளையாட்டு ஆணையம் வெளியிட்ட தகவல்படி, தடகள விளையாட்டில் உயரம் தாண்டுதலில் பிரவீண் குமார் தங்கமும், ராகுல் வெள்ளியும் வென்றனர். நீளம் தாண்டுதலில் கரன்தீப் குமார் முதலிடமும், பிரவீண் குமார், தர்ஷ் சோனி 2–ஆம் இடமும் பெற்றனர். ஓட்டத்தில் 100 மீட்டர் பிரிவில் மீட் ததானி தங்கமும், தர்ஷ் சோனி வெண்கலமும் வென்றனர். 200 மீட்டரிலும் மீட் ததானி தங்கம் வெல்ல, 400 மீட்டரில் மாஃபி வெள்ளியும், பிஜு பென்னட் ஜார்ஜ் வெண்கலமும் பெற்றனர்.

ஈட்டி எறிதலில் விக்ரம் சிங் முதலிடம் பிடிக்க, சித்தார்த் 2–ஆம் இடம், லக்ஸித் 3–ஆம் இடம் பிடித்தனர். வட்டு எறிதலில் விகாஷ் பாட்டிவால் முதலிடமும், கார்திக் எம்.கிருஷ்ணா 3–ஆம் இடமும் பெற்றனர். குண்டு எறிதலில் விகாஷ் பாட்டிவால், அனன்யா பன்சால் ஆகியோர் வெள்ளி வெல்ல, மேதா ஜெயந்த், லக்ஸித், சஞ்ஜய் ஆர்.நீலம் ஆகியோர் வெண்கலம் வென்றனர்.

கிளப் எறிதலில் காஷிஷ் லக்ரா தங்கம் வெல்ல, நீச்சலில் தேவான்ஷி சதிஜா 1 வெள்ளியும், 2 வெண்கலமும் வென்றார். பவர் லிஃப்டிங்கில் ராகுல் ஜோக்ராஜ்யா வெள்ளி பெற்றார். பாட்மின்டனில் நித்யா, சஞ்ஜனா, பாலக் – சஞ்ஜனா ஜோடி, நேஹல் – அபிஜீத் ஜோடி ஆகியோர் தங்கம் வென்றனர்.

ஜோதி (2 பதக்கம்), நவீன், ஹார்திக் மக்கார், கரன் – ருதிக் இணை, நித்யா – ஆதித்யா இணை, ஹார்திக் – சஞ்ஜனா இணை ஆகியோர் வெள்ளி பெற்றனர். பாலக், நவீன் – ஹார்திக் இணை, சந்தியா, நேஹல் – பாலக் இணை வெண்கலம் பெற்றுள்ளனர்.

---

**1. 22ஆவது ஏவுகலக்கப்பற்படை (கில்லர் ஸ்குவாட்ரன்) முறையாக எங்கு நிறுவப்பட்டது?**



**அ) மும்பை ☑**

ஆ) விசாகப்பட்டினம்

இ) கோவா

ஈ) கொச்சின்

✓ 22ஆவது ஏவுகலக் கப்பற்படையானது 1999 அக்டோபரில் மும்பையில் முறையாக நிறுவப்பட்டது. இந்திய குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த், 'கில்லர் ஸ்குவாட்ரான்' என்றும் அழைக்கப்படும் 22ஆவது ஏவுகலக் கப்பற்படைக்கு குடியரசுத்தலைவரின் தரத்தை வழங்குவார். குடியரசுத்தலைவரின் தரமானது சிறிய இராணுவப் பிரிவுக்கு வழங்கப்ப –டும் குடியரசுத்தலைவரின் வண்ண விருதைப்போன்ற கௌரவமாகும்.

---

**2. ஆத்ம நிர்பார் கிரிஷக் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்துள்ள மாநிலம் எது?**



அ) குஜராத்

**ஆ) உத்தரப்பிரதேசம் ☑**

இ) மத்திய பிரதேசம்

ஈ) மகாராஷ்டிரா

✓ உத்தரப்பிரதேச மாநில அரசானது 2021-22 முதல் மாநிலத்தில் ஆத்ம நிர்பார் கிரிஷக் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் அடுத்த மூன்று ஆண்டுகளில் மாநிலத்தின் ஒவ்வொரு தொகுதியிலும் 1475 உழவர் உற்பத்தியாளர்க –ள் அமைப்புகள் உருவாக்கப்படும். மேலும், வேளாண் உள்கட்டமைப்பு நிதியின்கீழ் மத்திய அரசு ஒதுக்கியுள்ள ₹1000 கோடியை பயன்படுத்து –வதற்கான இலக்கை அடைவதற்கு இது உதவும்.

---

**3. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற கொன்யாக்குகள் என்போர், எந்த இந்திய மாநிலத்தின் மிகப்பெரிய பழங்குடியினத்தவராவர்?**



அ) அசாம்

ஆ) ஹிமாச்சல பிரதேசம்

**இ) நாகாலாந்து ☑**

ஈ) மத்திய பிரதேசம்

✓ நாகாலாந்தின் ஓட்டிங் கிராமத்தில் இந்திய ஆயுதப்படையின் துப்பாக்கிச் சூட்டில் 14 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டனர்; இதில் மாநிலத்தின் மிகப்பெரிய பழங்குடியினரான கொன்யாக்களும் அடங்குவர். அவர்கள் நாகாலாந்தில் வாழும் கடுமையான போர்முறை பழங்குடியினராக அறியப்படுகிறார்கள். 1980ஆம் ஆண்டு வாக்கில், அவர்கள் எதிரிகளின் தலையைக் கொய்யும் பழக்கத்தைக் கைவிட்டனர். சுமார் 3 இலட்சம் மக்கள்தொகையுடன், அருணாச்சல பிரதேசம் மற்றும் மியான்மரின் சில பகுதிகளிலும் கொன்யாக்கள் வசித்து வருகின்றனர்.

---

**4. இந்திய கடற்படையால் அண்மையில் தொடங்கப்பட்ட 'சந்தாயக்' என்றால் என்ன?**



**அ) ஆய்வுக்கப்பல் ☑**

ஆ) ஏவுகல ஏவல் கப்பல்

இ) ஆம்பிபியஸ் போர் கப்பல்

ஈ) விமானந்தாங்கிக் கப்பல்

✓ இந்திய கடற்படை பயன்பாட்டுக்காக தயாரிக்கப்பட்ட 'சந்தாயக்' என்ற புதிய சர்வே கப்பல், ஹூக்ளி ஆற்று நீரில் இறக்கப்பட்டது. இந்திய கடற்படை பயன்பாட்டுக்காக நான்கு மிகப் பெரிய சர்வே கப்பல்களை கட்டுவதற்கான ஒப்பந்தம் பாதுகாப்புத்துறை அமைச்சகம் மற்றும் கொல்கத்தாவில் உள்ள கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ் & இன்ஜினியர்ஸ் ₹2,435 கோடி மதிப்பில் கடந்த 2018ஆம் ஆண்டு கையெழுத்தானது.

✓ இந்த ஆய்வுக் கப்பல்களின் முதன்மைப் பணியானது துறைமுகங்கள் பற்றிய முழு அளவிலான கடலோர மற்றும் ஆழ்கடல் ஆய்வுகளை மேற்கொள்வதாகும்.

---

**5. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற மின்ஸ்க் ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய நாடு எது?**



அ) இஸ்ரேல்

ஆ) ஈரான்

**இ) உக்ரைன் ☑**

ஈ) ஆப்கானிஸ்தான்

✓ உக்ரைன் மீது படையெடுக்க வேண்டாம் என்று அமெரிக்கா சமீபத்தில் ரஷ்யாவை எச்சரித்துள்ளது. மேலும், கிழக்கு உக்ரைனில் ரஷ்ய மொழி பேசுபவர்களால் பிரிவினைவாத போரை முடிவுக்கு கொண்டுவர வடிவ –மைக்கப்பட்ட ஒப்பந்தங்களுக்கு இருநாடுகளும் திரும்ப வேண்டும் என்றும் அது வலியுறுத்தியது. 2014'இல், உக்ரைனும் ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகளும் பெலாரஸின் தலைநகரமான மின்ஸ்கில் 12 அம்ச போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஒப்புக்கொண்டனர்.

✓ ரஷ்யா, உக்ரைன், OSCE ஆகியவற்றின் பிரதிநிதிகள் மற்றும் இரண்டு ரஷ்ய சார்பு பிரிவினைவாத பிராந்தியங்களின் தலைவர்கள் மின்ஸ்கில் 2015'இல் 13 அம்ச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இவை மின்ஸ்க் ஒப்பந்தங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

---

**6. உறுப்பு தானம் மற்றும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கான உலகளாவிய கண்காணிப்பு அமைப்பின்படி, உறுப்பு தானத்தில் இந்தியாவின் தரநிலை என்ன?**

அ) முதலாவது

**ஆ) மூன்றாவது ☑**

இ) ஐந்தாவது

ஈ) ஏழாவது

✓ 'இந்திய உறுப்புதான நாள்' கொண்டாட்டம் தேசிய உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பு (NOTTO) மூலம் புது தில்லியில் நவம்பர் 27 அன்று ஏற்பாடு செய்யப்பட்டது. நாட்டில், ஓராண்டுக்கு செய்யப்பட்ட உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை 2013'இல் 4990 ஆக இருந்து 2019'இல் 12746 ஆக அதிகரித்துள்ளது. தானம் மற்றும் மாற்று அறுவை சிகிச்சைக்கான உலகளாவிய கண்காணிப்பு (GODT) இணைய தளத்தில் உள்ள தரவுகளின்படி, அமெரிக்கா மற்றும் சீனாவிற்குப் பிறகு இந்தியா, உலகளவில் மூன்றாவது இடத்தில் உள்ளது.

---

**7. சவுரவ் கோசலுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**



அ) சதுரங்கம்

**ஆ) ஸ்குவாஷ் ☑**

இ) மட்டைப்பந்து

ஈ) குத்துச்சண்டை

✓ இந்திய தொழிற்முறை ஸ்குவாஷ் வீரர் சவுரவ் கோசல் மலேசிய ஓபன் பட்டத்தை வென்ற முதல் இந்திய வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். இறுதிப்போட்டியில், உலகின் முன்னாள் நெ:4 வீரரான கொலம்பியாவின் மிகுவல் ரோட்ரிகஸை வீழ்த்தி சவுரவ் கோசல் அந்தப் பட்டத்தை வென்றார். பல்வேறு சந்தர்ப்பங்களில், இரண்டு வீரர்களும் ஒன்றாக விளையாடியுள்ளனர். டேவிட் பால்மரால் இருவரும் பயிற்சி அளிக்கப் பெற்றுள்ளனர்.

---

**8. மக்டலினா ஆண்டர்சன் என்பார் எந்த நாட்டின் முதல் பெண் பிரதமரானார்?**



அ) ஐஸ்லாந்து

**ஆ) ஸ்வீடன் ☑**

இ) சுவிட்சர்லாந்து

ஈ) ஆஸ்திரேலியா

✓ மத்திய-இடதுசாரி சமூக ஜனநாயகக்கட்சியின் தலைவரான மக்டலினா ஆண்டர்சன் ஸ்வீடன் நாட்டின் முதல் பெண் பிரதமரானார். ஆனால், எதிர்க்கட்சியால் முன்மொழியப்பட்ட ஒருவருக்கு ஆதரவாக அவரது வரவுசெலவுத்திட்டம் நிராகரிக்கப்பட்டதையடுத்து, பிரதமரான சில மணி நேரங்களிலேயே அவர் இராஜினாமா செய்தார். தற்போது மக்டலினா ஆண்டர்சன் மீண்டும் அந்நாட்டின் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

---

**9. 'வேதிப்போரில் பாதிக்கப்பட்ட அனைவருக்குமான நினைவுநாள்' ஆனது ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**



அ) நவம்பர் 28

**ஆ) நவம்பர் 30 ☑**

இ) டிசம்பர் 2

ஈ) டிசம்பர் 4

- ✓ 'வேதிப்போரில் பாதிக்கப்பட்ட அனைவருக்குமான நினைவுநாளானது' நவ.30 அன்று ஐநா அவையால் அனுசரிக்கப்படுகிறது. வேதிப்போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இந்தச் சிறப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது. இரசாயன ஆயுதங்களின் அச்சுறுத்தலை ஒழிப்பத –ற்காக இரசாயன ஆயுதங்களை தடைசெய்வதற்கான அமைப்பு (OPCW) எடுத்த உறுதிமொழியையும் இந்த நாள் சிறப்பித்துக் காட்டுகிறது.

---

**10.அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற அலிபூர் விலங்கியல் பூங்கா அமைந்துள்ள இந்திய மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**



அ) மத்திய பிரதேசம்

ஆ) பீகார்

**இ) மேற்கு வங்கம் ☑**

ஈ) உத்தர பிரதேசம்

- ✓ கொல்கத்தாவில் உள்ள அலிபூர் விலங்கியல் பூங்கா, விலங்குகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒரு மாத காலம் விலங்குகளைத் தத்தெடுக்கும் செயல்முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. விலங்கியல் பூங்காக்களில் நடைமுறையில் ஓராண்டு காலம் வரை விலங்குகளைத் தத்தெடுக்கும் செயல்முறை இருந்து வருகிறது.
- ✓ விலங்கியல் பூங்கா அதிகாரிகளின் கூற்றுப்படி, தத்தெடுப்பு கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் மான்கள், புலிகள் மற்றும் சிம்பன்சிகள் போன்ற பிரபலமான விலங்குகள் தவிர, பிரபலமற்ற பறவைகள் மற்றும் விலங்குகளை தத்தெடுக்கவும் ஊக்குவிக்கப்படுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. முப்படைத் தலைமைத் தளபதி விபின் ராவத், 12 பேர் பலி: குன்னூர் அருகே ராணுவ ஹெலிகாப்டர் விபத்து**

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே நிகழ்ந்த இராணுவ ஹெலிகாப்டர் விபத்தில் முப்படைகளின் தலைமைத் தளபதி விபின் ராவத் (63), அவரின் மனைவி மதுலிகா உள்பட 13 பேர் டிச.8 அன்று உயிரிழந்தனர்.

விபத்து நடந்த ஆறு மணி நேரத்துக்குப் பிறகு இந்த விவரம், இந்திய விமானப் படைத் தரப்பில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

சூலூர் விமானப் படைத்தளத்திலிருந்து எம்ஐ17வி5 ரக ஹெலிகாப்டரில் விபின் ராவத், அவரின் மனைவி மதுலிகா ராவத், இராணுவ உயர் அதிகாரிகள் எல் எஸ் லிடர், ஹர்ஜிந்தர் சிங், குருசேவக் சிங், ஜிதேந்திர குமார், விவேக் குமார், சாய் தேஜா, ஹவில்தார் சத்பால், பிரித்விராஜ் எஸ் சௌஹான், தாஸ், பிரதீப் ஏ, கே சிங், வருண் சிங் ஆகிய 14 பேர் பயணித்தனர்.

**மரத்தில் மோதிய ஹெலிகாப்டர்:** சூலூரில் இருந்து புறப்பட்ட இந்த ஹெலிகாப்டர் வெலிங்டனை அடைய திட்டமிடப்பட்டிருந்தது. இந்நிலையில், குன்னூர் அருகேயுள்ள காட்டேரி மலைப் பாதையை ஒட்டி அமைந்துள்ள நஞ்சப்பசத்திரம் பகுதி மேலே பறந்து கொண்டிருந்த போது திடீரென கட்டுப்பாட்டை இழந்து அங்கிருந்த மலைப்பகுதியில் இருந்த மரத்தில் ஹெலிகாப்டர் மோதி தீ விபத்துக்குள்ளானது.

குரூப் கேப்டன் வருண் சிங் 80% தீக்காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளார். அவருக்கு வெலிங்டன் ராணுவ மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

---

**2. 6 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை: உரிமைத் தொகைகளை அளித்தார் முதல்வர்**

ஆறு தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி அதற்கான உரிமைத் தொகைகளை குடும்பத்தினரிடம் முதல்வர் மு க ஸ்டாலின் அளித்தார். இதற்கான நிகழ்ச்சி தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:

தமிழ் வளர்ச்சித்துறைக்கான மானியக்கோரிக்கையில் தமிழ் அறிஞர்கள் சிலம்பொலி சு செல்லப்பன், முனைவர் தொ பரமசிவன், புலவர் இளங் குமரனார், முருகேசபாகவதர், சங்கரவள்ளி நாயகம், செ ராசு ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு நூலுரிமைத் தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

---

**3. தந்தையின் வழியில் பணியைத் தொடங்கிய விபின் ராவத்!**

ஹெலிகொப்டர் விபத்தில் பலியான முப்படை தலைமைத் தளபதி விபின் ராவத், தந்தையின் பிரிவிலேயே ராணுவப் பணியைத் 1978–ஆம் ஆண்டு தொடங்கினார்.

**பணியைத் தொடங்கிய ராவத்:**

விபின் ராவத்தின் முழுப் பெயர் விபின் லக்ஷ்மண் சிங் ராவத் ஆகும். தேசிய பாதுகாப்பு அகாதெமி மற்றும் இந்திய ராணுவ அகாதெமியில் பட்டம் பெற்ற பிறகு, 1978–இல் இந்திய ராணுவத்தில் விபின் பணியில் சேர்ந்தார். 11–ஆவது கோர்க்கா ரைஃபிள்ஸின் 5–ஆவது பட்டாலியனாக அவருடைய தந்தை லக்ஷ்மண் சிங் ராவத் இருந்த நிலையில், அதே பிரிவில் விபின் ராவத்தும் சேர்க்கப்பட்டார்.

ராணுவத்தில் 40 ஆண்டு காலம் பணியில் பிரிகேட் கமாண்டர், ராணுவ தெற்கு படைப் பிரிவின் தலைமை அதிகாரி, ராணுவ நடவடிக்கை இயக்குநரக கிரேடு–2 அதிகாரி, ராணுவ செயலக பிரிவில் ராணுவச் செயலர், ராணுவ துணைச் செயலர், இளநிலை கமாண்ட் பிரிவில் முதுநிலை பயிற்றுவிப்பாளர் உள்ளிட்ட முக்கியப் பதவிகளை விபின் ராவத் வகித்துள்ளார்.

ஐநா அமைதி காக்கும் படையின் ஒருங்கிணைந்த பகுதியில் ஓர் உறுப்பினராகவும், காங்கோ ஜனநாயகக் குடியரசில் பன்னாட்டுப் படை அணிக்கு தலைமையும் வகித்துள்ளார். 2016–ஆம் ஆண்டு டிசம்பர் 17–ஆம் தேதி ஜெனரல் தல்பீர் சிங் சுஹாக்குக்குப் பிறகு நாட்டின் 27–ஆவது ராணுவத் தலைமைத் தளபதியாக பதவியேற்றார். அந்த பணியில் இருந்து ஓய்வு பெற்ற நிலையில், இந்தியாவின் முப்படைகளையும் ஒருங்கிணைக்கும் நோக்கத்தில் கடந்த 2019–ஆம் ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட முப்படைகளின் தலைமைத் தளபதி பதவியில் நியமிக்கப்பட்டார்.

**முக்கிய ராணுவ நடவடிக்கைகள்:** இவருடைய தலைமையில் தேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இந்திய ராணுவம் மிக முக்கியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

குறிப்பாக, இந்திய – பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தானின் அத்துமீறல்களுக்கு எதிரான இந்திய ராணுவம் கடும் நடவடிக்கைகளை எடுத்ததுடன், கடந்த 2019–ஆம் ஆண்டு இந்திய விமானப்படை பாகிஸ்தானின் பாலாகோட் பகுதியில் அதிரடித் தாக்குதலை நடத்தியது.

அதுபோல, டோக்லாம் எல்லைப் பகுதியில் சீனாவின் அத்துமீறலையும் இவருடைய தலைமையிலான இந்திய ராணுவம் திறம்படக் கையாண்டது. ராணுவ அதிகாரிகளிடையேயான தொடர் பேச்சுவார்த்தைகள் மூலமாக இந்திய – சீன ராணுவத்தினரிடையே நல்லுறவு ஏற்படுத்துதற்கான தீவிர முயற்சிகளை விபின் ராவத் எடுத்ததோடு, கூட்டு போர்ப் பயிற்சிகளையும் மேற்கொள்ள வழி வகுத்தார். இந்தியாவின் வடகிழக்குப் பகுதிகளில் மாவோயிஸ்டுகளின் நடவடிக்கைகளைக் குறைப்பதில் முக்கியப் பங்காற்றினார்.

கடந்த 2016–ஆம் ஆண்டில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிக்குள் இந்திய ராணுவம் நடத்திய துல்லியத் தாக்குதலுக்கான திட்டமிடலிலும் விபின் ராவத் முக்கியப் பங்காற்றினார்.

**சென்னைப் பல்கலையில் எம் பில்:**

உத்தரகண்ட் மாநிலம் பௌரியில் 1958 ஆம் ஆண்டு மார்ச் 16–ஆம் தேதி பிறந்த விபின் ராவத், தேசிய பாதுகாப்பு அகாதெமி மற்றும் இந்திய ராணுவ அகாதெமியில் பட்டங்களைப் பெற்றதுடன், சென்னைப் பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு கல்வியில் எம் பில் படிப்பையும், மீரட் சௌத்ரி சரண் சிங் பல்கலைக்கழகத்தில் பிஎச் டி (ஆராய்ச்சி) படிப்பையும் முடித்துள்ளார். மேலாண்மை, கணினி துறைகளில் பட்டயப் படிப்புகளையும் மேற்கொண்டார்.

---

**4. கோயில்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு திருமணம் இலவசம்: புதிய திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் தொடக்கி வைத்தார்**

கோயில்கள், அவற்றுக்குச் சொந்தமான மண்டபங்களில் மாற்றுத் திறனாளிகள் கட்டணம் இல்லாமல் திருமணம் செய்யும் புதிய திட்டத்தை முதல்வர் மு க ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இந்து சமய அறநிலையத்துறை மானியக்கோரிக்கையில், மணமக்களில் ஒருவர் மாற்றுத்திறனாளியாக இருந்தால் அவர்களிடம் திருமணத்துக் –கான கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது எனவும், கோயிலுக்குச் சொந்தமான மண்டபத்தில் திருமணம் நடந்தால் பராமரிப்புக் கட்டணம் மட்டுமே வசூலிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் வகையில், புதிய திட்டத்தை முதல்வர் மு க ஸ்டாலின், தொடக்கி வைத்தார். சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் நடைபெறவுள்ள மாற்றுத்திறனாளி திருமணத் –துக்கு கட்டணம் இல்லை என்பதற்கான உத்தரவை முதல்வர் மு க ஸ்டாலின் அளித்தார். மேலும், திருமண வாழ்த்துகளுடன் பரிசுப் பொருள்களையும் அளித்தார்.

**ஆறு மாற்றுத் திறனாளிகள் விருது:** சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை ஒட்டி, தேசிய அளவிலான விருதினை தமிழகத்தைச் சேர்ந்த ஏ எம் வேங்கடகிருஷ்ணன், எஸ் ஏழுமலை, கே தினேஷ், மானகஷா தண்டபாணி, கே ஜோதி, டி பிரபாகரன் ஆகியோருக்கு குடியரசுத் தலைவரால் தேசிய விருது வழங்கப்பட்டது. இந்த விருதினை முதல்வரிடம் காண்பித்து அவர்கள் வாழ்த்துப்பெற்றனர்.

**1.** **அடல் வயோ அபியுதயா யோஜனா என்ற திட்டத்தைச் செயல்படுத்து–துகிற மத்திய அமைச்சகம் எது?**



அ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

**ஆ) சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑**

இ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ) சிறுபான்மை விவகார அமைச்சகம்

✓ சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகமானது அடல் வயோ அபியுதயா யோஜனா (AVYAY) என்ற திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டம் நாடு முழுவதும் உள்ள மூத்த குடிமக்களின் நலனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது ராஷ்ட்ரிய வயோஶ்ரீ யோஜனா, SACRED, IPSrC, SAPSrC போன்ற பல கூறுகளைக் கொண்டுள்ளது.

---

**2.** **COVID சமயத்தில் தடையற்ற விமானப் பயணத்திற்காக சிவில் வான் போக்குவரத்து அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட இணைய தளத்தின் பெயர் என்ன?**




**அ) ஏர் சுவிதா ☑**

ஆ) பாரத் டிராவல்

இ) பிரதான் மந்திரி ஏவியேஷன்

ஈ) வெல்கம் இந்தியா

✓ COVID காலத்தின்போது தடையற்ற விமானப் பயணத்திற்காக சிவில் வான் போக்குவரத்து அமைச்சகம் 2020 ஆகஸ்டில் 'ஏர் சுவிதா' என்ற இணையதளத்தை அறிமுகப்படுத்தியது. அண்மையில், ஓமைக்ரான் அச்சுறுத்தலை அடுத்து இந்தியாவிற்கு வரும் சர்வதேச பயணிகளுக்கு வசதியளிக்கும் நோக்கில், 'ஏர் சுவிதா' தளத்தில் தொடர்பில்லா சுய அறிவிப்பை விமானப் போக்குவரத்து அமைச்சகமும் சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகமும் கட்டாயமாக்கியுள்ளன. இந்தியாவிற்கு வரும் அனைத்து சர்வதேச பயணிகளுக்கும் தொந்தரவு இல்லாத, வரிசை இல்லாத மற்றும் வசதியான விமானப் பயணத்தை வழங்குவதை ஏர் சுவிதாவின் அமலாக்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**3.** **அதன் 'Laser Communications Relay Demonstration (LCRD)'ஐ அறிமுகப்படுத்திய விண்வெளி நிறுவனம் எது?**



அ) இஸ்ரோ

**ஆ) NASA ☑**

இ) புளூ ஆர்ஜின்

ஈ) ஸ்பேஸ் எக்ஸ்

✓ டிசம்பர் 7 அன்று, NASA தனது புதிய லேசர் கம்யூனிகேஷன்ஸ் ரிலே டெமான்ஸ்ட்ரேஷனை அறிமுகப்படுத்தியது. கேப் கனாவெரல் விண் வெளிப்படை நிலையத்திலிருந்து அறிமுகப்படுத்தபட்ட இது NASA'இன் முதல் லேசர் தகவல் தொடர்பு அமைப்பாகும்.

✓ LCRD ஆனது விண்வெளியில் ஒளியியல் தொடர்பைச் பரிசோதிக்க NASA'விற்கு உதவும். தற்போது, பெரும்பாலான NASA விண்கலங்கள் தரவுகளை அனுப்புவதற்கு ரேடியோ அலைவரிசை தொடர்புகளைப் பயன்படுத்துகின்றன. LCRD இரண்டு ஒளிசார் முனையங்களைக் கொண்டுள்ளது. ஒன்று பயனர் விண்கலத்திலிருந்து தரவைப் பெறுவது, மற்றொன்று தரை நிலையங்களுக்கு தரவை அனுப்புவது ஆகும்.

---

**4.** **சர்வதேச 'IDEA'இன் ஆலோசகர் குழுவில் சேர அழைக்கப்பட்ட இந்திய அதிகாரி யார்?**



**அ) சுனில் அரோரா ☑**

ஆ) P ராவத்

இ) A K ஜோதி

ஈ) நசிம் ஜைதி

✓ மக்களாட்சி மற்றும் தேர்தல் உதவிக்கான பன்னாட்டு நிறுவனத்தின் ஆலோசகர் குழுவில் சேர முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் சுனில் அரோராவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் சர்வதேச 'IDEA' என்றும் அழைக்கப்படுகிறது. இது நிலையான ஜனநாயகத்தை ஆதரிக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.

✓ கடந்த 1995'இல் நிறுவப்பட்ட இது, ஸ்வீடனின் ஸ்டாக்ஹோமில் உள்ள ஓர் அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும். சர்வதேச 'IDEA'இல் தற்போது 34 உறுப்புநாடுகள் உள்ளன.

---

**5.** **'உலக மலேரியா அறிக்கை – 2021'இன்படி, கடந்த 2020'இல் மதிப்பிடப்பட்ட மலேரியா இறப்புகளின் எண்ணிக்கை என்ன?**



அ) 1.27 இலட்சம்

ஆ) 2.27 இலட்சம்

இ) 4.27 இலட்சம்

**ஈ) 6.27 இலட்சம் ☑**

✓ உலக மலேரியா அறிக்கை 2021 உலக சுகாதார நிறுவனத்தால் (WHO) வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின்படி, 2020ஆம் ஆண்டில் மலேரியாவைக் கையாளுவதற்கான உலகளாவிய முயற்சிகள் COVID –19 காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டன. கடந்த 2020'இல் 627,000 மலேரியா இறப்புகள் ஏற்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது, இது 2019'ஐவிட 12% அதிகமாகும். விரைவான நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், உலகம் (குறிப்பாக ஆப்பிரிக்காவில்) இந்நோயின் உடனடி பரவலைக் காணும் என இந்த அறிக்கை எச்சரிக்கிறது.

---

**6.** **'உணவு & உழவின் நிலை (SOFA) 2021' என்ற அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

**அ) உணவு & உழவு அமைப்பு ☑**

ஆ) நபார்டு

இ) NITI ஆயோக்

ஈ) உலக வங்கி

✓ உணவு & உழவு அமைப்பானது 'உணவு மற்றும் வேளாண்மை நிலை – 2021' என்ற அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, முக்கியமான போக்குவரத்து இணைப்புகளுக்கு இடையூறு ஏற்பட்டால், 845 மில்லியன் மக்களுக்கான உணவு செலவுகள் அதிகரிக்கும். உணவுப்பாதுகாப்பை பூர்த்தி செய்ய வேளாண் உணவு முறைகளை நெகிழ வைக்க வேண்டியதன் அவசியத்தையும் இது எடுத்துக்காட்டியது.

---

**7.** **Y–8Q நீர்மூழ்கி எதிர்ப்பு போர் விமானத்தை காட்சிப்படுத்திய நாடு எது?**



அ) இஸ்ரேல்

ஆ) ஐக்கிய அரபு அமீரகம்

**இ) சீனா ☑**

ஈ) ரஷ்யா

✓ சீனா அண்மையில் Y–8Q நீர்மூழ்கி எதிர்ப்பு போர் விமானத்தை காட்சிப்படுத்தியது. மக்கள் விடுதலை இராணுவக் (PLA) கடற்படையின் Y–8Q விமானம் KQ–200 என்றும் அழைக்கப்படுகிறது.

✓ தைவானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான ஆழமான ஈடுபாட்டின் மத்தியில் இது அறிமுகப்படுத்தப்பட்டது. குறைந்தபட்சம் ஐந்து சீன போர் விமானங்கள் அதன் வான் பாதுகாப்பு அடையாள மண்டலத்தில் (AIDZ) நுழைந்ததாக தைவான் தெரிவித்துள்ளது.

---

**8.** **இந்திய வான் படையின் இராணுவ விமானங்களில் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ள 'பயோ–ஜெட்' எரிபொருளை உருவாக்கிய நிறுவனம் எது?**

**அ) இந்திய பெட்ரோலிய நிறுவனம் ☑**

ஆ) இந்திய மண் & நீர் பாதுகாப்பு நிறுவனம்

இ) இந்திய தொலையுணரி நிறுவனம்

ஈ) பாரத் எலெக்ட்ரானிக்ஸ் லிட்

✓ இந்திய பெட்ரோலிய நிறுவனம் (CSIR–IIP), அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி கவுன்சிலின் ஓர் அங்கமான இவ்வாய்வகமானது 'பயோ–ஜெட்' எரிபொருளை உருவாக்கியுள்ளது. இந்திய வான்படையின் இராணுவ விமானங்களில் பயன்படுத்துவதற்கு இராணுவ விமானத்தகுதி மற்றும் சான்றிதழுக்கான மையத்தால் (CEMILAC) இது முறையாக அங்கீகரிக்க –ப்பட்டுள்ளது. இது DRDO'இன்கீழுள்ள ஓர் ஒழுங்குமுறை அமைப்பாகும்.

---

**9.** **2021 – இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சியில் வெள்ளிப் பதக்கம் பெற்ற 'ஹுனார் ஹாத்'தை ஏற்பாடு செய்த அமைச்சகம் எது?**

அ) உள்துறை அமைச்சகம்

**ஆ) சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகம் ☑**

இ) பாதுகாப்பு அமைச்சகம்

ஈ) திறன் மேம்பாட்டு அமைச்சகம்

- ✓ 'ஹுனார் ஹாத்' என்பது இந்திய கைவினைஞர்களின் நிபுணத்துவத்–தை வெளிப்படுத்துவதற்கும், "பாரம்பரிய கலைகள் / கைவினைகளுக்–கான திறன்களை மேம்படுத்துதல் மற்றும் மேம்பாட்டுக்கான பயிற்சி (USTAAD)" என்பதன்கீழ் வேலைவாய்ப்புகளை ஆராய்வதற்கும் மத்திய சிறுபான்மை விவகார அமைச்சகத்தால் நடத்தப்படும் ஒரு தளமாகும்.
- ✓ சமீபத்தில், தில்லியில் 33ஆவது 'ஹுனார் ஹாத்' ஏற்பாடு செய்யப்பட்டது. அது, 2021ஆம் ஆண்டின் இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சியில் வெள்ளிப்பதக்கம் வென்றது.

---

**10.** **2021 டிசம்பர்.10 முதல் இந்திய சர்வதேச அறிவியல் விழா எங்கு நடைபெறவுள்ளது?**

அ) மும்பை

ஆ) லக்னோ

இ) வாரணாசி

**ஈ) கோவா ☑**

- ✓ 2021 – இந்திய சர்வதேச அறிவியல் விழாவானது, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம், மத்திய புவி அறிவியல் அமைச்சகம் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனமான விஞ்ஞான பாரதி ஆகியவற்றால் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டு, 2021 டிசம்பர் 10 முதல் 4 நாட்களுக்கு கோவாவில் நடைபெறவுள்ளது. இந்த ஆண்டுக்கான (2021) விழாவில் அறிவியல் திரைப்பட விழா, அறிவியல் இலக்கிய விழா, பொறியியல் மாணவர் விழா, கிராமிய விழா போன்றவை இடம்பெறும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. அணைப் பாதுகாப்பு மசோதா நிறைவேற்றியதன் மூலம் அணைகள் பாராமரிப்புக்கு உலக வங்கியின் நிதியுதவி கிடைக்கும்**

அணை பாதுகாப்பு மசோதா நிறைவேற்றியதன் மூலம், உலக வங்கி மூலம் நிதியுதவி கிடைக்கும். இதன் மூலம் அணை மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் (டிஆர்ஐபி) கீழ் தமிழகம் உள்பட நாட்டிலுள்ள அணைகளில் புரனமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் என்று மத்திய ஜல் சக்தி துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் மக்களவையில் வியாழக்கிழமை தெரிவித்தார்.

மேலும், இந்த புரனமைப்பில் நீரியல் பாதுகாப்பு, ஹைட்ரோ–மெக்கானிக்–கல் நடவடிக்கைகள், நீர்க்கசிவு குறைப்பு, கட்டமைப்பு நிலைத் தன்மை–யை மேம்படுத்துதல் போன்ற பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதில் அணைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பிற்கு புதிய கட்டுமானப் பொருள்கள் வழங்கப்படுவதோடு அணைகளைக் கண்காணிக்க பல நவீன கருவிகளும் வழங்கப்படுகிறது என்று அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

மக்களவை பாஜக உறுப்பினர் ஹீனா காவித் உள்ளிட்டோர் நதிகள் இணைப்பு குறித்த கேள்விக்கு அமைச்சர் ஷெகாவத் பதிலளித்த போது நீலகிரி மக்களவைத் திமுக உறுப்பினர் ஆ ராசா துணைக் கேள்வி எழுப்பினர்.

திமுக உள்ளிட்ட கட்சிகளின் எதிர்ப்புகளுக்கிடையே நாடாளுமன்ற அணைப்பாதுகாப்பு மசோதா இரு அவையிலும் நிறைவேற்றப்பட்டது. இது தவறோ, சரியோ, ஆனால் மசோதா நிறைவேற்றத்தின் போது நடைபெற்ற விவாதத்தில் அமைச்சர் முக்கியமான விஷயம் ஒன்றை குறிப்பிட்டார். இந்த மசோதா நிறைவேற்றப்பட்டதன் மூலம், அணை மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உலக வங்கி நிதி அளிக்கும் என்றார். இதில் தமிழகத்திற்கு எவ்வளவு கிடைக்கும் எந்தெந்த தமிழக அணைகளுக்குத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது என்று ராசா கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்து மத்திய ஜல் சக்தி துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் பேசுகையில், 'அணை மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் முதற் கட்டப் பணிகள் தொடங்கியுள்ளன. அணைகளை புரனமைக்க ஒத்துக்கொண்ட மாநிலங்களில் உள்ள அணைகளில் இரண்டாம், மூன்றாம் கட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்கு உலக வங்கியின் நிதியுதவி கிடைக்கும். இந்த நிதியுதவி மூலம் நாட்டில் உள்ள 700 அணைகளுக்கு ₹10,000 கோடி வரை செலவிட திட்டமிடப்ப–ட்டுள்ளது என்பது ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் தமிழக அணைகளும் இடம்பெற்றுள்ளன. இது குறித்த விவரங்கள் உடனடியாக இல்லை. நிச்சியமாக பின்னர் தெரிவிக்கப்படும்' என்றார் அமைச்சர்.

---

**2. தமிழகத்தில் 53 சதவீத திடக்கழிவுகள் மறுசுழற்சி**

தமிழகத்தில் 53% திடக்கழிவுகள் மறுசுழற்சிக்கு பயன்படுத்தப்படுவதாக மக்களவையில் நகர்ப்புற வீட்டு வசதித்துறை இணையமைச்சர் கௌசல் கிஷோர் எழுத்துமூலம் அளித்த பதிலில் தெரிவித்தார்.

இது தொடர்பான பதிலில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

நகர்ப்புறங்களின் திறந்தவெளிக் கழிப்பிடம் இல்லாத நிலையை உருவாக்குவது, திடக்கழிவுகளை மறுசுழற்சிக்குப் பயன்படுத்தப்படுவது ஆகிய நோக்கத்திற்காக 2014 அக்டோபர்.2ஆம் தேதி தொடங்கப்பட்டது தூய்மை இந்தியா நகர்ப்புறத் திட்டம். இத்திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் உள்ள 4,372 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், 4,371 (மேற்கு வங்க மாநிலம் புருலியா தவிர) திறந்த வெளிக்கழிப்பிடம் இல்லாத அமைப்புகளாக சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு 18 சதவீதமாக இருந்த நகர்ப்புற திடக்கழிவு மறுசுழற்சி தற்போது 70 சதவீதமாக அதிகரித்துள்ளது. சண்டிகர், சத்தீஸ்கர், ஹிமாசலப்பிரதேசம், ஆகிய மாநிலங்களில் இது 100 சதவீதமாக உள்ளது.

---

**3. நகர்ப்புற வசதிகளை மேம்படுத்த ₹2,645 கோடி கடன்: ஆசிய வங்கி ஒப்புதல்**

நகர்ப்புற வசதிகளை மேம்படுத்த உதவியாக இந்தியாவுக்கு ₹2,644.85 கோடி மதிப்பிலான கடனை வழங்க ஒப்புதல் வழங்கியுள்ளதாக ஆசிய மேம்பாட்டு வங்கி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த வங்கி வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது:

இந்தியாவில் நகர்ப்புற வசதிகளை மேம்படுத்த ஏதுவாக 35 கோடி டாலர் (₹2,645 கோடி) கடன் உதவி அளிக்கும் திட்டத்துக்கு ஆசிய வங்கி அனுமதியை வழங்கியுள்ளது. குழாய்மூலம் குடிநீர் விநியோகிப்பது, சுகாதார கட்டமைப்புகளை சர்வதேச தரத்துக்கு உயர்த்துவது உள்ளிட்ட நகர்ப்புறங்களில் செயல்படுத்த திட்டமிட்டுள்ள வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் கொள்கைகளுக்கு இந்தக் கடன் உதவிகரமாக இருக்கும்.

மேலும், புலம்பெயர்ந்து வந்த தொழிலாளர்கள், ஏழைகள் உள்ளிட்ட அனைவருக்கும் வீட்டு வசதியை ஏற்படுத்தி தருவது, நகர்ப்புற மாறத்துக்கான அம்ருத் 2.0 ஆகிய திட்டங்களை செயல்படுத்துவதும் இக்கடனுதவி திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும். பொருளாதாரத்தில் பின்தங்கியோர், குறைந்த வருமான பிரிவினர் உள்ளிட்ட நகர்ப்புற ஏழைகள் இந்தத் திட்டத்தால் பெரிதும் பயனடைவர்.

இந்தியாவின் நகா்ப்புற மக்கள் தொகை தற்போது 46 கோடியாக உள்ளது. இது, உலகின் இரண்டாவது மிகப்பெரிய எண்ணிக்கையாகும். ஆண்டு வளர்ச்சி விகிதம் 2 சதவீதம் என்பதன் அடிப்படையில் வரும் 2030ஆம் ஆண்டுக்குள் இந்திய நகர்ப்புற மக்கள்தொகை 60 கோடியை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக ஏடிபி தெரிவித்துள்ளது.

---

**4. நாடு முழுவதும் தேசிய நெடுஞ்சாலை விபத்துகளில் 48,000 பேர் உயிரிழப்பு:**

நாடு முழுவதும் கடந்த ஆண்டு தேசிய நெடுஞ்சாலைகளில் ஏற்பட்ட சாலை விபத்துகளில் 48,000 பேர் உயிரிழந்ததாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. நாடாளுமன்றத்தில் இந்த தகவல்களை ஒன்றிய சாலை போக்குவரத்துத்துறை அமைச்சர் நிதின் கட்கரி வெளியிட்டார்.

விரைவு சாலைகள் உள்பட தேசிய நெடுஞ்சாலைகளில் நிகழ்ந்துள்ள சாலை விபத்துகளுக்கான பல்வேறு காரணங்களையும் அவர் பட்டியலிட்டுள்ளார். கேள்வி ஒன்றிற்கு அவர் அளித்துள்ள எழுத்துப்பூர்வ பதிலில், வாகனங்களின் வடிவமைப்பு, சாலை அமைக்கப்பட்ட பொறியியல் காரணங்கள், மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டியது, போதை பொருள் உட்கொண்டது, அதிவேகம், தவறான பக்கத்தில் வாகனத்தை ஓட்டி சென்றது, சிவப்பு விளக்கை எரியவிட்டதில் ஏற்பட்ட

தவறு உள்ளிட்ட காரணங்களால் சாலை விபத்துகள் நேரிட்டதாக நிதின் கட்கரி கூறியுள்ளார்.

2019ம் ஆண்டு விரைவு சாலைகள் உள்பட, தேசிய நெடுஞ்சாலைகளில் நிகழ்ந்த சாலை விபத்துகளில் 53,872 பேர் மரணமடைந்ததாக அவர் தெரிவித்திருக்கிறார். விபத்துகளை தவிர்க்கவும், சாலை பாதுகாப்புகளை மேம்படுத்தவும், வாகனங்கள் வடிவமைப்பு முதல் பல்வேறு கட்டங்களில் தணிக்கை செய்வது குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கப்பட இருப்பதாக நிதின் கட்கரி கூறியுள்ளார். இதற்காக தனியார் வல்லுனர்களின் உதவி நாடப்பட்டுள்ளதாக நிதின் கட்கரி கூறியுள்ளார்.

---

**5. சுயசரிதையை வெளியிட்ட உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய்**

அஸ்ஸாம் மாநிலம், திப்ருகரைச் சேர்ந்த ரஞ்சன் கோகோய், உச்சநீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக கடந்த 2018, அக்.3ஆம் தேதி முதல் 2019, நவ.17ஆம் தேதி வரை பதவி வகித்தார். பதவிக்காலம் முடிவதற்கு சில நாள்களுக்கு முன் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த அயோத்தி நில வழக்கில் தீர்ப்பளித்தார். தற்போது மாநிலங்களவை உறுப்பினராக உள்ளார். இவர் 'ஜஸ்டிஸ் ஃபார் தி ஜட்ஜ்' என்ற தனது சுயசரிதையை வெளியிட்டுள்ளார்.

---

**6. காமன்வெல்த் பளுதூக்குதல்: ஜிலி தலபெஹராவுக்கு வெள்ளி**

உஸ்பெகிஸ்தானில் நடைபெறும் காமன்வெல்த் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிருக்கான 49 கிலோ பிரிவில் இந்தியாவின் ஜிலி தலபெஹரா வெள்ளிப் பதக்கம் வென்றார். அவர் ஸ்னாட்ச் பிரிவில் 73 கிலோ, கிளீன் & ஜெர்க் பிரிவில் 94 கிலோ என மொத்தமாக 167 கிலோ எடையைத் தூக்கி 2ஆம் இடம்பிடித்தார். ஜிலி ஒரு கிலோ எடை வித்தியாசத்தில் தங்கப்பதக்கத்தை தவறவிட்டார். அவரது பிரிவில் நைஜீரிய வீராங்கனை பீட்டர் ஸ்டெல்லா கிங்ஸ்லி 168 கிலோ (72+96) எடையைத் தூக்கி முதலிடம் பிடித்தார்.

முன்னதாக, டோக்கியோ ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்ற சாய்கோம் மீராபாய் சானு இந்த எடைப்பிரிவில் இந்தியாவின் சார்பில் பங்கேற்க இருந்தார். எனினும், இந்தப்போட்டியையொட்டி உலக சாம்பிய –ன்ஷிப்பும் நடைபெறுவதால், அதில் பங்கேற்பதற்காக இந்தப் போட்டியிலிருந்து சானு விலகினார். இதையடுத்து அந்த எடைப் பிரிவில் ஜிலி களம் கண்டு வெள்ளி வென்றுள்ளார்.

இந்த காமன்வெல்த் சாம்பியன்ஷிப்பானது, அடுத்த ஆண்டு பிர்மிங்ஹாம் நகரில் நடைபெற இருக்கும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்வதற்கு தகுதிபெறுவதற்கான போட்டியாக உள்ளது. இந்தப் போட்டியில் தங்கப்பதக்கம் வெல்வோர் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிக்கு நேரடியாகத் தகுதிபெறுவார்கள். இதர போட்டியாளர்கள் காமன்வெல்த் ரேங்கிங் அடிப்படையில் தகுதிபெறுவர். காமன்வெல்த் ரேங்கிங்கில் தற்போது முதலிடத்தில் இருக்கும் சானு, காமன்வெல்த் போட்டிக்கு நேரடியாகத் தகுதிபெறுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

**1. இந்தியாவில் ESG அறிக்கையை வெளியிட்ட முதல் வானூர்தி சேவை நிறுவனம் எது?**

அ) ஏர் இந்தியா

ஆ) ஸ்பைஸ் ஜெட்

**இ) இண்டிகோ ☑**

ஈ) விஸ்தாரா

- ✓ ESG அறிக்கையை வெளியிட்ட இந்தியாவின் முதல் விமான நிறுவனம் இண்டிகோ ஆகும். இந்தியாவிலும் உலகெங்கிலும் நிலையான விமான எரிபொருளை பயன்படுத்துவதில் கைகோர்ப்பதற்காக டேராடூனின் CSIR–இந்திய பெட்ரோலிய நிறுவனத்துடனான (CSIR–IIP) ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக IndiGo அறிவித்துள்ளது.
- ✓ இந்தக் கூட்டாண்மையின்கீழ், IndiGo மற்றும் CSIR–IIP ஆகியவை தொழில்நுட்ப–வணிக சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் SAF'க்கான திட்டங்களுக்கான ஏற்பாடுகளைத் தொடங்கும். சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) மதிப்பு உருவாக்கம் ஆகியவற்றிலும் அவர்கள் கவனஞ்செலுத்துவார்கள்.

---

**2. 2021ஆம் ஆண்டு நிலவரப்படி உலகின் மிகவும் மதிப்புமிக்க கல்வி தொழில்நுட்ப நிறுவனம் எது?**

அ) டியோலிங்கோ

**ஆ) பைஜூ'ஸ் ☑**

இ) டிரைபல்–லேனிங்

ஈ) கோர்ஸெரா

- ✓ பெங்களூரைச்சார்ந்த பைஜூ'ஸ் ஒரு இந்திய பன்னாட்டு கல்வி தொழில் நுட்ப (ed–tech) நிறுவனமாகும். இது $18 பில்லியன் சந்தை முதலீட்டுடன் உலகின் மிகவும் மதிப்புமிக்க கல்வி தொழில் நுட்ப நிறுவனமாக உள்ளது. பைஜூ'ஸ் ஆஸ்திரியாவை தலைமையிடமாகக் கொண்ட ஜியோஜிப்ராவை சுமார் $100 மில்லியன் மதிப்பிற்கு வாங்கியது. Geo Gebra என்பது ஒரு அளவளாவும் கணிதக் கற்றல் கருவியாகும். இது பைஜூஸின் ஒன்பதாவது பெரிய கையகப்படுத்தல் ஆகும்.

---

**3. கீழ்காணும் எந்த நகரத்தில், டிசம்பர் 8, 1985 அன்று சார்க் சாசனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது?**

அ) புது தில்லி

**ஆ) டாக்கா ☑**

இ) காத்மாண்டு

ஈ) கொழும்பு

- ✓ பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கத்தின் (சார்க்) பட்டய நாள் ஒவ்வோர் ஆண்டும் டிச.8 அன்று அனுசரிக்கப்படுகிறது. 1985'இல் இதே நாளில், அக்குழுவின் முதல் உச்சிமாநாட்டின்போது, டாக்காவில் 'சார்க் சாசனம்' ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த ஆண்டு, மண்டலக் குழுவின் 37ஆவது ஆண்டு விழாவும் கொண்டாடப்படுகிறது. 1985 முதல் 18 உச்சி மாநாடுகளை சார்க் ஏற்பாடு செய்துள்ளது.

---

**4. பிரதமர் ஆவாஸ் யோஜனா (கிராமப்புறம்) திட்டத்தை 2021 முதல் எந்த ஆண்டு வரை தொடருவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?**

அ) 2023

**ஆ) 2024 ☑**

இ) 2025

ஈ) 2030

- ✓ மத்திய ஊரக வளர்ச்சித் துறையின் கருத்துருவான பிரதமர் கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தை (PMAY–G) 2021 மார்ச்சுக்கு பின்னர் 2024 மார்ச் வரை தொடர்ந்து செயல்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளிக்கப் –பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் முடிக்கப்பட வேண்டிய 2.95 கோடி வீடுகள் இலக்கை எட்டுவதற்கு ஏற்றவகையில் இந்தத்திட்டம் நீட்டிப்பு செய்யப்படுகிறது. அனைத்து கிராமப்புற பகுதிகளிலும் வீட்டுவசதியை உறுதி செய்ய இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

---

**5. குனோ தேசியப்பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?**



அ) உத்தரப்பிரதேசம்

ஆ) அருணாச்சல பிரதேசம்

இ) ஹரியானா

**ஈ) மத்திய பிரதேசம் ☑**

- ✓ உலகின் மிகப்பெரிய கண்டங்களுக்கு இடையேயான விலங்கு இட மாற்றம் ஒன்றில், மத்திய பிரதேச மாநிலத்தின் குனோ தேசியப்பூங்கா 2022ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 13 ஆப்பிரிக்க சிறுத்தைகளைப் பெறவுள்ளது. கடந்த 1952ஆம் ஆண்டில் கடைசியாக எஞ்சியிருந்த ஒரு சிறுத்தையும் சத்தீஸ்கரில் வேட்டையாடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

---

**6. மெரியம்–வெப்ஸ்டரால் "நடப்பு 2021ஆம் ஆண்டின் சொல்லாக" தேர்ந்தெடுக்கப்பட்ட சொல் எது?**



**அ) Vaccine (தடுப்பூசி) ☑**

ஆ) Quarantine (தனிமைப்படுத்துதல்)

இ) Infection (தொற்று)

ஈ) Isolation (தனித்திருத்தல்)

- ✓ மெரியம்–வெப்ஸ்டர் என்பது பார்வையங்களை குறிப்பாக அகராதிகளை வெளியிடுகிற ஓர் அமெரிக்க நிறுவனமாகும். இந்நிறுவனம் அமெரிக்க நாட்டின் பழமையான அகராதி வெளியீட்டாளர்களுள் ஒன்றாகும்.
- ✓ மெரியம்–வெப்ஸ்டர் 'Vaccine' என்ற சொல்லை 2021ஆம் ஆண்டின் சொல்லாகத் தேர்ந்தெடுத்துள்ளது. இந்தச்சொல், 2021ஆம் ஆண்டில் மிக அதிகமாக தேடப்பட்ட சொல்லாகும்.

---

**7. 'டிரேட் எமர்ஜ்' என்பது எந்த வங்கியின் ஆன்லைன் தளமாகும்?**

அ) எஸ் பி ஐ

**ஆ) ஐசிஐசிஐ ☑**

இ) ஆக்சிஸ் வங்கி

ஈ) யூனியன் பேங்க் ஆப் இந்தியா

- ✓ ஐசிஐசிஐ வங்கி 'டிரேட் எமர்ஜ்' என்ற ஆன்லைன் தளத்தை அறிமுகம் செய்துள்ளது. இது இந்தியா முழுவதுமுள்ள ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களுக்கு வங்கி மற்றும் பிற டிஜிட்டல் சேவைகளை வழங்குகிறது. இந்த இயங்குதளமானது எல்லைதாண்டிய வர்த்தகத்தை தொந்தரவு இல்லாததாகவும் வசதியாகவும் ஆக்குகிறது மற்றும் பல்வேறு ஏற்றுமதி – இறக்குமதி சேவைகளுக்கான ஒரு தொடர்புப் புள்ளியாக செயல்படுகிறது.

---

**8. அதன் புகழ்பெற்ற செர்ரிப்பூக்கள் விழாவை சமீபத்தில் நடத்திய இந்திய மாநிலம் எது?**



அ) அருணாச்சல பிரதேசம்

ஆ) ஹிமாச்சல பிரதேசம்

**இ) மேகாலயா ☑**

ஈ) மேற்கு வங்காளம்

- ✓ ஷில்லாங்கின் புகழ்பெற்ற செர்ரிப்பூக்கள் திருவிழா இவ்வாண்டு நவ.25 –27 வரை நடைபெற்றது. கடந்த ஆண்டு COVID தொற்று காரணமாக இத்திருவிழா ரத்து செய்யப்பட்டது. மேகாலயா முதல்வர் கார்னாட் சங்மா டுவிட்டரில் இந்தத் திருவிழா குறித்து அறிவித்தார். மேகாலயாவின் தலைநகரமான ஷில்லாங்கில் பல செர்ரிப்பூக்கள் காணப்படுகின்றன. இத்திருவிழாவில் பல்வேறு போட்டிகள், நிகழ்ச்சிகள் மற்றும் பிற கலை நிகழ்வுகளும் நடத்தப்படுகின்றன.

---

**9. 'சர்ச்சைக்குரிய தீர்ப்பின் எதிர்காலத்தை வடிவமைத்தல்' என்ற தலைப்பில் அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) NALSA

**ஆ) NITI ஆயோக் ☑**

இ) NHRC

ஈ) சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

- ✓ "Designing the future of dispute Resolution: the ODR Policy Plan for India" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை NITI ஆயோக் வெளியிட்டது. ODR'ஐ ஏற்றுக்கொள்வதில் உள்ள சவால்களை எதிர்கொள்ள மூன்று நிலைகளிலான நடவடிக்கைகளை NITI ஆயோக் முன்மொழிந்தது.
- ✓ டிஜிட்டல் உட்கட்டமைப்பு, கட்டட திறன், ஒழுங்குமுறை கட்டமைப்பு, ஆன்லைன் ஆவண எழுத்துப்பதிவு அனுமதி உள்ளிட்டவற்றை அதிகரி–ப்பதை இந்த அறிக்கை பரிந்துரைக்கிறது.

---

**10.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற APICA திட்டத்துடன் தொடர்புடை–ய துறை எது?**

**அ) பனி ஆய்வு ☑**



ஆ) விண்வெளி ஆய்வு

இ) செயற்கை நுண்ணறிவு

ஈ) கிரிப்டோகரன்சி

- ✓ European Project for Ice Coring in Antarctica (EPICA) என்பது ஐரோப்பிய ஆணையத்தால் நிதியளிக்கப்பட்ட மிகப்பழமையான பனி ஆய்வு திட்டம் ஆகும். இது Cnrஇன் துருவ அறிவியல் நிறுவனம் (இத்தாலியின் தேசிய ஆராய்ச்சி கவுன்சில்) & பிரிட்டிஷ் அண்டார்டிக் சர்வே ஆகியவற்றால் மேற்கொள்ளப்படுகிறது.
- ✓ அண்டார்டிகாவில் உள்ள மிகப் பழைமையான தொடர்ச்சியான பனிக் கட்டியை சேகரிப்பதை இந்தத்திட்டம் நோக்கமாகக்கொண்டுள்ளது. இது, 1.5 மில்லியன் ஆண்டு காலநிலை குறித்த பதிவை வழங்குகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பாரதி ஆய்வாளா்கள் ஆறு பேருக்கு விருதுகள்:**

பாரதி ஆய்வாளா் சீனி.விசுவநாதன் உள்பட பாரதியாா் குறித்த ஆய்வுப் பணிகளைச் செய்த 6 பேருக்கு விருதுகளை முதல்வா் மு.க.ஸ்டாலின் வழங்கினாா். தலைமைச் செயலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், பாரதி ஆய்வாளா்களுக்கு விருதுகளை அவா் அளித்தாா்.

இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:

மகாகவி பாரதியின் வாழ்க்கை குறித்தும், அவரின் படைப்புகள் பற்றியும் ஆய்வு செய்த மூத்த ஆய்வாளா்களான சீனி.விசுவநாதன், பேராசிரியா் ய.மணிகண்டன் ஆகியோருக்கும், மறைந்த ஆய்வாளா்கள் பெரியசாமித் தூரன், ரா.அ.பத்மநாபன், தொ.மு.சி.ரகுநாதன், இளசை மணியன் ஆகியோரின் நினைவாக அவரது குடும்பத்தினருக்கும் தலா ரூ.3 லட்சமும், விருதும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும் என முதல்வா் மு.க.ஸ்டாலின் ஏற்கெனவே அறிவித்திருந்தாா். இந்த அறிவிப்பின்படி, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சீனி விசுவநாதன், ய.மணிகண்டன் ஆகியோா் தலா ரூ.3 லட்சம் காசோலை மற்றும் பாரதி நினைவு நூற்றாண்டு விருதுகளைப் பெற்றனா்.

---

2. 11 டிசம்பர் 2021 – 'மகாகவி' பாரதியாரின் 140 ஆவது பிறந்தநாள்.

---

**3. ரூ.20 கோடி மதிப்பீட்டில் பள்ளிக்கரணை சதுப்புநில சூழலியல் பூங்கா: முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்**

ரூ.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட சென்னை பள்ளிக்கரணை சதுப்புநில சூழலியல் பூங்காவை முதல்வர் ஸ்டாலின் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்.

இதுகுறித்துத் தமிழக அரசு இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

"முதல்வர் ஸ்டாலின் இன்று (10.12.2021) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் சென்னை, பள்ளிக்கரணையில் 2.5 ஹெக்டேர் நிலப்பரப்பில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சதுப்புநில சூழலியல் பூங்காவைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

சதுப்பு நிலம் என்பது ஆண்டு முழுவதும் ஈரப்பதத்துடன் கூடிய நிலங்களில் சிறு குறு தாவரங்களும், நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் பறவைகள் வசிக்கக்கூடிய பகுதியாகும். இச்சதுப்பு நிலம் வெள்ளத்தைத் தணித்தல், நிலத்தடி நீர் சேமிப்பை மேம்படுத்துதல், கரிபொருள் வரிசைப்படுத்துதலுக்கு உதவுதல், உயரிய பல்லுயிர்களை ஆதரித்தல், பொழுதுபோக்கு, கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பணிகளுக்கு உதவுதல் போன்ற பணிகளுக்கு உதவுகிறது.

தமிழ்நாடு வனத்துறையின் கட்டுப்பாட்டில் 700 ஹெக்டர் பரப்பளவில் பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதி சென்னை மாநகரின் இடையே இயற்கை அழகுடன் காணப்படுகிறது. சென்னை மாநகரத்தில் பெருமழைக் காலத்தில் பள்ளிக்கரணை சதுப்பு நிலம் வெள்ளநீர் வடிகால் பகுதியாக இருந்து வருகிறது. இச்சதுப்புநிலம் சுமார் 231 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ள நீரை ஒக்கியமடுவு மற்றும் கோவளம் ஆகிய இரண்டு நீர் வெளியேற்றும் கால்வாய் மூலம் வங்காள விரிகுடாவில் கலக்க உதவுகிறது.

இச்சதுப்பு நிலப் பகுதியில் 176 வகையான பறவையினங்கள், 10 வகையான பாலூட்டிகள், 21 வகையான ஊர்வன இனங்கள், 10 வகையான நிலநீர் வாழ்வினங்கள், 50 வகையான மீன் இனங்கள், 9 வகையான நத்தையினங்கள், 5 வகையான ஒட்டுமீன் இனங்கள் மற்றும் 14 வகையான வண்ணத்துப் பூச்சிகள் ஆகிய உயிரினங்களின் வாழ்விடமாகவும், ஒட்டுமொத்தமாக 459 வகையான தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் பரவலுக்கு உதவிகரமாக அமைந்துள்ளது.

2019–20ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி ஏறத்தாழ 2,65,313 பறவைகள் இச்சதுப்பு நிலப்பகுதியில் கண்டறியப்பட்டுள்ளன. பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின் வடமேற்குப் பகுதியில் பள்ளிக்கரணை சதுப்புநில சூழலியல் பூங்கா அமைத்திட தமிழக அரசால் 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இச்சதுப்பு நிலத்தினைப் பாதுகாத்திட சுமார் 1,700 மீட்டர் தூரத்திற்கு பாதுகாப்புச் சுவர் கட்டப்பட்டதுடன், பொதுமக்கள் பார்வைக்காகவும் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்வதின் நோக்கத்திற்காகவும் பசுமையான பொது இடம் (PUBLIC GREEN SPACE) அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் பயன்பெறும் வகையில், பார்வையாளர்கள் நடைப்பயிற்சி மேற்கொள்ள சுமார் 2 கி.மீ. தூரத்திற்கு நடைபாதை, சதுப்பு நிலத்தின் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் விவரம், மீன் இனங்கள் பட்டாம்பூச்சி வகை, பறவையினங்கள், பல்லுயிர்ப் பரவல் மற்றும் அதன் வளம் குறித்த விவரங்களை விளக்கும் வகையில் கருத்தியல் அடையாளங்கள் மற்றும் மாதிரிகள், சூழலியல் பூங்காவில் அழகியலை மேம்படுத்த வேங்கை, அரசு, செஞ்சந்தனம், சந்தனம், குமிழ், மகாகனி, வேம்பு, நீர்மருது இலுப்பை போன்ற மண்சார்ந்த 5,000 மரக்கன்றுகள் நடைப்பாதையின் இருபுறமும் நடப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.

பேரிடர் மேலாண்மை திட்டத்தின் கீழ் வெள்ளத் தடுப்புப் பணிக்காக தற்போது சுமார் 64 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும், பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தினை "ராம்சார் சாசனத்தின்" படி ஈரநிலமாக அறிவிக்கை செய்ய மத்திய அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், ஆண்டுதோறும் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திற்கு வருகை தரும் வெளிநாடு மற்றும் உள்ளூர் வலசை பறவையினங்களின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மையைக் கருத்தில் கொண்டு பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தினைப் பறவைகள் சரணாலயமாக அறிவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் ராமச்சந்திரன், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் மெய்யநாதன், தலைமைச் செயலாளர் முனைவர் இறையன்பு, காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் சுப்ரியா சாஹூ மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்."

இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.

---

**4. வரலாற்று சிறப்பு மிக்க முடிவாக ஐக்கிய நாடுகள் அமைப்பு சர்வதேச சூரியசக்தி கூட்டணிக்கு பார்வையாளர் அந்தஸ்து வழங்கியது.**

சர்வதேச சூரியசக்தி கூட்டணிக்கு பார்வையாளர் அந்தஸ்தை ஐக்கிய நாடுகள் சபை வழங்கியுள்ளது. "ஒரே சூரியன், ஒரே உலகம், ஒரே மின்சாரத் தொகுப்பு" – கொள்கைக்கு இது ஊக்கம் தரும். சமமான எரிசக்தி தீர்வுகளை உலகத்திற்கு வழங்க இது உதவும்.

சர்வதேச சூரியசக்தி கூட்டணிக்கு பார்வையாளர் அந்தஸ்தை ஐக்கிய நாடுகள் சபை வழங்கியுள்ள வரலாற்று சிறப்பு மிக்க முடிவு மாண்புமிகு பிரதமரின் ஒரே சூரியன், ஒரே உலகம், ஒரே மின்சார தொகுப்பு எனும் லட்சியத்தை நோக்கிய படிக்கல்லாக இருக்கும் என்று மத்திய மின்சாரம்,

புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு ஆர் கே சிங் தமது வாழ்த்து டிவிட்டர் பதிவு ஒன்றில் கூறியுள்ளார்.

சூரிய சக்தி பயன்பாட்டின் மூலம் நியாயமான மற்றும் சமமான எரிசக்தி தீர்வுகளை வழங்குவதற்கான முன்முயற்சிக்கு மிகப்பெரும் உத்வேகத்தை இது வழங்கும் என்று திரு சிங் கூறியுள்ளார்.

சர்வதேச ஒத்துழைப்பின் மூலம் நிகர பூஜ்ஜிய கரிம உமிழ்வு எனும் இலக்கை எட்டுவதற்கும் இது பெரியளவில் உதவும் என்று கூறியுள்ள அவர், இந்த லட்சியத்திற்கு இந்தியா பெரிதும் பங்காற்றி வருவதாக கூறினார்.

---

**5. இந்தியாவில் 37% ரயில்கள் மட்டுமே டீசலில் இயக்கம்: அமைச்சா் தகவல்**

இந்தியாவில் 37 சதவீத ரயில்கள் மட்டுமே டீசல் என்ஜினில் இயக்கப்படுகின்றன; மீதி 63 சதவீதம் மின்சாரத்தில் இயங்குகின்றன என்று ரயில்வே அமைச்சா் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தா்.

இது தொடா்பான கேள்விக்கு மாநிலங்களவையில் வெள்ளிக்கிழமை எழுத்துமூலம் அளித்த பதிலில் அவா் மேலும் கூறியதாவது:

2019–20 ஆண்டு அறிக்கைப்படி டீசல் ரயில் என்ஜின்களுக்கு 23,706 லிட்டா் டீசல் செலவிடப்பட்டுள்ளது. நாள்தோறும் சராசரியாக 64.9 லட்சம் லிட்டா் செலவாகியுள்ளது.

அதே ஆண்டில் 1,38,547 லட்சம் கிலோ வாட் மின்சாரம், ரயில்களை இயக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தினசரி சராசரியாக 379 லட்சம் கிலோ வாட் மின்சாரம் செலவாகியுள்ளது. சராசரியாக தினமும் 13,555 பயணிகள், சரக்கு ரயில்கள் இயக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றொரு கேள்விக்கு அளித்த பதிலில், 'ரயில்வேயை நவீனமயமாக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக பாரம்பரியமாக இயக்கப்படும் ரயில் பெட்டிகளுக்குப் பதிலாக, தொழில்நுட்ப ரீதியில் அதிநவீன, பாதுகாப்பு மிகுந்த பெட்டிகளை மாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. 2018ஆம் ஆண்டு முதல் இத்தகைய நவீனரகப் பெட்டிகளை இந்திய ரயில்வே தயாரித்து வருகிறது. 2021 நவம்பா் வரை 575 ஜோடி ரயில்களில் இந்தப்பெட்டிகள் மாற்றப்பட்டுள்ளன.

ரயில் பெட்டிகள் கிடைப்பதற்கு ஏற்ற வகையில், படிப்படியாக இந்தப் பெட்டிகள் ரயில்களில் சோ்க்கப்படும். மேலும், வந்தே பாரத் நவீன பெட்டிகள் தயாரிக்கப்பட்டு சோ்க்கப்பட்டு வருகின்றன' என்று அமைச்சா் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளாா்.

---

**6. தேசிய துப்பாக்கி சுடுதல்: அங்குா் மிட்டலுக்கு பட்டம்**

தேசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் ஷாட் கன் பிரிவில் ஓஎன்ஜிசி வீரா் அங்குா் மிட்டல் தங்கப் பதக்கம் வென்றாா்.

அந்தப் பிரிவில் அவா் 43 புள்ளிகளுடன் முதலிடம் பிடிக்க, ராஜஸ்தான் வீரா் ஆதித்யா பரத்வாஜ் 40 புள்ளிகளுடன் வெள்ளியும், உத்தர பிரதேசத்தின் ரயான் ரிஸ்வி 33 புள்ளிகளுடன் வெண்கலமும் வென்றனா்.

இதனிடையே, போபாலில் நடைபெறும் ரைஃபிள் பிரிவு போட்டியில் மத்திய பிரதேசத்தின் பாந்த்வி சிங் 50 மீட்டா் புரோன் பிரிவில் 626 புள்ளிகளுடன் தங்கம் வென்றாா். அவா் சீனியா், ஜூனியா் என இரு பிரிவுகளிலுமே முதலிடம் பிடித்தாா்.

அதே போட்டியில் ஆடவா் 10 மீட்டா் ஏா் ரைஃபிள் பிரிவில் திவ்யான்ஷ் பன்வாா் 250 புள்ளிகளுடன் தங்கம் வென்றாா். மகாராஷ்டிரத்தின் ருத்ராங்க்ஷ் பாலாசாஹேப் 249.3 புள்ளிகளுடன் 2–ஆம் இடமும், அஸ்ஸாமின் ஹிருதய் ஹஸாரிகா 228.2 புள்ளிகளுடன் 3–ஆம் இடமும் பிடித்தனா். ஜூனியா் பிரிவிலும் திவ்யான்ஷ் முதலிடமும், ருத்ராங்க்ஷ் 2–ஆம் இடமும், தில்லியின் பாா்த் மகிஜா 3–ஆம் இடமும் பிடித்தனா்.

கலப்பு அணிகள் டிராப் பிரிவில் மத்திய பிரதேசம் தங்கமும், ஹரியாணா வெள்ளியும், தமிழகம் வெண்கலமும் வென்றது.

---

**7. மேம்படுத்தப்பட்ட பினாகா ராக்கெட் அமைப்பு வெற்றிகரமாக சோதனை**

தொலைவு நீட்டிக்கப்பட்டு மேம்படுத்தப்பட்ட பினாகா பல்முனை ராக்கெட்டுகள் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சகம் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: பாதுகாப்பு ஆராய்ச்சி, மேம்பாட்டு அமைப்பு (டிஆா்டிஓ) அளித்த தொழில்நுட்ப பரிமாற்ற உதவியுடன் ஒரு தனியாா் நிறுவனம் இந்த பினாகா ராக்கெட்டுகளை தயாரித்துள்ளது.

இந்த ராக்கெட்டுகள், ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள பொக்ரான் சோதனை மையத்தில் கடந்த 3 தினங்களாக பரிசோதிக்கப்பட்டன. ராணுவ உயரதிகாரிகளுடன் இணைந்து டிஆா்டிஓ அதிகாரிகள் இந்தச் சோதனைகளை நடத்தினா். வெவ்வேறு தொலைவுகளை நிா்ணயித்து, வெவ்வேறு ராக்கெட்டுகள் 24 முறை பரிசோதிக்கப்பட்டன. அனைத்துச் சோதனைகளிலும் ராக்கெட்டுகளின் செயல்பாடுகள் திருப்திகரமாக இருந்த என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பினாகா எம்.கே.–1 ராக்கெட் அமைப்பு 40 கி.மீ. தொலைவில் உள்ள இலக்கையும், பினாகா எம்.கே.–2 ராக்கெட் அமைப்பு 60 கி.மீ. தொலைவில் உள்ள இலக்கையும் தாக்கும் திறன் கொண்டவை. பினாகா எம்.கே.–3 ராக்கெட் அமைப்பின் இலக்கு அறிவிக்கப்படவில்லை.

இந்த ராக்கெட் அமைப்புகளை டிஆா்டிஓவின் ஆய்வகங்களான புணேயில் உள்ள கனரக ஆயுதங்கள் ஆராய்ச்சி, மேம்பாட்டு நிறுவனம் (ஏஆா்டிஈ), உயா் ஆற்றல் பொருள்கள் ஆராய்ச்சி ஆய்வகம் (எச்ஈஎம்ஆா்எல்) ஆகியவை இணைந்து வடிவமைத்துள்ளன.

பீரங்கி எதிா்ப்பு ஏவுகணை வெற்றிகரமாக சோதனை: உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஹெலிகாப்டரில் இருந்து ஏவக்கூடிய 'சந்த்' எனப்படும் தொலைவில் இருந்து தாக்கும் பீரங்கி எதிா்ப்பு ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

இந்த ஏவுகணையை டிஆா்டிஓ, இந்திய விமானப் படை இணைந்து பொக்ரானில் சனிக்கிழமை பரிசோதித்துள்ளன. அதிநவீன மில்லி மீட்டா் அலை ரேடாா் தேடும் கருவி பொருத்தப்பட்டுள்ள இந்த ஏவுகணை, அதிக துல்லியமான தாக்கும் திறனை கொண்டுள்ளது. 10 கி.மீ. தொலைவு வரையிலான இலக்குகளை இந்த ஆயுதம் தாக்கும்.

டிஆா்டிஓவின் இதர ஆய்வகங்கள் மற்றும் தொழில்துறையுடன் இணைந்து ஹைதராபாதைச் சோ்ந்த ஆராய்ச்சி மையம் இமாரத், இந்த ஏவுகணையை வடிவமைத்து உருவாக்கியுள்ளது. தற்சாா்பு இந்தியாவை நோக்கிய முக்கிய முன்னேற்றமாக இது கருதப்படுகிறது. இந்தப் பணிகளுடன் தொடா்புடைய குழுவுக்கு பாதுகாப்புத் துறை அமைச்சா் ராஜ்நாத் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளாா்.

---

**8. உலகத் தமிழா் பொருளாதார மாநாடு: சென்னையில் டிச.27–இல் தொடக்கம்**

எட்டாவது உலகத் தமிழா் பொருளாதார மாநாடு சென்னையில் வரும் டிச.27–ஆம் தேதி முதல் 29–ஆம் தேதி வரை தொடா்ந்து மூன்று நாள்கள் நடைபெறவுள்ளது.

இது குறித்து உலகத் தமிழா் பொருளாதார மையத்தின் தலைவரும் மாநாட்டு அமைப்பாளருமான வி.ஆா்.எஸ்.சம்பத், விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனா் வி.ஜி.சந்தோஷம், ஓய்வு பெற்ற நீதிபதி டி.என்.வள்ளிநாயகம், பேராசிரியா் உலகநாயகி பழனி ஆகியோா் சென்னையில் சனிக்கிழமை செய்தியாளா்களிடம் கூறியது: உலகெங்கும் உள்ள தமிழ் தொழிலதிபா்கள், தொழில்முனைவோரை ஒருங்கிணைக்கும் வகையில் துபை, தென்னாப்பிரிக்கா, புதுச்சேரி உள்ளிட்ட இடங்களில் 7 இதுவரை ஏழு முறை உலகத் தமிழா் பொருளாதார மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன.

இந்தநிலையில் தற்போது எட்டாவது உலகத் தமிழா் பொருளாதார மாநாடு சென்னை கிண்டியில் உள்ள லீ மெரிடியன் ஹோட்டலில் டிச.27–ஆம் தேதி முதல் 29–ஆம் தேதி வரை தொடா்ந்து மூன்று நாள்கள் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் உலகம் முழுவதுமிருந்து 500–க்கும் மேற்பட்ட தமிழ் தொழிலதிபா்களும், தொழில்முனைவோா்களும் பங்கேற்கவுள்ளனா்.

தமிழகத்தில் விஜடி வேந்தா் ஜி.விசுவநாதன், பாரத் நிகா்நிலை பல்கலை. வேந்தா் ஜெகத்ரட்சகன், தொழிலதிபா்கள் ஜெம் ஆா்.வீரமணி, விஜிபி குழுமங்களின் தலைவா் வி.ஜி.சந்தோஷம், பழனி ஜி.பெரியசாமி உள்ளிட்டோா் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளனா். தமிழக அரசின் சாா்பில் அமைச்சா்கள் துரைமுருகன், தங்கம் தென்னரசு, தா.மோ.அன்பரசன் மற்றும் அரசு செயலா்கள் பங்கேற்று சிறப்புரையாற்றவுள்ளனா்.

வெளிநாடுகளிலிருந்து கயானா நாட்டின் முன்னாள் பிரதமா் மோசஸ் வீராசாமி நாகமுத்து, மோரீஷஸ் முன்னாள் குடியரசுத் தலைவா் பரமசிவம் பிள்ளை வையாபுரி, இலங்கை முன்னாள் அமைச்சா்

ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோா் இணையவழியில் உரையாற்றவுள்ளனா். தமிழகத்தில் தொழில் தொடங்கவும், வணிக வாய்ப்புகள் குறித்து விவாதிக்கவும் தனி அமா்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தினமும் மாலை வேளையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

இந்த மாநாடு உலகம் முழுவதும் வாழும் தமிழா்கள் பொருளாதாரம், பண்பாடு, கலை, சமூக நலன், திறன் மேம்பாடு ஆகியவற்றில் சிறந்து விளங்க ஊக்குவிப்பாக அமையும். மாநாட்டின் இறுதி நாளில் சிறந்த 10 தமிழா்வலா்களுக்கு 'உலகத் தமிழ் மாமணி விருது' வழங்கப்படவுள்ளது.

**1. அண்மையில் பறவைக் காய்ச்சல் பாதிப்பால் 12000 வாத்துகளை கொன்றொழித்த இந்திய மாநிலம் எது?**



அ) தமிழ்நாடு

ஆ) அஸ்ஸாம்

**இ) கேரளா ☑**

ஈ) பீகார்

✓ கேரளாவின் ஆலப்புழா மாவட்டத்தில் அண்மையில் பறவைக் காய்ச்சல் பாதிப்புகள் பதிவாகியுள்ளன. மேலும் தகழி கிராமத்தில் மொத்தம் 12,000 வாத்துகள் இதன் காரணமாக கொன்றொழிக்கப்பட்டன. அப்பகுதி கட்டுப்பாட்டு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. பல்வேறு பகுதிகளில் இருந்து பெறப்பட்ட கூடுதல் மாதிரிகள் போபாலில் உள்ள ICAR–National Institute of High Security Animal Diseases நிறுவனத்துக்கு பரிசோதனை –க்காகவும் பறவைக்காய்ச்சல் பாதிப்புகளைக் கண்டறிவதற்காகவும் அனுப்பப்பட்டுள்ளன.

---

**2. அண்மையில் ஓரினச்சேர்க்கை திருமணத்தை அனுமதிக்கும் சட்டத்தை அங்கீகரித்த தென்னமெரிக்க நாடு எது?**



அ) அர்ஜென்டினா

**ஆ) சிலி ☑**

இ) பெரு

ஈ) பொலிவியா

✓ சிலி அதிபர் செபாஸ்டியன் பினேரா அண்மையில் ஓரினச்சேர்க்கை தம்பதிகளை திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கும் சட்டத்தில் கையெழுத்திட்டார். இந்த விழாவில் LGBT மற்றும் பரந்த மனித உரிமைகளுக்கான ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.

✓ அந்த நாட்டைப்பொறுத்தவரை, சட்டம் 'இரு நபர்களுக்கு இடையிலான அனைத்து காதல் உறவுகளையும் சமமான நிலையில் வைக்கிறது'.

---

**3. 2021'இல் இந்தியாவில் கூகுளில் அதிகம் தேடப்பட்ட ஆளுமை யார்?**



**அ) நீரஜ் சோப்ரா ☑**

ஆ) எலோன் மஸ்க்

இ) P V சிந்து

ஈ) மீராபாய் சானு

✓ கூகுள் தனது '2021ஆம் ஆண்டின் தேடல்' பட்டியலை வெளியிட்டது, இது உலகம் முழுவதும் அதன் தேடுபொறியில் அதிகம் தேடப்பட்டதைக் காட்டுகிறது. ஒலிம்பிக் தங்கப்பதக்கம் வென்ற நீரஜ் சோப்ரா, 2021'இல் இந்தியாவில் அதிகம் தேடப்பட்ட ஆளுமை ஆனார்.

✓ 2021'இல் இந்தியாவில் கூகுளில் அதிகம் தேடப்பட்ட தலைப்புகளில், ICC T20 உலகக்கோப்பை மற்றும் இந்தியன் பிரீமியர் லீக், CoWin, Euro Cup, மற்றும் Tokyo Olympics ஆகியவை இடம் பெற்றுள்ளன.

---

**4. நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட NIPER (திருத்தம்) மசோதா, 'தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம்' அந்தஸ்தை ____ எதற்கு வழங்க முனைகிறது?**

**அ) மருந்து கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் ☑**

ஆ) பெட்ரோலிய ஆராய்ச்சி நிறுவனங்கள்

இ) உடற்கல்வி நிறுவனங்கள்

ஈ) தத்துவ ஆராய்ச்சி நிறுவனங்கள்

✓ தேசிய மருந்துக் கல்வி & ஆராய்ச்சி நிறுவன (திருத்தம்) மசோதாவை நாடாளுமன்றம் அண்மையில் நிறைவேற்றியது. அகமதாபாத், ஹாஜிபூர், ஹைதராபாத், கொல்கத்தா, கௌகாத்தி மற்றும் ரேபரேலி ஆகிய இடங்களில் அமைந்துள்ள மேலும் ஆறு மருந்துக் கல்வி & ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு 'தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம்' என்ற அந்தஸ்தை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. அவற்றுக் –கான ஆலோசனைக் குழுவை அமைப்பதும் இதன் நோக்கமாகும்.

---

**5. எந்த மாநிலம் / யூனியன் பிரதேசத்தில் 1,000 அடல் டிங்கரிங் ஆய்வகங்களை நிறுவப்போவதாக NITI ஆயோக் அறிவித்தது?**




**அ) ஜம்மு காஷ்மீர் ☑**

ஆ) கோவா

இ) சிக்கிம்

ஈ) அருணாச்சல பிரதேசம்

✓ ஜம்மு–காஷ்மீரில் 1,000 அடல் டிங்கரிங் ஆய்வகங்களை நிறுவ உள்ளதாக NITI ஆயோக் அறிவித்துள்ளது. அவற்றில், 187 நிறுவனங்கள் இந்த நிதியாண்டின் இறுதிக்குள் நிறுவப்படும். ATL என்பது, அறிவியல் கருத்துக்களைப் பரிசோதித்து, புரிந்துகொள்வதற்கான வழிகளை உருவாக்குவதன்மூலம் குழந்தைகளின் அறிவாற்றல் வளர்ச்சியை அதிகரிப்பதற்கான NITI ஆயோக்கின் ஒரு முன்னெடுப்பாகும்.

---

**6. எந்த மாநில காவல்துறை, இடரில் இருக்கும் குடிமக்களை காவல் துறையுடன் இணைப்பதற்காக, 'Call your Cop' என்ற திறன்பேசி செயலியை அறிமுகப்படுத்தியது?**



**அ) நாகாலாந்து ☑**

ஆ) மேற்கு வங்கம்

இ) கேரளா

ஈ) ஒடிஸா

✓ நாகாலாந்து காவல்துறை அண்மையில் 'Call your Cop' என்ற திறன் பேசி செயலியை அறிமுகப்படுத்தியது. இது மாநிலத்தின் அனைத்து குடிமக்களும் மற்றும் இடரில் உள்ளவர்களும் ஒரு நொடியில் காவல் துறையை தொடர்பு கொள்ள உதவுகிறது. இந்தச் செயலியில் உள்ள அம்சங்களில் அடைவு, எச்சரிக்கைகள், சுற்றுலா குறிப்புகள், SOS, அருகிலுள்ள காவல் நிலையம் மற்றும் தேடல் ஆகியவையும் அடங்கும்.

---

**7. 'ஹனுக்கா'வை கொண்டாடுகிற மக்கள் யார்?**



**அ) யூதர்கள் ☑**

ஆ) கிறிஸ்தவர்கள்

இ) முஸ்லிம்கள்

ஈ) சீக்கியர்கள்

✓ 'விளக்குகளின் திருவிழா' என்றும் அழைக்கப்படுகிற 'ஹனுக்கா', ஒரு கொடுங்கோல் மன்னருக்கு எதிரான யூதர்களின் வெற்றியைக் கொண்டாடும் ஒரு யூதத்திருவிழாவாகும். ஹனுக்கா – எட்டு நாள் யூத கொண்டாட்டம் ஆபிரகாம் உடன்படிக்கைக்குப் பிறகு தொடர்ச்சியாக 2ஆவது ஆண்டாக, நவம்பர் 28 மற்றும் டிசம்பர் 5 ஞாயிற்றுக்கிழமை வரை UAE முழுவதும் நடத்தப்படுகிறது.

---

**8. சில சமயங்களில் செய்திகளில் இடம்பெற்ற காவேரி திட்டத்துடன் தொடர்புடைய துறை எது?**



அ) நதி மேலாண்மை

**ஆ) உள்நாட்டு இயந்திரங்களின் வளர்ச்சி ☑**

இ) மொழியைப் பாதுகாத்தல்

ஈ) பருவநிலை மாற்றம்

✓ பாதுகாப்புக்கான கேபினட் கமிட்டி (CCS) 1989'இல் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட காவேரி எஞ்சின் திட்டத்திற்கு அனுமதி அளித்தது. 30 ஆண்டுகள் ஓடிய இத்திட்டம் ₹2035.56 கோடி செலவில் ஒன்பது முழு முன்மாதிரி இயந்திரங்கள் மற்றும் நான்கு முக்கிய இயந்திரங்களை உருவாக்கியது. சமீபத்தில், லைட் காம்பட் ஏர்கிராப்ட் (எல்சிஏ) தேஜாஸ் தற்போது இறக்குமதி செய்யப்பட்ட எஞ்சினுடன் ஒருங்கிணைக்கப்பட்டு –ள்ளதாக அறிவிக்கப்பட்டது. மேலும் எதிர்காலத்தில் எல்சிஏ வகைகள் மற்றும் அட்வான்ஸ்டு மீடியம் காம்பட் ஏர்கிராப்ட்போன்ற விமானங்க –ளை இயக்குவதற்கு உள்நாட்டு இயந்திரங்களை உருவாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

---

**9.** **நடப்பு 2021ஆம் ஆண்டுக்கான பெண்கள் பலோன் டி'ஓர் விருதை வென்ற அலெக்ஸியா புட்டெல்லாஸ் சார்ந்த நாடு எது?**



அ) பிரான்ஸ்

**ஆ) ஸ்பெயின் ☑**

இ) UK

ஈ) அர்ஜென்டினா

- ✓ 2021 பலோன் டி'ஓர் பிரான்ஸ் கால்பந்து விருதின்போது 2021ஆம் ஆண்டிற்கான பெண்கள் பலோன் டி'ஓர் விருதை ஸ்பானிஷ் கால்பந்து வீராங்கனை அலெக்ஸியா புட்டெல்லாஸ் பெற்றுள்ளார்.
- ✓ FC பார்சிலோனாவின் மிட்பீல்டர் அலெக்சியா புடெல், அடா ஹெகர்பெர்க் மற்றும் மேகன் இராபினோவுக்குப் பிறகு பரிசை வென்ற மூன்றாவது பெண் வீராங்கனை ஆவார். லியோனல் மெஸ்ஸி ஏழாவது முறையாக பலோன் டி'ஓர் விருதை வென்றுள்ளார். 21 வயதுக்குட்பட்ட சிறந்த வீரருக்கான கோபா டிராபியை பார்சிலோனாவின் 19 வயதான பெட்ரி வென்றார்.

---

**10.** **NSO'இன் GDP மதிப்பீட்டின்படி, 2021–22ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் நிலையான விலையில் GDP என்ன?**




அ) 5.6

ஆ) 6.4

**இ) 8.4 ☑**

ஈ) 9.8

- ✓ தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO), புள்ளியியல் & திட்ட அமலாக்க அமைச்சகம் 2021–22 (Q2 2021–22) இரண்டாம் காலாண்டிற்கான (ஜூலை–செப்டம்பர்) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) மதிப்பீடுகளை வெளியிட்டது. Q2 2021–22'இல் நிலையான விலையில் GDP ₹35.73 லட்சம் கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2020–21ஆம் காலாண்டில் ₹32.97 லட்சம் கோடியாக இருந்தது.
- ✓ இது 2020–21ஆம் காலாண்டில் நிலவிய 7.4 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடும்போது 8.4 சதவீத வளர்ச்சியுடன் உள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ரூ.339 கோடியில் புதுப்பிக்கப்பட்ட காசி விஸ்வநாதர் கோயில் வளாகம்**

காசி விஸ்வநாதர் கோயில் வளாகம் ரூ.339 கோடி செலவில் 3 ஆயிரம் ச.அ'இலிருந்து 5 லட்சம் சதுர அடியாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. புதுப்பிக்கப்பட்ட கோயிலை பிரதமர் நரேந்திர மோடி நேற்று நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

உத்தர பிரதேச மாநிலம் வாரணாசியில் உலக பிரசித்தி பெற்ற காசி விஸ்வநாதர் கோயில் அமைந்துள்ளது. இந்த கோயிலுக்கு வரும் பக்தர்கள் கங்கையில் நீராடி, புனித நீரை எடுத்துச் சென்று கோயிலில் வழங்குவது வழக்கமாகும். காசி கோயிலுக்கு வரும் பக்தர்கள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அதனால், நெரிசல் மிகுந்த தெருக்கள், மோசமான சுற்றுப்புறத்தை கடந்து பக்தர்கள் கோயிலுக்கு செல்ல வேண்டிய நிலை இருந்தது.

இந்த பிரச்சினைக்கு தீர்வு காண விஸ்வநாதர் கோயிலையும் கங்கை நதியின் கரைகளையும் இணைக்கும் வகையில் விரிவான பாதையை அமைக்க பிரதமர் நரேந்திர மோடி திட்டமிட்டார். இதன்படி, கடந்த 2019–ம் ஆண்டு மார்ச் 8–ம் தேதி கோயில் வளாகத்தை விரிவாக்கம் செய்யும் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இதற்காக கோயிலை சுற்றியிருந்த 300–க்கும் மேற்பட்ட சொத்துகள் கையகப்படுத்தப்பட்டன.

இந்த திட்டத்தில் அதிக ஆர்வம் காட்டிய பிரதமர், அடிக்கடி வாரணாசிக்கு வந்து ஆலோசனைகளை வழங்கினார். அவரது ஆலோசனையின்படி மாற்றுத் திறனாளிகளும் எளிதில் வந்து செல்லும் வகையில் சாய்தளங்கள், நகரும் படிக்கட்டுகள் உள்ளிட்ட நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. சுற்றுலா வசதி மையம், வேத மையம், அருங்காட்சிய–கம், பார்வையாளர் மாடம், உணவு விடுதிகள் உள்ளிட்ட வசதிகளும் செய்யப்பட்டன.

பழைய கட்டிடங்களை இடிக்கும்போது 40–க்கும் மேற்பட்ட பழமையான கோயில்கள் கண்டறியப்பட்டன. அவை பாதுகாக்கப்பட்டு அழகுபடுத்தப்ப–ட்டன. விஸ்வநாதர் கோயில் வளாகத்தில் ஆதி சங்கராச்சாரியார், பாரத மாதா, ராணி அகில்யாபாய் ஹோல்கர் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. சுமார் 3 ஆயிரம் சதுர அடியாக இருந்த கோயில் வளாகம், ரூ.339 கோடி செலவில் 5 லட்சம் சதுர அடி அளவுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

---

**2. ஆசிய பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்தும் நாடுகள் பட்டியல்: இந்தியாவுக்கு 4–ஆவது இடம்; அமெரிக்கா முதலிடம்**

ஆசிய பிராந்தியத்தில் அதிகமாக ஆதிக்கம் செலுத்தும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 4–ஆவது இடத்தில் உள்ளது.

வட அமெரிக்க கண்டத்தைச் சோ்ந்த நாடாக இருந்தாலும், ஆசியாவில் அதிக செல்வாக்கு கொண்ட நாடாக அமெரிக்கா உள்ளது.

ஆசிய பிராந்தியத்தில் செல்வாக்கு கொண்ட நாடுகள் குறித்து ஆஸ்திரேலியாவைச் சோ்ந்த லோவி நிறுவனம் ஆண்டுதோறும் ஆய்வு நடத்தி வருகிறது. நடப்பாண்டுக்கான ஆய்வறிக்கையை அந்நிறுவனம் அண்மையில் வெளியிட்டது.

அதில், சீனாவை பின்னுக்குத் தள்ளி, ஆசிய பிராந்தியத்தில் அதிகம் ஆதிக்கம் செலுத்தும் நாடாக அமெரிக்கா உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பட்டியலில் சீனா 2–ஆவது இடத்திலும், ஜப்பான் 3–ஆவது இடத்திலும், இந்தியா 4–ஆவது இடத்திலும் உள்ளன. ரஷியா, ஆஸ்திரேலியா, தென் கொரியா, சிங்கப்பூா், இந்தோனேசியா, தாய்லாந்து ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சீனா, ஜப்பான், ஆஸ்திரேலியா, ரஷியா ஆகிய நாடுகள் ஆசிய பிராந்தியத்தில் தங்கள் செல்வாக்கை இழந்துள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் சீனாவும் ஜப்பானும் அதிக அளவில் தங்கள் செல்வாக்கை இழந்துள்ளன. அதே வேளையில், அமெரிக்காவின் செல்வாக்கு சற்று உயா்ந்துள்ளது.

தூதரகத் தொடா்பு, கலாசார ஆதிக்கம், பொருளாதார உறவு, எதிா்கால வளங்கள் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் சீனா தனது ஆதிக்கத்தை இழந்ததாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தூதரகத் தொடா்பு, பொருளாதார உறவு ஆகிய மதிப்பீடுகளில் இந்தியா தனது செல்வாக்கை இழந்துள்ளது.

அதிபா் ஜோ பைடன் தலைமையிலான நிா்வாகம் ஆசிய பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடன் தூதரக உறவை வலுப்படுத்தியதால், அமெரிக்காவின் செல்வாக்கு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கரோனா தடுப்பூசியை அதிக எண்ணிக்கையில் செலுத்தி பொருளாதார பாதிப்பில் இருந்து விரைவில் மீண்டதும் அமெரிக்காவின் செல்வாக்கு அதிகரிப்புக்கு முக்கியக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில், அண்டை நாடுகளான பாகிஸ்தான் (15–ஆவது இடம்), வங்கதேசம் (19–ஆவது இடம்), இலங்கை (20–ஆவது இடம்), மியான்மா் (21–ஆவது இடம்), நேபாளம் (25–ஆவது இடம்) ஆகியவை இந்தியாவைவிடப் பின்தங்கியே உள்ளன.

---

**3. மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனம் சார்பில் சங்க இலக்கிய நூல்கள் முதல்முறையாக கன்னடத்தில் மொழிபெயர்ப்பு: 8 ஆயிரம் பக்கங்களில் 9 நூல்களாக வெளியீடு**

மத்திய செம்மொழி தமிழாய்வுநிறுவனம் சார்பில் சங்க இலக்கிய நூல்கள் முதல்முறையாககன்னடத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

தமிழ் செவ்வியலின் சிறப்பை உலகம் முழுவதும் கொண்டும் செல்லும் நோக்கில், மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனம் செயல்பட்டு வருகிறது. அதன்படி, ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை காப்பியம் சீனம், ஜப்பானீஸ், கொரியன் உள்ளிட்ட 23 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது. அதேபோல, திருக்குறளை 58 பழங்குடியினர் மொழிகள் உட்பட 120–க்கும்மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கும் பணியை செம்மொழி தமிழாய்வு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், 9 சங்கஇலக்கிய நூல்கள் முதல்முறையாக கன்னட மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து செம்மொழி தமிழாய்வு நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா சந்திரசேகரன் கூறியதாவது:

கிமு.300 – கிபி. 300 வரையிலான காலகட்டத்தில் எழுந்த பாடல்களின் தொகுப்பாக சங்க இலக்கியம் அமைகிறது. அதன்படி, எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் சங்கஇலக்கியமாகும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', 'அமிழ்தம் இயைவது ஆயினும் இனிது எனத் தமியர் உண்டலும் இலர்', 'செல்வத்துப் பயனே ஈதல்' உள்ளிட்ட ஏராளமான உயரிய கோட்பாடுகளை சங்க இலக்கியம் கொண்டுள்ளது.

இதை உலக மக்களிடையே கொண்டும் செல்லும் நோக்கில் மொழிபெயர்க்கும் பணியை தமிழாய்வு நிறுவனம் சில ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியது. முதல்கட்டமாக, கன்னட மொழியில் சங்க இலக்கியங்களை மொழிபெயர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பத்துப்பாட்டு, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய சங்க இலக்கியங்கள் சுமார் 8 ஆயிரம் பக்கங்களை கொண்ட 9 நூல்களாக உருவாக்கப்பட்டுள்ளன. இதன்மூலம், கன்னடத்தில் இல்லாத அகப் புறக்கோட்பாடுகள் அந்த மொழிக்குகிடைப்பதோடு, தமிழுக்கே உரியபிற கோட்பாடுகளையும், சொற்சிறப்பினையும் அம்மொழி வாயிலாகவே உயர்த்த முடியும்.

இரு மொழிகளின் இலக்கியத்தை ஒப்பீட்டாய்வு செய்வதன்மூலம் மொழி அறிஞர்களுக்கு மிகப்பெரிய ஆய்வுத் தளத்தை உருவாக்க முடியும். மொழி அறிஞர்கள் ஒன்றிணைந்தால், இரு மாநிலங்களுக்கும் இடையே நல்லுறவும் வலுப்பெறும்.

மொழிபெயர்க்கப்பட்ட நூல்களுக்கு கன்னட மொழி அறிஞர்கள்மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இந்த மொழிபெயர்ப்பு பணியில் பெங்களூரு தமிழ்ச் சங்கத்தின் பேராசிரியர் இரா.சீனிவாசன் ஒருங்கிணைப்பில், பேராசிரியர்கள் தா.கிருஷ்ணமூர்த்தி, கே.மலர்விழி, ஏ.சங்கரி, ஜி.சுப்பிரமணியன், மா.அரங்கசாமி, கே.வனஜா குல்கர்னி, நா.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் ஈடுபட்டனர். சங்க இலக்கியங்களை பிற மொழிகளிலும் மொழிபெயர்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

---

**1. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற கேத்தரின் ரஸ்ஸல், எந்த உலகளாவிய நிறுவனத்தின் புதிய தலைவராக உள்ளார்?**

அ) உலக வங்கி

ஆ) உலக பொருளாதார மன்றம்

**இ) UNICEF ☑**

ஈ) IMF



✓ ஐநா அவையின் குழந்தைகள் நல அமைப்பான UNICEF'இன் அடுத்த தலைவராக அமெரிக்க அதிபர் ஜோபிடனின் உதவியாளரான கேத்தரின் ரஸல் நியமிக்கப்பட்டுள்ளார். ஜூலை மாதம் பதவி விலகிய ஹென்ரிட்டா ஃபோர்க்கு அடுத்தபடியாக ரஸ்ஸல் வருவார் என்று பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் அறிவித்தார்.

---

**2. மர்மோசாவின் (mouse opossums) பூர்வீகம் எது?**

**அ) அமெரிக்கா ☑**

ஆ) அண்டார்டிகா

இ) ஐரோப்பா

ஈ) ஆசியா



✓ மௌஸ் ஓபோஸம்கள் நியோட்ரோபிகல் மார்சுபியல் குடும்பமான டிடெல்பிடேயிலேயே ஒப்பீட்டளவில் மிகச்சிறிய உறுப்பினர்களாகும். அவை அமெரிக்காவை, குறிப்பாக தென்னமெரிக்காவை பூர்வீகமாகக் கொண்டவையாகும். அண்மையில் புதிதாக இனங்காணப்பட்ட இனம்,

✓ அட்லரின் மவுஸ் ஓபோசம் (மர்மோசா அட்லெரி) என்று பெயரிடப்பட்டது. அது மிகச்சிறிய துணைப்பிரிவான மைகோரியஸில் ஒன்றாகும். இது ஆராய்ச்சியாளர் கிரெக் அட்லரின் பெயரால் அழைக்கப்படுகிறது.

---

**3. COVID-19 மற்றும் டெங்கு ஆகிய இரண்டின் கலவையான கோவிடெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட இந்திய மாநிலம் எது?**

அ) கேரளா

**ஆ) தெலுங்கானா ☑**

இ) மத்திய பிரதேசம்

ஈ) குஜராத்



✓ கோவிட்-19 நோயாளி டெங்கு வைரஸால் பாதிக்கப்படும்போது ஏற்படும் கோவிடெங்குக் காய்ச்சல் பாதிப்பை தற்போது தெலுங்கானா மாநிலம் கண்டுவருகிறது. தெலுங்கானாவில் 8க்கும் மேற்பட்டோர் கோவிடெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தக் கலவை நோய்த்தொற்றின் அறிகுறிகளில் "உடல் அழுத்தம், மூச்சுத்திணறல், குளிர், உடல் வலிகள் மற்றும் மூட்டு வலிகள்" ஆகியவை அடங்கும். COVID-19 மற்றும் டெங்குவுக்கு ஒரே மாதிரியான அறிகுறிகள் உள்ளன.

---

**4. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற "பிரைட்'ஸ் திமிங்கலத்தின்" நிலை என்ன?**

அ) அற்றுவிட்ட இனம்

**ஆ) அருகிவிட்ட இனம் ☑**

இ) தீவாய்ப்பு கவலை குறைந்த இனம்

ஈ) அச்சுறு நிலையை அண்மித்த இனம்



✓ மெக்சிகோ வளைகுடா "பிரைட்'ஸ் திமிங்கலங்கள்" அருகிவிட்ட உயிரி -னங்கள் சட்டத்தின்கீழ் "அருகிவிட்ட இனம்" என வகைப்படுத்தப்பட்டுள் -ளன. அவை, மெக்ஸிகோ வளைகுடாவில் வசிக்கும் ஒரே பல்லற்ற திமிங்கலங்களாகும். நூற்றுக்கும் குறைவான திமிங்கலங்கள் மட்டுமே தற்போதுள்ளன. ஒடிஸாவின் பூரி மற்றும் கஞ்சம் மாவட்ட எல்லைக்கு அருகே அழிந்துவரும் பிரைட் திமிங்கலம் இறந்து கரை ஒதுங்கியது.

---

**5. காமன்வெல்த் சாம்பியன்ஷிப்பில் தங்கப்பதக்கம் வென்ற ஜில்லி தலபெஹெராவுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

அ) வில்வித்தை

ஆ) துப்பாக்கிச்சுடுதல்

**இ) பளு தூக்குதல் ☑**

ஈ) குத்துச்சண்டை



✓ உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்டில் நடைபெற்றுவரும் காமன்வெல்த் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியில் பெண்களுக்கான 49 கிலோ எடைப்பிரிவில் இந்திய வீராங்கனை ஜில்லி தலபெஹெரா தங்கப் பதக்கம் வென்றார். முன்னதாக, ஆண்களுக்கான 55 கிலோ 'ஸ்னாட்ச்' பிரிவில் சங்கேத் மகாதேவ் சர்கார் தங்கப்பதக்கம் வென்றதோடு, புதிய 'ஸ்னாட்ச்' தேசிய சாதனையையும் படைத்தார். காமன்வெல்த் பளு தூக்குதல் சாம்பியன்ஷிப் மற்றும் உலக பளு தூக்குதல் சாம்பியன்ஷிப் ஆகிய இரண்டிலும் இந்தியா போட்டியிடுகிறது.

---

**6. அண்மையில் காலமான பேராசிரியர் ரபிகுல் இஸ்லாம், எந்த நாட்டின் அறிஞர் மற்றும் கலாச்சார ஆர்வலராவார்?**

அ) இந்தியா

**ஆ) வங்காளதேசம் ☑**

இ) பாகிஸ்தான்

ஈ) ஆப்கானிஸ்தான்



✓ தேசிய பேராசிரியர் ரபிகுல் இஸ்லாம், வங்காளதேசத்தைச் சேர்ந்த ஓர் அறிஞர் மற்றும் கலாச்சார ஆர்வலர் ஆவார். அவர் சமீபத்தில் தனது 87 ஆம் வயதில் காலமானார். மொழியியலாளரான இவர் 1952'இல் மொழி இயக்கத்தில் தீவிரமாக பங்கேற்றார். மேலும் 2018'இல் அரசாங்கத்தால் தேசிய பேராசிரியராக நியமிக்கப்பட்டார். அவர் சுதந்திர விருது, எகுஷே பதக் மற்றும் பங்களா அகாடமி இலக்கிய விருது ஆகியவற்றைப் பெற்றார். அவருக்கு சர்வதேச தாய்மொழி விருதும் வழங்கப்பட்டது.

---

**7. உலகின் புதிய குடியரசாக மாறிய பார்படாஸின் முதல் குடியரசுத் தலைவர் யார்?**

**அ) டேம் சாண்ட்ரா மேசன் ☑**

ஆ) மக்டலேனா ஆண்டர்சன்

இ) கேட்ரின் ஜாகோப்ஸ்டோட்டிர்

ஈ) சன்னா மரின்



✓ பிரிட்டிஷ் காலனியாக மாறி 396 ஆண்டுகளுக்குப் பிறகு, கரீபியன் தீவு நாடான பார்படாஸ் சமீபத்தில் உலகின் புதிய குடியரசாக மாறியுள்ளது. அந்நாடு, இராணி இரண்டாம் எலிசபெத்தை அரச தலைவர் பதவியில் இருந்து நீக்கியது. நாட்டின் தலைமை நீதிபதி, டேம் சாண்ட்ரா மேசனை குடியரசுத் தலைவராக பதவிப்பிரமாணம் செய்துவைத்தார். பார்பேடியன் பாடகி ரிஹானா தேசிய வீராங்கனையாக அறிவிக்கப்பட்டார்.

---

**8.** 2021 நவம்பரில் வசூல் செய்யப்பட்ட மொத்த GST எவ்வளவு?

அ) ₹0.75 லட்சம் கோடி

ஆ) ₹0.95 லட்சம் கோடி

இ) ₹1 லட்சம் கோடி

**ஈ) ₹1.3 லட்சம் கோடி ☑**




✓ மத்திய நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலின்படி, GST வருவாய் தொடர்ந்து இரண்டாவது மாதமாக ₹1,31,526 கோடியாக உளாளது. இது கடந்த ஆண்டு இதே மாதத்தின் GST வருவாயைவிட 25% அதிகமாகும். மேலும், 2019ஐ ஒப்பிடும்போது 27% அதிகமாகும். இதுவரை இல்லாத அளவுக்கு GST வசூல், ஏப்ரலில் ₹1,41,384 கோடியாக பதிவாகியுள்ளது. தொடர்ந்து 5ஆம் மாதமாக வசூல் ₹1 லட்சம் கோடியைத் தாண்டியுள்ளது.

---

**9. இந்திய ஆயுதப்படைகளுக்கு அதிநவீன ஹெரான் டிரோன்களை வழங்கிய நாடு எது?**

அ) அமெரிக்கா

**ஆ) இஸ்ரேல் ☑**

இ) பிரான்ஸ்

ஈ) ரஷ்யா



✓ அதிநவீன ஹெரான் டிரோன்களை இந்திய ஆயுதப்படைகளுக்கு இஸ்ரேல் வழங்கியுள்ளது. அவை தற்போதுள்ள ஹெரான்களை விடவும் அதிநவீன ஆண்டி-ஜாமிங் திறன்கொண்டவை. இந்திய அரசாங்கம் பாதுகாப்புப் படைகளுக்கு வழங்கிய அவசரகால நிதி அதிகாரத்தின்கீழ் இந்த டிரோன்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

- ✓ இதன்கீழ் அவர்கள் தங்கள் இராணுவத் திறனை மேம்படுத்துவதற்காக ₹500 கோடி மதிப்பிலான உபகரணங்கள் மற்றும் அமைப்புகளை வாங்கவியலும்.

---

**10. சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் சமீபத்திய தரவுகளின்படி, கடந்த 10 ஆண்டுகளில் எத்தனை யானைகள் கொல்லப்பட்டுள்ளன?**

அ) 160

ஆ) 360

இ) 660

ஈ) 1160 ☑



- ✓ காட்டு யானைகள் இறப்பு தொடர்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்த தகவல் அறியும் உரிமைச் சட்ட ஆர்வலர் ஒருவர் தகவல் கோரியிருந்ததை அடுத்து, மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் 'யானைகள் திட்ட' பிரிவால் அளிக்கப்பட்ட பதிலில் கடந்த பத்து ஆண்டுகளில் 1160 காட்டு யானைகள் கொல்லப்பட்டிருப்பது தெரியவந்தது.
- ✓ 2020 டிசம்பர் மாதம் வரை கடந்த பத்து ஆண்டுகளில் நாடு முழுவதும் இரயில்களில் அடிபட்டு, மின்சாரம் தாக்கி, வேட்டையாடுதல் போன்ற பல்வேறு காரணங்களால் 1160 காட்டு யானைகள் இறந்துள்ளன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பாரதி பாடலை மேற்கோள் காட்டிய பிரதமர்**

'காசி நகரப் புலவர் பேசும் உரைதான்

காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்' –

இது 'பாரத தேசம்' என்ற தலைப்பில் மகாகவி பாரதியார் எழுதிய பாடலில் வரும் வரிகள். வாராணசியில் திங்கள்கிழமை நடைபெற்ற விழாவில், பாரதியின் மேற்கண்ட பாடலை தமிழிலேயே மேற்கோள்காட்டி ஹிந்தியில் விளக்கமளித்தார் பிரதமர் மோடி.

---

**2. பிரிட்டனில் ஒமைக்ரானுக்கு முதல் உயிரிழப்பு**

பிரிட்டனில் ஒமைக்ரான் வைரஸ் தொற்றுக்கு முதல் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. இதை பிரதமர் போரிஸ்ஜான்சன் உறுதி செய்துள்ளார்.

---

**3. சென்னையில் 7500 இடங்களில் செயற்கை நுண்ணறிவு கேமராக்கள்**

சென்னையில் 7,500 இடங்களில் செயற்கை நுண்ணறிவு கேமராக்கள், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நடைபெறும் இடங்கள், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் அமைக்கப்படுகின்றன.

சென்னையில் மாநகரில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கடந்த 2017–இல் 'மூன்றாவது கண்' என்ற பெயரில் கண்காணிப்பு கேமரா பொருத்தும் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அப்போதைய சென்னை பெருநகர காவல்துறை ஆணையா் ஏ கே விசுவநாதன், தனியாா் மற்றும் பொதுமக்கள் உதவியுடன் கேமராக்களை பொருத்தும் பணியை தீவிரப்படுத்தினாா். மூன்றாவது கண் திட்டத்துக்கு முன்பு வரை சில ஆயிரம் கேமராக்கள் மட்டும் இருந்த சென்னையில் இப்போது 50 மீட்டருக்கு ஒன்று வீதம் சுமாா் 2.80 லட்சம் கேமராக்கள் உள்ளன.

80 சதவீத வழக்குகளில் துப்பு:

சென்னையில் கண்காணிப்பு கேமராக்கள் குறைவாக இருந்த காலகட்டத்தில் சாட்சிகள், தடயங்கள் அடிப்படையில் மட்டுமே குற்ற வழக்குகள் துப்பு துலக்கப்பட்டன. இதனால் எப்போதும் போலீஸாருக்கு சவாலாகவே இருந்தது.

ஆனால் மூன்றாவது கண் திட்டத்துக்கு பின்னா், கேமராக்களின் உதவியோடு குற்ற வழக்குகளில் போலீஸாா் எளிதாக துப்பு துலக்குகின்றனா்.

சுமாா் 80 சதவீத வழக்குகளில் துப்பு துலக்குவதற்கு கண்காணிப்பு கேமராக்களே காவல்துறைக்கு உதவுகின்றன. சென்னையில் கடந்த காலங்களை விட தங்கச் சங்கிலி பறிப்பு 50 சதவீதம், கொள்ளை 24 சதவீதம், அடிதடி மற்றும் மோதல் 11 சதவீதம் குறைந்திருப்பதாக காவல்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேபோல பிற குற்றங்களும் கணிசமாக குறைந்துள்ளன.

செயற்கை நுண்ணறிவு கேமரா:

தற்போது கண்காணிப்பு கேமராக்களை விட அதிக திறன் கொண்ட ஏஎன்பிஆா் கேமரா, முக அடையாளம் காணும் கேமரா ஆகியவை நகரின் முக்கியமான பகுதிகளில் பொருத்தப்பட்டு வருகின்றன. இதன் அடுத்தகட்ட நடவடிக்கையாக செயற்கை நுண்ணறிவு கேமராக்கள் சென்னையில் பொருத்தப்பட உள்ளன.

சென்னை காவல்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ.150 கோடி நிா்பயா நிதி இதற்காக பயன்படுத்தப்படுகிறது. சாதாரண கேமராக்களை விட பல்வேறு புதிய திறன்களையும், காட்சிகளின் அடிப்படையில் எச்சரிக்கை விடுக்கும் வசதியும் கொண்ட இந்த கேமராக்கள் பொருத்தப்பட்டால், பொதுமக்களின் பாதுகாப்பு மேலும் உறுதிப்படுத்தப்படும்.

ஏனெனில் இந்த கேமராக்கள் வெறும் காட்சிகளை மட்டுமல்லாது ஒருவரது உணா்வுகளையும் அறியும் வசதி கொண்டது. குற்றச் சம்பவம் நிகழ்வதற்குரிய சூழல் ஓரிடத்தில் ஏற்பட்டால், அதை முன்னரே கண்டறிந்து எச்சரிக்கும் திறனும் இவற்றுக்கு உண்டு.

பெண்கள் பாதுகாப்புக்கு முக்கியத்துவம்:

பெண்களுக்கு எதிராக குற்றங்கள் நடைபெறும் இடங்கள், பாலியல் தொந்தரவு சம்பவங்கள் ஏற்பட்ட இடங்கள், பெண்கள் அதிகமாக கூடும் இடங்கள் மற்றும் கோயில்கள், கடற்கரைகள், பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்களை அடையாளம் கண்டு, அங்கு இக்கேமராக்கள் பொருத்தப்படுகின்றன.

இவற்றுக்கான கட்டுப்பாட்டு அறை வேப்பேரியில் உள்ள சென்னை பெருநகர காவல்துறை ஆணையா் அலுவலகத்தில் புதிதாக ரூ.60 கோடியில் கட்டப்படும் கட்டடத்தில் இரு தளங்களில் அமைக்கப்படுகிறது. இந்த கேமராக்களை கையாளுவது தொடா்பாக கட்டுப்பாட்டு அறை காவலா்களுக்கு பிரத்யேகமான பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஏற்கெனவே இந்த வகை கேமராக்கள், நாட்டில் பெண்களுக்கு எதிராக அதிகமாக குற்றம் நடைபெறும் நகரங்களான தில்லி, மும்பை, லக்னௌ, பெங்களூரு ஆகிய நகரங்களில் பொருத்தப்பட்டுள்ளன. சென்னையில் இக்கேமராக்களை பொருத்துவதற்குரிய ஒப்பந்தப் புள்ளி இறுதி செய்யப்பட்டு, பணி தொடங்கியுள்ளது. இந்த கேமராக்கள் பொருத்தும் பணி 2022 ஜூன் மாதம் முடிவடைந்து, முழுமையாக இயங்கத் தொடங்கும் என சென்னை காவல்துறை உயா் அதிகாரிகள் தெரிவித்தனா்.

இந்தக் கேமராக்கள் மூலம் போலீஸாரின் பணி எளிமைப்படுத்தப்படுவதோடு, காவல் பணி இன்னும் திறனுடனும், வலிமையுடனும் இருக்கும் என கூறப்படுகிறது. அதோடு குற்றவாளிகளின் மீதான காவல்துறையின் பாா்வை இன்னும் ஆழமாக பதியும்.

எப்படி செயல்படும்?

சாதாரண கேமராக்கள் பதிவு செய்யும் காட்சிகளை நேரலையில் காண மட்டும் முடியும். ஆனால் செயற்கை நுண்ணறிவு கேமரா, ஒரு காட்சியை பதிவு செய்வது மட்டும் இல்லாமல் கேமராவின் காட்சியில் ஒருவரது நடவடிக்கையையும் கண்காணிக்கும். அவரது நடவடிக்கையில் வழக்கத்துக்கு மாறாக வித்தியாசமாகத் தோன்றினால், உடனடியாக அது குறித்து எச்சரிக்கும், கட்டுப்பாட்டு அறையில் உள்ள திரையில் உடனடியாக அந்தக் காட்சி ஒளிரும்.

முக்கியமாக ஒரு குற்றம் நடைபெறுவதற்கு முன்னேரே ஒரு இடத்தில் உள்ள மனிதா்களின் நடவடிக்கையையும், அவரது உணா்வுகளை அடிப்படையாகக் கொண்டு அங்கு அசம்பாவித சம்பவம் நடைபெறுவதற்கு வாய்ப்புள்ளதா என்பதைக் கண்டறிந்து எச்சரிக்கும். ஒருவரது அச்ச உணா்வு, கோபம், ஆத்திரம் உள்ளிட்ட உணா்வுகளையும் கண்டறியும். அதேபோல ஒரு நபா், துப்பாக்கி, கத்தி,அரிவாள், வெடிபொருள் போன்ற ஆயுதங்களுடன் இருந்தால் அதையும் அறிந்து எச்சரிக்கும்.

இதைத் தவிா்த்து இந்த கேமராவில் ஒரு இடத்தில் எத்தனை போ் உள்ளனா், பாதுகாப்புப் பகுதியில் வைக்கப்பட்ட பொருள் திருடப்பட்டால் எச்சரிப்பது, வாகனங்களின் பதிவு எண்ணை அடையாளம் காண்பது, குரல் மூலம் ஒருவரை கண்டறிவது, முகம் அடையாளம் மூலம் ஒருவரை கண்டறிவது, வெடி பொருளை கண்டறிந்து எச்சரிப்பது உள்ளிட்ட பல்வேறு வசதிகள் உள்ளன.

சாதாரண கேமராவில் ஒரு மனிதனின் முக அடையாளத்தை வைத்து மட்டுமே குற்றவாளியை அடையாளம் காண முடியும். ஆனால் இந்த கேமராவில் ஒருவரது நடவடிக்கை, உணா்வுகளை ஆகியவற்றின்

அடிப்படையில் ஒருவரை அடையாளம் கண்டு எச்சரிக்கும் தொழில்நுட்பம் உள்ளது. இதற்காக அந்த கேமராவிலும், அதனுடன் பொருத்தப்பட்டிருக்கும் சா'வரிலும் அதற்குரிய பிரத்யேக மென்பொருள் பொருத்தப்பட்டிருக்கும்.

நகா' முழுவதும் பொருத்தப்பட்டிருக்கும் இத்தகைய கேமராக்களில் குற்றத் தொடா'புடைய மற்றும் வழக்கத்துக்கு மாறான காட்சிகளை தோ'வு செய்து, அதை மட்டும் கட்டுப்பாட்டு அறை திரையில் ஒளிபரப்பி, எச்சரிக்கை விடுக்கும்.

இதனால் போலீஸா', 7,500 கேமராக்களில் பதிவாகும் காட்சிகளையும் காண வேண்டிய தேவையில்லை. செயற்கை நுண்ணறிவு கேமரா தோ'வு செய்து அளிக்கும் காட்சிகளை மட்டும் பாா'த்தாலே போதுமானது என காவல்துறை உயா' அதிகாரிகள் தெரிவித்தனா'.

---

**4. தமிழகத்தில் 22% பெண்களுக்கு மனஅழுத்த நோய்: அமைச்சர் அதிர்ச்சி தகவல்**

சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில், முதியோர் மற்றும் மன நலம் குன்றியோருக்கான பிரத்யேக ஐந்து சிகிச்சை பிரிவுகளை, அமைச்சர்கள் சுப்பிரமணியன், சேகர்பாபு ஆகியோர் துவக்கி வைத்தனர்.

இதன்பின்பு, அமைச்சர் சுப்பிரமணியன் அளித்த பேட்டியில், இந்த மருத்துவமனையில், மனநலம் குன்றிய நோயாளிகளுக்கான மீட்பு சேவை மையம் துவங்கப்பட்டுள்ளது. இதேபோல், 22 அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளிலும் துவங்கப்படும்.

இதற்காக, தலா 10 படுக்கைகள் அமைக்கப்பட்டு, சிகிச்சை மற்றும் உணவு, உடை இலவசமாக வழங்கப்படும். பிரசவித்த பெண்களில் 22 சதவீதம் பேருக்கு மனநிலை மாற்றம் ஏற்பட்டு, மன அழுத்த நோயால் பாதிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு தாழ்வு மனப்பான்மை, உடல் பலவீனம், பசியின்மை, துாக்கமின்மை போன்ற பிரச்னைகள் ஏற்படுகின்றன. அவர்களுக்கு உரிய ஆலோசனை வழங்கி, தங்களையும், குடும்பத்தினரையும் எப்படி பார்த்து கொள்ள வேண்டும் என்ற அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் என கூறியுள்ளார்.

---

**5. நீதிபதிகள் ஓய்வூதியத்தை உயர்த்தும் மசோதா...நிறைவேறியது!**

உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வூதியத்தை உயர்த்தும் நோக்கில் நீதிபதிகளுக்கான ஊதியம் மற்றும் சேவை நிபந்தனை சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளும் மசோதா ராஜ்யசபாவில் நேற்று நிறைவேறியது. அனைத்து கட்சிகளும் ஒருமித்த கருத்துடன் ஆதரவு அளித்தன.

உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வூதியத்தை உயர்த்துவதற்கான ஊதியம் மற்றும் சேவை நிபந்தனை சட்ட திருத்த மசோதா லோக்சபாவில் சமீபத்தில் நிறைவேறியது. இந்நிலையில் இந்த மசோதா ராஜ்யசபாவில் நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

கோரிக்கை

மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு மசோதாவை தாக்கல் செய்து பேசியதாவது:சில வரையறுக்கப்பட்ட காரணங்களுக்காக இந்த மசோதாவை தாக்கல் செய்துள்ளோம். இது, நீதிபதிகளின் ஊதியத்தில் எவ்வித பாதிப்புகளையும் ஏற்படுத்தாது.உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வூதியத்தை கணிசமாக அதிகரிக்கவே இந்த மசோதா தாக்கல் செய்யப்படுகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.மசோதா மீது விவாதம் நடத்த ராஜ்யசபா துணை தலைவர் ஹரிவன்ஷ் நாராயண் சிங் அழைப்புவிடுத்தார்.'சஸ்பெண்ட்' செய்யப்பட்ட 12 எம்.பி.,க்கள் விவகாரத்தில் முதலில் முடிவை அறிவிக்கும்படி, காங்., எதிர்க்கட்சி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கோரிக்கை விடுத்தார். இதற்கு தி.மு.க., உறுப்பினர்கள் சிவா உட்பட பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர்.

இந்நிலையில் காங்., – எம்.பி., அமீ யாஜ்னிக் பேசுகையில், "உயர் நீதிமன்றங்களில் நீதிபதிகளின் காலி பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன."இதனால் ஏராளமான வழக்குகள் நிலுவையில் உள்ளன. இந்த காலி இடங்களை நிரப்புவதில் மத்திய அரசுக்கு அக்கறை உள்ளதா?" என கேள்வி எழுப்பினார்.தி.மு.க., உறுப்பினர் வில்சன் பேசியதாவது:உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு வயது தற்போது முறையே 62 மற்றும் 65 ஆக உள்ளன. இவற்றை 65 மற்றும் 70 ஆக உயர்த்த வேண்டும். இந்த வயதில் நீதித்துறையில் அவர்கள் பெற்றுள்ள அனுபவம், நிலுவையில் உள்ள வழக்குகளை விரைவில் முடிக்க உதவும்.

75 ஆயிரம் வழக்குகள்

உயர் நீதிமன்றங்களில் 57 லட்சம் வழக்குகளும், உச்ச நீதிமன்றத்தில் 75 ஆயிரம் வழக்குகளும் நிலுவையில் உள்ளன. நீதிபதிகள் நியமனம் போதுமான அளவில் இல்லை. உயர் நீதிமன்றங்களில் 402 நீதிபதி பணியிடங்கள் காலியாக உள்ளன. அமெரிக்காவில் நீதிபதிகள் தங்கள் வாழ்நாள் முழுக்க பணியாற்ற சட்டம் இடம் அளிக்கிறது. பிரிட்டனில் நீதிபதிகளின் ஓய்வு வயது 70 ஆக உள்ளது. அதை 75 ஆக உயர்த்த திட்டமிட்டுள்ளனர். நம் நாட்டில் நீதிபதிகள் ஓய்வு பெற்ற பின்னும் வழக்கறிஞர்களாக பணியாற்றுகின்றனர். மத்தியஸ்தங்களில் ஈடுபடுகின்றனர். ஓய்வூதியத்தை மட்டும் நம்பியே வாழ்கின்றனர். அது அவர்களின் வாழ்வாதாரத்திற்கு போதுமானதாக இல்லை.

உச்ச நீதிமன்ற நீதிபதியின் ஒரு மாத சம்பளம், அவர் விசாரிக்கும் வழக்கில் ஆஜராகும் முன்னணி வழக்கறிஞர்களின் ஒரு நாள் கட்டணத்தை விட குறைவு. நீதிபதிகளின் சம்பளத்தை மறுவரையறை செய்ய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். இதையடுத்து மசோதா தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் காரசாரமாக விவாதித்தனர். விவாதத்தின் இறுதியில், அனைத்து கட்சி உறுப்பினர்களின் ஒருமித்த ஆதரவுடன் மசோதா நிறைவேறியது."அரசியல் பாரபட்சம் இன்றி மசோதா நிறைவேற ஒத்துழைப்பு அளித்த அனைத்து கட்சி உறுப்பினர்களுக்கும் நன்றி," என, அமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

---

**6. தமிழகத்தில் பழங்குடியினர் கல்வியறிவு விகிதம் தேசிய சராசரிக்கும்கீழ் சரிவு!**

பழங்குடியின மக்களின் கல்வி நிலையில் இந்திய சராசரியை விட, தமிழ்நாட்டின் சராசரி குறைவாக இருப்பதாக இன்று (டிச. 13) நாடாளுமன்றத்தில் விசிக உறுப்பினர் ரவிக்குமார் எழுப்பிய கேள்விக்கு, மத்திய அரசு பதிலளித்தது. இன்று ரவிக்குமார் இதுகுறித்து எழுப்பிய கேள்விகளுக்கு, மத்திய பழங்குடியினர் நலத் துறை இணை அமைச்சர் ரேணுகா சிங் சருட்டா எழுத்துபூர்வமாக பதில் அளித்துள்ளார். அதன் விவரம் வருமாறு:

பழங்குடியினப் பெண்களின் கல்வியறிவு விகிதத்தை அதிகரிக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன?, 2020-ம் ஆண்டில் பழங்குடியின (ST ) கல்வியறிவு குறித்த மாநில வாரியான தரவு விவரம் என்ன?, பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வி ஆகிய இரண்டிலும் பழங்குடி மக்களின் மொத்த சேர்க்கை விகிதம் (GER) என்ன?, GER-ஐ அதிகரிக்க அரசாங்கம் ஏதேனும் சிறப்பு முயற்சிகளை எடுக்கிறதா?, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? என்ற கேள்விகளை ரவிக்குமார் எழுப்பியிருந்தார்.

இந்தக் கேள்விகளுக்கு, பழங்குடியினர் நலத் துறை இணை அமைச்சர் ரேணுகா சிங் சருட்டா அளித்துள்ள எழுத்துபூர்வமான பதிலில், 'அட்டவணையில் 2011-ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி அனைத்திந்திய அளவில் பழங்குடியின ஆண்களின் படிப்பறிவு 59% ஆக இருக்கிறது, பெண்களின் படிப்பறிவு 49.4% ஆக உள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பழங்குடியின ஆண்களின் கல்வியறிவு 54.3% ஆகவும், பெண்களின் கல்வியறிவு 46.8% ஆகவும் இருக்கிறது. அதாவது, ஆண் கல்வியில் 4.7 சதவீதமும் பெண் கல்வியில் 2.6 சதவீதமும் தேசிய சராசரியைவிட தமிழ்நாட்டில் குறைவாக உள்ளது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைச் சுட்டிக்காட்டி காமதேனு இணையதள செய்திப் பிரிவிடம் பேசிய ரவிக்குமார், "பொதுவாக படிப்பறிவு பெற்றோர் சதவீதத்தில் இந்தியாவில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக இருக்கும் தமிழ்நாட்டில், பழங்குடியினர் கல்வியறிவு நிலை மட்டும் இப்படி பின்னடைவாக இருப்பது வேதனையளிக்கிறது. எனவே, தமிழ்நாட்டில் பழங்குடியினர் கல்வியறிவு சதவீதத்தை உயர்த்த தமிழக முதல்வர் சிறப்புத் திட்டம் ஒன்றை வகுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்றார்.

---

**7. பளுதூக்குதல்: இந்தியாவுக்கு 3-ஆவது தங்கம்**

காமன்வெல்த் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் அஜய் சிங் ஆடவருக்கான 81 கிலோ பிரிவில் தங்கம் வென்றாா'. இப்போட்டியில் இந்தியாவுக்கு இது 3-ஆவது தங்கப் பதக்கமாகும்.

அஜய் சிங் தனது எடைப் பிரிவில் ஸ்னாட்ச்சில் 147 கிலோ, க்ளீன் & ஜொ'க்கில் 175 கிலோ என மொத்தமாக 322 கிலோ எடையைத் தூக்கி

முதலிடம் பிடித்தார். இதில் அவர் ஸ்னாட்ச் பிரிவில் தூக்கிய எடை தேசிய சாதனையாகும்.

ஏற்கெனவே இப்போட்டியில் தங்கம் வென்ற ஜெரிமி லால்ரினுன்கா (67 கிலோ), அசிந்தா ஷியுலி (73 கிலோ) ஆகியோருடன் இணைந்து அஜய் சிங்கும் தற்போது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிக்கு நேரடியாகத் தகுதிபெற்றார்.

இதனிடையே, இந்தப் போட்டியில் மகளிருக்கான 59 கிலோ பிரிவில் இந்தியாவின் பாப்பி ஹஸாரிகா ஸ்னாட்ச் பிரிவில் 84 கிலோ, கிளீன் & ஜெர்க் பிரிவில் 105 கிலோ என மொத்தமாக 189 கிலோ எடையைத் தூக்கி 2-ஆம் இடம் பிடித்து வெள்ளி வென்றார்.

---

**8. 20 ஆண்டுகளுக்கு பிறகு 'பிரபஞ்ச அழகி பட்டத்தை வென்ற' இந்திய பெண்...!**

இஸ்ரேலின் சுற்றுலாத்தளமான எய்லட் நகரில் பிரபஞ்ச அழகிக்கான போட்டி நடைபெற்றது. இதில், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுமார் 80 அழகிகள் மிஸ் யுனிவர்ஸ் பட்டத்திற்காக பங்கேற்றனர்.

இந்நிலையில், இந்தியா சார்பில் பங்கேற்ற இளம்பெண் ஹர்னாஸ் கவுர் பிரபஞ்ச அழகியாக தேர்வு செய்யப்பட்டார். அவருக்கு முன்னாள் பிரபஞ்ச அழகி மெக்சிகோவை சேர்ந்த ஆண்ட்ரியா மெசா வாகையை சூட்டினார். ஹர்னாஸ் கவுர் கடந்த 2017-ம் ஆண்டு மிஸ் சண்டிகராக தேர்வு செய்யப்பட்டார். மேலும் பல்வேறு அழகிப் போட்டிகளில் பங்கேற்று பட்டங்களையும் வென்றுள்ளார்.

இந்தியா சார்பில் லாரா தத்தா 2000-ம் ஆண்டில் மிஸ் யுனிவர்ஸ் பட்டத்தை வென்றிருந்தார். அதன்பிறகு 20 ஆண்டுகளுக்கு பிறகு இந்தியப் பெண் பிரபஞ்ச அழகியாக தேர்வு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

**1.** 2021 – **உலகளாவிய சுகாதார காப்பீட்டு நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ) Sustainable Health Coverage

**ஆ) Leave No One's Health Behind: Invest in Health Systems for All ☑**

இ) Universal access to Healthcare

ஈ) Equitable and healthy society

✓ ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர்.12 அன்று உலக நலவாழ்வு அமைப்பால் உலகளாவிய சுகாதார காப்பீடு நாளாக அனுசரிக்கப்படுகிறது.

✓ எந்தவொரு பணநெருக்கடியும் இல்லாமல் அனைத்து மக்களும் தரமான நலவாழ்வுச் சேவைகளைப் பெறுவதை இந்நாள் உறுதிசெய்கிறது. உலகளாவிய நலவாழ்வுக் காப்பீடு ஐநா அவையால் நீடித்த வளர்ச்சி இலக்குகளாக சேர்க்கப்பட்டுள்ளது. "Leave No One's Health Behind: Invest in Health Systems for All" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**2. நியூ கலிடோனியாவின் தீவுப்பகுதி சமீபத்தில் எந்த நாட்டின் ஒரு பகுதியாக இருக்க வாக்களித்தது?**

**அ) பிரான்ஸ் ☑**



ஆ) அமெரிக்கா

இ) ஜப்பான்

ஈ) ரஷ்யா

✓ பிரெஞ்சு தீவுப் பிரதேசமான புதிய கலிடோனியாவில் உள்ள வாக்காளர்கள், பிரான்ஸ் நாட்டின் ஒரு பகுதியாக இருப்பதற்கு வாக்குச் செலுத்தினர். தென் மாகாண பிராந்தியத்தின் தலைவர் சோனியா பேக்ஸ், இதன் முடிவுகளை அறிவித்தார். இதில் பங்கேற்றவர்களில் 96 சதவீதத்தினர் பிரான்சுடன் இருப்பதைத் தேர்ந்தெடுத்தனர். வாக்கெடுப்பு ஐநா மற்றும் பிராந்திய ஆற்றல்களால் கண்காணிக்கப்பட்டது.

---

**3.** 'Commercial Space Astronaut Wings' **திட்டத்துடன் தொடர்புடைய நாடு எது?**

**அ) அமெரிக்கா ☑**



ஆ) சீனா

இ) ரஷ்யா

ஈ) ஆஸ்திரேலியா

✓ 'Commercial Space Astronaut' திட்டம் US Federal Aviation Administration (FAA) மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 1984ஆம் ஆண்டின் வணிக விண்வெளி வெளியீட்டுச் சட்டத்தின்கீழ் வருகிறது மற்றும் விமானிகள் மற்றும் விமானக் குழுவினரை அங்கீகரிப்பதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது. சமீபத்தில், FAA ஆனது, விண்வெளியைச் சேரும் நபர்களுக்கு வழங்கப்படும் கமர்ஷியல் ஸ்பேஸ் அஸ்ட்ரோனாட் விங்ஸை இனி வெளியிடப்போவதில்லை என அறிவித்தது.

---

**4. புதுப்பிக்கப்பட்ட DICGC சட்டத்தின்படி, கணக்கு வைத்திருப்பவர்–கள் தாங்கள் காப்பீடு செய்யப்பட்ட வைப்புத்தொகையை ____ நாட்களுக்குள் அணுகலாம்?**

அ) 30




ஆ) 45

**இ) 90 ☑**

ஈ) 180

✓ கணக்கு வைத்திருப்பவர்கள் தாங்கள் காப்பீடு செய்த வைப்புத்தொகை–யை 90 நாட்களுக்குள் அணுகுவதை உறுதிசெய்வதற்காக இந்திய அரசு வைப்புத்தொகை காப்பீடு மற்றும் கடன் உத்தரவாத கார்ப்பரேஷன் சட்டத்தில் ஒரு திருத்தத்தை நிறைவேற்றியது.

✓ வங்கி டெபாசிட் காப்பீட்டு நிகழ்வில் பிரதமர் மோடி கலந்து கொண்டு, வங்கிகள் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள 1 இலட்சத்துக்கும் மேற்பட்ட டெபாசிட்தாரர்களுக்கு ₹1,300 கோடி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அத்தகைய கணக்குகளில் சிக்கியுள்ள மூன்று லட்சம் டெபாசிட்தாரர்கள் நிதியைப் பெறவுள்ளனர்.

---

**5. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பக்ஸா புலிகள் காப்பகம் அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ) மேற்கு வங்கம் ☑**



ஆ) ஆந்திர பிரதேசம்

இ) பீகார்

ஈ) மேகாலயா

✓ மேற்கு வங்கத்தில் உள்ள பக்ஸா புலிகள் காப்பகத்தில் குறைந்தது 23 ஆண்டுகளுக்குப்பிறகு இராயல் வங்கப்புலி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு –ள்ளதாக மேற்கு வங்க மாநில அரசு தெரிவித்துள்ளது. பக்ஸா புலிகள் காப்பகத்தின் கிழக்கு தாமன்பூர் காட்டிலுள்ள கண்காணிப்பு கேமராவில் அப்புலியின் படம் பதிவாகியுள்ளது. இதற்கு முன்பு 1998ஆம் ஆண்டில், இராயல் வங்கப்புலியின் படங்கள் அக்காப்பகத்தில் பதிவாகின. தேசிய வனவுயிரி வாரியத்திடமிருந்து புலிகள் காப்பகம் என்ற அடையாளத்தை இந்தக் காப்பகம் இழந்துவிட்டது குறிப்பிடத்தக்கது.

---

**6. உலகின் மிகவுயரமான ரயில்வே பாலத்தூண் கட்டப்பட்டு வரும் நோனி பள்ளத்தாக்கு அமைந்துள்ள மாநிலம்/யூடி எது?**

அ) சிக்கிம்



ஆ) உத்தரகாண்ட்

**இ) மணிப்பூர் ☑**

ஈ) லடாக்

✓ மணிப்பூர் மாநிலத்தில் உள்ள நோனி பள்ளத்தாக்கில் 141 மீ உயரத்தில் உலகின் மிகவுயரமான ரயில்வே பாலத்தூணை ரயில்வே நிர்வாகம் நிர்மாணித்து வருகிறது. இது 111 கி.மீ நீளமுள்ள ஜிரிபாம்–இம்பால் ரயில் பாதையின் ஒருபகுதியாக உள்ளது. இது மணிப்பூரின் தலைநகரத்தை நாட்டின் அகலப்பாதை நெட்வொர்க்குடன் இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நோனி பள்ளத்தாக்கிலுள்ள இப்பாலம், ஐரோப்பாவின் மாண்டினீக்ரோவில் அமைந்துள்ள மாலா – ரிஜேகா வையாடக்ட்டின் தற்போதைய 139 மீ உயர சாதனையை முறியடிக்கும்.

---

**7.** '**இருவாச்சி திருவிழா' என்பது பின்வரும் எந்த மாநிலம்/யூனியன் பிரதேசத்தில் கொண்டாடப்படும் ஒரு கலாச்சார விழாவாகும்?**

அ) அஸ்ஸாம்



**ஆ) நாகாலாந்து ☑**

இ) மேற்கு வங்கம்

ஈ) பீகார்

✓ நாகாலாந்து மாநிலத்தின் தனித்துவம்மிக்க 'இருவாச்சி திருவிழா', "திருவிழாக்களின் திருவிழா" என அழைக்கப்படுகிறது. அதன் பாரம்பரிய முறையில் டிச.1ஆம் தேதி அந்தத் திருவிழா தொடங்கியது. இந்த ஆண்டு (2021) திருவிழாவின் 22ஆவது பதிப்பு ஆகும். கடந்த ஆண்டு, COVID தொற்றுகாரணமாக மெய்நிகர் முறையில் இத்திருவிழா நடத்தப்பட்டது. 10 நாள் நடைபெறும் இவ்விழா, ஆண்டுதோறும் டிசம்பர் தொடக்கத்தில் தொடங்கி நாகாலாந்தின் மாநில தினத்துடன் ஒத்திசைந்து நடக்கிறது.

---

**8. உலக பாரம்பரிய தளமான லியாங்சு நகரத்தின் தொல்பொருள் இடிபாடுகள் உள்ள நாடு எது?**

அ) ஜப்பான்



**ஆ) சீனா ☑**

இ) கிரேக்கம்

ஈ) தென் கொரியா

✓ லியாங்சு நகரத்தின் தொல்பொருள் இடிபாடுகள் ஓர் உலக பாரம்பரிய தளமாகும். யாங்சே நதி டெல்டாவில் உள்ள லியாங்சு கலாச்சாரத்தின் மர்மத்திற்கு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தீர்வு கண்டுள்ளனர். இது உலகின் மிகவும் மேம்பட்ட கற்கால கலாச்சாரங்களில் ஒன்றாக இருந்தது. சமீபத்திய ஆராய்ச்சியில், இக்களிமண் அடுக்கு நாகரிகத்தின் அழிவுக்கு யாங்சே ஆற்றின் வெள்ளம் காரணமாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

---

**9.** "Naoroji: Pioneer of Indian Nationalism" **என்ற நூலை எழுதியவர் யார்?**

**அ) தின்யார் படேல் ☑**



ஆ) மிலன் வைஷ்ணவ்

இ) ஓர்னிட் சனி

ஈ) ஜெய்ராம் ரமேஷ்

✓ எழுத்தாளர் தின்யார் படேல் தனது "Naoroji: Pioneer of Indian Nationalism" என்ற நூலிற்காக 2021ஆம் ஆண்டுக்கான மதிப்புமிக்க கமலாதேவி சட்டோபாத்யாய் NIF புத்தகப்பரிசை வென்றார். கமலாதேவி சட்டோபாத்யாய் NIF புத்தகப்பரிசானது கடந்த 2018'இல் நிறுவப்பட்டது. இது அனைத்து தேசிய எழுத்தாளர்களின் புனைகதை அல்லாத இலக்கி -யங்களை கௌரவிக்கின்றது. இந்நூல் இந்திய தேசிய காங்கிரஸை நிறுவிய 19ஆம் நூற்றாண்டின் தலைவரான நௌரோஜியின் வாழ்க்கை வரலாறு ஆகும். அவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முதல் பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினாராவார்.

---

**10. அண்மையில் நிறைவேற்றப்பட்ட 'அணை பாதுகாப்பு மசோதா, 2019' உடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?**

அ) உள்துறை அமைச்சகம்

**ஆ) ஜல் சக்தி அமைச்சகம் ☑**

இ) உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

ஈ) சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம்

✓ அண்மையில் மாநிலங்களவையில் அணை பாதுகாப்பு மசோதா – 2019 நிறைவேற்றப்பட்டது. மத்திய ஜல் சக்தி அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத், இந்த மசோதா மாநிலங்களின் நீர், அணை உரிமை அல்லது பராமரிப்பு, அல்லது மின்சாரம்போன்ற வளங்கள் மீதான மாநிலங்களின் உரிமைகளைக் கைக்கொள்ளும் நோக்கத்தை கொண்டிருக்கவில்லை என்று தெளிவுபடுத்தினார்.

✓ நாடு முழுவதும் உள்ள அணைகளின் பாதுகாப்பை உறுதிசெய்யவும், உயிர் மற்றும் உடைமைகளுக்கு பேரிழப்பை ஏற்படுத்தும் அணைகள் தொடர்பான பேரிடர்களைத் தடுக்கவும் இந்த மசோதா வகை செய்கிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பருவநிலை மாறுபாடு தொடர்பான ஐ.நா. வரைவு தீர்மானத்துக்கு இந்தியா எதிர்ப்பு**

பருவநிலை மாறுபாடு தொடர்பான ஐ.நா. சபை வரைவு தீர்மானத்துக்கு எதிராக இந்தியா வாக்களித்தது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா நிரந்தரமற்ற உறுப்பு நாடாக இடம்பெற்றுள்ளது. இந்த சூழலில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் பருவநிலை மாறுபாடு தொடர்பான வரைவு தீர்மானம் நேற்று முன்தினம் கொண்டு வரப்பட்டது. இந்த தீர்மானத்தை 12 நாடுகள் ஆதரித்தன. இந்தியாவும் ரஷ்யாவும் எதிர்த்து வாக்களித்தன. சீனா வாக்கெடுப்பில் பங்கேற்க வில்லை. நிரந்தர உறுப்பு நாடான ரஷ்யா வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தியதால் தீர்மானம் ரத்து செய்யப்பட்டது.

வாக்கெடுப்பின்போது ஐ.நா.வுக்கான இந்திய தூதர் திருமூர்த்தி பேசியதாவது:

பருவநிலை மாறுபாட்டை தடுக்க வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது. அதேநேரம் பருவநிலை மாறுபாடு தொடர்பாக ஐ.நா. சபையின் 197 நாடுகளும் ஆலோசித்து தீர்மானிக்க வேண்டும். ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் 15 நாடுகள் மட்டும் தீர்மானிக்க முடியாது. இந்த அவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் முடிவு எடுக்கும் அதிகாரம் சில நாடுகளின் கைகளுக்கு செல்லும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

புவி வெப்பம் அதிகரிப்பதற்கு அமெரிக்கா, சீனா மற்றும் வளர்ச்சி அடைந்த மேற்கத்திய நாடுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த நாடுகள் பருவநிலை மாறுபாட்டை தடுக்க அதிக நிதி ஒதுக்க வேண்டும். வளரும் நாடுகள், பின்தங்கிய நாடுகள் மீது கட்டுப்பாடுகளை திணிக்கக்கூடாது என்று இந்தியா உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

---

**2. 7.56 லட்சம் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்குரூ.2,750 கோடியில் நலத்திட்ட உதவிகள்: திருத்தணியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வழங்குகிறார்**

திருத்தணியில் இன்று நடைபெறும் விழாவில், 7.56 லட்சம் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ரூ.2,750 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார்.

தமிழகம் முழுவதும் 7.22 லட்சம் சுய உதவிக்குழுக்கள் உள்ளன. இவற்றில் 1 கோடியே 6 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உறுப்பினர்களாக உள்ளனர். இதில் நகர்ப்புறத்தில் 36 லட்சம் பேரும், கிராமப்புறத்தில் 70 லட்சம் உறுப்பினர்களும் உள்ளனர்.

மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.5,500 கோடி கரோனா சிறப்புக் கடன் உட்பட ரூ.20 ஆயிரம் கோடி கடன் உறுதி செய்யப்படும், 36,218 சுய உதவிக்குழுக்கள் பயன்பெறும் வகையில் ரூ.809.71 கோடியில் ஊரக வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பன போன்ற அறிவிப்புகள் சட்டப்பேரவையில், வெளியிடப்பட்டன.

தற்போது இந்த அறிவிப்புகளை செயல்படுத்தும் நோக்கில், தமிழகம் முழுவதும் 58,463 சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த 7,56,142 உறுப்பினர்களுக்கு ரூ.2,749.85 கோடி மதிப்பிலான கடன் உதவிகள், நலத்திட்ட உதவிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார். திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி பட்டாபிராம் பகுதியில் உள்ள தனியார் கல்லூரி வளாகத்தில் நடைபெறும் இந்த விழாவில், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக்கடன், நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும்போது, இதே நேரத்தில் இதர மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு அமைச்சர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்குவர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் திருவள்ளூர் மாவட்டத்தில் விழா நடைபெறும் இடத்தை அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், சா.மு.நாசர் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

---

**3. தடுப்பூசி செலுத்திக் கொண்டவா்களில் 48%-க்கு மேல் பெண்கள்: மாநிலங்களவையில் தகவல்**

நாட்டில் கரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டவா்களில் 48.70 சதவீதம் போ் பெண்கள் என்று மாநிலங்களவையில் செவ்வாய்க்கிழமை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடா்பான கேள்விக்கு மத்திய சுகாதாரத் துறை இணையமைச்சா் பாரதி பிரவீண் பவாா் எழுத்து மூலம் அளித்த பதிலில் கூறியிருப்பதாவது:

போதிய விழிப்புணா்வு இல்லாத காரணத்தால் பெண்கள் கரோன் தடுப்பூசி செலுத்திக் கொள்ளும் விகிதம் சற்று குறைவாகவே உள்ளது. கா்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மாா்களுக்கும் கரோனா தடுப்பூசி செலுத்துவதில் தயக்கம் உள்ளது. எனினும் கடந்த மே 19-ஆம் தேதி முதல், பாலூட்டும் தாய்மாா்களும், ஜூலை 2 முதல் கா்ப்பிணிகளும் தடுப்பூசி செலுத்திக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது உரிய மருத்துவ வல்லுநா்களுடன் ஆலோசித்து எடுக்கப்பட்ட முடிவாகும்.

டிசம்பா் 8-ஆம் தேதி நிலவரப்படி கரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டவா்களில் 48.70 சதவீதம் பெண்கள் ஆவா். கரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்வது மற்றும் கரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கடைப்பிடிப்பது தொடா்பாக பெண்கள் மத்தியில் விழிப்புணா்வு ஏற்படுத்த சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**4. 2022-இல் வருகிறது இந்திய செஸ் லீக்**

அடுத்த ஆண்டு ஜூன் மாதம் 'இந்திய செஸ் லீக்' என்ற பெயரில் செஸ் போட்டியை நடத்த இருப்பதாக அகில இந்திய செஸ் சம்மேளனம் செவ்வாய்க்கிழமை அறிவித்தது.

கிரிக்கெட், பாட்மின்டன், கால்பந்து போட்டிகளில் இருப்பதைப் போன்று செஸ் விளையாட்டிலும் இத்தகைய லீக் போட்டி முறையை இந்திய சம்மேளனம் முன்னெடுக்கிறது.

இப்போட்டியில் மொத்தம் 6 அணிகள் இருக்கும் என்றும், அதில் ஒவ்வொரு அணியிலும் இரு சூப்பா் கிராண்ட்மாஸ்டா்கள், இரு இந்திய கிராண்ட்மாஸ்டா்கள், இரு மகளிா் கிராண்ட்மாஸ்டா்கள், ஒரு ஜூனியா் ஆடவா், ஒரு ஜூனியா் மகளிா் என 8 போ் இருப்பா்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டபுள் ரவுண்ட் ராபின் முறையில் இரு வாரங்கள் நடைபெற இருக்கும் இப்போட்டியின் குரூப் சுற்று முடிவில் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிச் சுற்றில் மோதும். போட்டியை இரு நகரங்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. சா்வதேச அளவிலான சிறந்த வீரா், வீராங்கனைகளை இந்தியாவுக்கு அழைத்து வருவதுடன், உள்நாட்டில் இருக்கும் சிறந்த வீரா், வீராங்கனைகளுக்கு நல்லதொரு களத்தை அமைத்துக் கொடுப்பதே இந்தப் போட்டியின் நோக்கமென சம்மேளனம் தெரிவித்துள்ளது. போட்டி தொடா்பான இதர அறிவிப்புகள் அடுத்தடுத்து வெளியாகும் எனத் தெரிகிறது.

**1.** **OECD'இன் சமீபத்திய பொருளாதாரக் கண்ணோட்டத்-தின்படி, இந்த ஆண்டுக்கான உலகளாவிய GDP வளர்ச்சி விகிதம் என்ன?**



அ) 9.5%

ஆ) 8%

**இ) 5.6% ☑**

ஈ) 2.3%

✓ OECD அதன் சமீபத்திய பொருளாதாரக் கண்ணோட்டத்தில் உலக வளர்ச்சி இந்த ஆண்டு 5.6%ஆக இருக்கும் என்று கூறியுள்ளது. உலகளாவிய GDP வளர்ச்சி 2022'இல் 4.5%ஆகவும், 2023'இல் 3.2%ஆகவும் இருக்கும் என்பதையும் அது சிறப்பித்துக்கூறியுள்ளது.

---

**2.** **அண்மையில் நிறைவேற்றப்பட்ட 'அணை பாதுகாப்பு மசோதா, 2019' உடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?**



அ) உள்துறை அமைச்சகம்

**ஆ) ஜல் சக்தி அமைச்சகம் ☑**

இ) உழவு அமைச்சகம்

ஈ) சுற்றுச்சூழல், வன அமைச்சகம்

✓ அண்மையில் மாநிலங்களவையில், 'அணை பாதுகாப்பு மசோதா, 2019' நிறைவேற்றப்பட்டது. மத்திய ஜல் சக்தி அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத், இந்த மசோதா நீர், அணை உரிமை அல்லது பராமரிப்பு, அல்லது மின்சாரம் போன்ற வளங்கள் மீதான மாநிலங்களின் உரிமைகளை கைக்கொள்ளும் நோக்கத்தை கொண்டிருக்கவில்லை என்று தெளிவுபடுத்தினார்.

✓ நாடு முழுவதுமுள்ள அணைகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும், அணைகள் தொடர்பான பேரிடர்களை தடுக்கவும் இந்த மசோதா வகை செய்கிறது.

---

**3.** **"State Finances: A Study of Budgets of 2021-22" என்ற தலைப்பில் ஆய்வை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) NITI ஆயோக்

ஆ) நிதி அமைச்சகம்

**இ) ஆர்பிஐ ☑**

ஈ) ஏடிபி

✓ ரிசர்வ் வங்கியின் வருடாந்திர வெளியீடு, "State Finances: A Study of Budgets of 2021-22" என்ற தலைப்பில் அண்மையில் வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையின்படி, மாநிலங்களின் ஒருங்கிணைந்த கடன்-ஜிடிபி விகிதம் 2022 மார்ச் இறுதிக்குள் 31 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது 2022-23ல் (FY23) அடைய வேண்டிய இலக்கான 20 சதவீதத்தைவிட அதிகமாகும்.

---

**4.** **அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட 'GJ 367 b' என்பது ஒரு ..........?**



அ) கருந்துளை

**ஆ) புறக்கோள் ☑**

இ) சிறுகோள்

ஈ) விண்கல்

✓ புதன் கோள் போன்று 8 மணிநேரத்தை ஓராண்டாகக் கொண்ட புறக்கோள் 'GJ 367 b'ஐ அறிவியலாளர்கள் சமீபத்தில் கண்டுபிடித்துள்ளனர். இது புதன் போன்று பாறைக்கோள் என்றும் பூமியின் பாதி நிறை கொண்டது என்றும் கருதப்படுகிறது.

✓ 'GJ 367 b' ஆனது 24 மணி நேரத்திற்கும் குறைவான நேரத்தில் தங்கள் நட்சத்திரத்தை சுற்றிவரும் புறக் கோள்கள் குழுவிற்கு உரியதாகும். இதனை ஜெர்மன் விண்வெளி மையத்தின் கோள் ஆராய்ச்சி நிறுவனத்தின் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

---

**5.** **எந்நிறுவனம் / குழுமத்தின் 75ஆம் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், இந்திய அரசு நினைவு அஞ்சல்தலை வெளியிட்டுள்ளது?**

அ) டாடா குழுமம்

ஆ) ரிலையன்ஸ் குழுமம்

**இ) மஹிந்திரா மற்றும் மஹிந்திரா குழுமம் ☑**

ஈ) கோத்ரேஜ் குழுமம்

✓ மஹிந்திரா மற்றும் மஹிந்திரா குழுமத்தின் 75 ஆண்டு நிறைவை முன்னிட்டு, இந்திய அரசு நினைவு அஞ்சல் தலைகளை வெளியிட்டுள்ளது. 1945ஆம் ஆண்டு KC மஹிந்திரா மற்றும் அவரது சகோதரர் JC மஹிந்திரா ஆகியோரால் நிறுவப்பட்டதுதான் மஹிந்திரா மற்றும் மஹிந்திரா குழுமம். கடந்த 1947'இல், வில்லிஸ் ஜீப்களை அந்த நிறுவனம் உற்பத்தி செய்யத் தொடங்கியது.

---

**6.** **2021 – உலக எய்ட்ஸ் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**



அ) Know your Status

ஆ) Communities Make the Difference

இ) Global Solidarity Shared Responsibility

**ஈ) End inequalities. End Aids. End pandemics ☑**

✓ 'உலக எய்ட்ஸ் நாள்' ஒவ்வோர் ஆண்டும் டிச.1 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இது முதன் முதலில் 1988'இல் அனுசரிக்கப்பட்டது. "End inequalities. End Aids. End pandemics" என்பது இந்த ஆண்டுக்கான உலக எய்ட்ஸ் நாளின் கருப்பொருளாகும்.

---

**7.** **2021 – 'சர்வதேச தன்னார்வலர் நாளுக்கானக்' கருப் பொருள் என்ன?**

**அ) Volunteer now for our common future ☑**

ஆ) World needs Volunteers

இ) Volunteering during Pandemic

ஈ) Welcoming Volunteers

✓ ஆண்டுதோறும், நீடித்த வளர்ச்சி இலக்குகளை (SDGs) அடைவதற்காக தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் தன்னார்வலர்களின் பங்கை ஊக்குவிப்பதற்காக டிச.5 அன்று சர்வதேச தன்னார்வலர்கள் நாள் அனுசரிக்கப்படு-கிறது. இந்நாள் உலகெங்குமுள்ள தன்னார்வலர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கிறது.

- ✓ UNGA, 2001'ஐ சர்வதேச தன்னார்வலர்களின் ஆண்டாக குறித்தது. "Volunteer now for our common future" என்பது இந்த ஆண்டுக்கான 'சர்வதேச தன்னார்வலர் நாளின்' கருப்பொருளாகும்.

---

**8.** **உலக மண் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ) டிசம்பர் 3

**ஆ) டிசம்பர் 5 ☑**

இ) டிசம்பர் 7

ஈ) டிசம்பர் 9

- ✓ மண்ணின் முக்கியத்துவம் மற்றும் அதன் நிலையான மேலாண்மை குறித்து மக்களின் கவனத்தைக் குவிப்பதற்காக, ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 5ஆம் தேதி உலக மண் தினம் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு பிரச்சாரமானது "Halt soil salinization, boost soil productivity" என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டது.

---

**9.** **'சிப்ரியன் போயாஸ் பரிசுடன்' தொடர்புடைய துறை எது?**

அ) விண்வெளி அறிவியல்



**ஆ) கணிதம் ☑**

இ) வைராலஜி

ஈ) வணிகம்

- ✓ புகழ்பெற்ற இந்திய–அமெரிக்க கணிதவியலாளர் நிகில் ஸ்ரீவஸ்தவா, முதன் முறையாக வழங்கப்பட்டும் $5,000 மதிப்புடைய சிப்ரியன் போயாஸ் பரிசுக்கு கூட்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ஆபரேட்டர் தியரியில் அவர் ஆற்றிய பங்களிப்பிற்காக அமெரிக்க கணித சங்கம் அவருக்கு இவ்விருதை வழங்குகிறது.

---

**10.** **'Public Service Ethics – A Quest for Naitik Bharat' என்ற நூலை எழுதியவர் யார்?**

**அ) பிரபாத் குமார் ☑**



ஆ) விஜய் குமார்

இ) இறையன்பு

ஈ) அஜய் பூஷன் பாண்டே

- ✓ ஜார்கண்ட் மாநிலத்தின் முன்னாள் ஆளுநரும், இந்திய அரசின் முன்னாள் கேபினட் செயலாளருமான பிரபாத் குமார் எழுதிய, 'Public Service Ethics – A Quest for Naitik Bharat' என்ற நூலை குடியரசுத் துணைத் தலைவர் வெளியிட்டார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. எண்ம பணப் பரிமாற்றத்தை ஊக்குவிக்க ரூ.1,300 கோடி மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

யுபிஐ, ரூபே டெபிட் கார்டுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் எண்ம பணப் பரிமாற்றத்தை ஊக்குவிக்க ரூ.1,300 கோடி திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை மத்திய மின்னணு, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் விவரித்தார். அவர், "எண்ம பரிமாற்றத்தை மக்கள் அதிகம் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக ரூ.1,300 கோடி முதலீடு செய்யப்படும்' என்றார்.

இதுதொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

எண்ம வழியில் பணப் பரிமாற்றங்கள் செய்யும்போது அந்தத் தொகைக்கு ஏற்ப பரிமாற்றக் கட்டணம் பிடித்தம் செய்யப்படுகிறது. இந்தப் பரிமாற்றக் கட்டணத்தை திருப்பிச் செலுத்த அரசு முடிவு செய்துள்ளது. அதாவது, இந்தத் திட்டத்தின் கீழ் பீம்}யுபிஐ, ரூபே டெபிட் கார்டுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ரூ.2,000 வரையிலான எண்ம பரிவர்த்தனைகளில், பரிவர்த்தனைக் கட்டணம் திருப்பி அளிக்கப்படும். மேலும், பீம்}யுபிஐ, ரூபே டெபிட் கார்டுகள் மூலமாக நடைபெறும் எண்ம பரிவர்த்தனைகளில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் ஊக்கத்தொகையாக வங்கிகளுக்கு அரசு அளிக்கும். இதனால், வங்கிகள் எண்ம பரிவர்த்தனைகளை ஊக்குவிக்கும். அதிகமானோர் எண்ம பரிமாற்றத்துக்கு மாறுவார்கள்.

இந்தத் திட்டத்துக்காக, கடந்த ஏப்ரல் 1}ஆம் தேதியில் இருந்து ஓராண்டுக்கு ரூ. ரூ.1,300 கோடியை மத்திய அரசு முதலீடு செய்யவுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செமிகண்டக்டர், மின்னணு திரை உற்பத்தியை ஊக்குவிக்க ரூ.76,000 கோடி: செமி கண்டக்டர், மின்னணு சாதனங்களில் பயன்படுத்தப்படும் திரைகள் ஆகியவற்றின் உற்பத்தியை ஊக்குவிக்க ரூ.76,000 கோடி மதிப்பிலான திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இதுகுறித்து மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறுகையில், "நம் அன்றாட வாழ்வில் மின்னணு சாதனங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மின்னணு உபகரணங்களில் செமிகண்டக்டர் உதிரிபாகங்கள் முக்கியமானவை.

பிரதமர் மோடி வரவேற்பு: அமைச்சரவை முடிவுகள் தொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்ட ட்விட்டர் பதிவில், "செமி கண்டக்டர் உற்பத்தியை ஊக்குவிக்க மத்திய அரசு முடிவெடுத்திருப்பது, அந்தத் துறையில் புதுமைக் கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சியை ஊக்குவிக்கும். உற்பத்தியும் அதிகரிக்கும். மத்திய அரசின் சுயசார்பு இந்தியா திட்டத்துக்கு இது வலுசேர்க்கும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

வாக்காளர் அட்டை – ஆதார் இணைக்கப்படும்

தேர்தல் சீர்திருத்த மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த மசோதாவின்படி, வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண் இணைக்கப்படும்.

இதனால், ஒருவர் பல வாக்காளர் அடையாள அட்டையைப் பயன்படுத்துவதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

தற்போது ஜனவரி 1}ஆம் தேதியை அடிப்படையாகக் கொண்டு புதிய வாக்காளர்கள் சேர்க்கப்படுகிறார்கள். ஆண்டுக்கு நான்கு தேதிகளை அடிப்படையாகக் கொண்டு புதிதாக வாக்காளர்கள் சேர்ப்பதற்கு மசோதா வழிவகுக்கிறது. தற்போதைய நிலையில், பணிசார்ந்து ராணுவ வீரர் வெளியூர் சென்றுவிட்டால் அவருக்குப் பதிலாக அவருடைய மனைவி வாக்களிக்க முடியும். ஆனால், பெண் ராணுவ அலுவலர் ஊரில் இல்லாவிட்டால் அவருடைய கணவரால் வாக்களிக்க முடியாது. எனவே, கணவரும் வாக்களிக்கும் வகையில், இதுதொடர்பான சட்டப் பிரிவில் "மனைவி' என்ற வார்த்தைக்குப் பதிலாக "வாழ்க்கைத் துணைவர்' என்ற வார்த்தையை சேர்ப்பதற்கு மசோதா வழிவகுக்கிறது.

---

**2. ராணி மேரி கல்லூரியின் 5,500 மாணவிகள் சுகாதாரத் தூதுவர்களாக நியமனம்: அமைச்சர் மா. சுப்பிரமணியன்**

ராணி மேரி கல்லூரியில் பயிலும் 5,500 மாணவிகள் கரோனா விழிப்புணர்வு ஏற்படுத்தும் சுகாதாரத் தூதுவர்களாக நியமிக்கப்படுவதாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து இன்று அவர் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

"ராணி மேரி கல்லூரி மாணவிகளுக்கு நடைபெறும் கரோனா தடுப்பூசி சிறப்பு முகாமில் கலந்து கொள்வதிலும், இங்கு மாணவிகளின் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளின் மூலம் கரோனா குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கு பெற்றதிலும் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இக்கல்லூரி மாணவிகளின் ஆர்வத்தைப் பாராட்டும் வகையிலும், அவர்களின் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும் இங்கு பயிலும் 5,500 மாணவிகள் கரோனா விழிப்புணர்வு ஏற்படுத்தும் சுகாதாரத் தூதுவர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

இவர்களுக்கு சுகாதாரத்துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் அடையாள அட்டை வழங்கப்படும். இந்த மாணவிகள் தங்கள் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் மற்றும் உறவினர்களுக்கு கரோனா பாதுகாப்பு வழிமுறைகள் குறித்தும், கோவிட் தடுப்பூசி செலுத்திக்கொள்ளும் அவசியம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்துவார்கள்.

இந்தக் கல்லூரியில் பயிலும் 5,500 மாணவிகளில் 3800 மாணவிகள் இரண்டு தவணை தடுப்பூசியும், 800 மாணவிகள் முதல் தவணை தடுப்பூசியும் செலுத்திக் கொண்டுள்ளனர். 900 மாணவிகள் மட்டுமே தடுப்பூசி செலுத்தாமல் உள்ளனர். அவர்களும் இந்தத் தடுப்பூசி முகாமில் கலந்துகொண்டு ஆர்வமாகத் தடுப்பூசி செலுத்திக் கொண்டு வருகின்றனர். 100 சதவீதம் தடுப்பூசி செலுத்திய கல்லூரி என்கிற நிலையை ராணி மேரி கல்லூரி ஓரிரு நாட்களில் அடைந்துவிடும். இதற்காக கல்லூரி முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் மாணவிகளுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நைஜீரியா நாட்டிலிருந்து சென்னை வந்த ஒரு நபருக்கு கரோனா தொற்று கண்டறியப்பட்டு, அதில் மரபியல் மாற்றம் இருந்தது. அவருடன் தொடர்புடைய உறவினர்களுக்குப் பரிசோதனை மேற்கொண்டதில் 6 நபர்களுக்கு கரோனா தொற்றும், அதில் மரபியல் மாற்றமும் கண்டறியப்பட்டதால் இந்த 7 நபர்களின் தடயவியல் மாதிரிகள் ஒமைக்ரான் வகை தொற்றா எனக் கண்டறிய பெங்களூருக்கு ஆய்விற்காக அனுப்பப்பட்டுள்ளது. 7 நபர்களும் சென்னை கிங்ஸ் நிறுவன மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களின் உடல்நிலை சீரான நிலையில் உள்ளது.

தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, திருச்சி, கோவை ஆகிய பன்னாட்டு விமான நிலையங்களில் வெளிநாடுகளிலிருந்து வரும் பயணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். அதிக பாதிப்புள்ள 12 நாடுகளிலிருந்து வரும் பயணிகள் முழுமையாகப் பரிசோதனை செய்யப்படுகின்றனர். அதன்படி, இதுவரை 12,039 நபர்களுக்கு கோவிட் தொற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாதிப்பு குறைவாக உள்ள நாடுகளிலிருந்து 63,411 பயணிகள் தமிழகத்திற்கு வருகை புரிந்துள்ளனர். இவர்களில் 2 சதவீதம் நபர்களுக்கு, அதாவது 1,834 நபர்களுக்கு கரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவர்களில் 40 பேருக்கு கரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இதில் 36 நபர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களின் சளி மாதிரிகள் மீண்டும் ஆய்வு செய்வதற்காக பெங்களூருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பு மரபியல் மாற்றம் அடைந்த ஒமைக்ரான் வைரஸ் தொற்று மிக வேகமாகப் பரவக்கூடியது எனத் தெரிவித்துள்ளது. மேலும் இந்த வகை வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முகக்கவசம் அணிவதும், இரண்டு தவணை தடுப்பூசி செலுத்துவதுமே நிரந்தரத் தீர்வு எனத் தெரிவித்துள்ளது. தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுக்கும் தொற்று பாதிப்பு ஏற்பட்டாலும், ஆக்சிஜன் சுவாச உதவி போன்ற தீவிர பாதிப்பு இன்றி லேசான அறிகுறிகளுடன் உயிர்ப் பாதுகாப்பு உள்ளது.

பாதிப்பு குறைவாக உள்ள நாடுகளிலிருந்து வரும் நபர்களில் 2% நபர்களுக்கு மட்டும் தொற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டாலும், விமான நிலையத்திலிருந்து வெளிவரும்போது வெப்பநிலை பரிசோதனை மற்றும் மருத்துவக் குழுவால் பரிசோதிக்கப்படும்போது ஏதேனும் அறிகுறிகள் இருப்பின் அவர்களுக்கும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதிக பாதிப்புள்ள நாடுகளிலிருந்து வரும் பயணிகளுக்கு பரிசோதனை எடுக்கப்பட்டு தொற்று பாதிப்பு இல்லை என உறுதி செய்யப்பட்டாலும் அவர்கள் வீட்டுத் தனிமையில் 8 நாட்களுக்கு இருக்க அறிவுறுத்தப்பட்டு மீண்டும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு தொற்று பாதிப்பு இல்லை என உறுதி செய்யப்பட்ட பின்னரே வெளியில் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். வெளிநாடுகளிலிருந்து

வரும் பயணிகள் சுகாதாரத்துறை, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் காவல் துறையின் மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

மூன்றாம் தவணை தடுப்பூசி செலுத்துவது மற்றும் 18 வயதிற்குக் கீழ் உள்ள நபர்களுக்கு தடுப்பூசி செலுத்துவது குறித்து மத்திய அரசின் முடிவினைப் பொறுத்து முறையான வழிமுறைகளைப் பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்’ ’.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

**3. வேளாண் விளைபொருள் பட்டியலில் இருந்து பருத்தி நீக்கம்: விவசாயிகள் அதிர்ச்சி**

நெல், நிலக்கடலைக்கு அடுத்தபடியாக அதிக சந்தைக் கட்டணம் வசூலித்துக் கொடுத்த பருத்தியை, வேளாண் விளைபொருள் பட்டியலில் இருந்து நீக்கம் செய்து தமிழக அரசு பிறப்பித்துள்ள உத்தரவு விவசாயிகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் அறிவிக்கை செய்யப்பட்ட வேளாண்மை மற்றும் தோட்டக்கலை விளைபொருள்களுக்கு 1 சதவீத சந்தைக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் அதிகம் விளையும் பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை அல்லது அந்த உற்பத்திப் பொருளுக்கு தகுந்த விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக குறிப்பிட்ட பயிர்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலிருந்து சுமார் 16 கி.மீட்டர் சுற்றளவிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பயன்பெறும் வகையில், விற்பனைக்கு வரும் விளைபொருள்களுக்கு வியாபாரிகளிடம் சந்தைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதேபோல் வெளியிடங்களிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு வரும் விளைபொருள்களையும் வெளிப்படையாகத் தெரிவித்து 1 சதவீத சந்தைக் கட்டணத்தை வியாபாரிகள் செலுத்தி வருகின்றனர். இதனை கண்காணிக்க வேண்டிய பொறுப்பு அந்தந்தப் பகுதியிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு கொண்டு வந்துள்ள ஜிஎஸ்டி வரியை செலுத்தும் வியாபாரிகள், 1 சதவீத சந்தைக் கட்டணத்தை செலுத்துவதற்கு தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், தமிழக அரசுக்கு ஆண்டுக்கு ரூ.20 கோடிக்கு மேல் வருவாய் ஈட்டி தந்து கொண்டிருந்த பருத்தியை, தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்திலிருந்து நீக்கம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

வியாபாரிகளுக்கு மட்டுமே சாதகமான இந்த சட்டத் திருத்தம், விவசாயிகள் மட்டுமின்றி வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அதிகாரிகள் மத்தியிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

2 மாத இடைவெளியில் முழு விலக்கு: தமிழகத்தில் திருப்பூர், கோவை, திண்டுக்கல், ஈரோடு, சேலம், தருமபுரி, விருதுநகர் ஆகிய மாவட்டங்கள் பருத்தி உற்பத்தியில் முன்னிலை வகித்து வருகின்றன.

அதேபோல், திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களும் பருத்தி சாகுபடியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

இந்த மாவட்டங்களில் தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ், நூலிழைகள் என்ற பிரிவின் கீழ் பருத்திக்கு கபாஸ், லின்ட், கழிவு என்ற 3 பிரிவுகளில் சந்தைக் கட்டணமாக 1 சதவீதம் வசூலிக்கப்பட்டு வந்தது. நாளொன்றுக்கு 50 கிலோவுக்கு கூடுதலான பருத்திப் பஞ்சையும், 100 கிலோவுக்கு கூடுதலான கழிவுப் பஞ்சையும், 150 கிலோவுக்கு கூடுதலான கபாஸ் (விதை நீக்காத பருத்தி) எடுத்துச் செல்லும்போதும் இந்த 1 சதவீத கட்டணம் வசூலிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், லின்ட் (விதை நீக்கப்பட்ட பஞ்சு), கழிவு (கழிவு பஞ்சு) ஆகியவற்றுக்கு சந்தைக் கட்டணத்திலிருந்து கடந்த செப்டம்பர் மாதம் விலக்கு அளித்து தமிழக அரசு ஆணை பிறப்பித்தது. அதன்தொடர்ச்சியாக 2 மாத இடைவெளியில், பருத்திக்கும் (கபாஸ்) சந்தைக் கட்டணத்திலிருந்து விலக்கு அளித்து கடந்த 20 நாள்களுக்கு முன்பு தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

பருத்தி வேளாண் விளைபொருள் இல்லையா?: தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் நூலிழைகள் என்ற பிரிவில் இடம் பெற்றிருந்த பருத்தியை நீக்கம் செய்து உத்தரவிடப்பட்டதன் மூலம், பருத்தி இனி வேளாண் விளைபொருள் கிடையாதா என்ற சந்தேகம் விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது.

நெல், நிலக்கடலைக்கு அடுத்தப்படியாக பருத்தி மூலமாக மட்டுமே தமிழக அரசுக்கு அதிக வருவாய் கிடைத்து வரும் நிலையில், வியாபாரிகளின் நலனுக்காக விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர். வேளாண் விளைபொருள் பட்டியலில் இருந்து பருத்தி நீக்கப்பட்டிருப்பது விவசாயிகளுக்கு எதிர்காலத்தில் பெரும் இழப்பை ஏற்படுத்தும் என கூறப்படுகிறது.

இது தொடர்பாக அகில இந்திய விவசாயிகள் சங்க மத்தியக் குழு உறுப்பினர் இரா.சச்சிதானந்தம் கூறியதாவது:

மகாராஷ்டிரம், குஜராத் உள்ளிட்ட மாநிலங்களிலிருந்து பருத்தியை கொள்முதல் செய்வதற்கு வியாபாரிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால் தமிழகத்தில் பருத்தி சாகுபடி பரப்பு தொடர்ந்து சரிவடைந்து வருகிறது. இதுபோன்ற சூழலில், பருத்திக்கு சந்தைக் கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருப்பது, விவசாயிகளுக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும் முடிவாக அமைந்துள்ளது.

தமிழகத்தில் குறைவான உற்பத்தி இருந்தாலும் கூட, சந்தைக் கட்டண வசூல் அமலில் இருந்தால் மட்டுமே விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதார விலை கிடைக்கும்; இல்லாத நிலையில், வியாபாரிகள் சின்டிகேட் அமைத்து

குறைந்த விலைக்கு கொள்முதல் செய்வார்கள். இதனைத் தடுக்கும் வகையில் பருத்திக்கு விலக்கு அளிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அரசாணையைத் திரும்பப் பெற வேண்டும். விவசாயிகள் வருமானம் ஈட்டக் கூடிய பணப் பயிராக உள்ள பருத்திக்கு, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் நியாயமான விலை கிடைப்பதையும் அரசு உறுதிப்படுத்த வேண்டும்என்றார்.

---

**4. பன்னாட்டு நிறுவன தலைவா்கள் பட்டியலில் இந்தியா வம்சாவளி பெண்**

மகாராஷ்டிர மாநிலம், கோலாப்பூரில் பிறந்து வளா்ந்த இந்திய வம்சாவளியைச் சோ்ந்த லீனா நாயா் பன்னாட்டு நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி பொறுப்பேற்கவுள்ளாா்.

இந்திய வம்சவாளியான லீனா நாயா் (52), யுனிலீவா் நிறுவனத்தில் தலைமை மனிதவள அதிகாரியாக பணியாற்றினா். அந்தப் பதவியை வகித்த முதல் பெண் அவா் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில், லீனா யுனிலீவா் நிறுவனத்திலிருந்து விலகி பிரெஞ்ச் லக்ஸரி குழுமத்தில் இணைந்தாா்.

தற்போது அந்தக் குழுமத்தின் லக்ஸரி ஃபேஷன் ஹவுஸ் சேனலின் தலைமைச் செயல் அதிகாரியாக லீனா நாயா் அடுத்த மாதம் பொறுப்பேற்கவுள்ளாா்.

இதன்மூலம், பன்னாட்டு நிறுவனங்களில் தலைமைப் பொறுப்பை வகிக்கும் இந்திய வம்சாவளியினா் பட்டியலில் உள்ள சுந்தா் பிச்சை, பராக் அக்ரவால், சத்யா நாதெள்ளா வரிசையில் லீனா நாயரும் இணையவுள்ளாா்.

---

**5. மூத்த குடிமக்களுக்கு எதிரான குற்றங்கள்!**

2018–ஆம் ஆண்டுமுதல் 2020–ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் மூத்த குடிமக்களுக்கு எதிரான குற்றங்கள் தொடா்பாக இந்தியா முழுவதும் 76,947 வழக்குகள் பதிவாகியுள்ளன. இந்த வழக்குகள் தொடா்பாக 78,217 போ் கைது செய்யப்பட்டுள்ளனா். 7,113 பேருக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சா் வீரேந்திர குமாா் செவ்வாய்க்கிழமை எழுத்துபூா்வமாக தாக்கல் செய்த பதிலில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய குற்ற ஆவணக் காப்பகம் இத்தகவலை வழங்கியுள்ளது. மூத்த குடிமக்களுக்கு எதிரான குற்றங்களுக்கான காரணங்களை தேசிய குற்ற ஆவணக் காப்பகம் பராமரிக்கவில்லை.

‘இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி, பொது ஒழுங்கானது மாநிலம் தொடா்புடைய விஷயம். மூத்த குடிமக்களின் பாதுகாப்புக்கு அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. இதுதொடா்பாக இரண்டு விரிவான அறிவுறுத்தல்களை அனைத்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுக்கு கடந்த 2008 மற்றும் 2013–ஆம் ஆண்டுகளில் மத்திய உள்துறை அமைச்சகம் வழங்கியுள்ளது. அதில் மூத்த குடிமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாக’ அமைச்சா் தெரிவித்துள்ளாா்.

தமிழகம்: மூத்த குடிமக்களுக்கு எதிரான குற்றங்களில் இந்தியா முழுவதும் 3 ஆண்டுகளில் தண்டனை விதிக்கப்பட்ட மொத்த நபா்கள் 7,113. இதில், அதிகபட்சமாக தமிழகத்தில் 2018–இல் 955 போ், 2019–இல் 1030 போ், 2020–இல் 201 போ் என மொத்தம் 2,186 பேருக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழகம்

இந்தியா முழுவதும் 3 ஆண்டுகளில் 7,113 பேருக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இதில், அதிகபட்சமாக தமிழகத்தில் 2018}இல் 955 பேர், 2019}இல் 1,030 பேர், 2020}இல் 201 பேர் என மொத்தம் 2,186 பேர் தண்டனை பெற்றுள்ளனர்.

---

**6. சூரியனைத் 'தொட்ட' நாசா விண்கலம்!**

இதுவரை இல்லாத நெருக்கத்தில் சென்று சூரியனில் ஆய்வு மேற்கொள்வதற்காக அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் அனுப்பியுள்ள 'பாா்க்கா்' விண்கலம், முதல்முறையாக சூரியனின் வளிமண்டலத்தில் நுழைந்து சாதனை படைத்துள்ளது.

இதுகுறித்து நாசா வலைதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வரலாற்றில் முதல்முறையாக ஒரு விண்கலம் சூரியனைத் 'தொட்டுள்ளது' . நாசாவின் பாா்க்கா் விண்கலம் சூரிய வளிமண்டலத்தில் மேல்பகுதியில் நுழைந்து பல்வேறு புதிய தகவல்களை சேகரித்துள்ளது.

நிலவில் முதல்முறையாக மனிதா்கள் தரையிறங்கிய பிறகுதான் அதனைக் குறித்த பல விவரங்கள் அறிவியல் உலகுக்குத் தெரியவந்தது. அதே போல், சூரியனின் வளிமண்டலத்துக்குள் பாா்க்கா் விண்கலம் நுழைந்துள்ளது இதுதொடா்பான ஆய்வில் மிகப் பெரிய முன்னேற்றத்தை அளித்துள்ளது.

நீண்ட தொலைவிலிருந்து மற்ற விண்கலன்களால் தெரிந்து கொள்ள முடியாத உண்மைகளை பாா்க்கா் விண்கலம் சூரியனின் வளிமண்டலத்துக்குள் நுழைந்து கண்டறிந்துள்ளது என்று நாசா வலைதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சூரியனில் இதுவரை கண்டறியப்படாத உண்மைகளைக் கண்டறியும் முயற்சியாக, அதற்கு மிக நெருக்கத்தில் விண்கலத்தை அனுப்பி ஆய்வு செய்யும் திட்டத்தை நாசா கடந்த 2009–ஆம் ஆண்டு அறிவித்தது.

அந்த விண்கலத்தை மேரிலாண்ட் மாகாணம், பால்ட்டிமோா் நகரிலுள்ள ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் இயற்பியல் ஆய்வகம் வடிவமைத்தது.

கடந்த 2015–ஆம் ஆண்டே இந்த விண்கலத்தை விண்ணில் ஏவ திட்டமிடப்பட்டாலும், பல்வேறு காரணங்களால் அந்தத் திட்டம் தள்ளிவைக்கப்பட்டது.

இந்தச் சூழலில், ஃப்ளோரிடா மாகாணம், கேப் கா்னிவல் பகுதியிலுள்ள ராக்கெட் ஏவுதளத்திலிருந்து சக்தி வாய்ந்த அலையன்ஸ் டெல்ட்டா 4 வகை கனரக ராக்கெட்கள்

மூலம் பாா்க்கா் விண்கலம் கடந்த 2018–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

அதன் பிறகு 3 ஆண்டுகளாக சூரியனை சுற்றி வரும் அந்த விண்கலம், அதன் நெருக்கத்தில் செல்லும்போது பல தகவல்களை சேகரித்து அனுப்பியது.

இந்த நிலையில் தற்போது சூரியனின் காற்றுமண்டலத்துக்குள் முதல் முறையாக நுழைந்து பாா்க்கா் விண்கலம் ஆய்வு மேற்கொண்டுள்ளது. இந்தப் பகுதியில்தான், பூமியில் தாக்கங்களை ஏற்படுத்தும் பல்வேறு உண்மைகள் பொதிந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அந்தப் பகுதியில் பாா்க்கா் விண்கலம் மேற்கொண்டுள்ள ஆய்வு, சூரியனைக் குறித்தும், பிரபஞ்சத்தைக் குறித்தும் பல மா்ம முடிச்சுகளை அவிழ்க்கும் என்று எதிா்பாா்க்கப்படுகிறது.

7 ஆண்டுகளில் இந்த விண்கலம் சூரியனை 24 முறை நீள்வட்டப்பாதையில் வலம் வரும் எனவும், மிகவும் குறைந்தபட்சமாக சூரியனுக்கு 61.2 லட்சம் கி.மீ. நெருக்கத்தில் வரும் 2025–ஆம் ஆண்டு கடந்து செல்லும் எனவும் கூறப்படுகிறது.

சூரியனின் வளிமண்டலத்துக்குள் நுழைந்த முதல் விண்கலம் என்பது மட்டுமன்றி, மனிதா்களால் உருவாக்கப்பட்டு, வரலாற்றில் இதுவரை இல்லாத அளவு அதிவேகத்தில் பாய்ந்து செல்லும் பொருள் என்ற சிறப்பும் பாா்க்கா் விண்கலத்துக்கு உள்ளது.

அதுமட்டுமன்றி, உயிரோடிருக்கும் விஞ்ஞானியின் பெயா் சூட்டப்பட்டுள்ள முதல் விண்வெளி ஆய்வுக் கலம் என்பதும் பாா்க்கரின் மற்றொரு சிறப்பம்சமாகும்.

சூரியக் காற்று குறித்த உண்மைகளை கடந்த 1958–ஆம் ஆண்டு கண்டறிந்து சொன்ன விஞ்ஞானி யுஜீன் பாா்க்கரின் (91) பெயா் இந்த விண்கலத்துக்குச் சூட்டப்பட்டுள்ளது.

பாா்க்கா் – ஒரு பாா்வை..

2025–ஆம் ஆண்டு வரை வலம் வரும்

சூரியனை 24 முறை நெருங்கிக் கடக்கும்

அதிகபட்சமாக சூரியனுக்கு 61.2 லட்சம் கி.மீ. நெருக்கத்தில் செல்லும்

1,300 டிகிரி சென்டிகிரேட் வெப்பத்தைத் தாங்கும்

மணிக்கு 7 லட்சம் கி.மீ. வேகம் (நொடிக்கு 190 கி.மீ.)

---

**1.** **2021ஆம் ஆண்டிற்கான ஆசிய ஆற்றல் குறியீட்டில் முதலிடம் வகிக்கிற நாடு எது?**



அ) சீனா

ஆ) இந்தியா

**இ) அமெரிக்கா ☑**

ஈ) ரஷ்யா

✓ ஆசிய ஆற்றல் குறியீட்டை சிட்னியின் லோவி நிறுவனம் தயாரித்துள்ளது. சமீபத்தில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டிற்கான குறியீட்டில், அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. ஆசிய கண்டத்தில் உள்ள 26 நாடுகள் மற்றும் பிரதேசங்களை வரிசைப்படுத்தும் இந்தக் குறியீடு, இந்தியாவை 4ஆவது ஆற்றல்மிகு நாடாக தரவரிசைப்படுத்துகிறது.

✓ பொருளாதாரத் திறன், இராணுவத் திறன் மற்றும் கலாச்சார செல்வாக்கு போன்ற பல்வேறு அளவீடுகளின் அடிப்படையில் இந்தியா தனது 4ஆவது இடத்தைத் தக்க வைத்துக்கொண்டுள்ளது.

---

**2.** **முற்றிலும் காகித பயன்பாடற்ற உலகின் முதல் அரசாக மாறியுள்ள நகரம் எது?**



அ) மாஸ்கோ

**ஆ) துபாய் ☑**

இ) நியூயார்க்

ஈ) அபுதாபி

✓ முற்றிலும் காகித பயன்பாடற்ற அரசாக மாறிய உலகின் முதல் அரசு துபாய் என்று அமீரகத்தின் பட்டத்து இளவரசர் ஷேக் ஹம்தான் பின் முகமது பின் ரஷித் அல் மக்தூம் தெரிவித்தார். இதனால் ஆண்டுக்கு 2,650 கோடி ரூபாய் நிதியும், பணியாளர்களின் 1 கோடியே 40 லட்சம் மணி நேர பணி நேரமும் சேமிக்கப்பட்டு உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். 5 கட்டங்களாக பிரித்து இந்தத் திட்டத்தின் இலக்கு எட்டப்பட்டுள்ளது. துபாயில் 45 அரசு நிறுவனங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளன.

---

**3.** **ஆண்டுதோறும் 'நுபி லால் நாள்' அனுசரிக்கப்படுகிற மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**



அ) அஸ்ஸாம்

**ஆ) மணிப்பூர் ☑**

இ) அருணாச்சல பிரதேசம்

ஈ) சிக்கிம்

✓ ஆங்கிலேய அரசுக்கு எதிராக நீதிக்காகப் போராடிய மணிப்பூரின் வீரமிகு பெண்களுக்கு மரியாதைசெலுத்தும் வகையில் 'நுபி லால் நாள்' அனுசரிக்கப்படுகிறது. இது ஆண்டுதோறும் டிசம்பர்.12 அன்று அனுசரிக்கப்படுகிறது.

---

**4.** **ஒளி–உணர்திறன் மருந்தைப் பயன்படுத்துவதை உள்ளடக்கிய சிகிச்சையின் பெயர் என்ன?**



**அ) போட்டோடைனமிக் சிகிச்சை ☑**

ஆ) ஒளிமின்னழுத்த சிகிச்சை

இ) ஒளிக்கதிர் சிகிச்சை

ஈ) ஒளியியல்

✓ போட்டோடைனமிக் சிகிச்சையானது ஒளி–உணர்திறன் மருந்தைப் பயன்படுத்துவதை உள்ளடக்கியது; இது ஒளி மூலத்தால் செயல்படுத்தப்படுகிறது. இச்சிகிச்சையானது சில புற்றுநோய்களுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுகிறது. இச்சிகிச்சையின் காரணமாக பக்கவிளைவுகள் உண்டாவதாக நோயாளிகள் புகாரளிக்கின்றனர்.

✓ பலர் இதன் காரணமாக இரவில் சிறந்த பார்வைத் திறனும் இருளில் அசாதாரண வடிவங்கள் தெரிவதாகவும் கூறுகின்றனர். விழித்திரையில் காணப்படும் ஒளியுணர் திறன் புரதமான ரோடப்சின், இப்புற்றுநோய் சிகிச்சையில் பயன்படுத்தப்படும் ஒளிச்சேர்க்கையான குளோரின் e6 உடன் தொடர்புகொள்வதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

---

**5.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற செய்ன் ஆறு பாயும் நாடு எது?**



அ) ரஷ்யா

**ஆ) பிரான்ஸ் ☑**


இ) ஆஸ்திரேலியா

ஈ) சீனா

✓ செய்ன் என்பது பிரான்சின் வடபகுதியில் 777 கிமீட்டர் நீளம் பாயும் ஓர் ஆறாகும். பாரிஸ் ஒலிம்பிக்கின் தொடக்க விழா, 2024 ஜூலை 26 அன்று செய்ன் ஆற்றங்கரையில் நடைபெறும். 200'க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் அதிகாரிகள் பாரிஸில் உள்ள Pont d'Austerlitz மற்றும் Pont d'Iena பாலங்களுக்கு இடையில் கிட்டத்தட்ட 6 கிமீ பயணம் செய்வார்கள்.

---

**6.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற யூது–2 என்ற நிலவு ஆய்வூர்தியை ஏவிய நாடு எது?**



அ) ஜப்பான்

**ஆ) சீனா ☑**

இ) ஐக்கிய அரபு அமீரகம்

ஈ) இஸ்ரேல்

✓ Yutu–2 என்பது ஒரு ரோபோட்டிக் லூனார் ரோவர் ஆகும், இது கடந்த 2018'இல் நிலவுக்கு சாங்'இ–4 திட்டத்தின் ஒரு பகுதியாக ஏவப்பட்டது. சந்திரனின் மேற்பரப்பில் ஒரு விசித்திரமான, கனசதுர வடிவிலான பொருளை இந்த ஆய்வூர்தி சமீபத்தில் கண்டறிந்துள்ளது.

✓ நிலவின் தொலைவில் உள்ள வான் கர்மன் பள்ளத்தைக் கடக்கும்போது இந்த ரோவர் அப்பொருளைக் கண்டது. இப்பொருளுக்கு "மர்ம வீடு" என்று பெயரிடப்பட்டுள்ளது.

---

**7.** **நிலையான வானூர்தி எரிபொருளை முதன்முதலாக பயன்படுத்தவுள்ள வானூர்தி நிறுவனம் எது?**

**அ) பிரிட்டிஷ் ஏர்வேஸ் ☑** ஆ) ஏர் இந்தியா

இ) குவாண்டாஸ் ஈ) ஏர் எமிரேட்ஸ்

- ✓ பிலிப்ஸ் 66 லிட் உடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகு, 'பிரிட்டிஷ் ஏர்வேஸ்' இங்கிலாந்தில் வணிக ரீதியாக தயாரிக்கப்பட்ட நிலையான வானூர்தி எரிபொருளைப் (Sustainable Aviation Fuel) பயன்படுத்தும் முதல் விமான நிறுவனமாக மாறும்.
- ✓ நிலையான வானூர்தி எரிபொருள் என்பது குறைந்த கார்பன் கொண்ட எரிபொருளாகும்; இது கழிவு தாவர எண்ணெய்கள், கொழுப்புகள் மற்றும் கிரீஸ்கள் போன்ற புதுப்பிக்கத்தக்க தீவனங்களிலிருந்து உற்பத்தி செய்யப்ப –டுகின்றது.

---

**8. விண்ணறிவியலைப் பொறுத்தவரை, 'லியோனார்ட்' என்றால் என்ன?**

அ) சிறுகோள்

**ஆ) வால் நட்சத்திரம் ☑**

இ) புறக்கோள்

ஈ) செயற்கைக்கோள்



- ✓ வட விண்ணில் ஒரு பிரகாசமான வால் நட்சத்திரம் இந்த ஆண்டு நவம்பர் மாதம் காணப்பட்டது. இது வால்மீன் சி/2021 ஏ1, 'லியோனார்ட்' என்றும் அழைக்கப்படுகிறது. இவ்வால் நட்சத்திரம் முதன்முதலில் 2021 ஜனவரியில் வியாழனைச் சுற்றி கண்டுபிடிக்கப்பட்டது.
- ✓ இந்த வால்மீன் 'வேல் கேலக்ஸி' என்றும் அழைக்கப்படும் NGC 4631'இன் மையத்தில் பச்சை நிற கோமாவுடன் காணப்பட்டது. 'லியோனார்ட்' வால் நட்சத்திரம் டிசம்பர் மாதத்தில் பிரகாசமாக வளரும்.

---

**9. கொடி நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ) டிசம்பர் 7 ☑**

ஆ) டிசம்பர் 8

இ) டிசம்பர் 10

ஈ) டிசம்பர் 15




- ✓ ஆண்டுதோறும் டிசம்பர்.7ஆம் தேதி அன்று 'கொடி நாள்' அனுசரிக்கப்படுகிறது. இந்த நாள் தியாகிகள் மற்றும் இந்த நாட்டிற்கு சேவை செய்யும் துணிச்சலான வீரர்களை கௌரவிக்கும் ஒரு நாளாகும். இது இந்தியாவின் 'கொடி நாள்' என்றும் அழைக்கப்படுகிறது மற்றும் இந்திய இராணுவத்தின் நலனுக்காக இந்திய குடிகளிடமிருந்து நிதி திரட்டுவதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- ✓ இந்தியா, 1949 ஆகஸ்ட் முதல் ஒவ்வோர் ஆண்டும் இந்த நாளைக் கொண்டாடுகிறது.

---

**10. பல நாடுகளின் பேரிடர் மேலாண்மை பயிற்சியான 'PANEX–21'ஐ நடத்தவுள்ள நாடு எது?**

அ) அமெரிக்கா

**ஆ) இந்தியா ☑**

இ) ஜப்பான்

ஈ) சீனா



- ✓ இந்திய இராணுவம் 'PANEX–21' எனவழைக்கப்படும் பல நாடுகளின் பேரிடர் மேலாண்மை பயிற்சியை ஏற்பாடு செய்கிறது. இப்பயிற்சி BIMSTEC நாடுகளான வங்காள தேசம், பூட்டான், நேபாளம், இலங்கை, மியான்மர், தாய்லாந்து மற்றும் இந்தியாவை உள்ளடக்கும். COVID–19 தொற்றுநோயின் பின்னணியில் நிவாரணத்தில் சிறப்பு கவனஞ்செலுத்தி, PANEX–21 பயிற்சி டிச.20–22 வரை புனேவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பெண்ணின் திருமண வயதை 21 ஆக உயர்த்தும் பரிந்துரை: மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

பெண்ணின் திருமண வயதை 18ல் இருந்து 21 ஆக உயர்த்தும் யோசனைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

முன்னதாக கடந்த சுதந்திர தின உரையின் போது பிரதமர் நரேந்திர மோடி, பெண்ணின் திருமண வயதை 21 ஆக உயர்த்துவது குறித்து பேசினார்.

அவர் பேசுகையில், இந்த அரசாங்கம் எப்போது தேசத்தின் மகள்கள், சகோதரிகளின் உடல்நலனில் அக்கறை கொண்டுள்ளது. ஊட்டச்சத்துக் குறைபாட்டில் இருந்து பெண்களைக் காக்க, அவர்கள் சரியான வயதில் திருமணம் செய்து கொள்வதை உறுதி செய்வது அவசியம். இப்போது நாட்டில் ஆணின் திருமண வயது 21 ஆகவும், பெண்ணின் திருமண வயது 18 ஆகவும் உள்ளது. அரசாங்கம், குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம் மற்றும் இந்து திருமணச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. அவ்வாறு திருத்தம் மேற்கொண்டு பெண்ணின் திருமண வயது 21 ஆக உயர்த்தப்படும் என்று கூறியிருந்தார்.

முன்னதாக, பெண்ணின் திருமண வயதை அதிகரிக்க நிதி ஆயோக் செயற்குழுவை அமைத்திருந்தது. அதற்கு ஜெயா ஜேட்லி தலைமை வகிக்கிறார். நிதி ஆயோக் நிபுணர் மருத்துவர் வி.கே.பால், சுகாதார அமைச்சகம், மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டு அமைச்சகம் ஆகியனவற்றின் உறுப்பினர்கள் இந்த செயற்குழுவில் இடம்பெற்றிருந்தனர். அந்தக் குழுவின் பரிந்துரைகளின்படியே பிரதமரும் பெண்ணின் திருமண வயதினை உயர்த்துவது தொடர்பாக உறுதியளித்திருந்தார். இந்நிலையில், பெண்ணின் திருமண வயதை 18ல் இருந்து 21 ஆக உயர்த்தும் யோசனைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இனி இது நாடாளுமன்றத்தில் சட்ட மசோதாவாக தாக்கல் செய்யப்பட்டு சட்ட வடிவம் பெறும்.

இதற்கான பரிந்துரையை டிசம்பர் தொடக்கத்தில் செயற்குழு சமர்ப்பித்ததாகத் தெரிகிறது. அதில், பெண்ணின் திருமண வயதை அதிகரிப்பதால் அவளின் பொருளாதார, சமூக, ஆரோக்கிய மேம்பாடு உறுதி செய்யப்படும் அது குடும்பம், சமூகம், குழந்தைகள் மீது நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

---

**2. இந்தியா – பாகிஸ்தான் போரின் பொன்விழா கொண்டாட்டம்**

வெற்றி தினத்தின் பொன்விழாவை முன்னிட்டு சென்னையில் உள்ள போர் வீரர்கள் நினைவுச் சின்னத்தில் முதல்வர் மு க ஸ்டாலின் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

பாகிஸ்தானுடன் கடந்த 1971–ம் ஆண்டு நடந்த போரில் இந்தியா வெற்றி பெற்றது. இந்த போரில் 93 ஆயிரம் பாகிஸ்தான் வீரர்கள் இந்தியாவிடம் சரணடைந்தனர். இப்போரின் விளைவாக வங்கதேசம் விடுதலை அடைந்தது. இதையடுத்து, ஆண்டுதோறும் டிச.16–ம்தேதி வெற்றி தினமாக கொண்டாடப் பட்டு வருகிறது.

போரில் இந்தியா வெற்றி பெற்று 50 ஆண்டுகள் ஆனதை முன்னிட்டு, வெற்றி தினத்தின் பொன் விழா கொண்டாடப்படுகிறது.

---

**3. அகில இந்திய மேயர்கள் மாநாடு – பிரதமர் மோடி இன்று தொடங்கி வைக்கிறார்**

நகர்ப்புறத்தில் உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் குறைப்பாட்டுப் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண மத்திய அரசு பலவகையான திட்டங்களைத் தொடங்கியுள்ளது. இதற்காக சமீப காலங்களில் பல்வேறு புதிய முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

இந்த முயற்சிகளுக்கு உத்தரப்பிரதேச மாநிலத்தில் சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. குறிப்பாக கடந்த 5 ஆண்டுகளில் உத்தரப்பிரதேச மாநிலம் நகர்ப்புற உள்கட்டமைப்பில் வெகுவான முன்னேற்றம் அடைந்துள்ளது.

இந்த நிலையில் உத்தரப்பிரதேசம், வாரணாசியில் நடைபெறும் அகில இந்திய மேயர்கள் மாநாட்டை பிரதமர் மோடி காணொலி வாயிலாக இன்று தொடங்கி வைக்கிறார். மேலும் இந்த மாநாட்டில் "புதிய நகர்ப்புற இந்தியா " என்ற மையப்பொருளில் பிரதமர் மோடி உரையாற்ற உள்ளார்.

நகர்ப்புற வளர்ச்சியில் மத்திய அரசு மற்றும் உத்தரப்பிரதேச அரசின் முக்கிய சாதனைகளை எடுத்துக்காட்டும் கண்காட்சி ஒன்றுக்கும் டிசம்பர் 17 முதல் 19 வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

**4. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.1,895 கோடி செலவு: மத்திய அரசு**

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.1,894.85 கோடி செலவிடப்பட்டுள்ளதாக மத்திய அரசு வியாழக்கிழமை தெரிவித்தது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தூய்மை இந்தியா திட்டம் குறித்து பரவலான விழிப்புணா்வை ஏற்படுத்தி தகவல், கல்வி மற்றும் தொலைத்தொடா்பு (ஐஇசி) வியூகம் மூலம் விரும்பும் இலக்கை அடைய வியூகம் வகுக்கப்பட்டது. இந்த ஐஇசி வியூகத்துக்காக 2014–2015 முதல் 2021–22–ஆம் நிதியாண்டு வரையில் ரூ.1,894.85 கோடி செலவிடப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தூய்மை இந்தியா திட்டத்தை மத்திய அரசு கடந்த 2014–ஆம் ஆண்டு அக்டோபா் 2–ஆம் தேதி தொடக்கி வைத்தது. 2019 அக்டோபா் 2–க்குள் அனைத்து கிராமங்களிலும் கழிப்பறை வசதியை ஏற்படுத்தி தருவதன் மூலம் திறந்த வெளியில் அசுத்தம் இல்லாத நாடாக உருவெடுக்கச் செய்வதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

---

**5.புதுச்சேரியில் சர்வதேச ஆவணப்பட, குறும்பட திருவிழா**

புதுச்சேரியில் சர்வதேச ஆவணப்படம் மற்றும் குறும்பட திருவிழா இன்று தொடங்கி 3 நாட்கள் நடக்கிறது. கடந்த 10 ஆண்டுகளாக புதுச்சேரியில் முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் மத்திய பல்கலைக்கழகத்துடன் இணைந்து சர்வதேச ஆவணப்பட, குறும்பட திருவிழாவை நடத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக புதுச்சேரி திரை இயக்கம், அலையன்ஸ் பிரான்சிஸ், மத்திய திரைப்பட பிரிவு, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் இணைந்து இந்திய திரையுலக மேதை சத்யஜித் ரே நூற்றாண்டு திருவிழாவை நடத்த திட்டமிட்டுள்ளது.

இத்திருவிழா இன்று (17ம் தேதி) தொடங்கி 19ம் தேதி வரை 3 நாட்கள் அலையன்ஸ் பிரான்சிஸ் திரையரங்கில் நடக்கிறது. இத்திருவிழாவில் சத்யஜித் ரே உருவாக்கிய உலகளவில் இந்திய சினிமாவுக்கு பெருமை சேர்த்து, பல விருதுகள் பெற்ற 9 திரைப்படங்களும், ஷியாம் பெனகல் உருவாக்கிய சத்யஜித் ரே ஆவணப்படமும் திரையிடப்பட உள்ளது. தொடக்க நிகழ்ச்சி இன்று மாலை 5 மணிக்கு நடக்கிறது. சத்யஜித் ரேயின் முதல்படமான உலகளவில் அனைத்து திரைப்பட விழாக்களிலும் திரையிடப்பட்ட 'பதேர் பாஞ்சாலி' திரையிடப்படுகிறது. பொதுமக்களுக்கு அனுமதி இலவசம்.

---

**6. 81 நிமிடத்தில் உருவான திரைப்படம்**

கே பாக்கியராஜ் நடிப்பில் 81 நிமிடம் தொடர்ச்சியாக படப்பிடிப்பு நடத்தி திரைப்படம் எடுக்கப்பட்டுள்ளது.

81 நிமிட படப்பிடிப்பு

தமிழ் திரையுலகில் புதிய இயக்குனரான சிவ மாதவ் இயக்கத்தில் இயக்குநரும், நடிகருமான கே பாக்யராஜ் கதாநாயகனாக நடித்துள்ள திரைப்படம் '3.6.9'. இந்த படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் பிளாக் பாண்டி, அஜய் கண்ணன், சுகைல், சத்தி மகேந்திரா மற்றும் வில்லன் கதாபாத்திரத்தில் படத்தின் தயாரிப்பாளர் பி ஜி எஸ் நடித்துள்ளார். மாரிஸ்வரன் ஒளிப்பதிவு செய்துள்ள இந்த படத்துக்கு கார்த்திக் ஹர்ஷா இசை அமைத்துள்ளனர்.

உலக சினிமா வரலாற்றில் 81 நிமிடங்கள் தொடர்ச்சியாக படப்பிடிப்பு நடத்தி முடிக்கப்பட்டு உள்ளது. இந்த படத்தின் படிப்பிடிப்பு புதுச்சேரி பிள்ளையார் குப்பத்தில் உள்ள புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் நேற்று நடந்தது. காலை 11.40 மணிக்கு தொடங்கிய படப்பிடிப்பு மதியம் 1.01 மணிக்கு முடிந்தது. ஒரே நேரத்தில், ஒரு களத்தில் 24 கேமராக்கள், 150–க்கும் மேற்பட்ட நடிகர், நடிகைகள், 450 பணியாளர்களை கொண்டு படமாக்கப்பட்டது.

---

**1. 'உலக சமத்துவமின்மை அறிக்கை – 2022'இன்படி, வயதுவந்த இந்தியரின் சராசரி தேசியவருமானம் என்ன?**



அ) ₹1.04 லட்சம்

**ஆ) ₹2.04 லட்சம் ☑**

இ) ₹4.04 லட்சம்

ஈ) ₹6.04 லட்சம்

✓ அண்மையில் வெளியிடப்பட்ட 'உலக சமத்துவமின்மை அறிக்கை – 2022', லூகாஸ் சான்சலால் எழுதப்பட்டு புகழ் பெற்ற பொருளாதார நிபுணர்களான தாமஸ் பிகெட்டி, இம்மானுவேல் சாஸ் மற்றும் கேப்ரியல் ஜூக்மான் ஆகியோரால் தொகுக்கப்பட்டுள்ளது.

✓ இவ்வறிக்கையின்படி, அதிகரித்துவரும் வறுமை மற்றும் வசதியான உயரடுக்கினரைக்கொண்ட உலகின் மிகவும் சமத்துவமற்ற நாடுகளுள் ஒன்றாக இந்தியா உள்ளது. இந்தியாவில் உள்ள முதல் 10% மற்றும் முதல் 1% மக்கள் மொத்த தேசிய வருமானத்தில் முறையே 57% மற்றும் 22 சதவீதத்தை கொண்டுள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.

---

**2. அண்மையில் எட்டாவது இந்தியப் பெருங்கடல் பேச்சுவார்த்தையை நடத்திய நாடு எது?**



அ) இலங்கை

**ஆ) இந்தியா ☑**

இ) மியான்மர்

ஈ) பிலிப்பைன்ஸ்

✓ இந்திய வெளியுறவு அமைச்சகம், இந்திய உலக விவகார கவுன்சில் இணைந்து எட்டாவது இந்தியப் பெருங்கடல் பேச்சுவார்த்தையை நடத்தியது. இந்த ஆண்டு பதிப்பின் கருப்பொருள் "Leveraging Digital Technologies for Health, Education, Development, and Trade in Indian Ocean Rim Association Member States" என்பதாகும்.

---

**3. கொலம்பியா ஜர்னலிசம் பள்ளியின் 2022ஆம் ஆண்டு –க்கான முன்னாள் மாணவர் விருது வென்ற இந்தியப் பத்திரிகையாளர் யார்?**



அ) N இராம்

**ஆ) மாலினி பார்த்தசாரதி ☑**

இ) ராஜா மோகன்

ஈ) சோலி ஜே. சொராப்ஜி

✓ 'தி ஹிந்து' வெளியீட்ட குழுமத்தின் தலைவரான மாலினி பார்த்தசாரதி, அமெரிக்காவின் கொலம்பியா ஜர்னலிசம் பள்ளியின் 2022ஆம் ஆண்டுக்கான முன்னாள் மாணவர் விருது வென்ற நான்கு மூத்த பத்திரிகையாளர்களுள் ஒருவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

✓ எரிக் மார்கஸ், "மேக்கிங் கே ஹிஸ்டரி" போட்காஸ்டின் நிறுவனர் மற்றும் தொகுப்பாளர், ஸ்டுவர்ட் ஸ்கீயர், அமெரிக்க யூத உலக சேவை மற்றும் தாமஸ் மேயர், புலனாய்வு பத்திரிகையாளர் ஆகியோர் பிற வெற்றியாளர் –களுள் அடங்குவர். வெண்டி லு (ஹஃப்போஸ்ட்) மற்றும் முக்தார் இப்ராஹிம் (சஹான் ஜர்னல்) ஆகியோர் கூட்டாக இணைந்து முதல் தசாப்த விருதைப் பெற்றனர்.

**4. குற்றவியல் விஷயங்களில் பரஸ்பர சட்ட உதவிக்காக எந்த நாட்டுடனான ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?**

அ) சுவிட்சர்லாந்து

**ஆ) போலந்து ☑**



இ) அமெரிக்கா

ஈ) ரஷ்யா

✓ குற்ற விஷயங்களில் பரஸ்பரம் சட்ட உதவி தொடர்பாக இந்தியா – போலந்து இடையேயான உடன்பாட்டிற்கு பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. பரஸ்பர சட்ட உதவியின்மூலம் பயங்கரவாதம் தொடர்பான குற்றங்கள் உள்ளிட்ட குற்றங்களுக்காக வழக்குத் தொடுத்தல் புலனாய்வு ஆகியவற்றில் இருநாடுகளின் திறனையும், தீவிரத் தன்மையையும் விரிவுப்படுத்துவது இதன் நோக்கமாகும்.

✓ போலந்து சம்பந்தப்பட்ட குற்றச்செயல்களைக் கையாள்வ –தில் இந்தியாவின் செயல்திறனையும் இது அதிகரிக்கும்.

---

**5. உலக வர்த்தக அமைப்பின் (WTO) குழுமம் எந்த நாடு சர்க்கரை துறையில் மானியங்களை திரும்பப்பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது?**

அ) ஆஸ்திரேலியா

**ஆ) இந்தியா ☑**

இ) அமெரிக்கா

ஈ) சீனா

✓ உலக வர்த்தக அமைப்பின் (WTO) குழு, 'உற்பத்தி உதவி, தாங்கிருப்பு மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் போக்குவரவு திட்டங்களின்'கீழ் இந்தியா தனது மானியங்களை திரும்பப்பெறுமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

✓ ஆஸ்திரேலியா, பிரேசில் மற்றும் குவாத்தமாலா ஆகியவை கடந்த 2019ஆம் ஆண்டில் WTOஇடம் சர்க்கரை துறையில் இந்தியாவின் கொள்கை நடவடிக்கைகள் குறித்து இந்தியாவுக்கு எதிராக புகார்களை எழுப்பின. வேளாண் ஒப்பந்தம் மற்றும் SCM ஒப்பந்தத்தின்கீழ் இந்தியா தனது கடமைகளுக்கு இணங்குமாறு WTO அதனிடம் கேட்டுக்கொண்டது.

---

**6. சமீப செய்திகளில் இடம்பெற்ற மனோகரி கோல்ட் டீ உடன் தொடர்புடைய மாநிலம் எது?**



அ) தமிழ்நாடு

ஆ) கேரளா

**இ) அஸ்ஸாம் ☑**

ஈ) மேற்கு வங்காளம்

✓ அஸ்ஸாம் மாநிலத்திலுள்ள அரிய வகை தேயிலையான மனோகரி கோல்டு டீ சமீபத்தில் கவுகாத்தி தேயிலை ஏல மையத்தில் கிலோ ₹1 லட்சத்துக்கு விற்கப்பட்டு வரலாறு படைத்துள்ளது. தேயிலை ஒரு கிலோ ₹75,000'க்கு ஏலம் போனபோது, 2020'ல் இத்தேயிலை வகை அதன் சொந்த சாதனையை முறியடித்தது.

- ✓ வடகிழக்கு தேயிலைச் சங்கம் இத்தகைய தேயிலை உற்பத்தியை அதிகரிக்க திட்டமிட்டு வெண் தேயிலை, பசுந்தேயிலை, மஞ்சள் தேயிலை என பல்வேறு வகையான தேயிலைகளை தயாரிக்க ஆரம்பித்துள்ளது.

---

**7. "உணவு மற்றும் உழவிற்கான உலகின் நிலம் மற்றும் நீர்வளங்களின் நிலை" என்ற அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ) IMF

**ஆ) FAO ☑**

இ) உலக வங்கி

ஈ) WEF

- ✓ உணவு மற்றும் உழவிற்கான உலகின் நிலம் மற்றும் நீர் வளங்களின் நிலை (SOLAW 2021) என்ற அறிக்கை ஐநா உணவு மற்றும் உழவு அமைப்புமூலம் வெளியிடப்பட்டது. ஐநாவின் உணவு மற்றும் உழவு (FAO) அமைப்பால் 2021 டிச.8–9 வரை, நிலம் & நீர் நாட்கள் நடத்தப்படுகின்றன. "Systems at breaking point" என்பது 'SOLAW–2021'இன் கருப்பொருளாகும்.

---

**8. "டிராக்கிங் யுனிவர்சல் கவரேஜ் – 2021 உலகளாவிய கண்காணிப்பு" என்ற அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ) WTO

**ஆ) WHO ☑**

இ) FAO

ஈ) WEF

- ✓ உலக சுகாதார நிறுவனமானது அண்மையில் "டிராக்கிங் யுனிவர்சல் கவரேஜ் – 2021 உலகளாவிய கண்காணிப்பு" என்ற அறிக்கையை வெளியிட்டது. யுனிவர்சல் ஹெல்த் கவரேஜ் தினத்தை முன்னிட்டு, உலக வங்கி "உடல்நலம் 2021'இல் நிதிப்பாதுகாப்பு குறித்த உலகளாவிய கண்காணிப்பு" அறிக்கையை வெளியிட்டது.
- ✓ யுனிவர்சல் ஹெல்த் கவரேஜை நோக்கிய உலகளாவிய முன்னேற்றத்தை COVID தொற்று 20 ஆண்டுகளுக்கு நிறுத்தக்கூடும் என்று இவ்வறிக்கை காட்டுகிறது.

---

**9. பரோடா வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட 'பாப் வேல்ட் வேவ்' என்பது ஒரு ______?**

அ) உலகளாவிய பற்றட்டை



**ஆ) அணியக்கூடிய சாதனம் ☑**

இ) AI இயலி

ஈ) முதலீட்டு தளம்

- ✓ பரோடா வங்கியானது எண்ம வங்கியியல் கொடுப்பனவு –களுக்காக 'bob World Wave' என்றவொரு அணியக் கூடிய சாதனத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ✓ இது வாடிக்கையாளர்களின் Sp02, உடல் வெப்பநிலை, இதயத்துடிப்பு மற்றும் இரத்த அழுத்தம் ஆகியவற்றைக் கண்காணிக்கின்றது. அணியக்கூடிய சாதனத்துடன் கூடிய கட்டண செயல்முறையை வழங்குவதற்காக NPCI உடன் பரோடா வங்கி கூட்டு சேர்ந்துள்ளது.

---

**10. எந்த நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள், ஓமிக்ரான் திரிபைக் கண்டறிவதற்காக RT–PCR அடிப்படையிலான கருவியை உருவாக்கியுள்ளனர்?**

அ) IISc

**ஆ) IIT – தில்லி ☑**

இ) NIV

ஈ) AIIMS

- ✓ IIT தில்லியின் குசுமா உயிரியல் அறிவியல் பள்ளியின் ஆராய்ச்சியாளர்கள், SARS–CoV–2'இன் ஓமிக்ரான் (B.1.1.529.1) திரிபைக் கண்டறிவதற்காக RT–PCR அடிப்படையிலான கருவியை உருவாக்கியுள்ளனர்.
- ✓ இச்சோதனை முறை ஓமிக்ரான் திரிபில் உள்ள மற்றும் SARS–CoV–2'இல் இல்லாத ஒரு குறிப்பிட்ட திரிபுகளைக் கண்டறிவதை அடிப்படையாகக்கொண்டது. உலகளவில், ஓமிக்ரான் திரிபைக் கண்டறிவதற்கு 3 நாட்களுக்கு மேல் தேவைப்படுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழ்த்தாய் வாழ்த்து அரசின் மாநிலப் பாடல்: முதல்வர் மு க ஸ்டாலின் உத்தரவு**

தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் தமிழக அரசின் மாநிலப் பாடலாக அறிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு பிறப்பித்தார். தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படும் போது அனைவரும் எழுந்து நிற்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழ்நாட்டின் அனைத்து விழாக்களிலும் மனோன்மணீயம் சுந்தரனார் எழுதிய 'நீராரும் கடலுடுத்த' என்ற பாடல் பாடப்பட வேண்டும் என்ற கோரிக்கை 1913–ஆம் ஆண்டில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டறிக்கையில் இடம்பெற்றது. இந்தப் பாடலைத் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக 1914–ஆம் ஆண்டு முதல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழாக்களிலும் பாடி வந்துள்ளனர்.

1970–இல் அறிவிப்பு: தமிழறிஞர்கள், ஆர்வலர்கள், பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று 1970–ஆம் ஆண்டு மார்ச் 17–ஆம் தேதியன்று நடைபெற்ற அரசு விழாவில் தமிழ்த்தாய் பாடல் குறித்த அறிவிப்பை அப்போதைய முதல்வர் கருணாநிதி வெளியிட்டார். தமிழக அரசின் நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் இருக்கும் என அறிவித்தார். அதன்படி, அரசு நிகழ்ச்சிகளில் 'நீராருங் கடலுடுத்த' என்ற பாடல் பாடப்பட்டு வருகிறது.

தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பாடப்படுவது குறித்து, சில வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட வேண்டிய சூழல் காரணமாக, அதற்கான உத்தரவை தமிழ் வளர்ச்சித் துறை அண்மையில் வெளியிட்டது. அதன்படி, தமிழ்த்தாய்

வாழ்த்துப் பாடலை பயிற்சி பெற்றவா்களைக் கொண்டு நிகழ்ச்சியில் பாட வைக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதைத் தொடா்ந்து சில வழிமுறைகளைப் பின்பற்றவும் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. அதன்படி, மனோன்மணீயம் சுந்தரனாா் இயற்றிய தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல், தமிழ்நாடு அரசின் மாநிலப் பாடலாக அறிவிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் அனைத்து கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் உள்ளிட்ட பொது அமைப்புகளின் நிகழ்ச்சிகளிலும், நிகழ்வு தொடங்குவதற்கு முன்பு தமிழ்த்தாய் வாழ்த்து கட்டாயம் பாடப்பட வேண்டும். தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படும் போது அனைவரும் தவறாமல் எழுந்து நிற்க வேண்டும்.

தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பாடப்படும் போது எழுந்து நிற்பதில் இருந்து மாற்றுத் திறனாளிகளுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது. பொது நிகழ்வுகளில் தமிழ்த்தாய் வாழ்த்தை ஒலிபெருக்கிகளில் ஒலிக்கச் செய்வதைத் தவிா்த்து, பயிற்சி பெற்றவா்களால் வாய்ப்பாட்டாக பாடப்பட வேண்டும். அன்னைத் தமிழின் பெருமையை உலகறியச் செய்வதிலும்,

இளம்தலைமுறையினருக்குக் கொண்டு சோ்ப்பதிலும், பொதுமக்களும், தனியாா் அமைப்புகளும் பெரும் பங்காற்ற முடியும். தமிழ்நாட்டில் தனியாா் அமைப்புகள் நடத்தும் கலை, இலக்கிய மற்றும் பொது நிகழ்வுகளின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படுவது ஊக்குவிக்கப்படும் என்று தமிழக அரசின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**2. வாடகைத் தாய் ஒழுங்குமுறை மசோதா மக்களவையில் நிறைவேற்றம்: மேலும் 3 மசோதாக்கள் அறிமுகம்**

மக்களவையில் எதிா்க்கட்சிகளின் அமளிக்கு இடையே வாடகைத் தாய் ஒழுங்குமுறை மசோதா வெள்ளிக்கிழமை நிறைவேறியது. அத்துடன் மேலும் 3 மசோதாக்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

மக்களவை வெள்ளிக்கிழமை காலை கூடியதும், லக்கீம்பூா் கெரி வன்முறை சம்பவம் தொடா்பாக மத்திய உள்துறை இணையமைச்சா் அஜய் மிஸ்ராவை பதவிநீக்கம் செய்ய வலியுறுத்தி எதிா்க்கட்சி உறுப்பினா்கள் அமளியில் ஈடுபட்டனா். இதனால், கேள்வி நேரத்தின்போது 4 கேள்விகள் மட்டுமே விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. தொடா்ந்து எதிா்க்கட்சி உறுப்பினா்கள் அமளியில் ஈடுபட்டதால் அவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

உணவு இடைவேளைக்குப் பிறகு பாஜக உறுப்பினா் ராஜேந்திர அக்ரவால் தலைமையில் மக்களவை கூடியதும் தேசிய ஊக்க மருந்து தடுப்பு மசோதா–2021, கானுயிா் பாதுகாப்புச் சட்டத் திருத்த மசோதா–2021, பட்டயக் கணக்காளா், கம்பெனி செயலாளா் சட்டத் திருத்த மசோதா–2021 ஆகியவை தாக்கல் செய்யப்பட்டன.

அதைத் தொடா்ந்து, வாடகைத் தாய் ஒழுங்குமுறை மசோதாவை சுகாதாரத் துறை இணையமைச்சா் பாரதி பிரவீண் பவாா் அறிமுகம் செய்து வைத்தாா்.

இந்த மசோதா, ஏற்கெனவே கடந்த 2019–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5–ஆம் தேதி மக்களவையில் நிறைவேற்றப்பட்டு மாநிலங்களவைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அங்கு மசோதாவில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, கடந்த வாரம் நிறைவேற்றப்பட்டு மீண்டும் கடந்த 14–ஆம் தேதி மக்களவைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

எதிா்க்கட்சி உறுப்பினா்களின் அமளிக்கு இடையே இந்த திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடா்ந்து அவையை திங்கள்கிழமைக்கு ராஜேந்திர அக்ரவால் ஒத்திவைத்தாா்.

வாடகைத் தாய் முறையை ஒழுங்குபடுத்த அதிகாரிகளை நியமிக்க வேண்டும்; தேசிய அளவிலும் மாநில அளவிலும் வாடகைத் தாய் ஒழுங்காற்று வாரியம் அமைக்கப்பட வேண்டும்; சட்டப்படி திருமணம் செய்துகொண்டு 5 ஆண்டுகள் வாழ்ந்த இந்திய தம்பதி மட்டுமே வாடகைத் தாய் முறையில் குழந்தை பெற முடியும் என்றும் அந்த மசோதாவில் தெரிவிக்கப்பட்டது.

மாநிலங்களவை நாள் முழுவதும் ஒத்திவைப்பு: எதிா்க்கட்சி உறுப்பினா்களின் அமளியால் மாநிலங்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது. 12 எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்ட விவகாரத்தில் அரசுக்கும் எதிா்க்கட்சிகளுக்கும் இடையே உடன்பாடு ஏற்பட வேண்டும் என்று மாநிலங்களவைத் தலைவா் வெங்கையா நாயுடு கூறினாா்.

கடந்த மழைக்கால கூட்டத்தொடரின் கடைசி நாளன்று எதிா்க்கட்சிகளைச் சோ்ந்த உறுப்பினா்கள் 12 போ் ஒழுங்கீனமாக நடந்துகொண்டதாக, நடப்பு நாடாளுமன்றக் கூட்டத் தொடா் முழுவதும் பணியிடைநீக்கம் செய்யப்பட்டனா்.

அவா்கள் மீதான நடவடிக்கையைத் திரும்பப் பெற வேண்டும் என்று குளிா்கால கூட்டத் தொடரின் முதல் நாளில் இருந்து எதிா்க்கட்சி உறுப்பினா்கள் வலியுறுத்தி வருகின்றனா். இதனால் கடந்த சில நாள்களாக மாநிலங்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்படுகிறது.

மாநிலங்களவை வெள்ளிக்கிழமை காலை கூடியதும் அவைத் தலைவா் வெங்கையா நாயுடு உறுப்பினா்கள் மத்தியில் பேசினாா். அவா், 'மாநிலங்களவை பாஜக தலைவா் பியூஷ் கோயல், எதிா்க்கட்சிகளைச் சோ்ந்த சில மூத்த உறுப்பினா்களைச் சந்தித்துப் பேசினேன். அவை அலுவல்கள் சுமுகமாக நடைபெறுவதற்கு உறுப்பினா்களுக்கு இடையே உடன்பாடு ஏற்பட வேண்டும் என்று அவா்களிடம் வலியுறுத்தினேன். இதே கோரிக்கையை உங்கள் ஒவ்வொருவரிடமும் முன்வைக்கிறேன். மாநிலங்களவை திங்கள்கிழமை வரை ஒத்திவைக்கப்படுகிறது' என்றாா்.

---

**3. பிரதமர் மோடிக்கு பூடான் அரசின் மிக உயர்ந்த விருது**

பிரதமர் மோடிக்கு பூடான் அரசின் குடிமகனுக்கான மிக உயரிய விருதான நடாக் பெல் கி கோர்லோ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

பூடான் நாட்டின் தேசிய நாளான இன்று பிரதமர் மோடிக்கு இந்த விருதை பூடான் பிரதமர் லோடே ஷெரிங் அறிவித்தார்.

---

### 4. பளுதூக்குதல்: பூர்ணிமாவுக்கு 'தங்கம்'

காமன்வெல்த் பளுதூக்குதலில் தங்கம் வென்றார் பூர்ணிமா.

உஸ்பெகிஸ்தானில் 'சீனியர்' காமன்வெல்த் சாம்பியன்ஷிப், உலக பளுதூக்குதல் தொடர்கள் ஒரே நேரத்தில் நடக்கின்றன. இதன் பெண்கள் +87 கிலோ பிரிவில் இந்தியா சார்பில் பூர்ணிமா களமிறங்கினார். 'ஸ்னாட்ச்' பிரிவில் 102 கிலோ தூக்கிய பூர்ணிமா, 'கிளீன் அண்டு ஜெர்க்' பிரிவில் 127 கிலோ தூக்கினார். ஒட்டுமொத்தமாக 229 கிலோ தூக்கி, முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் தட்டிச் சென்றார்.

இதையடுத்து 'ஸ்னாட்ச்' பிரிவில் இரண்டு, 'கிளீன் அண்டு ஜெர்க்' பிரிவில் தலா 3 என ஒட்டுமொத்தமாக 8 தேசிய சாதனை படைத்தார் பூர்ணிமா. தவிர இந்திய வீரர்கள் ஜெரீமி லால்ரின்னுங்கா, அசிந்தா சியுலி, அஜய் சிங்கிற்கு அடுத்து 2022, பர்மிங்ஹாம் காமன்வெல்த் விளையாட்டுக்கு தகுதி பெற்ற நான்காவது இந்தியர் ஆனார்.

இதே பிரிவில் பங்கேற்ற மற்றொரு இந்திய வீராங்கனை அனுராதா பவுன்ராஜ், 195 கிலோ தூக்கி வெண்கலப்பதக்கம் பெற்றார். ஆண்கள் 109 கிலோ பிரிவில் இந்தியாவின் லவ்பிரீத் சிங், 348 கிலோ தூக்கி வெள்ளிப்பதக்கம் கைப்பற்றினார்.

---

### 5. 'இன்னுயிர் காப்போம்' திட்டம் தொடக்கம்

தமிழகத்தில் சாலை விபத்துகளில் சிக்கி உயிரிழப்புகள் ஏற்படுவதைத் தடுக்க 'இன்னுயிர் காப்போம்; நம்மை காக்கும் 48' என்ற புதிய மருத்துவ அவசர உதவி திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்த உள்ளது.

விபத்து ஏற்படும் சமயங்களில் உயிரிழப்பைத் தடுக்க 'இன்னுயிர் காப்போம்; நம்மை காக்கும் 48' என்ற புதிய திட்டத்தை, நாளை மேல்மருவத்தூரில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்க உள்ளார்.

இதுகுறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்திருப்பதாவது: தமிழகத்தில் நடைபெறும் சாலை விபத்துகளில் அதிகப்படியான உயிரிழப்புகள் ஏற்படக் காரணம், அவர்களை உடனடியாக மருத்துவமனைகளில் சேர்த்து உரிய சிகிச்சை அளிக்காததுதான். இதைத் தடுக்கவும், விபத்தில் சிக்குவோரின் சிகிச்சைக்காக உதவும் வகையிலும் 'இன்னுயிர் காப்போம்; நம்மை காக்கும் 48' என்ற புதிய திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்த உள்ளார்.

இதற்காக தமிழகம் முழுதும் 610 மருத்துவமனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் தமிழ்நாட்டில் எந்தப் பகுதியில் விபத்து நடந்தாலும் விபத்து நடந்த பகுதியில் விபத்துக்கு உள்ளானவரை மருத்துவமனையில் சேர்க்கும் நபருக்கு ரூ.5 ஆயிரம் ஊக்கத் தொகையும், விபத்தில் சிக்கியவருக்கு ஒரு லட்சம் ரூபாய் மதிப்பில் சிகிச்சையும் அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய திட்டத்தை மேல்மருவத்தூரில் உள்ள மருத்துவக் கல்லூரி மைதானத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் நாளை(டிச.18) தொடங்கி வைத்துப் பேசுகிறார் என்று தெரிவித்துள்ளார்.

---

### 6. உ.பி.யில் 594 கி.மீ. கங்கை விரைவுப் பாதை திட்டம்: பிரதமா் மோடி அடிக்கல் நாட்டினாா்

உத்தர பிரதேச மாநிலம், ஷாஜஹான்பூரில் 594 கி.மீ. தொலைவு கொண்ட கங்கை விரைவு நெடுஞ்சாலைத் திட்டத்துக்கு பிரதமா் நரேந்திர மோடி சனிக்கிழமை அடிக்கல் நாட்டினாா்.

உத்தர பிரதேசத்தில் அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் சட்டப்பேரவைத் தோ்தல் நடைபெறவுள்ளது. முதல்வா் யோகி ஆதித்யநாத் தலைமையில் தோ்தலைச் சந்திக்கப்போவதாக பாஜக ஏற்கெனவே அறிவித்துள்ளது.

இந்நிலையில், ஷாஜஹான்பூரில் 594 கி.மீ. தொலைவு கொண்ட கங்கை விரைவுப் பாதைக்கு பிரதமா் நரேந்திர மோடி சனிக்கிழமை அடிக்கல் நாட்டினாா். மாநிலத்தின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளை இணைக்கும் வகையில் ரூ.36,230 கோடி செலவில் இந்தப் பாதை அமைக்கப்படவுள்ளது. இந்தப் பாதைக்கு அடிக்கல் நாட்டிய பிறகு பிரதமா் மோடி பேசியதாவது:

உத்தர பிரதேசத்தில் யோகி ஆதித்யநாத் தலைமையிலான அரசு ஆட்சியமைப்பதற்கு முன்பிருந்த சட்டம்-ஒழுங்கு சூழ்நிலை குறித்து நன்கு அறிவீா்கள். முன்பெல்லாம் பொழுது சாய்ந்ததும் மக்களைத் துன்புறுத்துவதற்காக, சிலா் நாட்டுத் துப்பாக்கிகளுடன் வீதிகளில் நடமாடத் தொடங்கிவிடுவா்கள். மாநிலத்தில் யோகி ஆதித்யநாத் ஆட்சி அமைந்ததும் அந்தத் துப்பாக்கி கலாசாரம் முடிவுக்கு வந்துவிட்டது.

மாஃபியா கும்பல்களுக்கு எதிராக யோகி ஆதித்யநாத் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துள்ளாா். மாஃபியா கும்பல்கள் சட்டவிரோதமாகக் கட்டியிருந்த கட்டடங்களை இயந்திரங்களைக் கொண்டு இடித்துத் தள்ளினாா். அவருடைய இந்த நடவடிக்கை, மாஃபியா கும்பல்களை ஆதரிப்பவா்களுக்கு வலியைக் கொடுத்துள்ளது. உத்தர பிரதேசமும் யோகி ஆதித்யநாத்தும் சோ்ந்தால் நல்லது நடக்கிறது.

நாட்டின் பாரம்பரியத்தைக் காப்பதிலும், வளா்ச்சிப் பணிகளை மேற்கொள்வதிலும் இங்குள்ள சில அரசியல் கட்சிகளுக்கு சிக்கல் உள்ளது. ஏனெனில் அவா்கள் வாக்கு வங்கியைப் பற்றிக் கவலைப்படுகிறாா்கள். அவா்கள் மீது சாமானியா்களும் ஏழைகளும் வைத்திருந்த நம்பிக்கை நாளுக்குநாள் குறைந்து வருகிறது. அவா்கள் கங்கையைச் சுத்தம் செய்வதில்லை.

இவா்கள்தான் பயங்கரவாதிகள் மீது ராணுவம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்புகிறாா்கள்; இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட கரோனா தடுப்பூசியை சந்தேகிக்கிறாா்கள்.

5 ஆண்டுகளுக்கு முன்பு, மாநிலத்தின் சில பகுதிகளைத் தவிர மற்ற பகுதிகளில் மின்சாரத்தைக் காண முடியாது. ஆனால், மாநிலத்தில் பாஜக ஆட்சி அமைந்த பிறகு 80 லட்சம் வீடுகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி மாநிலத்துக்கு முன்பைவிட கூடுதலாக மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. 30 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள தகுதியானவா்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டித்தரப்படும்.

புதிதாக அமைக்கப்படும் கங்கை விரைவுப் பாதையால் தொழில் வளா்ச்சி, வா்த்தகம், விவசாயம், சுற்றுலா உள்ளிட்ட பல்வேறு துறைகள் ஊக்கம் பெறும். சமூகத்தில் பின்தங்கியிருப்பவா்களை வலுப்படுத்தி, அவா்களுக்கு அரசின் சலுகைகள் கிடைக்கச் செய்வதற்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது என்றாா் பிரதமா் மோடி.

---

**7. வரலாற்று வெள்ளி வென்றார் ஸ்ரீகாந்த்: உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் ஆடவர் பிரிவில் உச்சம் தொட்ட முதல் இந்தியர்!**

ஸ்பெயின் நாட்டின் ஹூயெல்வா நகரில் உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவர் பிரிவுப் போட்டியில் இந்திய வீரர் ஸ்ரீகாந்த் கிடாம்பி வெள்ளி வென்றார்.

உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் ஆடவர் பிரிவு போட்டியின் இறுதிக்குள் நுழைந்த முதல் இந்திய வீரர் என்ற மகத்தான சரித்திரத்தைப் படைத்த ஸ்ரீகாந்த் கிடாம்பி போராடி தங்கப் பதக்கத்தைப் போராடி பறிகொடுத்தார்.

இருப்பினும், உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் ஆடவர் பிரிவு போட்டியில் வெள்ளி வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையுடன் அவர் தேசம் திரும்ப இருக்கிறார்.

45 நிமிடங்கள் நடந்த இறுதிப் போட்டி: உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் இறுதிக்கு நுழைந்த ஸ்ரீகாந்த், களத்தில் சிங்கப்பூர் வீரர் லோ கியான் யூவை எதிர்கொண்டார். சுமார் 45 நிமிடங்கள் இந்தப் போட்டி நீடித்தது. ஆரம்பம் முதலே லோ கியான் யூ ஆதிக்கம் செலுத்த முதல் செட் கிடாம்பிக்கு மிகவும் சவாலானதாக அமைந்தது. இரண்டாவது சுற்றில் சற்றே தாக்குப்பிடித்த கிடாம்பி போராடித் தோற்றார்.

இறுதியில் 21–15, 22–20 என்ற நேர் செட் கணக்கில் போராடித் தோற்றார் ஸ்ரீகாந்த் கிடாம்பி.

சக வீரரை வீழ்த்திய வேகம்: முன்னதாக, ஆடவர் ஒற்றையர் அரையிறுதிப் போட்டியில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த், சக நாட்டவரான லக்ஷ்யா சென்னுடன் மோதினார். அந்தப் போட்டியில் இந்திய வீரர் ஸ்ரீகாந்த் கிடாம்பி வரலாற்றுச் சாதனை படைத்தார். சர்வதேச தரவரிசைப் பட்டியலில் 12–வது இடத்தில் உள்ள கிடாம்பி சக வீரரான லக்ஷ்யா சென்னை 17–21, 21–14, 21–17 என்ற செட் கணக்கில் வீழ்த்தினர். 1 மணி நேரம் 9 நிமிடங்களில் அவர் வெற்றிக் கனியைப் பறித்துவிட்டார்.

இதன்மூலம், உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்குள் நுழைந்த முதல் இந்திய வீரர் என்ற சரித்திர பெருமையைப் பெற்றார் ஸ்ரீகாந்த். இப்போது உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் வெள்ளி வென்று சரித்தரித்தில் இன்னொரு மைல்கல்லையும் அவர் தொட்டுவிட்டார்.

அவருக்கு வாழ்த்துகள் குவிந்து வருகின்றன.

---

**8. பிலிப்பின்ஸ் : கடும் சூறாவளியால் 208 பேர் பலி**

பிலிப்பின்ஸில் ஏற்பட்ட பலத்த சூறாவளிக்கு பலியானவா்களின் எண்ணிக்கை 208–ஆக அதிகரித்துள்ளது.

பிலிப்பின்ஸ் நாட்டில் கடந்த வியாழக்கிழமை உருவான ராய் சூறாவளி மற்றும் கனமழை காரணமாக நேற்று(டிச.19) 146 பேர் பலியாகியிருந்த நிலையில் தற்போது பலியானவர்களின் எண்ணிக்கை 208 ஆக அதிகரித்திருப்பதாக அந்நாட்டு சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடும் சூறாவளியின் தாக்கத்தால் 239 பேர் காயமடைந்திருக்கிறார்கள். 52 பேர் மாயமாகியிருக்கிறார்கள். மேலும், 3 லட்சத்துக்கும் அதிகமான வீடுகள் சேதமாகியிருப்பதாகவும் பலர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் மீட்புப்படையினர் தெரிவித்தனர்.

கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கும் ராய் சூறாவளி இந்த ஆண்டில் பதிவான மோசமான சூறாவளியாக மாறியிருக்கிறது.

---

**1.** **இந்தியா சமீபத்தில் அறிமுகப்படுத்திய சூப்பர்சோனிக் ஏவுகணை அடிப்படையிலான டார்பிடோ அமைப்பை உருவாக்கியுள்ள நிறுவனம் எது?**

**அ) DRDO ☑**

ஆ) ISRO

இ) NSIL

ஈ) BHEL

✓ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) உருவாக்கிய சூப்பர்சோனிக் ஏவுகணை அடிப்படையிலா–ன டார்பிடோ அமைப்பை இந்தியா அறிமுகப்படுத்தியது. இந்த அடுத்த தலைமுறை ஏவுகணை அடிப்படையிலான ஸ்டாண்ட்ஆஃப் டார்பிடோ டெலிவரி சிஸ்டம், ஒடிஸாவில் உள்ள வீலர் தீவிலிருந்து ஏவப்பட்டது.

**2.** **இணையஞ்சார்ந்த தளமான 'VIHANGAM' என்பதுடன் தொடர்புடைய துறை எது?**

**அ) சுரங்கப் பணி ☑**

ஆ) கலால் வரி

இ) ஜிஎஸ்டி வசூல்

ஈ) செமிகண்டக்டர் உற்பத்தி



✓ மகாநதி நிலக்கரி வயல்கள் நிறுவனத்தில் "Remotely Piloted Aircraft System" உடன் ஒருங்கிணைக்கப்பட்ட 'VIHANGAM' என்ற இணையதளம் திறக்கப்பட்டுள்ளது.

✓ இந்த அமைப்பு சுரங்கப்பணிகளின் வான்வழி காணொளி–களை சுரங்கங்களிலிருந்து நேரலையாக இந்தத் தளத்திற்கு பரிமாறும். அதனை 'VIHANGAM' தளம்மூலம் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் அணுகலாம்.

**3.** The Indus Entrepreneurs (TiE) **வழங்கும் 'ஆண்டின் சிறந்த தொழில்முனைவோர் விருதை' வென்றவர் யார்?**

அ) ரத்தன் டாடா

**ஆ) குமார் மங்கலம் பிர்லா ☑**

இ) உதய் கோடக்

ஈ) ஆதி கோத்ரெஜ்



✓ சிந்து தொழில்முனைவோர் (TiE) ஆதித்ய பிர்லா குழுமத் தலைவர் குமார் மங்கலம் பிர்லாவை, COVID தொற்று நோய்களின்போது தலைமைதாங்கியதற்காக, 'வணிக மாற்றத்தில் ஆண்டின் உலகளாவிய தொழில்முனைவோராக' அறிவித்துள்ளது. இவ்விருதைப் பெறும் முதல் இந்திய தொழிலதிபர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு.

✓ எலோன் மஸ்க் (ஆண்டின் உலகளாவிய தொழில்முனைவோர்–புலம்பெயர் தொழில்முனைவோர்), ஜெப் பெசோஸ் (ஆண்டின் உலகளாவிய தொழில்முனைவோர் – முதல் தலைமுறை) மற்றும் சத்யா நாதெல்லா (ஆண்டின் உலகளாவிய தொழில்முனைவோர் – தொழில்முனை–வோர் CEO) ஆகியோர் பிற விருதாளர்களாவர்.

**4.** COVID–19 **நெருக்கடியைக் கையாளுவதற்காக ஏழை நாடுகளுக்கு உதவும் நோக்கில் $93 பில்லியன் டாலர் மதிப்பிலான தொகுப்பை அறிவித்த நிறுவனம் எது?**

அ) ஏடிபி

**ஆ) உலக வங்கி ☑**

இ) IMF

ஈ) ஏஐஐபி



✓ COVID தொற்றால் ஏற்பட்ட நெருக்கடியைச் சமாளிக்கவும், பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கவும் ஏழை நாடுகளுக்கு உதவுவதற்காக, பன்னாட்டு வளர்ச்சி சங்கத்தின் $93 பில்லியன் டாலர் தொகுப்பை உலக வங்கி அறிவித்துள்ளது. இச்சமீபத்திய உறுதிமொழியில் 48 உயர் மற்றும் நடுத்தர வருமான நாடுகளின் மூல தனச் சந்தைகள், திருப்பிச் செலுத்துதல்கள் மற்றும் உலக வங்கியின் சொந்த பங்களிப்புகள் உள்ளிட்டவை சேர்ந்த $23.5 பில்லியன் பங்களிப்புகளும் அடங்கும்.

**5.** **பாராலிம்பிக் விளையாட்டு விருதுகளில் 'சிறந்த அறிமுக வீராங்கனை' விருதை வென்ற அவனி லெகாராவுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

அ) டென்னிஸ்

ஆ) உயரந்தாண்டுதல்

**இ) துப்பாக்கிச் சுடுதல் ☑**

ஈ) டேபிள்–டென்னிஸ்



✓ டோக்கியோ பாராலிம்பிக்ஸ் சாம்பியனான அவனி லெகாரா, 2021 பாராலிம்பிக் விளையாட்டு விருதுகளில் 'சிறந்த அறிமுக வீராங்கனை' விருதை வென்றார். செக் குடியரசின் போசியா வீரர் ஆடம் பெஸ்கா 'சிறந்த அறிமுக வீரர்' விருதை வென்றார்.

✓ இந்திய துப்பாக்கி சுடுதல் பாரா விளையாட்டு வீராங்க–னை அவனி லெகாரா, இந்தியாவிலிருந்து பாராலிம்பிக் தங்கப்பதக்கம் வென்ற முதல் பெண்மணி ஆவார். பாராலிம்பிக்கில் 2 பதக்கங்களை வென்ற முதல் இந்தியப் பெண்மணி என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.


**6.** **சமீபத்தில் பிலிப்பைன்ஸைத் தாக்கிய சூறாவளியின் பெயர் என்ன?**

**அ) ராய் ☑**

ஆ) பாய்


இ) நோர்டே

ஈ) சியர்கோவ்



✓ 'ராய்' எனப்பெயரிடப்பட்ட சூறாவளி அண்மையில் பிலிப்–பைன்ஸைத் தாக்கியது. 5ஆம் வகை புயலாக வேகமாக தீவிரமடைந்து தெற்கு பிலிப்பைன்ஸில் அது கரையைக் கடந்தது. இந்த ஆண்டில் பிலிப்பைன்ஸைத் தாக்கும் 15ஆவது புயல் 'ராய்' ஆகும். இது மணிக்கு 195 கிமீ (121 மைல்) வேகத்தில் பலத்தகாற்றுடன் சியார்கோவ் தீவைத் தாக்கியது. இந்த ஆண்டில் பிலிப்பைன்ஸைத் தாக்கிய இரண்டாவது சக்திவாய்ந்த சூறாவளி இதுவாகும்.

**7.** **அதன் 'Laser Communications Relay Demonstration' அறிமுகப்படுத்திய விண்வெளி நிறுவனம் எது?**



அ) ISRO

**ஆ) NASA ☑**

இ) JAXA

ஈ) ESA

✓ டிச.7 அன்று, NASA தனது புதிய லேசர் கம்யூனிகேசன்ஸ் ரிலே டெமான்ஸ்ட்ரேஷனை (LCRD) அறிமுகப்படுத்தியது. கேப் கனாவெரல் விண்வெளிப்படை நிலையத்தின் முதல் லேசர் தகவல் தொடர்பு அமைப்பு இதுவாகும். LCRD ஆனது விண்வெளியில் ஒளியியல் தொடர்பைச் சோதிக்க NASAவுக்கு உதவும். தற்போது, பெரும்பாலான NASA விண்கலங்கள் தரவுகளை அனுப்புவதற்கு ரேடியோ அலைவரிசை தொடர்புகளைப் பயன்படுத்துகின்றன.

---

**8.** **முதன்முறையாக 4.5 நாட்கள் கொண்ட அலுவல் வாரத்தை அறிவித்த நாடு எது?**

அ) சுவீடன்

ஆ) ஆஸ்திரேலியா

**இ) ஐக்கிய அரபு அமீரகம் ☑**

ஈ) ஆஸ்திரியா

✓ ஐக்கிய அரபு அமீரகமானது வெள்ளி மதியம், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அரசாங்க ஊழியர்களுக்கு விடுப்பு அளித்து புதிய 4.5 நாட்கள் கொண்ட அலுவல் வாரத்தை அறிவித்துள்ளது. ஐக்கிய அரபு அமீரகத்தில் தற்போது வெள்ளி–சனி வாரயிறுதியாக உள்ளது.

✓ உலகளாவிய 5 நாள் அலுவல் வாரத்தைவிட குறைவான தேசிய அலுவல் வாரத்தை அறிமுகப்படுத்திய உலகின் முதல் நாடு ஐக்கிய அரபு அமீரகம் ஆகும்.

---

**9.** **'She is a Changemaker' என்னும் திறன் மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கியுள்ள நிறுவனம் எது?**

அ) NITI ஆயோக்

**ஆ) தேசிய பெண்கள் ஆணையம் ☑**

இ) இந்திய ரிசர்வ் வங்கி

ஈ) அறிவியல் & தொழிலக ஆய்வுக்கழகம்

✓ தேசிய பெண்கள் ஆணையம் 'She is a Changemaker' என்ற திறன் மேம்பாட்டுத் திட்டத்தை இந்தியா முழுவதும் அறிமுகப்படுத்தியது. அனைத்து மட்டங்களிலும் (கிராமப் பஞ்சாயத்து முதல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரை) மற்றும் அரசியல் பணியாற்றும் பெண் பிரதிநிதிகளுக்காக இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

✓ இது பெண் அரசியல் தலைமைகளின் தலைமைத்துவ திறன், முடிவெடுக்கும் திறன் மற்றும் தகவல் தொடர்பு திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**10.** **"சர்வதேச ஊழல் எதிர்ப்பு நாளை" ஏற்பாடு செய்கிற ஐநா அமைப்பு எது?**




அ) UNCTAD

**ஆ) UNDP ☑**

இ) UNESCO

ஈ) UNICEF

✓ "சர்வதேச ஊழல் எதிர்ப்பு நாள்" ஒவ்வோர் ஆண்டும் டிச. 9 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இது ஐநா வளர்ச்சித் திட்டத்தால் ஏற்பாடு செய்யப்படுகிறது.

✓ நீடித்த வளர்ச்சி இலக்குகளை நோக்கி முன்னேறுவதை தடுக்கும் ஊழலை ஒழிப்பதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஊழலுக்கு எதிரான ஐநா'இன் தீர்மானம் UNCAC, கடந்த 2003'இல் உருவாக்கப்பட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வரலாற்று வெள்ளி வென்றார் ஸ்ரீகாந்த்: உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் ஆடவர் பிரிவில் உச்சம் தொட்ட முதல் இந்தியர்!**

ஸ்பெயின் நாட்டின் ஹூயெல்வா நகரில் உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவர் பிரிவுப் போட்டியில் இந்திய வீரர் ஸ்ரீகாந்த் கிடாம்பி வெள்ளி வென்றார்.

உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் ஆடவர் பிரிவு போட்டியின் இறுதிக்குள் நுழைந்த முதல் இந்திய வீரர் என்ற மகத்தான சரித்திரத்தைப் படைத்த ஸ்ரீகாந்த் கிடாம்பி போராடி தங்கப் பதக்கத்தைப் போராடி பறிகொடுத்தார்.

இருப்பினும், உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் ஆடவர் பிரிவு போட்டியில் வெள்ளி வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையுடன் அவர் தேசம் திரும்ப இருக்கிறார்.

45 நிமிடங்கள் நடந்த இறுதிப் போட்டி: உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் இறுதிக்கு நுழைந்த ஸ்ரீகாந்த், களத்தில் சிங்கப்பூர் வீரர் லோ கியான் யூவை எதிர்கொண்டார். சுமார் 45 நிமிடங்கள் இந்தப் போட்டி நீடித்தது. ஆரம்பம் முதலே லோ கியான் வூ ஆதிக்கம் செலுத்த முதல் செட் கிடாம்பிக்கு மிகவும் சவாலானதாக அமைந்தது. இரண்டாவது சுற்றில் சற்றே தாக்குப்பிடித்த கிடாம்பி போராடித் தோற்றார்.

இறுதியில் 21–15, 22–20 என்ற நேர் செட் கணக்கில் போராடித் தோற்றார் ஸ்ரீகாந்த் கிடாம்பி.

சக வீரரை வீழ்த்திய வேகம்: முன்னதாக, ஆடவர் ஒற்றையர் அரையிறுதிப் போட்டியில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த், சக நாட்டவரான லக்ஷ்யா சென்னுடன் மோதினார். அந்தப் போட்டியில் இந்திய வீரர் ஸ்ரீகாந்த் கிடாம்பி வரலாற்றுச் சாதனை படைத்தார். சர்வதேச தரவரிசைப் பட்டியலில் 12–வது இடத்தில் உள்ள கிடாம்பி சக வீரரான லக்ஷ்யா சென்னை 17–21, 21–14, 21–17 என்ற செட் கணக்கில் வீழ்த்தினர். 1 மணி நேரம் 9 நிமிடங்களில் அவர் வெற்றிக் கனியைப் பறித்துவிட்டார்.

இதன்மூலம், உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்குள் நுழைந்த முதல் இந்திய வீரர் என்ற சரித்திர பெருமையைப் பெற்றார் ஸ்ரீகாந்த். இப்போது உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் வெள்ளி வென்று சரித்தரித்தில் இன்னொரு மைல்கல்லையும் அவர் தொட்டுவிட்டார்.

அவருக்கு வாழ்த்துகள் குவிந்து வருகின்றன.

---

**2. பயணிகள் வசதிக்காக 543 ரெயில் நிலையங்களில் வைஃபை வசதி**

தெற்கு ரெயில்வே மண்டலத்தில் 543 முக்கிய ரயில் நிலையங்களில் Wi-fi வசதி ஏற்படுத்த திட்டமிடப்பட்டு உள்ளது. ரெயில் பயணிகளுக்கு இணையதள சேவை வசதிகளை வழங்க ரயில் நிலையங்களில் வைஃபை அறிமுகப்படுத்த திட்டம் தீட்டி வருவதாகவும் இதன் மூலம் முதல் ½ மணிநேரத்திற்கு பயணிகள் இலவசமாக Wi-fi வசதியை பயன்படுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சென்னை – 135, திருச்சி – 105, சேலம் – 79, மதுரை – 95, பாலக்காடு – 59, திருவனந்தபுரம் – 70 என மொத்தம் 543 ரயில் நிலையங்களில் Wi-fi வசதி ஏற்படுத்த தெற்கு ரயில்வே திட்டமிட்டுள்ளது. தெற்கு ரயில்வே மண்டலத்தில் இதுவரை 5,087 கிமீ தூரத்துக்கு ஒளியிழை வட தொடர்பு அமைப்பு என்றும் கூறப்படுகிறது.

---

**3. தேர்தல் சட்டத்திருத்த மசோதா மக்களவையில் தாக்கல்**

ஒரே நபர் வெவ்வேறு இடங்களில் வாக்களிப்பதைத் தடுப்பதற்காக, வாக்காளர் பட்டியலில் ஆதார் எண்ணை இணைக்க வகை செய்யும் தேர்தல் சட்டத்திருத்த மசோதா, மக்களவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.

தேர்தல் சட்டத் திருத்த மசோதாவை மக்களவையில் தாக்கல் செய்து பேசிய மத்திய சட்ட அமைச்சர் கிரண் ரிஜிஜூ, இந்த சட்டத்திருத்தம்மூலம், வாக்களிப்பதில் நடக்கும் முறைகேடு தடுக்கப்பட்டு, நாட்டில் தேர்தல் நியாயமாக நடப்பது உறுதிசெய்யப்படும் என தெரிவித்தார்.

வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்க்க விரும்புவோரிடம் அவர்களின் ஆதார் எண்ணைத்தேர்தல் அதிகாரிகள் கேட்பதற்கு இந்த மசோதா அனுமதி அளிக்கிறது. மேலும், ஏற்கெனவே வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செய்திருந்தாலும் அவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தவும், வெவ்வேறு தொகுதிகளில் உள்ள வாக்காளர் பட்டியலில் அல்லது அதே தொகுதியில் வெவ்வேறு இடங்களில் உள்ள வாக்காளர் பட்டியலில் அவர்களின் பெயர் இடம்பெற்றுள்ளதா என்பதை உறுதிப்படுத்தவும் ஆதார் எண்ணை அதிகாரிகள் கேட்க முடியும்.

அதேசமயம், ஆதார் எண்ணைத் தர இயலாத நிலையில் இருப்பவர்களை வாக்காளர்களாக சேர்த்துக்கொள்ள மறுக்கக் கூடாது என்றும் அந்த மசோதா கூறுகிறது. ஏற்கெனவே வாக்காளர் பட்டியலில் இருப்பவர்களின் பெயரையும் நீக்கக்கூடாது; அவர்கள் அடையாளச் சான்றாக வேறு ஏதேனும் ஓர் ஆவணத்தைச் சமர்ப்பிக்கலாம் என்று அந்த மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரே நபருக்கு பல்வேறு இடங்களில் வாக்குகள் இருப்பதைத் தடுப்பதற்காக, வாக்காளர் பட்டியலில் ஆதார் எண் இணைக்கப்படுகிறது. அதற்காக, மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1950–இன் 23–ஆவது பிரிவில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

தற்சமயம், ஜனவரி 1–ஆம் தேதி அல்லது அதற்கு முன்பு 18 வயதை அடைபவர்கள் புதிய வாக்காளர்களாகப் பதிவு செய்யலாம். அதன் பிறகு 18 வயதை அடைந்தால், அடுத்த ஜனவரி 1–ஆம் தேதி வரை காத்திருக்க வேண்டும். இந்த பிரச்னையை முடிவுக்கு கொண்டு வர ஜனவரி 1, ஏப்ரல் 1, ஜூலை 1, அக்.1 ஆகிய தேதிகளைத் தகுதிநாள்களாகக் கொண்டு வாக்காளர் பட்டியலைத் தயார் செய்யும் வகையில், ஆர்.பி. சட்டத்தின் 14–ஆவது பிரிவில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

தற்போதைய நிலையில், பணிசார்ந்து ராணுவ வீரர் வெளியூர் சென்றுவிட்டால் அவருக்குப் பதிலாக அவருடைய மனைவி வாக்களிக்க முடியும். ஆனால், பெண் ராணுவ அலுவலர் ஊரில் இல்லாவிட்டால் அவருடைய கணவரால் வாக்களிக்க முடியாது. எனவே, கணவரும் வாக்களிக்கும் வகையில், இதுதொடர்பான சட்டப்பிரிவில் 'மனைவி' என்ற வார்த்தைக்குப் பதிலாக 'வாழ்க்கைத்துணைவர்' என்ற சொல்லைச்சேர்ப்பதற்காக ஆர் பி சட்டம், 1950–இன் 20–ஆவது பிரிவு, ஆர் பி சட்டம், 1951–இன் 60–ஆவது பிரிவுகளில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

---

**4. உலக பாட்மின்டன்: அகேன் எமகுச்சி, லோ கீன் யீவ் சாம்பியன்கள்; ஸ்ரீகாந்த்துக்கு வெள்ளி**

WBA உலக பாட்மின்டன் போட்டியில் மகளிர் பிரிவில் ஜப்பானின் அகேன் எமகுச்சியும், ஆடவர் பிரிவில் சிங்கப்பூரின் லோ கீன் யீவும் சாம்பியன் பட்டம் வென்றனர். இந்திய வீரர் கிடாம்பி ஸ்ரீகாந்த் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் ஸ்ரீகாந்த்–லோ கீன் யீவ் மோதினர். இளம் வீரரான லோ கீன் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தி ஆடினார். முதல் கேமில் ஸ்ரீகாந்த் 9–3 என முன்னிலை பெற்ற நிலையில், லோ கீன் தொடர்ந்து புள்ளிகளை குவித்தார். முதல் கேமை 21–15 என கைப்பற்றிய லோ கீன், இரண்டாவது கேமில் ஸ்ரீகாந்த்தின் கடும் சவாலை எதிர்கொள்ள நேரிட்டது.

14–14, 20–20 என ஸ்கோர் சமநிலை ஏற்பட்டாலும், 2வது கேமில் 22–20 என வென்ற லோ கீன் முதன்முறையாக உலக சாம்பியன் பட்டத்தையும் கைப்பற்றினார்.

ஸ்ரீகாந்த்துக்கு வெள்ளி:

கிடாம்பி ஸ்ரீகாந்த் வெள்ளிப் பதக்கம் வென்றார். உலக பாட்மின்டன் போட்டி ஆடவர் பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற சிறப்பையும் பெற்றார் அவர். ஏற்கெனவே 1983–இல் பிரகாஷ் பதுகோன், 2019–இல் பிரணாய் ஆகியோர் வெண்கலம் வென்றிருந்தனர்.

---

**1.** இந்தியா, அண்மையில் பிரம்மோஸின் ஏர் பதிப்பை பரிசோதனை செய்தது. இது ஒரு_____?

**அ) சூப்பர்சோனிக் சீர்வேக ஏவுகணை ☑**

ஆ) பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை

இ) கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை

ஈ) வழிகாட்டப்பட்ட ஏவுகணை அமைப்பு

- ✓ வானிலிருந்து வான் இலக்கைத் தாக்கும் பிரம்மோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணை ஒடிஸா கடற்கரைக்கு அப்பால் சந்திப்பூர் ஒருங்கிணைந்த பரிசோதனைப் பகுதியில் இருந்து சுகோய் 30 எம்கே-I சூப்பர் சோனிக் போர் விமானம்மூலம் பரிசோதனை செய்யப்பட்டது.
- ✓ பிரம்மோஸ் சூப்பர் சோனிக் ஏவுகணை மேம்பாடு, உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவதில் இந்தியாவும் (DRDO), ரஷ்யாவும் கூட்டு முயற்சியில் உள்ளன.

---

**2.** **பாக்யாங் & சோரெங் ஆகிய இரு புதிய மாவட்டங்கள், கீழ்கண்ட எந்த மாநிலத்தில் உருவாக்கப்படவுள்ளன?**

அ) அருணாச்சல பிரதேசம்

**ஆ) சிக்கிம் ☑**

இ) அஸ்ஸாம்

ஈ) நாகாலாந்து

- ✓ சிக்கிம் மாநில சட்டமன்றமானது சிக்கிம் (மாவட்டங்களை மறுசீரமைத்தல்) மசோதா, 2021 மசோதாவை பாக்யாங் & சோரெங் என்ற 2 மாவட்டங்களை உருவாக்குவதற்கான மசோதாவை நிறைவேற்றியது.
- ✓ ஆளுநர் கங்கா பிரசாத், இம்மசோதாவுக்கு ஒப்புதலளித்த பிறகு சிக்கிம் மாநிலத்தில் ஆறு மாவட்டங்கள் இருக்கும். சிக்கிம் மாநில பல்கலைக்கழகத்திற்கு மக்களின் காவல் தெய்வமான கஞ்சஞ்சங்கா மலையின் பெயரை சூட்டுவத -ற்கான திருத்த மசோதாவையும் அது நிறைவேற்றியது.

---

**3.** **சமீபத்திய பணவியல் கொள்கையில், ரெப்போ மற்றும் ரிவர்ஸ் ரெப்போ விகிதங்கள் முறையே ........ மற்றும் ......... என நிர்ணயிக்கப்பட்டன.**



**அ) 4 சதவீதம் மற்றும் 3.35 சதவீதம் ☑**

ஆ) 4.75 சதவீதம் மற்றும் 4 சதவீதம்

இ) 5 சதவீதம் மற்றும் 4.5 சதவீதம்

ஈ) 5 சதவீதம் மற்றும் 4.75 சதவீதம்

- ✓ இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகாந்த தாஸ், பணவியல் கொள்கைக்குழுவானது வட்டி விகிதங்களை மாற்றாமல் வைத்திருக்க முடிவு செய்துள்ளதாக அறிவித்தார். இதன்மூலம் ரெப்போ மற்றும் ரிவர்ஸ் ரெப்போ விகிதங்கள் தற்போது முறையே 4% மற்றும் 3.35 சதவீதமாக உள்ளது.
- ✓ இது ஒன்பதாவது கொள்கைக் கூட்டம் ஆகும். FY22'இல் மெய்யான GDP வளர்ச்சிக்கான கணிப்பு 9.5% ஆகவும், CPI பணவீக்கம் 5.3% ஆகவும் உள்ளது.

---

**4.** **சீனாவில் நடக்கும் 2022 – குளிர்கால ஒலிம்பிக்கை அரசியல் ரீதியாக புறக்கணிப்பதாக அறிவித்த நாடு எது?**

**அ) அமெரிக்கா ☑**

ஆ) இந்தியா

இ) ஜப்பான்

ஈ) ஆஸ்திரேலியா

- ✓ 2022ஆம் ஆண்டு சீனாவில் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை அரசியல்ரீதியாக புறக்கணிப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.
- ✓ சீனாவின் மனித உரிமை மீறல்கள் குறித்த அச்சுறுத்தல் காரணமாக, விளையாட்டுப் போட்டிகளுக்கு அதிகாரபூர்வ பிரதிநிதிகள் யாரும் அனுப்பப்பட மாட்டார்கள் என்று வெள்ளை மாளிகை அறிவித்தது.
- ✓ மேலும் அமெரிக்க நாட்டு விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்ளலாம் என்றும், அரசின் முழு ஆதரவும் கிடைக்கும் என்றும் கூறியுள்ளது. இந்நடவடிக்கையை 'தன்னியக்க அரசியல் கேலிக்கூத்து' என்று சீனா அழைக்கிறது.

---

**5.** **2021'இல் 'உலக பெட்ரோலிய மாநாட்டை' நடத்தும் நாடு எது?**

**அ) அமெரிக்கா ☑**

ஆ) ஐக்கிய அரபு அமீரகம்

இ) UK

ஈ) உஸ்பெகிஸ்தான்

- ✓ தொழிற்துறையின் மிகப்பெரிய மாநாடாகக் கருதப்படும் 'உலக பெட்ரோலிய மாநாடு' தென்-மத்திய அமெரிக்க மாநிலமான டெக்சாஸின் பெருநகரமான ஹூஸ்டனில் தொடங்கியது. சுமார் 70 நாடுகள் & பிராந்தியங்களில் இருந்து 300'க்கும் மேற்பட்ட பேச்சாளர்கள் இந்நிகழ்ச்சி மற்றும் தொழில்நுட்ப மன்றங்களில் பங்கேற்க உள்ளனர்.
- ✓ உலக பெட்ரோலிய மாநாடானது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை 65 உறுப்பு நாடுகளை உள்ளடக்கிய லண்டனைச் சார்ந்த உலக பெட்ரோலிய கவுன்சிலால் நடத்தப்படுகிறது.

---

**6.** **முதலாம் சவுதி அரேபிய கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் வெற்றி பெற்ற பந்தய ஓட்டுநர் யார்?**



**அ) லூயிஸ் ஹாமில்டன் ☑**

ஆ) வால்டேரி போட்டாஸ்

இ) டேனியல் ரிச்சியார்டோ

ஈ) மேக்ஸ் வெர்ஸ்டாப்பன்

- ✓ 36 வயதான சிறந்த பிரிட்டிஷ் பந்தய ஓட்டுநர் லூயிஸ் ஹாமில்டன் சவுதி அரேபிய கிராண்ட்பிரிக்ஸ் போட்டியின் முதல் போட்டியில் வென்றார். ஜெட்டாவில் உள்ள 30 கிமீ நீள சுற்றில் நடந்த பந்தயத்தில் ஆறு சுற்றுகள் மீதமுள்ள நிலையில் அவர் மேக்ஸ் வெர்ஸ்டாப்பனை முந்தினார். இந்த வெற்றியின்மூலம், ரெட்புல் ஓட்டுநர் மேக்ஸ் வெர்ஸ்டாப்பனின் புள்ளிகளை ஹாமில்டன் சமன் செய்தார்.

---

**7. கோவாவாக்ஸ், எந்தத் தடுப்பூசியின் உரிமத்தின்கீழ் சீரம் நிறுவனத்தால் இந்தியாவில் தயாரிக்கப்படுகிறது?**




அ) பைசர்–பயோஎன்டெக் தடுப்பூசி

ஆ) மாடர்னா COVID–19 தடுப்பூசி

இ) ஜான்சன் & ஜான்சன் தடுப்பூசி

**ஈ) நோவாவாக்ஸ் தடுப்பூசி ☑**

✓ உலக நலவாழ்வு அமைப்பானது (WHO) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தடுப்பூசி 'Covovax' –க்கு அவசர அனுமதி வழங்கியுள்ளது.

✓ அமெரிக்காவைச் சார்ந்த நோவாவாக்ஸின் உரிமத்தின் கீழ் இந்தத் தடுப்பூசியை சீரம் நிறுவனம் இந்தியாவில் தயாரித்து வருகிறது. அவசரகால பயன்பாட்டிற்கான 9ஆவது COVID–19 தடுப்பூசியாக கோவோவாக்ஸை WHO அறிவித்துள்ளது.

---

**8. இந்திய போட்டி ஆணையமானது (CCI) சமீபத்தில் எந்த நிறுவனத்திற்கு ₹202 கோடி அபராதம் விதித்துள்ளது?**

அ) பிளிப்கார்ட்

**ஆ) அமேசான் ☑**

இ) ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ்


ஈ) டி–மார்ட்

✓ சில்லறை விற்பனையாளரான பியூச்சர் கூப்பன்ஸ் லிட் நிறுவனத்தில் பங்குகளை வாங்குவதற்கான அமேசானின் ஒப்பந்தத்திற்கு இந்திய போட்டி ஆணையம் தடை விதித்துள்ளது. 2019ஆம் ஆண்டில் ஒழுங்குமுறை அனுமதிகளை கோரும்போது உண்மைகளை மறைத்து தவறான அறிக்கைகளை வெளியிட்டதற்காக அமெரிக்காவைச் சார்ந்த இ–காமர்ஸ் நிறுவனத்திற்கு CCI ₹202 கோடி அபராதம் விதித்தது.

✓ 2019ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை மேற்கோள்காட்டி, ரிலைய –ன்ஸ் உடனான பியூச்சர் கூப்பன்ஸின் ஒப்பந்தத்திற்கு அமேசான் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

---

**9. பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பிற்கு (NATO) வரைவு ஒப்பந்தத்தை வெளியிட்டுள்ள நாடு எது?**



அ) அமெரிக்கா

**ஆ) ரஷ்யா ☑**

இ) யுகே

ஈ) பிரான்ஸ்

✓ வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பிற்கு (NATO) இருதரப்பு பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்த வரைவு ஒப்பந்தத்தை ரசியா முன்மொழிந்துள்ளது. ரஷ்யாவும் நேட்டோவும் ஒன்றையொன்று எதிரிகளாகக் கருதவில்லை என்பதை மீண்டும் உறுதிப்படுத்த வேண்டும் என்று அது பரிந்துரைத்தது.

✓ நேட்டோ அமைப்பை மேலும் விரிவுபடுத்துதல், உக்ரைன் நுழைவை நிறுத்துதல், உக்ரைன் & கீழை ஐரோப்பா, தெற்கு காகசஸ் மற்றும் மத்திய ஆசியாவில் உள்ள பிற நாடுகளில் எந்தவொரு இராணுவ நடவடிக்கையிலும் ஈடுபடாமல் இருக்குமாறு ரஷ்யா NATO'விடம் கேட்டுக் கொண்டுள்ளது.

---

**10. தமிழ்நாட்டின் மாநிலப் பாடலாக அறிவிக்கப்பட்ட 'தமிழ்த்தாய் வாழ்த்து'ப்பாடலின் ஆசிரியர் யார்?**



அ) சுப்ரமணிய பாரதி

ஆ) பாரதிதாசன்

**இ) 'மனோன்மணியம்' சுந்தரனார் ☑**

ஈ) உ வே சுவாமிநாதர்

✓ தமிழ்நாடு அரசு, 'தமிழ்த்தாய் வாழ்த்து'ப்பாடலை, அரசு ஆணை பிறப்பித்து, மாநிலப் பாடலாக அறிவித்துள்ளது. இது பொதுவாக அனைத்து கல்வி நிறுவனங்களிலும், பொது நிகழ்ச்சிகளின் தொடக்கத்திலும் பாடப்படுகிறது.

✓ சுந்தரனார் எழுதிய 'மனோன்மணியம்' என்ற புகழ்பெற்ற தமிழ் நாடகத்திலிருந்து எடுக்கப்பட்ட பாடலாகும் இது. பாடல் ஒலிபரப்பின்போது மாற்றுத்திறனாளிகளைத் தவிர கலந்துகொண்ட அனைவரும் எழுந்து நிற்க வேண்டும் என அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஒமைக்ரான் பாதிப்பை கண்டறியும் கருவி: ICMR உருவாக்கியது**

உருமாறிய கரோனா வகையான ஒமைக்ரான் பாதிப்பைக் கண்டறியும் பரிசோதனை கருவியை இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ICMR) உருவாக்கியுள்ளது. இந்தத் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் பரிசோதனை கருவிகளை உருவாக்க தனியார் நிறுவனங்களுக்கு ICMR அழைப்பு விடுத்துள்ளது.

வடகிழக்கு மாநிலம், திப்ருகரில் உள்ள ICMR கிளை இந்தப்புதிய தொழில்நுட்பக் கருவியை உருவாக்கியுள்ளது. கரோனாவை கண்டறிய உதவும் RT–PCR கருவியைப் போலவே ஒமைக்ரானை கண்டறியும் கருவியும் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக ICMR வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 'இந்தப் புதிய தொழில்நுட்ப கண்டுபிடிப்புக்கு ICMR–தான் உரிமையாளராக இருக்கும். இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பரிசோதனை கருவிகளை உருவாக்க தனியார் நிறுவனங்களுக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்வரும் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு வர்த்தக ரீதியில் கருவிகள் தயாரிக்கப்படும்.

இந்தக் கருவிக்கு சந்தையில் மிகுந்த தேவை உள்ளதால், இதன் உற்பத்தியை அதிகரிக்க பல தயாரிப்பு நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கப்படும். தயாரிப்பு உரிமைக்கான செலவை ICMR'க்கு அந்த நிறுவனங்கள் அளிக்கும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**2.₹3.73 லட்சம் கோடி துணைநிலை மானிய கோரிக்கை மசோதா: மக்களவை ஒப்புதல்**

நடப்பு 2021–22–ஆம் நிதியாண்டில் ரூ.3.73 லட்சம் கோடி துணைநிலை மானியம் கோரிய மசோதாவுக்கு மக்களவை ஒப்புதல் அளித்தது.

தொகுப்பு நிதியில் இருந்து துணைநிலை மானியம் கோரும் 2–ஆவது தொகுதி மசோதா மீதான விவாதம் மக்களவையில் திங்கள்கிழமை நடைபெற்றது. அப்போது மத்திய நிதியமைச்சா் நிா்மலா சீதாராமன் கூறியதாவது:

கூடுதல் செலவுக்காகப் பெறப்படும் தொகையில் ரூ.62,057 கோடியானது ஏா் இந்தியாவின் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும். எம்.பி.க்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதித் திட்டத்துக்காக ரூ.1,153 கோடி வழங்கப்படும். பாதுகாப்புத் துறைக்கு ரூ.5,000 கோடியும், மத்திய உள்துறைக்கு ரூ.4,000 கோடியும் கூடுதலாக வழங்கப்படும்.

வீட்டுவசதி மற்றும் நகா்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்துக்கு ரூ.14,000 கோடி வழங்கப்படவுள்ளது. உரங்களுக்கான கூடுதல் மானியமாக ரூ.58,430 கோடியும், நிலுவையில் உள்ள ஏற்றுமதி ஊக்கத்தொகையை வழங்க ரூ.53,123 கோடியும், தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்ட நிதிக்கு ரூ.22,039 கோடியும் வழங்கப்படவுள்ளது. உணவு–பொது விநியோகத் துறைக்குக் கூடுதலாக ரூ.49,805 கோடியும், வா்த்தகத் துறைக்கு ரூ.2,400 கோடியும் வழங்கப்படவுள்ளது.

சமையல் எண்ணெய், அத்தியாவசியப் பொருள்கள் ஆகியவற்றின் விலையைக் கட்டுக்குள் வைப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தொடா்ந்து மேற்கொள்ளும். வங்கிகளில் கடன்களைத் திருப்பிச் செலுத்தாமல் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்ற விஜய் மல்லையா, நீரவ் மோடி, மெஹுல் சோக்ஸி உள்ளிட்டோரிடம் இருந்து ரூ.13,109 கோடியை வங்கிகள் மீட்டுள்ளன என்றாா் அவா்.

எதிா்க்கட்சிகளின் அமளிக்கிடையே துணைநிலை மானியக் கோரிக்கை மசோதா மீது நடத்தப்பட்ட குரல் வாக்கெடுப்பில் பெரும்பாலான எம்.பி.க்கள் அதற்கு ஆதரவு தெரிவித்தனா். மக்களவை ஒப்புதல் அளித்த மசோதா, மாநிலங்களவைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

செலவினம் அதிகரிப்பு: நடப்பு நிதியாண்டில் மத்திய அரசின் செலவினம் ரூ.34.83 லட்சம் கோடியாக இருக்கும் என்று நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. கடந்த மழைக்காலக் கூட்டத்தொடரின்போது தாக்கல் செய்யப்பட்ட முதல் தொகுதி துணைநிலை மானிய கோரிக்கை மசோதாவின் மூலமாக ரூ.23,675 கோடியை மத்திய அரசு பெற்றது.

தற்போது இரண்டாவது தொகுதி மசோதாவின் மூலமாக ரூ.3.73 லட்சம் கோடியை மத்திய அரசு பெறவுள்ளது. இதன் காரணமாக நடப்பு நிதியாண்டில் மத்திய அரசின் செலவினம், நிா்ணயிக்கப்பட்டதைவிட அதிகரிக்கும் என நிபுணா்கள் தெரிவிக்கின்றனா்.

---

**3. நகர்ப்புற சேவைகளை மேம்படுத்த இந்தியாவுக்கு ஆசிய வளர்ச்சி வங்கி ரூ.2,655 கோடி கடனுதவி**

இந்தியாவில் நகா்ப்புற சேவைகளை மேம்படுத்த ஆசிய வளா்ச்சி வங்கி 350 மில்லியன் டாலா்கள் (சுமாா் ரூ.2,655 கோடி) கடனுதவி அளிக்கவுள்ளது.

இதுதொடா்பாக அந்த வங்கி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நீடித்த நகா்ப்புற வளா்ச்சி மற்றும் சேவை விநியோகத் திட்டத்தின் கீழ் இந்தியாவில் நகா்ப்புற சேவைகளை மேம்படுத்த ஆசிய வளா்ச்சி வங்கி 350 மில்லியன் டாலா்கள் கடனுதவி அளிக்கவுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள முதல் துணைத் திட்ட ஒப்பந்தத்தில் இந்திய நிதியமைச்சக கூடுதல் செயலா் ரஜத் குமாா் மிஸ்ரா, ஆசிய வளா்ச்சி வங்கியின் மூத்த அதிகாரி டக்கியோ கொனிஷி ஆகியோா் கையொப்பமிட்டனா்.

முதல் துணைத் திட்டம் மூலம் தேசிய அளவில் நகா்ப்புற சீா்திருத்தங்களுக்கான முக்கிய கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் செயல்படுத்தப்படும். அதனைத்தொடா்ந்து இரண்டாவது துணைத் திட்டத்தின் கீழ் மாநிலங்கள் மற்றும் நகா்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ள வேண்டிய சீா்திருத்தங்கள் மற்றும் திட்டப் பரிந்துரைகள் செயல்படுத்தப்படும்.

நகா்ப்புற சேவைகளை மேம்படுத்துவதற்கான திட்ட அமலாக்கத்தில் இந்திய வீட்டுவசதி மற்றும் நகா்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்துக்கு ஆசிய வளா்ச்சி வங்கி ஆலோசனைகள் வழங்கும்.

குறிப்பாக கொள்கைரீதியான சீா்திருத்தங்களை அமல்படுத்த வேண்டிய குறைந்த வருவாய் கொண்ட மாநிலங்களை தோ்வு செய்தல், முதலீட்டு திட்டங்களைத் தயாரித்தல், பருவநிலை மாற்றம், பாலின சமத்துவம் போன்ற விவகாரங்களில் பரிந்துரைகள் வழங்குதல் உள்ளிட்டவற்றில் நகா்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆசிய வளா்ச்சி வங்கி உதவும்.

நகரமயமாக்கல் அதிகரித்து வரும் நிலையில், இந்தியாவின் பொருளாதார நடவடிக்கையை அதிகரிக்க, வேலைவாய்ப்புகளை உருவாக்க, நகா்ப்புறங்களில் கண்ணியமான வாழ்க்கையைப் பெற, சுற்றுச்சூழலை பாதுகாக்க வளா்ச்சியின் வலிமையான சக்தியாக நகரங்கள் உருவெடுக்க வேண்டும் என எதிா்பாா்க்கப்படுகிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

---

**4. டாவோஸ் உலக பொருளாதார மாநாடு ஒத்திவைப்பு**

ஒமைக்ரான் பாதிப்பு அதிகரிப்பு எதிரொலியால் டாவோஸிஸ் அடுத்த ஆண்டு நடைபெற இருந்த உலக பொருளாதார கூட்டமைப்பின் ஆண்டு மாநாடு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

உலக பொருளாதார கூட்டமைப்பின் மாநாடு ஸ்விட்ஸா்லாந்திலுள்ள டாவோஸில் ஜனவரி 17 முதல் 21–ஆம் தேதி வரையில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆண்டுதோறும் நடைபெறும்

இந்த மாநாட்டில் உலகின் முன்னணி தலைவா்கள் பங்கேற்பதாக இருந்தது.

உலகின் பல்வேறு நாடுகளில் உருமாறிய கரோனா தீநுண்மியான ஒமைக்ரானின் பரவல் அதிகரித்து வருவதால் இந்த ஆண்டு மாநாட்டை சிங்கப்பூருக்கு மாற்ற திட்டமிடப்பட்டது.

இந்நிலையில், இந்த மாநாட்டில் பங்கேற்பவா்களின் உடல் நல பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளித்து மாநாட்டை ஒத்தி வைப்பதாக உலக பொருளாதார கூட்டமைப்பு திங்கள்கிழமை அறிவித்தது.

இந்தியா உள்பட 100-க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவா்கள் இந்த மாநாட்டில் பங்கேற்பதை உறுதி செய்திருந்தனா்.

---

### 5. கோவையில் புதிய தொழில்நுட்பப் பயிற்சி மையம்: மக்களவையில் மத்திய அமைச்சா் தகவல்

நாட்டில் 18 புதிய தொழில் நுட்பப் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட உள்ளதாகவும், இதில் ஒன்று கோவையில் தொடங்கப்படும் என்றும் மத்திய திறன் மேம்பாடு, தொழில் முனைவு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சா் ராஜீவ் சந்திரசேகா் மக்களவையில் திங்கள்கிழமை கேள்வி நேரத்தில் தெரிவித்தாா். கோவையில் அமைய இருக்கும் இந்த மையத்திற்கான நிலத்தை மாநில அரசு உடனடியாக ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் இது விரைவாக அமைக்கப்படும் என்றும் அமைச்சா் தெரிவித்தாா்.

மாா்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மக்களவைத் தொகுதி உறுப்பினா் பி.ஆா்.நடராஜன், மாறி வரும் தொழில்நுட்பங்கள் அடிப்படையிலும் அந்நிய உற்பத்தி நிறுவனங்களின் போட்டியை சமாளிக்கும் விதமாக நாட்டில் தொடங்கப்பட்டுள்ள தொழில்நுட்ப பயிற்சி மையங்கள் குறித்தும் திறன்களை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாட்டில் குறிப்பாக கோவையில் தொழில் பயிற்சி மையங்கள் தொடங்கும் முடிவு உள்ளதா என்பது குறித்து கேள்வி எழுப்பினாா்.

இதற்கு மத்திய திறன் மேம்பாடுத்துறை இணையமைச்சா் ராஜீவ் சந்திரசேகா் மக்களவையில் கேள்வி நேரத்தில் அளித்த பதில் வருமாறு: திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோா் அமைச்சகத்தின் கீழ் இது வரை தொழில்நுட்பப் பயிற்சி மையங்கள் எதுவும் இல்லை. அதே சமயத்தில் பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா திட்டம், கைவினைஞா் பயிற்சித் திட்டம் போன்றவற்றின் கீழ் அரசு மற்றும் தனியாா் ஐடிஐக்கள் (தொழில்துறை பயிற்சி நிறுவனங்கள்) மூலம் 22 பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. நாடு முழுக்க 3,178 அரசு ஐடிஐக்கள் உள்பட 14,711 ஐடிஐக்கள் உள்ளன. இதில் தமிழகத்தில் 84 அரசு ஐடிஐக்கள் உள்பட 494 ஐடிஐக்கள் உள்ளன.

இதில் கோவையில் உள்ள 3 அரசு ஐடிஐக்கள் உள்பட 19 ஐடிஐக்களில் 32 பிரிவுகளில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இது தவிர கோயம்புத்தூா் மாவட்ட சிறுதொழில் சங்கம்(கொடிசியா) தொழில் குழுமமாக (கிளஸ்டா்) உள்ளது. இதற்கு ரூ.40 லட்சம் வழங்கப்பட்டுள்ளது என்றாா் அமைச்சா்.

இந்த பதிலில் பி.ஆா். நடராஜன் அதிருப்தியடைந்து துணைக் கேள்வி எழுப்பினாா். அப்போது, இந்த ரூ.40 லட்சம் 2008- ஆம் ஆண்டு மத்திய அரசால் வழங்கப்பட்டது. தற்போது, பாதுகாப்பு, ஜூவல்லரி போன்ற தொழில் வழித்தடங்கள் அமைய உள்ள நிலையில் புதிய தொழில்நுட்ப பயிற்சிகளுக்கு மத்திய அரசு எடுத்த நடவடிக்கை என்ன? எனவும் கேள்வி எழுப்பினாா். இதற்கு பதிலளித்த அமைச்சா் ராஜீவ் சந்திரசேகா், 'வெளிநாட்டு உற்பத்தியாளா்களுடன் போட்டியிட. நாடு முழுவதும் 18 புதிய தொழில்நுட்பப் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட உள்ளன. இதில் மாநில அரசின் இடத்தில் கோவையில் ஒன்று தொடங்கப்படும்' என்றாா்.

---

### 6. சீனாவுக்கான புதிய தூதா் பிரதீப்குமாா் ராவத்

சீனாவுக்கான இந்தியாவின் அடுத்த தூதராக பிரதீப்குமாா் ராவத் நியமிக்கப்பட்டுள்ளாா்.

1990-ஆம் ஆண்டு பிரிவு ஐஎஃப்எஸ் அதிகாரியான ராவத், இப்போது நெதா்லாந்து தூதராகப் பணியாற்றி வருகிறாா். அவா் விரைவில் புதிய பொறுப்பை ஏற்றுக் கொள்வாா் என்று வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராவத் ஏற்கெனவே பெய்ஜிங் மற்றும் ஹாங்காங்கில் பணியாற்றிய அனுபவம் உள்ளவா். இந்தோனேசிய தூதராகவும் பணியாற்றியுள்ள அவா், சீன மொழியில் சரளமாகப் பேசும் திறனுள்ளவா் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது சீன தூதராக உள்ள விக்ரம் மிஸ்ரியைத் தொடா்ந்து பிரதீப்குமாா் ராவத் அந்தப் பொறுப்பை ஏற்க இருக்கிறாா். சீனாவுடன் கிழக்கு லடாக் எல்லைப் பிரச்னை உள்பட பல்வேறு விஷயங்களில் பிரச்னைகள் உள்ள நிலையில் இந்தப் புதிய நியமனம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

---

**1.** டிச.18 அன்று எந்த மொழி நாள் அனுசரிக்கப்படுகிறது?

العربية

அ) பிரஞ்சு

ஆ) கிரேக்கம்

**இ) அரபு ☑**

ஈ) உருது

- ✓ உலகளவில் 400 மில்லியனுக்கும் அதிகமான மக்களால் பேசப்படும் மொழியைக் கௌரவிக்கும் வகையில் டிச.18 அன்று உலக அரபு மொழி நாள் அனுசரிக்கப்படுகிறது.
- ✓ ஐநா அவையின் ஆறாவது அலுவல் மொழியாக அரபு மொழியை ஐநா பொது அவை ஏற்றுக்கொண்டதைக் குறிக்கும் வகையில், கடந்த 2012ஆம் ஆண்டு முதல் இந்த நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. "Arabic Language, a bridge between civilisations" என்பது இந்த ஆண்டு, உலக அரபு மொழி நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

**2.** பிரதமர் ஆவாஸ் யோஜனா (கிராமப்புறம்) திட்டத்தை 2021ஆம் ஆண்டு முதல் எந்த ஆண்டு வரை தொடர மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?

அ) 2022

ஆ) 2023

**இ) 2024 ☑**

ஈ) 2025

- ✓ பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான நடந்த மத்திய அமைச்சரவை கூட்டத்தில், மத்திய ஊரக வளர்ச்சித் துறையின் கருத்துருவான பிரதமர் கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தை (PMAY–G) 2021 மார்ச்சுக்கு பின்னர் 2024 மார்ச் மாதம் வரை தொடர்ந்து செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- ✓ இந்தத் திட்டத்தின்கீழ் முடிக்கப்பட வேண்டிய 2.95 கோடி வீடுகள் இலக்கை எட்டுவதற்கு ஏற்றவகையில் இந்தத் திட்டம் நீட்டிக்கப்படுகிறது. எஞ்சிய 155.75 இலட்சம் வீடுகளை கட்டி முடிக்க இந்த நீட்டிப்பு உதவும்.

---

**3.** சமீப செய்திகளில் இடம்பெற்ற குன்னூர், தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?



**அ) நீலகிரி ☑**

ஆ) கோயம்புத்தூர்

இ) திண்டுக்கல்

ஈ) தேனி

- ✓ தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள குன்னூரில் இராணுவ தலைமை தளபதி ஜெனரல் பிபின் ராவத் சென்ற இந்திய வான்படை உலங்கு வானூர்தி விபத்துக்குள்ளானது. இச்சம்பவத்தில் 13 பேர் உயிரிழந்த செய்தி உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 'சௌர்ய சக்ரா' விருதுபெற்ற, விபத்திலிருந்து உயிர்பிழைத்த குரூப் கேப்டன் வருண் சிங்கின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது.

---

**4.** இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹியூமன் பிராண்ட்ஸ் (IIHB) பவர் கப்பிள் தரவரிசை–2021'இன்படி, முதலிடம் பிடித்த ஜோடி எது?



அ) தீபிகா படுகோன் – ரன்வீர் சிங்

ஆ) விராட் கோலி – அனுஷ்கா சர்மா

இ) விக்னேஷ் சிவன் – நயன்தாரா

**ஈ) முகேஷ் அம்பானி– நீதா அம்பானி ☑**

- ✓ இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹியூமன் பிராண்ட்ஸால் (IIHB) ஆண்டுதோறும் வெளியிடப்படும் பவர் ஜோடி தரவரிசையில் இந்திய கோடீஸ்வரர் முகேஷ் அம்பானி – அவரது மனைவி நீதா அம்பானி முதலிடம் பிடித்துள்ளனர். இந்தியா முழுவதும் 25–40 வயதுக்குட்பட்ட 1000'க்கும் மேற்பட்டவர்களிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.
- ✓ இந்த ஜோடியை தொடர்ந்து தீபிகா படுகோனே – ரன்வீர் சிங் இரண்டாவது இடத்திலும், கிரிக்கெட் கேப்டன் விராட் கோலி மற்றும் அவரது மனைவி அனுஷ்கா ஷர்மா இணை மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

---

**5.** சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற Olaf Scholz, எந்த நாட்டின் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார்?



அ) ஆஸ்திரேலியா

**ஆ) ஜெர்மனி ☑**

இ) நியூசிலாந்து

ஈ) ஸ்பெயின்

- ✓ 16 ஆண்டுகள் வரலாற்று சிறப்புற ஆட்சி புரிந்த ஏஞ்சலா மேர்க்கெலை தொடர்ந்து Olaf Scholz ஜெர்மனியின் புதிய அதிபராக பதவியேற்றுள்ளார். 63 வயதான அவர் சமூக ஜனநாயகக் கட்சியினை செப்டம்பரில் தேர்தல் வெற்றிக்கு வழிநடத்தினார். அவர், துணைவேந்தர் பொறுப்பில் ஏஞ்சலா அரசாங்கத்தில் முக்கிய பங்கு வகித்துள்ளார்.

---

**6.** சமீப செய்திகளில் இடம்பெற்ற 'சரயு தேசிய கால்வாய் திட்டம்' அமைக்கப்படவுள்ள மாநிலம் எது?



அ) குஜராத்

**ஆ) உத்தர பிரதேசம் ☑**

இ) பீகார்

ஈ) மத்திய பிரதேசம்

- ✓ உத்தர பிரதேச மாநிலம் பலராம்பூர் மாவட்டத்தில் ₹9,802 கோடி மதிப்பிலான 'சரயு தேசிய கால்வாய் திட்டத்தை' பிரதமர் மோடி தொடங்கிவைக்கவுள்ளார். உத்தரபிரதேச மாநிலத்தின் மிகப்பெரிய திட்டமான இது, காக்ரா, சரயு, ரப்தி, பங்கங்கா மற்றும் ரோகின் ஆகிய ஐந்து ஆறுகளை இணைக்கிறது.
- ✓ 6,600 கிமீ நீளமுள்ள பல துணை கால்வாய்கள் 318 கிமீ நீளமுள்ள பிரதான கால்வாயுடன் இணைக்கப்பட்டுள்ளன.

---

**7.** 56ஆவது ஞானபீட விருதை வென்ற நீலமணி பூகன் ஜூனியர், கீழ்காணும் எந்த மொழிசார் கவிஞராவார்?



அ) தமிழ்

ஆ) மலையாளம்

**இ) அஸ்ஸாமி ☑**

ஈ) குஜராத்தி

- ✓ அஸ்ஸாமிய கவிஞர் நீலமணி பூகன் ஜூனியர், 56ஆவது ஞானபீட விருதை வென்றுள்ளார். அவர் கடந்த 1990'இல் 'பத்மஸ்ரீ' விருது மற்றும் 2002'இல் சாகித்திய அகாதமி பெல்லோஷிப் பெற்றுள்ளார். கொங்கனி நாவலாசிரியர் தாமோதர் மௌசோ 57ஆவது ஞானபீட விருதை வென்றுள்ளார். 1983ஆம் ஆண்டு தனது கார்மெலின் நாவலுக்காக சாகித்திய அகாதமி விருதை அவர் பெற்றார்.

---

**8.** மக்களவையில் நிறைவேற்றப்பட்ட சமீபத்திய மசோதா –க்களின்படி, ED & CBI தலைவர்களின் பதவிக்காலம் எத்தனை ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படலாம்?

அ) மூன்று

ஆ) நான்கு

**இ) ஐந்து ☑**

5

ஈ) ஆறு

- ✓ மத்திய ஊழல் விழிப்புணர்வு ஆணையம் (திருத்த) மசோதா, 2021 மற்றும் தில்லி சிறப்பு காவல்பிரிவு நிறுவல் (திருத்த) மசோதா, 2021 ஆகியவற்றை பரிசீலித்தல் & நிறைவேற்றலுக்காக மக்களவை நிறைவேற்றியது.
- ✓ இந்த மசோதாக்கள் அமலாக்க இயக்குநரகம் (ED) மற்றும் மத்திய புலனாய்வுப் பணியகம் (CBI) ஆகியவற்றில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு ஐந்து ஆண்டுகள் வரை பதவிக்கால நீட்டிப்பு வழங்க அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கும். தற்போது, இந்த இரு அதிகாரிகளுக்கும் 2 ஆண்டுகள் பதவிக்கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

---

**9.** "ஆற்றல் பாதுகாப்பு வாரம்" ஒவ்வோர் ஆண்டும் எந்த மாதத்தில் அனுசரிக்கப்படுகிறது?



அ) அக்டோபர்

ஆ) நவம்பர்

**இ) டிசம்பர் ☑**

ஈ) ஜனவரி

- ✓ 2021 டிச.8 முதல் 14 வரை ஆற்றல் பாதுகாப்பு வாரத்தை எரிசக்தி அமைச்சகம் கொண்டாடுகிறது.
- ✓ எரிசக்தி திறன் பணியகத்தால் இந்தக் கொண்டாட்டம் நடத்தப்படுகிறது. இது தொழிலகங்களுக்கு தேசிய ஆற்றல் பாதுகாப்பு விருதுகளையும் புதுமையான ஆற்றல் திறன் தொழில்நுட்பங்களை அங்கீகரிக்க தேசிய ஆற்றல் திறன் கண்டுபிடிப்பு விருதுகளையும் வழங்குகிறது.

---

**10.** 2021'ஆம் ஆண்டில் 'ஜனநாயகத்திற்கான உச்சி மாநாடு' நடத்திய நாடு எது?




**அ) அமெரிக்கா ☑**

ஆ) இந்தியா

இ) சுவிச்சர்லாந்து

ஈ) ஆஸ்திரேலியா

- ✓ அமெரிக்க அதிபர் ஜோ பிடன், வெள்ளை மாளிகையில் ஜனநாயகத்திற்கான முதல் உச்சிமாநாட்டை தொடங்கி வைத்தார். இது இரண்டு நாள் மெய்நிகர் உச்சிமாநாடாக தொடங்கப்பட்டது. அமெரிக்க அதிபர் பிடன், உலக அளவில் ஜனநாயக வீழ்ந்து வருவதாக எச்சரித்தார்.
- ✓ அரசாங்கங்கள், சிவில் சமூகம் மற்றும் தனியார் துறை தலைவர்கள் உள்ளிட்ட 100'க்கும் மேற்பட்டோர் இந்த உச்சிமாநாட்டில் பங்கேற்றனர்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. அரசுத் துறைகளின் செயல்பாடுகளை கண்காணிக்கும் எண்ம பலகைத் திட்டம்:**

தமிழக அரசுத் துறைகளின் செயல்பாடுகளை கண்காணிக்கும் எண்ம பலகைத் திட்டத்தை, முதல்வா் மு.க.ஸ்டாலின் வியாழக்கிழமை தொடக்கிவைக்கிறாா். இதற்கான நிகழ்ச்சி சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெறுகிறது.

தமிழக அரசில் 42 துறைகள் உள்ளன. இந்தத் துறைகளில் உள்ள நலத் திட்டங்கள், செயல்பாடுகள் ஒரு இடத்தில் மட்டுமே இருந்து கண்காணிக்கும் வகையிலான எண்ம பலகைத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. தகவல் தொழில்நுட்பவியல் துறை சாா்பில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதனை முதல்வா் மு.க.ஸ்டாலின், வியாழக்கிழமை தொடக்கிவைக்கிறாா்.

அரசின் செயல்பாடுகள், திட்டங்கள் கடைக்கோடியில் உள்ள கிராமங்களுக்கும் சென்று அடைந்துள்ளதா என்பதைக் கண்காணிக்கும் வகையில் இந்த பலகைத் திட்டம் அமைந்திடும் என அரசுத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

---

**2. தேவைதான் திருத்தம்! | பெண்களின் திருமண வயதை குறித்த தலையங்கம்**

பெண்களின் திருமண வயதை 21-ஆக உயா்த்துவதற்கான சிறாா் திருமணச் சட்டம் 2006-இல் திருத்தம் கொண்டுவரப்படுவதற்கான திருத்த மசோதா சில எதிா்க்கட்சிகளின் எதிா்ப்பைத் தொடா்ந்து நாடாளுமன்ற நிலைக்குழுவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அரசு கொண்டுவரும் எந்தவொரு மசோதாவையும் எதிா்ப்பது, தடுப்பது என்கிற மனோபாவம் ஆக்கபூா்வமானதல்ல.

ஒவ்வொரு துறையிலும் பாலின சமத்துவமும் பாலின பேதமின்றி அதிகாரமும் வேண்டும் என்கிற கோரிக்கை நீண்ட நாள்களாகவே இருந்து வருகிறது. ஆனால்,

பெண்களின் திருமண வயது 18–ஆகவும், ஆண்களின் மண வயது 21–ஆகவும் இதுவரை இருந்துவரும் முரண் புதிய சட்டத்திருத்தத்தால் அகற்றப்படும்.

சமதா கட்சியின் தலைவா் ஜெயா ஜேட்லி தலைமையில் சட்டபூா்வ திருமண வயதை உயா்த்துவது குறித்து ஆய்வு செய்ய 10 போ் கொண்ட குழு 2020 ஜூன் மாதம் அமைக்கப்பட்டது. அந்தக் குழு 2020 டிசம்பா் மாதம் தனது அறிக்கையை பிரதமா் அலுவலகத்துக்கும், மத்திய மகளிா் – குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்துக்கும் வழங்கியது. அதனடிப்படையில்தான் 2006 சிறாா் திருமணச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது.

குழந்தைத் திருமணம் என்பது நீண்டகாலமாக இந்திய சமுதாயத்தில் காணப்பட்ட மிகப் பெரிய குறைபாடு. இது சட்டபூா்வமாக தடை செய்யப்பட்டிருந்தாலும்கூட இந்தியாவின் சில மாநிலங்களில் இன்னும்கூட அவ்வப்போது 'பால்ய விவாகம்' என்று அறியப்படும் குழந்தைத் திருமண முறை காணப்படும் அவலம் தொடா்கிறது. அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சிகளில் சிறாா் திருமண தடைச்சட்டமும், இப்போது கொண்டுவரப்படும் சட்டத் திருத்தமும் அடங்கும்.

தேசிய குடும்ப சுகாதார ஆய்வின்படி, இந்தியாவில் நான்கு பெண்களில் ஒருவா் 18 வயது பூா்த்தியாவதற்கு முன்னால் திருமணம் செய்துகொள்கிறாா்கள். 56% பெண்கள் 21 வயதை எட்டுவதற்கு முன்பு திருமணம் செய்து கொள்கிறாா்கள். அடித்தட்டு மக்கள் மத்தியில் அதுவே 75% ஆகும். பெரும்பாலான பெண் குழந்தைகளுக்கு, பள்ளிப் படிப்பு முடிந்ததும் திருமணமாகி விடுவதால் கல்லூரி சென்று படிக்கும் வாய்ப்பு அவா்களுக்கு மறுக்கப்படுகிறது. அதைப் போக்கும் வகையில்தான் ஆண்களுக்கு நிகராக பெண்களின் திருமண வயதை உயா்த்த வேண்டும் என்று ஜெயா ஜேட்லி குழு பரிந்துரை செய்தது.

1955 ஹிந்து திருமணச் சட்டம், 1872 இந்திய கிறிஸ்தவ திருமணச் சட்டம் இரண்டுமே பெண்களுக்கு 18 வயதையும், ஆண்களுக்கு 21 வயதையும் திருமண வயதாக வரையறுக்கின்றன. 1954–இல் அமல்படுத்தப்பட்ட வெவ்வேறு மதங்களுக்கு இடையேயான சிறப்புத் திருமண சட்டத்தின்படியும், பெண்களுக்கு 18 வயதும், ஆண்களுக்கு 21 வயதும் அனுமதிக்கப்படுகிறது. 1937 இஸ்லாமிய தனியுரிமை சட்டத்தின்படி (ஷரியத்), ஆணும் பெண்ணும் வயதுக்கு வந்தால் மணவாழ்க்கையில் ஈடுபட தகுதியுடையவா்கள் என்று கூறப்படுகிறது.

சமூக சீா்திருத்தங்களுக்கு அடிப்படையாக இருப்பது ஆண் – பெண் இருபாலரின் கல்வி. குறிப்பாக, கல்வி, பெண்களுக்கு விழிப்புணா்வை ஏற்படுத்தி, காலங்காலமாக அவா்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை நீக்கி, மறுக்கப்பட்ட வாய்ப்புகளைப் பெற்றுத்தருகிறது. திருமண வயதை உயா்த்துவது என்கிற முடிவுக்கு பெண்களின் கல்வி முக்கியமான காரணம்.

18 வயது என்பது பெண்கள் பிளஸ் 2 முடித்திருக்கும் பருவம். அந்தக் கல்வித் தகுதியின் அடிப்படையில் குறிப்பிடத்தக்க வேலைவாய்ப்பையோ பொருளாதார சுதந்திரத்தையோ பெற முடியாது. திருமண வயதை மேலும் மூன்று ஆண்டுகள் நீட்டிக்கும்போது அவா்களது கல்லூரிக் கல்விக்கான வாய்ப்பு அதிகரிக்கிறது. அவா்களது எண்ணம் விரிவடைந்து வருங்கால இலக்கை நிா்ணயித்துக் கொள்ளவும், வாழ்க்கை குறித்த முக்கியமான முடிவுகளை எடுக்கவும் உதவும் என்பதுதான் ஜெயா ஜேட்லி குழுவின் கருத்து.

இந்தியாவில் திருமணம் என்பது தனிப்பட்ட முடிவாக இல்லாமல், சமுதாய வழிமுறையாகவும் இருப்பதால் பெண்களின் படிப்பு முடிந்ததும், அவா்களின் திருமணத்தை உறுதிப்படுத்துவது பெற்றோரின் கடமையாகக் கருதப்படுகிறது. 18 வயதிலேயே கல்லூரி அளவிலான கல்வித் தகுதியும், தங்களது வாழ்க்கையை நிா்ணயித்துக்கொள்ளும் பொருளாதாரத் தகுதியும் பெண்களுக்கு வாய்ப்பதில்லை. அதனால் திருமணமும் குழந்தைப் பேறும் கட்டாயமாகிறது.

21 வயதில் திருமணம் செய்துகொள்ளும்போது தங்களது ஆரோக்கியம் குறித்தும், பொருளாதாரம் குறித்தும் தெளிவாக சிந்திக்கும் பக்குவம் ஏற்படுவதால் சுகாதார பிரச்னைகள் குறையும் என்று அக்குழுவின் அறிக்கை தெரிவிக்கிறது. பிரசவ கால, சிசு மரண விகிதம் குறைவது மட்டுமல்லாமல் ஊட்டச்சத்து குறைவு உள்ளிட்ட பிரச்னைகளுக்கும் 21 வயது வரம்பு உதவக்கூடும் என்று அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

18 வயதானவா்கள் வாக்களிக்கலாம்; வாகனம் ஓட்டலாம்; கல்லூரிக்குச் செல்லலாம்; போட்டித் தோ்வுகளில் கலந்துகொள்ளலாம்; விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொண்டு தேசத்தைப் பிரதிநிதித்துவம் செய்யலாம் எனும்போது, திருமண வயதை 21–ஆக அதிகரிக்க வேண்டிய அவசியம்தான் என்ன என்கிற கேள்வி எழாமல் இல்லை. பெண்களின் திருமண வயதை உயா்த்துவதால் மட்டும் குழந்தைத் திருமணங்கள் குறைந்துவிடுமா என்கிற கேள்விக்கு பதிலும் இல்லை.

ஆண்களுக்கு நிகராக பெண்களின் மண வயதை உயா்த்தும் அதே வேளையில், மக்கள் மத்தியில் காணப்படும் பெண்கள் குறித்தான மனநிலையில் மாற்றமும், அவா்களுக்கான பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதும் முக்கியம். புதிய சட்டத் திருத்தத்தின் பயனாக பெண்களின் கல்வி இடைநிற்றல் குறையுமானால் அதுவேகூட மிகப் பெரிய வெற்றிதான்!

---

**3. பெண்கள் திருமண வயது 21: மக்களவையில் மசோதா தாக்கல்**

பெண்களின் திருமண வயதை 21–ஆக உயா்த்த வகை செய்யும் மசோதா மக்களவையில் செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்யப்பட்டது. எதிா்க்கட்சி உறுப்பினா்களின் எதிா்ப்பைத் தொடா்ந்து இந்த மசோதாவை நிலைக் குழுவுக்கு அனுப்ப மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சா் ஸ்மிருதி இரானி அவைத் தலைவரை கேட்டுக்கொண்டாா். அதன்படி, அந்த மசோதா நிலைக் குழுவுக்கு அனுப்பப்பட்டது.

பெண்களின் சட்டபூர்வமான திருமண வயதை 18–இலிருந்து 21–ஆக உயர்த்த வகை செய்யும் குழந்தை திருமண தடுப்பு திருத்த மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை அண்மையில் ஒப்புதல் அளித்தது. இதையடுத்து, இந்த மசோதாவை மத்திய அமைச்சர் ஸ்மிருதி இரானி மக்களவையில் தாக்கல் செய்தார். இந்த மசோதாவானது இந்திய கிறிஸ்தவ திருமணச் சட்டம், பார்சி திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம், முஸ்லிம் தனிநபர் (ஷரியத்) சட்டம், சிறப்புத் திருமண சட்டம், ஹிந்து திருமணச் சட்டம், வெளிநாட்டு திருமணச் சட்டம் ஆகிய தனிநபர் சட்டங்களில் திருத்தங்களைச் செய்வதற்கு வகை செய்கிறது.

மசோதாவை அறிமுகம் செய்து பேசிய அமைச்சர் ஸ்மிருதி இரானி, 'நாட்டின் வரலாற்றில் இது ஒரு தீர்க்கமான நடவடிக்கை' என்றார்.

சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்தாலோசிக்காமல் அவசரகதியில் இந்த மசோதாவை மத்திய அரசு தாக்கல் செய்வதாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

மக்களவை காங்கிரஸ் தலைவர் அதீர் ரஞ்சன் செளதரி பேசுகையில், 'இந்த மசோதா அறிமுகம் செய்யப்பட்ட விதமானது எந்த ஆலோசனையும் நடத்தாத அரசின் தவறான நோக்கங்களை பிரதிபலிக்கிறது' என்றார்.

காங்கிரஸ் துணைத் தலைவர் கௌரவ் கோகோய், 'ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான திருமண வயதாக 18 என நிர்ணயிக்க வேண்டும் என்ற சட்ட ஆணையத்தின் பரிந்துரைக்கு முரண்பாடாக இந்த மசோதாவின் ஷரத்துகள் உள்ளன' என்றார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உறுப்பினர் இ.டி.முகமது பஷீர், 'இந்த மசோதா தேவையற்றது, சட்டவிரோதமானது, அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 25–ஐ மீறுவதாக உள்ளது. தனிநபர் சட்டங்கள் மற்றும் அடிப்படை உரிமைகள் மீதான தாக்குதலாகும்' என்றார்.

அகில இந்திய மஜ்லீஸ் கட்சித் தலைவர் அசாதுதீன் ஒவைசி, '18 வயதில் ஒரு பெண் பிரதமரைத் தேர்ந்தெடுக்க முடியும் எனும்போது, அந்தப் பெண்ணின் திருமண உரிமையை நீங்கள் மறுக்கிறீர்கள்' என்றார்.

தேசியவாத காங்கிரஸ் உறுப்பினர் சுப்ரியா சுலே, திமுக உறுப்பினர் கனிமொழி ஆகியோர் இந்த மசோதாவை நிலைக்குழுவுக்கு அனுப்ப வேண்டுமென வலியுறுத்தினர்.

புரட்சிகர சோஷலிச கட்சி உறுப்பினர் என்.கே.பிரேமசந்திரன், 'இந்தச் சட்டத்தை அமல்படுத்துவது குறித்த திட்டத்தை அரசு விளக்க வேண்டும்' என்றார்.

அமைச்சர் பதில்: எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குப் பதிலளித்து அமைச்சர் ஸ்மிருதி இரானி பேசியதாவது: ஒரு ஜனநாயக நாடாக, திருமணம் செய்வதற்கான வயதில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை வழங்குவதில் 75 ஆண்டுகள் பின்தங்கியுள்ளோம். நாட்டில் 15–18 வயதுக்குட்பட்ட சிறுமிகளில் 7 சதவீத போர் கர்ப்பமடைவதாகவும், 23 சதவீத சிறுமிகள் 18 வயதுக்குள் திருமணம் செய்துவைக்கப்படுவதாகவும் அறியப்பட்டுள்ளது. வளரிளம் பருவத்தில் கர்ப்பமாதலை தடுப்பதும் முக்கியமானது; வளரிளம் பருவ கர்ப்பமானது பெண்களின் உடல்நலத்துக்கு தீங்கு விளைவிப்பது மட்டுமின்றி, கருச்சிதைவுக்கும், குழந்தைகள் இறந்து பிறப்பதற்கும் வழிவகுக்கிறது. மகப்பேறு இறப்பு விகிதம், சிசு இறப்பு விகிதத்தைக் குறைக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. அத்துடன் குழந்தை பிறக்கும்போது ஊட்டச்சத்து அளவு, பாலின விகிதத்தை மேம்படுத்துவதும் முக்கியம்' என்றார்.

இதைத் தொடர்ந்து, மசோதாவை நிலைக்குழுவின் ஆலோசனைக்கு அனுப்ப அவைத் தலைவரை அமைச்சர் கேட்டுக்கொண்டார். அதன்படி, அந்த மசோதா நிலைக் குழுவுக்கு அனுப்பப்பட்டது.

---

**4. ஐ.நா. உலக உணவுத் திட்ட ஆராய்ச்சி: நீதி ஆயோக் கையெழுத்து**

ஐ.நா.வின் உலக உணவுத் திட்டத்துடன் ஆராய்ச்சிக்கான உடன்பாட்டில் நீதி ஆயோக் கையெழுத்திட்டது. 2023–ஆம் ஆண்டு சிறு தானியங்களுக்கான சர்வதேச ஆண்டாக இருக்கும் நிலையில், அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி உலகளவில் அறிவு பரிமாற்றம் செய்வதில் தலைமையேற்க இந்தியாவிற்கு உதவ இந்த ஒப்பந்தம் வழிவகை செய்யும்.

மேலும் சிறிய அளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கான வாழ்வாதாரங்களை உறுதியாகக் கட்டமைப்பதையும் பருவநிலை மாற்றத்திற்கான திறன்களை பயன்படுத்துவதையும் உணவு முறைகளில் மாற்றம் செய்வதையும் இது நோக்கமாக கொண்டுள்ளது.

இந்தியாவில் விரிவடைந்த உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்புக்கு பருவநிலையைத் தாக்குப் பிடிக்கும் வேளாண்மையை பலப்படுத்துவதற்கு உக்திகள் வகுத்தல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கு இந்த உடன்பாடு கவனம் செலுத்தும். இது கடந்த டிச.20–ஆம் தேதி கையெழுத்தானது.

மத்திய அரசின் அமைச்சகங்கள், மாநில அரசுகளில் உள்ள சம்பந்தப்பட்ட துறைகள், தெரிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்கள், சிறு தானியங்களை ஊக்கப்படுத்துவதற்கான துறையில் செயல்படும் அமைப்புகள் ஆகியவற்றுடன் இரு தரப்பினரும் கூட்டாக தேசிய அளவில் கலந்தாலோசனை நடத்த இந்த உடன்பாடு வகை செய்கிறது.

மத்திய செய்தி தகவல் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**5. ஊக்கமருந்து தடுப்பு விதிமீறல்: உலக அளவில் இந்தியா 3–ஆம் இடம்**

கடந்த 2019–ஆம் ஆண்டில் ஊக்கமருந்து தடுப்பு விதிமுறைகளை மீறியது தொடர்பான ஆண்டறிக்கையில் உலக நாடுகளில் இந்தியா 3–ஆவது இடத்தில் இருக்கிறது. விளையாட்டுத் துறையில் ஊக்கமருந்து பயன்பாட்டை தடுப்பதற்காக இருக்கும் உலக அமைப்பு (டபிள்யூஏடிஏ) இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அதன்படி, ஊக்கமருந்து பயன்பாடு தடுப்பு விதிகளை மீறியதாக கடந்த 2019–ஆம் ஆண்டில் இந்தியாவில் மொத்தம் 152 நிகழ்வுகள் பதிவாகியுள்ளன. பட்டியலில் முதலிரு இடங்களில் ரஷியா (167), இத்தாலி (157) உள்ளன. 4 மற்றும் 5–ஆவது இடங்களில் பிரேஸில் (78), ஈரான் (70) நாடுகள் உள்ளன.

இந்தியாவில் அதிகபட்சமாக உடற்கட்டமைப்பு (பாடி பில்டிங்) பிரிவில் 57 விதிமீறல்கள் பதிவாகியுள்ளன. ஒலிம்பிக் விளையாட்டுகளில் முதன்மையாக, பளுதூக்குதலில் 25 விதிமீறல்களும், தடகளத்தில் 20 விதிமீறல்களும், மல்யுத்தத்தில் 10 விதிமீறல்களும் நிகழ்ந்துள்ளன. குத்துச்சண்டை மற்றும் ஜூடோவில் தலா 4 விதிமீறல்கள் இருக்கின்றன. இதுதவிர, கிரிக்கெட்டிலும் 4 விதிமீறல்கள் நிகழ்ந்துள்ளன.

கடந்த 2018–இல் வெளியான அறிக்கையில் இந்தியா மொத்தம் 107 விதிமீறல்களுடன் 4–ஆவது இடத்தில் இருந்தது. அதிலும் அதிகபட்சமாக பளுதூக்குதலில் 22 விதிமீறல்களும், அடுத்தபடியாக தடகளத்தில் 16 மீறல்களும் இருந்திருக்கின்றன.

இந்த அறிக்கையானது, சம்மந்தப்பட்ட விளையாட்டு போட்டியாளா்களிடம் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அதில் சோதனை நடத்தி விதிமீறல் உறுதி செய்யப்பட்டு, அவா்களுக்கான தடையும் விதிக்கப்பட்டதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதாகும்.

2019–இல் உலக அளவில் மொத்தம் 2,78,047 மாதிரிகள் ஊக்கமருந்து பயன்பாடு தொடா்பாக சேகரிக்கப்பட்டன. அதில் 2,701 மாதிரிகளில் (1 சதவீதம்) விதிமீறல்களுக்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெரிந்தது.

ஆய்வு முடிவில் 1,535 மாதிரிகளில் விதிமீறல்கள் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டு, சம்பந்தப்பட்ட நபா்களுக்கு தடை விதிக்கப்பட்டது. உலக அளவிலான எண்ணிக்கையில் உடற்கட்டமைப்பில் தான் அதிக விதிமீறல்கள் (227) உள்ளன. அடுத்து தடகளத்திலும் (227), பளுதூக்குதலிலும் (160) அதிகமாக உள்ளன.

**1. ரிப்போர்ட்டர்ஸ் வித்தௌட் பார்டர்ஸின் ஒரு சமீபத்திய அறிக்கையின்படி, உலக அளவில் பத்திரிகையாளர்களை அதிகம் சிறைபிடிக்கும் நாடு எது?**

அ) இந்தியா

ஆ) வட கொரியா

**இ) சீனா ☑**

ஈ) பாகிஸ்தான்

✓ ரிப்போர்ட்டர்ஸ் வித்தவுட் பார்டர்சின் சமீபத்திய அறிக்கை, தற்போது குறைந்தபட்சம் 127 நிருபர்கள் தடை செய்து வைக்கப்பட்டுள்ள நிலையில், உலக அளவில் பத்திரிகை –யாளர்களை அதிகம் சிறைபிடிக்கும் நாடு சீனா எனக் கூறியுள்ளது. 'The Great Leap Backwards of Journalism in China' என்ற தலைப்பிலான அவ்வறிக்கை, கருத்து மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரான சீனாவின் மீறல்களை வெளிப்படுத்துகிறது.

✓ COVID–19 நெருக்கடியைப் பற்றி மக்களுக்குத் தெரிவித்த –தற்காக 2020இல் குறைந்தது 10 பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

---

**2. BWF உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப்பின் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய முதல் இந்திய பேட்மிண்டன் வீரர் யார்?**

**அ) K ஸ்ரீகாந்த் ☑**



ஆ) பருப்பள்ளி காஷ்யப்

இ) சாய் பிரனீத்

ஈ) நந்து நடேகர்

✓ இந்திய பேட்மிண்டன் சாம்பியனான கே ஸ்ரீகாந்த், BWF உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப்பின் இறுதிப்போட்டி வரை சென்ற முதல் இந்திய வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். ஆனால் கெடுவாய்ப்பாக, கே ஸ்ரீகாந்த் இறுதிப்போட்டியில் சிங்கப்பூரின் லோ கீன் யூவிடம் தோல்வியடைந்து வெள்ளிப்பதக்கத்தை வென்றார்.

✓ கே ஸ்ரீகாந்த், கடந்த 2018 ஏப்ரலில் BWF தரவரிசையில் உலகின் நம்பர்.1 இடத்தைப் பிடித்தார். மேலும் 2015'இல் அர்ஜுனா விருது மற்றும் 2018'இல் பத்மஸ்ரீ விருதுகளைப் பெற்றுள்ளார்.

---

**3. சமீபத்தில் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு முதல் தனியார் பயணியான யுசாகு மேசாவாவை அனுப்பிய விண்வெளி அமைப்பு எது?**

அ) NASA




ஆ) ISRO

**இ) ROSCOSMOS ☑**

ஈ) ESA

✓ ஜப்பானிய கோடீசுவரரான யுசாகு மேசாவா, இரஷ்ய விண்வெளி நிறுவனமான ROSCOSMOSமூலம் டிச.8 அன்று சோயுஸ் விண்கலத்தில் பன்னாட்டு விண்வெளி நிலையத்திற்கு அனுப்பப்பட்டார். பன்னாட்டு விண்வெளி நிலையத்தில் 12 நாட்கள் தங்கியிருந்த பின் அவர் பூமிக்கு திரும்பியுள்ளார். எலோன் மஸ்க்கின் ஸ்பேஸ்X உடன் 2023ஆம் ஆண்டு நிலவுக்குச்செல்லும் அவரது பயணத்தி –ற்கான வெற்றிகரமான பரிசோதனை ஓட்டமாகும் இது.

---

**4. 2021 டிச.20–25 வரையிலான வாரம் இந்தியாவில் என்னவாக கடைப்பிடிக்கப்படுகிறது?**

**அ) நல்லாட்சி வாரம் ☑**



ஆ) ஊழலுக்கு எதிரான வாரம்

இ) வங்கி விழிப்புணர்வு வாரம்

ஈ) பஞ்சாயத்து ராஜ் வாரம்

✓ இந்திய அரசு 2021 டிச.20–25 வரையிலான தேதிகளை 'நல்லாட்சி வார'மாகக் கொண்டாடுகிறது.

✓ நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொது குறைதீர்ப்புத் துறை, பல்வேறு துறைகள் மற்றும் அமைச்சகங்களுடன் இணைந்து, 'நல்லாட்சி'பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த பல்வேறு நிகழ்வுகளை நடத்துகிறது. மேலும், 'ஆசாதி கா அம்ரித் மகோத்சவ்' கொண்டாட்டத்தின் ஒருபகுதியாக 'பிரஷாஷன் கௌன் கி ஔர்' என்ற பெயரில் ஒரு பிரச்சாரம் திட்டமிடப்பட்டுள்ளது. இது சேவை வழங்கலை மேம்படுத்துதல் & பொதுமக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டது.

---

**5. 2021 நதி உத்சவமானது இந்தியாவில் எத்தனை கருப் பொருள்களின்கீழ் கொண்டாடப்படுகிறது?**

அ) இரண்டு

ஆ) மூன்று

**இ) நான்கு ☑**

ஈ) ஆறு

✓ நதி உத்சவம் (ஆறு திருவிழா) இந்தியாவில் உத்தரகாசி முதல் கேரளா வரை பதினாறு மாநிலங்கள் மற்றும் 41 மாவட்டங்களில் தூய்மை, தேசபக்தி, இயற்கை மற்றும் சுற்றுச்சூழல், பக்தி மற்றும் ஆன்மீகம் ஆகிய நான்கு கருப்பொருள்களின்கீழ் கொண்டாடப்படுகிறது.

✓ 2021 டிசம்பர்.16–23 வரை இந்த விழா நடத்தப்படுகிறது. நதிகளுக்கு அருகில் வசிக்கும் மக்கள் அனைவரும் ஆண்டுக்கு ஒருமுறையாவது ஆற்றுத்திருவிழாவைக் கொண்டாட வேண்டும் என்று பிரதமர் 'மான் கி பாத்'தில் ஆற்றிய உரைக்கு இணங்க இது அமைந்துள்ளது.

---

**6. கேப்ரியல் போரிக், எந்த நாட்டின் இளவயது அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார்?**

**அ) சிலி ☑**



ஆ) அர்ஜென்டினா

இ) நியூசிலாந்து

ஈ) இஸ்ரேல்

✓ 35 வயதான இடதுசாரி மில்லினியல் கேப்ரியல் போரிக் சிலியின் இளம் அதிபரானார். எல் சால்வடாரின் நயிப் புக்கேலுக்குப் பிறகு லத்தீன் அமெரிக்காவில் தலைமை தாங்கும் இரண்டாவது மில்லினியல் ஆவார் இவர்.

---

**7. மனிதர்களுக்கு பாதிப்பற்ற ஆனால் பாக்டீரியாவைக் கொல்லும் வைரஸ்களைப் பயன்படுத்தும் சிகிச்சையின் பெயர் என்ன?**



**அ) பேஜ் சிகிச்சை ☑**

ஆ) வைரஸ் சிகிச்சை

இ) ஆண்டிபயாடிக் சிகிச்சை

ஈ) நுண்ணுயிர் சிகிச்சை

- ✓ 'பேஜ் சிகிச்சை' என்பது மனிதர்களுக்கு பாதிப்பற்ற ஆனால் பாக்டீரியாவைக் கொல்லும் வைரஸ்களை (பேஜ் என அறியப்படுகிறது) பயன்படுத்துவதாகும்.
- ✓ புதியதோர் ஆராய்ச்சியின்படி, இச்சிகிச்சையானது நோய்த் தொற்றுகளை மிகவும் திறம்பட குணப்படுத்துவதற்காக நுண்ணுயிர் எதிர்ப்பிகளுடன் இணைந்து பயன்படுத்தப்ப–டலாம். இது எதிருயிரி எதிர்ப்புத் தன்மையின் அச்சுறுத்த–லைக் குறைக்கும்.

---

**8. சுய–உதவி குழுக்களுக்கு சமூக முதலீட்டு நிதியை வழங்கும் திட்டம் எது?**

அ) பிரதமர் ஸ்வச் பாரத் அபியான்

**ஆ) தீனதயாள் அந்தியோதயா யோஜனா – தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கம் ☑**

இ) PM கதி சக்தி யோஜனா

ஈ) PM SHG சம்ரித்தி அபியான்

- ✓ தீனதயாள் அந்தியோதயா யோஜனா – தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கத்தின் (DAY–NRLM) கீழ், சுய உதவி குழுக்கள் சமூக முதலீட்டு நிதியைப் பெறுகின்றன.
- ✓ சமீபத்தில், சுமார் 16 இலட்சம் பெண்கள் பயன்பெறும் வகையில், பிரதமர் மோடி ₹1,000 கோடியை சுய–உதவி குழுக்களின் வங்கிக் கணக்குகளில் வரவு வைத்தார். இது DAY–NRLM திட்டத்தின் கீழ் செய்யப்படுகிறது.

---

**9. 'முக்கிய மந்திரி கன்யா சுமங்கலா திட்டம்' என்பது எந்த மாநிலத்தால் செயல்படுத்தப்பட்ட திட்டமாகும்?**



அ) பீகார்

ஆ) குஜராத்

இ) மத்திய பிரதேசம்

**ஈ) உத்தர பிரதேசம் ☑**

- ✓ 'முக்கிய மந்திரி கன்யா சுமங்கலா திட்டம்' உத்தர பிரதேச மாநிலத்தால் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டம் ஒரு பெண் குழந்தைக்கு அவளது வாழ்க்கையின் வெவ்வேறு கட்டங்களில் ₹15,000 நிதியுதவியை நிபந்தனையுடன் வழங்குகிறது. ₹15,000 தொகையானது ஒரு பயனாளிக்கு அவர் பிறக்கும்போது, ஓராண்டு முழுமையான தடுப்பூசி செலுத்தப்பட்டவுடன், வகுப்பு–I, வகுப்பு–VI மற்றும் வகுப்பு–IX சேர்க்கையின்போது, பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பிறகு XII அல்லது ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு (அ) டிப்ளமோ படிப்பில் சேரும்போது எனப் பல்வேறு நிலைகளில் வழங்கப்படுகிறது.

---

**10. Tseminyu, Niuland மற்றும் Chumukedima ஆகியவை கீழ்காணும் எந்த மாநிலத்தில் உருவாக்கப்பட்ட புதிய மாவட்டங்கள் ஆகும்?**



அ) அஸ்ஸாம்

ஆ) சிக்கிம்

**இ) நாகாலாந்து ☑**

ஈ) அருணாச்சல பிரதேசம்

- ✓ நாகாலாந்து மாநில அரசாங்கம் சேமின்யு, நியுலாந்து மற்றும் சுமுகேதிமா என மூன்று புதிய மாவட்டங்களை உருவாக்கியுள்ளது. இதன்மூலம் அம்மாநிலத்தின் மொத்த மாவட்டங்களின் எண்ணிக்கை 15ஆக மாறியுள்ளது.
- ✓ நாகாலாந்து மாநில ஆளுநர் ஜகதீஷ் முகி, கோஹிமா மாவட்டத்தின்கீழ் சேமின்யு உட்பிரிவு, திமாபூர் மாவட்டத்–தின்கீழ் நியுலாந்து உட்பிரிவு மற்றும் சுமுகேதிமா துணைப்பிரிவு ஆகியவற்றை அறிவித்தார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழகத்தில் 'மீண்டும் மஞ்சப்பை' திட்டம் – மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்**

ஒரு பிளாஸ்டிக் பை மக்களால் சராசரியாக பயன்படுத்தப்படும் நேரம் வெறும் 20 நிமிடங்கள் மட்டுமே, ஆனால், அவை மட்குவதற்கு எடுத்துக்கொள்ளும் காலம் பல நூறு ஆண்டுகள் ஆகும். அதிகப்படியான இந்த பிளாஸ்டிக் மாசுபாட்டினால் நமது பூமி தீவிரமாக பாதிப்படைந்துள்ளது. மேலும், கடல்வாழ் உயிரினங்கள் உள்பட நமது சுற்றுச்சூழல் அமைப்பில் பேரழிவையும் மற்றும் நமது குழந்தைகளின் ஆரோக்கியத்தில் பாதகமான விளைவுகளையும் இந்த பிளாஸ்டிக் மாசுபாடு ஏற்படுத்தி வருகிறது.

இதனை கருத்தில்கொண்டு ஒருமுறை மட்டும் பயன்படுத்தும் 14 வகை பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டு கடுமையான நடவடிக்கைகளை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. கொரோனா பரவும் சூழல் கருதி தடையை நடைமுறைப்படுத்தும் வகையில் தேக்கம் ஏற்பட்டது. தற்போதைய தமிழக அரசு இந்த தடையை மீண்டும் நடைமுறைப்படுத்த மிகவும் தீவிரமாக பணிகளைத் தொடங்கியுள்ளது. பிளாஸ்டிக் பைகளின் பயன்பாட்டை தவிர்க்கும் விழிப்புணர்வையும், அதற்கு மாற்றான துணிப்பைகளையும் நாமே உபயோகிக்கும் பழக்கத்தை பொதுமக்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்பதே "மீண்டும் மஞ்சப்பை" பரப்புரையின் நோக்கம்.

தமிழக அரசின் "மீண்டும் மஞ்சப்பை" பரப்புரைக்கான நிகழ்ச்சி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனை முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் 23–ந் தேதி (இன்று) தொடங்கி வைக்கிறார். இதில் மாநிலத்தின் முக்கிய பிரமுகர்கள் பலரும் பங்கேற்கிறார்கள்.

மேலும் இந்த நிகழ்ச்சியில், தடை விதிக்கப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களுக்கு (பைகள் உள்பட) மாற்றுப்பொருட்களை தயாரிக்கும் தயாரிப்பாளர்களின் விளக்கப்பட கண்காட்சி

பொதுமக்களின் பார்வைக்காக சென்னை வாலாஜா சாலையில் அமைந்துள்ள "கலைவானர் அரங்கத்தில்" இன்று வைக்கப்பட உள்ளது. எனவே, பிளாஸ்டிக் மாற்றுப்பொருட்களுக்கான கண்காட்சியை இன்று மாலை 7 மணி வரை பொதுமக்கள் பார்வையிட்டு, அதனை தங்களுடைய வாழ்விலும் உபயோகித்து சுற்றுச்சூழலை பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**2. இந்தியா அபார சாதனை: யுனிகார்ன் ஸ்டார்ட்அப்பில் உலக அளவில் 3-வது இடம்; பிரிட்டனை முந்தியது**

54 யுனிகார்ன் ஸ்டார்ட்அப் நிறுவனங்களுடன் பிரிட்டனை முந்தி இந்தியா மூன்றாவது இடத்தைப் பிடித்து சாதனை படைத்துள்ளது.

1 பில்லியன் டாலர் அதாவது 100 கோடி டாலர்களுக்கு மேல் மதிப்பைக் கொண்டிருக்கும் ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் யுனிகார்ன் என அழைக்கப்படுகின்றன. 2021-ல் அக்டோபர் மாதம் வரையில் மட்டும் இந்தியாவில் 30 நிறுவனங்கள் யுனிகார்ன் பட்டியலில் இணைந்துள்ளன. 2011–2014 வரையில் இந்தியாவில் ஆண்டுக்கு ஒரு நிறுவனம் யுனிகார்ன் பட்டியலில் இணைந்தது. 2015-ல் அந்த எண்ணிக்கை நான்காக ஆனது.

2018-க்குப் பிறகு யுனிகார்ன் பட்டியலில் இணையும் நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. 2018-ல் 8, 2019-ல், 9, 2020-ல் 10 நிறுவனங்கள் யுனிகார்ன் பட்டியலில் இணைந்தன. இந்த ஆண்டு 30 நிறுவனங்கள் யுனிகார்ன் பட்டியலில் இணைந்திருக்கின்றன.

இதன் மூலம் இந்தியாவில் ஸ்டார்ட்அப் நிறுவனங்களுக்கான தொழில் வாய்ப்புகள் மீது உலகின் கவனத்தை ஈர்க்கச் செய்திருக்கிறது.

இதுகுறித்து ஹுருன் இந்தியா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

54 யுனிகார்ன்களுடன் பிரிட்டனை முந்தி இந்தியா மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்தியாவில் தற்போது 54 யுனிகார்ன்கள் உள்ளன. 2020 இல் இருந்ததை விட 33 யுனிகார்ன்கள் அதிகம். அதே நேரத்தில் இங்கிலாந்தில் தற்போது 39 யுனிகார்ன்கள் உள்ளன, இது ஒரு வருடத்திற்கு முந்தையதை விட 15 அதிகமாகும்.

யுனிகார்ன் ஸ்டார்ட் அப் நிறுவனங்களை அதிகம் கொண்டிருக்கும் நாடுகளின் பட்டியலில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது. அமெரிக்கா 396 யுனிகார்ன் ஸ்டார்ட்அப் நிறுவனங்களைக் கொண்டு முதல் இடத்திலும், சீனா 277 நிறுவனங்களைக் கொண்டு இரண்டாவது இடத்திலும் உள்ளன. இங்கிலாந்து (32) நான்காவது இடத்திலும், ஜெர்மனி (18) ஐந்தாவது இடத்திலும் உள்ளன.

பணப்பரிவர்த்தனை சேவை வழங்கும் நிறுவனங்களில் பேடிஎம், போன்பே, இகாமர்ஸில் பிளிப்கார்ட், ஸ்னாப்டீல், மீஸோ, கல்வித் துறையில் பைஜூஸ், அன்அகாடமி, போக்குவரத்து சேவையில் ஓலா கேப்ஸ், விடுதி சேவையில் ஓயோ, கேமிங்கில் டீரீம் 11 என கடந்த பத்தாண்டுகளில் யுனிகார்ன் பட்டியலில் இணைந்துள்ளன.

இதில் பைஜூஸ் மற்றும் பேடிஎம் 15 பில்லியன் டாலருக்கு மேல் மதிப்பு கொண்ட நிறுவனங்களாக மாறியுள்ளன. பைஜூஸ் இப்போது உலகின் 15 வது மிகவும் மதிப்புமிக்க யுனிகார்ன் ஆகும், அதே நேரத்தில் இன்மோபி 28 வது மிகவும் மதிப்புமிக்க யுனிகார்ன் ஆகும். இது நாட்டின் மூன்றாவது மிகவும் மதிப்புமிக்க தொடக்கமாகும்.

உலகளவில் யுனிகார்ன்களின் வரலாற்றில் 2021 ஆம் ஆண்டு மிகவும் வெற்றிகரமான ஆண்டாக உள்ளது. 2020 ஆம் ஆண்டில் யுனிகார்ன்களின் எண்ணிக்கை வெறும் 568 இல் இருந்து 1,058 ஆக உயர்ந்துள்ளது. 2020 இல் 79% இல் இருந்து 74% ஆகக் குறைந்துள்ளது. இது உலகின் இரண்டு பெரிய பொருளாதாரங்களுக்கு வெளியே உள்ள நாடுகளில் உள்ள நிறுவனங்களின் நிதி சேகரிப்பு வேகத்தை அதிகரித்து வருகிறது.

இந்தியாவில் பெங்களூரில் யுனிகார்ன் ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையில் உருவாகின்றன. அதற்கு அடுத்த இடத்தில் மும்பை இருக்கிறது. இந்த ஆண்டு யுனிகார்ன் பட்டியலில் இணைந்த ஸ்டார்ட்அப் நிறுவனங்களில் 9 நிறுவனங்கள் பெங்களூரையும் 7 நிறுவனங்கள் மும்பையையும் தலைமையிடமாகக் கொண்டவை. பாஸ்டன், பாலோ ஆல்டோ, பாரிஸ், பெர்லின், சிகாகோ போன்ற நகரங்களை விட பெங்களூரில் அதிக யுனிகார்ன்கள் இருக்கின்றன.

இதுமட்டுமின்றி இந்தியர்கள் வெளிநாடுகளிலும் யுனிகார்ன் நிறுவனங்களை தொடங்கி சாதனை படைத்து வருகின்றனர்.

சீனா, இஸ்ரேல் மற்றும் ரஷ்யா. அறிக்கையின்படி, போஸ்ட்மேன், இன்னோவாக்கர், ஐசெர்டிஸ், மோக்லிக்ஸ் உள்ளிட்ட 65 யுனிகார்ன்களை இந்தியாவுக்கு வெளியே இந்தியர்கள் நிறுவியுள்ளனர்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**3. சேதி தெரியுமா?**

டிச.12: பிரான்ஸ் நாட்டின் ஆளுகையிலிருந்து விடுதலை பெறுவது தொடர்பாக பசிபிக் பிராந்தியத்தில் உள்ள நியூ காலிடோனியாவில் பொது வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில், பிரான்ஸின் அங்கமாகத் தொடர மக்கள் ஆதரவளித்தனர்.

டிச.14: பர்மிங்ஹாமில் நடைபெற்ற காமன்வெல்த் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் அஜய் சிங் 81 கிலோ பிரிவில் தங்கப் பதக்கம் வென்றார்.

டிச.15: நைஜீரியாவில் இருந்து தோகா வழியாக தமிழகம் வந்த 47 வயதுடைய நபருக்கு ஒமைக்ரான் தொற்று உறுதியானதாக தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அறிவித்தது.

டிச.15: குன்னூர் ஹெலிகாப்டர் விபத்தில் காயத்துடன் தப்பிய குரூப் கேப்டன் வருண் சிங் சிகிச்சை பலனின்றி

பெங்களூருவில் காலமானார். இதன்மூலம் விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 14ஆக அதிகரித்தது.

டிச.16: 1971–ஆம் ஆண்டு வங்கதேசத்தைப் பிரிக்கும் வகையில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான போரில் வெற்றி அடைந்ததன் 50–ஆம் ஆண்டு பொன்விழா கொண்டாடப்பட்டது.

டிச.16: பெண்களின் குறைந்தபட்ச திருமண வயதை 18 வயதிலிருந்து 21 ஆக உயர்த்தும் அரசின் முடிவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

டிச.16: மேற்கு வங்கத் தலைநகர் கொல்கத்தாவில் பிரசித்திபெற்ற திருவிழாக்களில் ஒன்றான துர்கா பூஜைக்கு யுனெஸ்கோவின் பாரம்பரிய அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

டிச.17: சூரியனை ஆய்வுசெய்ய முதன் முறையாக அமெரிக்காவின் நாசா அனுப்பிய பார்க்கர் சோலார் விண்கலம் சூரியனின் மேற்பரப்பில் நுழைந்து புதிய அத்தியாயம் படைத்திருக்கிறது.

டிச.17: 'நீராருங் கடலுடுத்த' எனத் தொடங்கும் மனோன்மணீயம் சுந்தரனார் இயற்றிய தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை தமிழ்நாடு அரசின் மாநிலப் பாடலாக அறிவித்து அரசாணை வெளியிடப்பட்டது.

---

**4. 'ப்ரலே' ஏவுகணை வெற்றிகரமாக சோதனை**

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தரையிலிருந்து செலுத்தக்கூடிய 'ப்ரலே' ஏவுகணையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டிஆர்டிஓ) முதன்முறையாக செலுத்தி வெற்றிகரமாக பரிசோதித்தது.

ஒடிஸா கடற்கரைப் பகுதியில் உள்ள அப்துல் கலாம் தீவிலிருந்து முதன்முறையாக இந்த ஏவுகணை செலுத்தப்பட்டு வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

இந்தச் சோதனை அதன் அனைத்து இலக்குகளையும் எட்டியது. இந்தப் புதிய ஏவுகணை அதன் திட்டமிட்ட இலக்கை துல்லியமாக தாக்கியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஏவுகணை திட எரிபொருள் ராக்கெட் மோட்டார் மற்றும் பல்வேறு புதிய தொழில்நுட்பங்கள் அடிப்படையில் இயங்கக் கூடியது. இது 150 முதல் 500 கிலோ மீட்டர் வரை பாய்ந்து சென்று தாக்கக் கூடியது என்பதோடு நடமாடும் சாதனத்திலிருந்து செலுத்தக் கூடியதாகும்.

விஞ்ஞானிகளின் இந்தச் சாதனைக்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

---

**5. ஆசிய ஹாக்கி: இந்தியாவுக்கு வெண்கலம்: பாகிஸ்தானை வீழ்த்தி பதக்கம் பெற்றது**

ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா 4–3 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானை வீழ்த்தி வெண்கலப் பதக்கம் வென்றது.

நடப்புச் சாம்பியனான இந்தியா கடந்த செவ்வாய்க்கிழமை தனது அரையிறுதியில் ஜப்பானிடம் 3–5 என்ற கணக்கில் தோல்வியடைந்த நிலையில், 3–ஆவது இடத்துக்காக பாகிஸ்தானை புதன்கிழமை சந்தித்தது.

முன்னதாக பாகிஸ்தானும் தனது அரையிறுதியில் தென் கொரியாவிடம் 5–6 என்ற கணக்கில் தோற்று இந்த ஆட்டத்துக்கு வந்திருந்தது. இந்தியா தனது லீக் ஆட்டத்திலேயே பாகிஸ்தானை வீழ்த்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

எனினும் அந்த ஆட்டத்துடன் ஒப்பிடுகையில், வெண்கலப் பதக்கத்துக்கான இந்த ஆட்டத்தில் இந்தியா கடுமையாகப் போராடும் நிலை இருந்தது. அணிக்கு 11 பெனால்டி கார்னர் வாய்ப்புகள் கிடைத்தும், அதில் இரண்டையே இந்தியாவால் கோலாக மாற்ற முடிந்தது.

தொடக்கத்திலிருந்தே பாகிஸ்தான் தடுப்பாட்டத்துக்கு நெருக்கடி கொடுத்தது இந்தியா. அதன் பலனாக முதல் நிமிஷத்திலேயே வரிசையாக 4 பெனால்டி கார்னர் வாய்ப்புகள் கிடைத்தன. அதில் கடைசி வாய்ப்பில் கோலடித்து அணியின் கணக்கை தொடங்கினார் துணை கேப்டன் ஹர்மன்பிரீத் சிங்.

தொடர்ந்து பாகிஸ்தானின் பாதுகாப்பு வளையத்தை பலமுறை ஊடுருவிச் சென்றாலும், துல்லியமான கோல் வாய்ப்பை இந்திய அணியால் உருவாக்க முடியாத நிலை இருந்தது. நேரம் செல்லச் செல்ல தனது ஆட்டத்தை தொடங்கிய பாகிஸ்தான், 10–ஆவது நிமிஷத்தில் ஆட்டத்தை சமன் செய்தது.

இந்தியாவின் தடுப்பாட்டத்தில் ஹர்மன்பிரீத் செய்த சிறு தவறை சாதகமாக பயன்படுத்திக் கொண்ட பாகிஸ்தான் வீரர் அஃப்ராஸ், இந்திய கோல்கீப்பர் கிருஷண் பகதூர் பாதக்கை கடந்து கோலடித்தார். சிறிது நேரத்திலேயே இந்தியாவுக்கு 5–ஆவது பெனால்டி கார்னர் வாய்ப்பு கிடைத்தாலும், அதில் ஹர்மன்பிரீத் மேற்கொண்ட கோல் முயற்சியை பாகிஸ்தான் தடுப்பாட்ட வீரர்கள் தடுத்தனர்.

14–ஆவது நிமிஷத்தில் பாகிஸ்தானுக்கு கிடைத்த முதல் பெனால்டி கார்னர் வாய்ப்பை கோலாக மாற விடாமல் முறியடித்தார் கோல்கீப்பர் கிருஷன் பகதூர். 2–ஆவது கால்மணி நேர ஆட்டம் மிகவும் பரபரப்பாக இருந்தது. இந்தியாவின் பல கோல் முயற்சிகளுக்கு பாகிஸ்தானின் மாற்று கோல்கீப்பராக வந்த அம்ஜத் அலி அணை போட்டார்.

22–ஆவது நிமிஷத்தில் இந்தியாவுக்கான பெனால்டி கார்னர் வாய்ப்பில் ஹர்மன்பிரீத் கோலடிக்க முயல, அம்ஜத் அலி அதை தடுத்தார். 4 நிமிஷங்களுக்குப் பிறகு ஆகாஷ் தீப் சிங் ரிவர்ஸ் ஹிட் முறையில் ஒரு கோல் வாய்ப்புக்கு முயற்சிக்க, அதுவும் அம்ஜத் அலியை கடக்க முடியாமல் போனது. பின்னர் இந்தியாவின் 7–ஆவது பெனால்டி கார்னர் வாய்ப்பிலும் ஜர்மன்பிரீத் சிங்கை கோலடிக்க விடாமல் செய்தார் அம்ஜத்.

இவ்வாறாக முதல் பாதி ஆட்டம் சமனிலையில் முடிந்தது. 33–ஆவது நிமிஷத்தில் பாகிஸ்தானின் 2–ஆவது பெனால்டி கார்னர் வாய்ப்பில் அப்துல் ராணா கோலடிக்க, அந்த அணி முன்னிலை பெற்றது. அதே நிமிஷத்தில் அப்துல் ராணா ஒரு ஃபீல்டு கோலுக்கும் முயற்சிக்க, அது கோல்போஸ்டில் பட்டு வீணானது.

இந்நிலையில், ஆட்டத்தின் 45–ஆவது நிமிஷத்தில் குர்சாஹிப்ஜித் சிங் அருமையாக ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க, அதில் தவறாமல் கோலடித்த சுமித்,

ஆட்டத்தை 2–2 என சமன் செய்தார். இதனால் ஆட்டம் விறுவிறுப்பானது. இந்தியாவுக்கு அதிக கோல் வாய்ப்புகள் கிடைத்தும் பாகிஸ்தான் அதில் பலன் கிடைக்க விடாமல் தடுத்தது.

எனினும் 53–ஆவது நிமிஷத்தில் கிடைத்த இரு பெனால்டி கார்னர் வாய்ப்புகளில் ஒன்றை வருண் குமார் கோலாக மாற்ற, இந்தியா முன்னிலை பெற்றது. தொடர்ந்து பாகிஸ்தானுக்கும் இரு பெனால்டி கார்னர் வாய்ப்புகள் கிடைத்தாலும் அதை இந்திய கேப்டன் மன்பிரீத் சிங் திறம்படத் தடுத்தார்.

57–ஆவது நிமிஷத்தில் லலித் யாதவ் பாஸ் செய்த பந்தை ஆகாஷ்தீப் சிங் கோலடிக்க இந்தியா 4–2 என முன்னேறியது. ஆனால், அதே நிமிஷத்தில் பாகிஸ்தான் வீரர் அகமது நதீமும் கோலடிக்க, அந்த அணி 3–4 என நெருங்கியது. எஞ்சிய நேரத்தில் பாகிஸ்தான் ஸ்கோர் செய்ய முடியாததால், இறுதியில் இந்தியா 4–3 என்ற கோல் கணக்கில் த்ரில் வெற்றி கண்டது.

ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஜப்பானை வீழ்த்தி தென் கொரிய அணி சாம்பியன் ஆனது. முன்னதாக அந்த இரு அணிகள் மோதிய இறுதி ஆட்டம் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் முடிவில் 3}3 என சமநிலையில் இருந்தது. இதையடுத்து வெற்றியாளரை தீர்மானிக்க நடத்தப்பட்ட "ஷூட் அவுட்' முறையில் தென் கொரியா 4}2 என்ற கோல் கணக்கில் வென்றது.

முன்னதாக லீக் சுற்றில் தனது அனைத்து ஆட்டங்களிலும் வெற்றியை பதிவு செய்திருந்த இந்தியா, தென் கொரியாவுக்கு எதிரான முதல் ஆட்டத்தை மட்டும் சமன் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**1. மருத்துவ உயிர்வளி ($O_2$) வீணாவதைத்தடுக்க 'தேசிய உயிர்வளி பொறுப்புத்திட்டத்தை'த் தொடங்கியுள்ள நாடு எது?**

அ) அமெரிக்கா

**ஆ) இந்தியா ☑**

இ) UK

ஈ) வங்காளதேசம்



- ✓ மருத்துவ உயிர்வளியை வீணாவதைத் தடுப்பதற்காக, இந்திய அரசு, மருத்துவ உயிர்வளியை பகுத்தறிவுடன் பயன்படுத்துவதில், சுகாதாரப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக, 'தேசிய உயிர்வளி பொறுப்புத் திட்டத்தை' அறிமுகப்படுத்தியது.
- ✓ இத்திட்டத்தின்கீழ், நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தபட்சம் ஓர் உயிர்வளி பொறுப்பா–ளர் கண்டறியப்பட்டு அவருக்கு பயிற்சி அளிக்கப்படும் என மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. உயிர்வளி இருப்புபற்றிய தகவல்களை வெளியிடுதற்காக 'ஆக்ஸிகேர்' என்ற தகவல் பலகையும் அமைக்கப்பட்டது.

---

**2. இந்தியாவில் 'வெர்னாகுலர் இன்னோவேஷன்' திட்டத்தைத் தொடங்கிய நிறுவனம் எது?**

அ) ISRO

**ஆ) NITI ஆயோக் ☑**

இ) BARC

ஈ) NSIL




- ✓ NITI ஆயோக்கின் அடல் புத்தாக்க இயக்கம், 22 தாய்மொழி–களில் புதுமையான சூழலை அணுகுவதற்கு தொழில் முனைவோருக்கு உதவும் வட்டாரமொழி புத்தாக்க திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அடல் புத்தாக்க திட்டம், 22 அட்டவணைப்படுத்தப்பட்ட மொழிகள் ஒவ்வொன்றிலு–ம் ஒரு வட்டார மொழி பணிக்குழுவிற்கு பயிற்சியளிக்கும்.
- ✓ ஒவ்வொரு பணிக்குழுவும் வட்டார மொழி ஆசிரியர்கள், பாட வல்லுநர்கள், தொழில்நுட்ப எழுத்தாளர்கள் மற்றும் பிராந்திய அடல் அடைவு மையங்களின் தலைமை ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

---

**3. இந்தியாவில் மசாலாப் பொருட்களின் உற்பத்தியின் வருடாந்திர வளர்ச்சி விகிதம் 2014–2020 வரை ___?**

**அ) முன்னோக்கி ☑**

ஆ) பின்னோக்கி

இ) கோணல்மாணல்

ஈ) ஒரேபோன்ற



- ✓ "வாசனைத் திரவிய புள்ளிவிவரங்கள் ஒருபார்வை 2021" என்ற நூலை வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் வெளியிட்டார்.
- ✓ இந்நூலில் வாசனைத்திரவியங்கள் சாகுபடி செய்யப்படும் இடம், அவற்றின் உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி, விலை & நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு வாசனைத் திரவியங்களின் மதிப்புபற்றிய விவரங்கள் இடம்பெற்றுள்ளன. மத்திய வேளாண் & விவசாயிகள் நலத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் பாக்கு மற்றும் வாசனைத்திரவிய வளர்ச்சித்துறை இயக்ககம் இந்த நூலை வெளியிட்டுள்ளது.
- ✓ நாட்டில், 2014–15இல் 67.64 இலட்சம் டன்னாக இருந்த வாசனைத்திரவியப் பொருட்கள் உற்பத்தி 2020–21இல் 106.79 லட்சம் டன்னாக மாறியுள்ளது. ஆண்டு வளர்ச்சி விகிதம் 7.9%ஆக உள்ளது.

---

**4. குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயிக்கும் செயற்–பாட்டில், உழவர்களின் குறைந்தபட்ச இலாபம் என்ன?**

அ) 20%

ஆ) 25%

**இ) 50% ☑**

ஈ) 75%




- ✓ வேளாண் செலவுகள் மற்றும் விலைகளுக்கான ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இது விவசாயிகளுக்கு குறைந்தபட்சம் 50% இலாபத்தை உறுதிசெய்கிறது. அரவை கொப்பரைக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை குவிண்டாலுக்கு ₹255/–உம், பந்து கொப்பரைக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை குவிண்டாலுக்கு ₹400/ம் உயர்த்துவதற்கு பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

---

**5. ஆபரணங்களில் பயன்படுத்தப்படும் 'ஜேட்' கனிமத்தை அதிகம் உற்பத்தி செய்யும் நாடு எது?**

அ) வங்காளதேசம்

**ஆ) மியான்மர் ☑**

இ) நேபாளம்

ஈ) லாவோஸ்



- ✓ முன்னர் 'பர்மா' என்றழைக்கப்பட்ட மியான்மர், உலகின் மிகப்பெரிய 'ஜேட்' உற்பத்தியாளராகும். இது நகைகளில் பயன்படுத்தப்படும் பச்சை நிறக் கனிமமாகும். சமீபத்தில், மியான்மரில் உள்ள ஒரு 'ஜேட்' சுரங்கத்தில் நிலச்சரிவு ஏற்பட்டதில், நூற்றுக்கும் மேற்பட்டோர் புதைந்தனர். அதில் ஒருவர் இறந்தது உறுதி செய்யப்பட்டது.

---

**6. "பாதுகாப்பான மற்றும் பொறுப்பான புலம்பெயர்வு" என்ற முன்னெடுப்பைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?**

**அ) ஜார்கண்ட் ☑**

ஆ) ஒடிஸா

இ) உத்தர பிரதேசம்

ஈ) பீகார்

- ✓ ஜார்கண்ட் மாநிலம் "பாதுகாப்பான மற்றும் பொறுப்பான புலம்பெயர்வு" என்ற முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது. புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தாங்கள் வாழும் மற்றும் செல்லும் மாவட்டங்கள் குறித்து முறையாக பதிவு செய்ய இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ✓ மக்கள் நடமாட்டத்தை முறையான கட்டமைப்பின்மூலம் ஆய்வு செய்வதற்கு இந்தத்திட்டம் அரசுக்கு உதவும். லடாக் மற்றும் கேரளாவில் இரண்டு "தொழிலாளர் துணை தூதரகங்களை" அமைக்கவும் ஜார்கண்ட் மாநில அரசு முடிவுசெய்துள்ளது.

---

**7. எந்த மாநிலம் / யூடியில் ரிஷிஹூட் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டுள்ளது?**



அ) குஜராத்

ஆ) உத்தரகாண்ட்

**இ) புது தில்லி ☑**

ஈ) புதுச்சேரி

- ✓ குடியரசுத்துணைத்தலைவர் வெங்கையா, புதுதில்லியில் உள்ள அறிவியல் பவனில் ரிஷிஹூட் பல்கலைக்கழகத் –தை திறந்து வைத்தார். மாநிலங்களவை எம்பி'உம், ரிஷிஹூட் பல்கலையின் நிறுவனரும், வேந்தருமான சுரேஷ் பிரபுவும் இந்நிகழ்ச்சியில் உடனிருந்தார்.
- ✓ நீர் மையம், ஆட்சியில் புதுமை மையம் போன்ற சமூக தாக்கத்தை மேம்படுத்துதற்கான பல்வேறு முயற்சிகளை அப்பல்கலைக்கழகம் தொடங்கியுள்ளது.

---

**8. சூரத் மெட்ரோ இரயில் திட்டத்திற்காக இந்தியா எந்த வங்கியுடனான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**



அ) ADB

**ஆ) KFW ☑**

இ) AIIB

ஈ) World Bank

- ✓ சூரத் மெட்ரோ ரயில் திட்டத்திற்காக இந்திய அரசாங்கமும் ஜெர்மனி மேம்பாட்டு வங்கி – KFWஉம் (Kreditanstalt für Wiederaufbau) 442.26 மில்லியன் யூரோ மதிப்பிலான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இத்திட்டத்தின் மொத்த செலவு யூரோ 1.50 பில்லியன் (₹12,020 கோடி) என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் KFW வங்கி யூரோ 442.26 மில்லியன் நிதியுதவி செய்கிறது.
- ✓ சூரத் மெட்ரோ ரயில் திட்டம் இந்த ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கப்பட்டது. இந்தத்திட்டத்திற்கு பிரெஞ்சு மேம்பாட்டு முகமை AFD மூலம் இணை நிதியுதவி வழங்கப்படுகிறது.

---

**9. எந்த மாநிலத்தில், DRDE நவீன உயிரியல் பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் (ABDRC) அமைக்கப்படவுள்ளது?**



அ) பீகார்

ஆ) குஜராத்

**இ) மத்திய பிரதேசம் ☑**

ஈ) உத்தர பிரதேசம்

- ✓ மத்திய பிரதேச மாநிலம் குவாலியரில், மனிதர்களுக்கு ஆபத்தான வைரஸ்களைப் பற்றி ஆய்வுசெய்வதற்கான மேம்பட்ட உயிரியல் பாதுகாப்பு ஆய்வகத்தை பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம் (DRDE) அமைக்கவுள்ளது.
- ✓ இந்த ஆராய்ச்சி மையம் (ABDRC) ஆபத்தான வைரஸ்கள், மனிதர்கள் மீது அவற்றின் தாக்கம் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. மேலும் இம்மையம் அவற்றை எதிர்த்துப் போராடுவதற்கான உபகரணங்களை உருவாக்கும்.

---

**10. 'அடிப்படை எழுத்தறிவு & எண்ணியல் குறியீட்டில்' முதலிடம் பிடித்த மாநிலம் எது?**



அ) அஸ்ஸாம்

ஆ) சிக்கிம்

**இ) மேற்கு வங்காளம் ☑**

ஈ) அருணாச்சல பிரதேசம்

- ✓ பத்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் கல்வியறிவுக்கான குறிகாட்டியான 'அடிப்படை எழுத்தறிவு & எண்ணியல் பற்றிய குறியீடு' பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவால் வெளியிடப்பட்டது.
- ✓ இக்குறியீட்டை போட்டிக் கழகம் தயாரித்துள்ளது. இந்தத் தரவரிசையில் மேற்கு வங்கம் (58.95) முதலிடத்தையும் பீகார் 'பெரிய மாநிலங்கள்' பிரிவில் கடைசி இடத்தையும் பிடித்தது. 'சிறிய மாநிலங்கள்' பிரிவில் கேரளா (67.95) முதலிடத்தைப் பிடித்தது. UT மற்றும் வடகிழக்கு மாநிலப் பிரிவில் முறையே லட்சத்தீவு (52.69) மற்றும் மிசோரம் (51.64) அதிக மதிப்பெண்களைப் பெற்ற பகுதிகளாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஆயுள் தண்டனை கைதிகள் முன் விடுதலை: ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் 6 பேர் கொண்ட குழு அமைப்பு**

ஆயுள் தண்டனை கைதிகளை முன் கூட்டியே விடுதலை செய்ய ஓய்வுபெற்ற நீதிபதி ஆதிநாதன் தலைமையில் 6 பேர் கொண்ட குழு அமைத்து முதலமைச்சர் மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

ஆயுள்தண்டனை கைதி முன்விடுதலை தொடர்பாக ஆய்வுசெய்து ஆதிநாதன் தலைமையிலான குழு பரிந்துரை வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறையில் இருபதாண்டுகள்தண்டனை முடிந்தும் விடுதலை ஆகாத சிறைவாசிகள் விடுதலை குறித்து குழு ஆய்வு செய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

**2. தொல்காப்பியத்தின் ஹிந்தி மொழிபெயர்ப்பு வெளியீடு**

தொல்காப்பியத்தின் ஹிந்தி மொழி பெயர்ப்பு, செம்மொழி தமிழ் இலக்கியத்தின் 9 கன்னட மொழி பெயர்ப்பு புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளதாக மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் இயக்குநர் இரா சந்திரசேகரன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழ் மொழியின் வளரர்ச்சிக்காக இந்தியக் கல்வி அமைச்சகத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஓர் ஆய்வு நிறுவனமாகும். இதன் மூலமாக தமிழ் பழங்கால இலக்கணத்தை பிற இந்திய மொழிகளிலும், வெளிநாட்டு மொழிகளிலும் மொழிபெயர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதையொட்டி தற்போது செம்மொழி நிறுவனம் தயாரித்து உள்ள தொல்காப்பியம் நூலின் ஹிந்தி மொழிபெயர்ப்பு மற்றும் கன்னடத்தில் தொல்காப்பியம் மற்றும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் மொழிபெயர்ப்பு நூல்களை தில்லியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் கல்வித்துறை இணை அமைச்சர் சுபாஷ் சர்கார் வெளியிட்டுள்ளார். கன்னடத்தில் மட்டும் 9 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

---

**3. ஃபிஃபா பட்டியலில் 18 இந்திய நடுவர்கள்**

ஃபிஃபா தயாரித்துள்ள 2022–ஆம் ஆண்டுக்கான சர்வதேச கால்பந்து நடுவர்கள் பட்டியலில் இந்தியாவிலிருந்து 18 பேர் இடம்பெற்றுள்ளனர்.

அகில இந்திய கால்பந்து சம்மேளனத்தின் தகவல்படி, இதில் 14 ஆண் நடுவர்களும், 4 பெண் நடுவர்களும் அடங்குவர். இந்த நடுவர்கள், 2022–இல் நடைபெறும் சர்வதேச அளவிலான கால்பந்து போட்டிகளிலும் நடுவராகப் பணியாற்ற தகுதியுடையவர்களாகின்றனர். அத்துடன், ஆண்டு முழுவதும் ஃபிஃபாவின் அதிகாரப்பூர்வ பேட்ஜை சீருடையில் அணிந்துகொள்ளும் அனுமதியும் இவர்களுக்கு உண்டு.

இந்திய நடுவர்களின் விவரம் வருமாறு:

ஆண் நடுவர்கள்:

தேஜஸ் நக்வென்கர், C R ஸ்ரீகிருஷ்ணா, ரோவன் ஆறுமு –கன், கிரிஸ்டல் ஜான், பிராஞ்சல் பானர்ஜி, வெங்கடேஷ் ராமச்சந்திரன். (உதவி நடுவர்கள் தனி)

பெண் நடுவர்கள்: ரஞ்சிதா தேவி டெக்சாம், கனிகா பர்மான். (உதவி நடுவர்கள் தனி)

---

**4. தமிழகத்தின் வனப்பரப்பை 33 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை**

தமிழகத்தின் வனப்பரப்பை 33 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என வனத் துறை அமைச்சர் கா ராமச்சந்திரன் தெரிவித்தார்.

---

**5. மாமல்லபுரத்தில் 29ஆம் ஆண்டு இந்திய நாட்டிய விழா தொடங்கியது**

செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரம் கடற்கரை கோயில் வளாகத்தில் 29–ஆம் ஆண்டு இந்திய நாட்டிய விழா வியாழக்கிழமை தொடங்கியது.

ஜன.23ஆம் தேதி வரை நடைபெறும் நாட்டிய விழாவில் நாள்தோறும் மாலை பிரசித்தி பெற்ற உள்நாட்டு நாட்டியக் கலைஞர்கள் பங்கேற்று, மின்னொளியில் பல்வேறு கலைநிகழ்ச்சிகளை வழங்கவுள்ளனர்.

---

**6. ஒமைக்ரான் Vs டெல்மைக்ரான்: வேறுபாடுகளும் தாக்கமும் – சில அடிப்படைத் தகவல்கள்**கரோனா வைரஸின் உருமாற்றமான ஒமைக்ரானுக்கு உலக நாடுகள் அஞ்சிவரும் நிலையில், மேற்கத்திய நாடுகளையும், அமெரிக்காவையும் டெல்மைக்ரான் வைரஸ் மிரட்டி வருகிறது. அதென்ன... ஒமைக்ரான் வைரஸ் பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். இதென்ன 'டெல்மைக்ரான்' வைரஸ்? ஒமைக்ரானிலிருந்து எவ்வாறு வேறுபட்டிருக்கிறது, பாதிப்பு எப்படி இருக்கும்? – அடிப்படைக் கேள்விகளுக்கான பதில்கள் இதோ...

டெல்மைக்ரான் என்றால் என்ன? – கரோனா வைரஸின் இரட்டை திரிபுதான் 'டெல்மைக்ரான்' வைரஸ். ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் வேகமாக டெல்மைக்ரான் வைரஸ் பரவிவருகிறது. அதாவது, கரோனா வைரஸின் உருமாற்றமான டெல்டா வைரஸ், ஒமைக்ரான் வைரஸ் ஆகிய இரு குணங்களையும் கொண்டதுதான் 'டெல்மைக்ரான்' வைரஸ்.

மகாராஷ்டிரா கோவிட் தடுப்பு குழுவின் மருத்துவர் ஷசாங் ஜோஷி கூறுகையில் "ஐரோப்பிய நாடுகளிலும், அமெரி'க்காவிலும் டெல்டா, ஒமைக்ரான் வைரஸ் குணங்களைக் கொண்ட டெல்மைக்ரான் வைரஸ் பரவிவருகிறது" எனத் தெரிவித்துள்ளார்.

டெல்மைக்ரான் எங்கு பரவுகிறது? – டெல்மைக்ரான் வைரஸ் இரட்டை திரிபுநிலை கொண்டதால், ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் வேகமாகப் பரவி வருகிறது. தற்போது டெல்டா வைரஸ், ஒமைக்ரான் வைரஸ் ஆகிய இரு வைரஸ்களும் உலகம் முழுவதும் வந்துவி'ட்டது. இரு வைரஸ்களின் இணைப்புதான் டெல்மைக்ரான். இந்த வைரஸின் தாக்கத்தால்தன் ஐரோப்பிய நாடுகள், அமெரிக்காவில் மீ'ண்டும் கோவிட் தொற்று வேகமெடுத்துள்ளது.

யாரை டெல்மைக்ரான் தாக்க வாய்ப்பு? – உடலில் குறைவான நோய் எதிர்ப்புச் சக்தி இருப்போர், முதியோர், இணை நோய்கள் இருப்பவர்கள், தடுப்பூசி செலுத்தாமல் இருக்கும் தனிநபர்களுக்கு டெல்மைக்ரான் வைரஸ் தாக்கும் வாய்ப்புள்ளது. இரு வைரஸின் குணங்களின் இணைவு என்பது சூப்பர் ஸ்ட்ரைனாக மாறிவிடும் என்று நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் வைராலஜிஸ்ட் பீட்டர் வொய்ட் தெரிவித்துள்ளார்.

டெல்மைக்ரான் தாக்கம் இந்தியாவில் இருக்குமா? – மகாராஷ்டிரா கோவிட் தடுப்பு குழுவின் மருத்துவர் ஷசாங் ஜோஷி கூறுகையில் "இ'ந்தியாவில் பெரும்பாலும் டெல்டா வைரஸ் பாதிப்புதான் தீவிரமாக இருக்கிறது, டெல்டா வைரஸ் பரவிய வேகத்தைவிட ஒமைக்ரான் வேகமாக உலகம் முழுவதும் பரவிவருகிறது. ஆனால் டெல்டா, ஒமைக்ரான் கூட்டிணைவு எவ்வாறு செயல்படும் என்பதை கணிக்க முடியவில்லை. மும்பையில் செரோ சர்வேயில் 90 சதவீதம் மக்களுக்கு கரோனா பாதித்துவிட்டது தெரியவந்துள்ளது; 88 சதவீத மக்கள் முதல் டோஸ் தடுப்பூசி ெசலுத்திவிட்டார்கள்" எனத் தெரிவித்தார்

டெல்மைக்ரான் அறிகுறிகள் என்ன? – டெல்டா, ஒமைக்ரான் பாதிப்பில் இருக்கும் அதே அறிகுறிகள்தான் டெல்மைக்ரானிலும் இருக்கும். அதிகமான காய்ச்சல், தொடர் இருமல், சுவை, மணம் அறிதலில் மாற்றம், தலைவலி, மூச்சில் நீர்வடிதல், தொண்டை வலி, கட்டிக்கொள்ளுதல், கரகரப்பு போன்றவை இருக்கும்.

உலக சுகாதார அமைப்பு என்ன சொல்கிறது? – டெல்மைக்ரான் வைரஸ் குறித்து உலக சுகாதார அமைப்பு இதுவரை அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை. தற்போது

ஒமைக்ரான் பாதிப்பின் புள்ளிவிவரங்களையும், டெல்டா புள்ளிவிவரத்தையும் ஆய்வு செய்து வருகிறது.

---

**7. இசை கற்போர் பயிற்சி பள்ளி மாணவர்களுக்கு ₹3 ஆயிரம் உதவித்தொகை:**

திருக்கோயில் தவில், நாதஸ்வர பயிற்சி பள்ளிகளில் பயின்று வரும் மாணவர்கள் பயன்பெறும் வகையில், உயர்த்தப்பட்ட உதவித்தொகையான ₹3,000 வழங்கும் திட்டத்தை முதல்வர் மு க ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

தமிழக அரசு வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

முதல்வர் மு க ஸ்டாலின் வெள்ளிக்கிழமை காலை தலைமைச் செயலகத்தில், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை சார்பில் அர்ச்சகர், ஓதுவார், பிரபந்த விண்ணப்பர், வேதபாராயணர் மற்றும் இசை கற்போர் (தவில், நாதஸ்வரம்) ஆகிய பயிற்சி பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.1000 ஊக்கத் தொகையை ரூ.3 ஆயிரமாக உயர்த்தி வழங்கும் திட்டத்தை, 18 மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கி, முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் 20210–22 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், அர்ச்சகர், ஓதுவார், பிரபந்த விண்ணப்பர், வேதபாராயணர் மற்றும் இசை கற்போர் (தவில், நாதஸ்வரம்) ஆகியோருக்கு பயிற்சிக் காலத்தில் ஏற்கனவே ரூ. 1,000 ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, அந்த ஊக்கத்தொகை ரூ.3 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன்படி, பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மற்றும் மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் வேதபாராயணர் பள்ளிகளில் பயின்று வரும் 18 மாணவர்கள், மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மற்றும் திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில் ஓதுவார் பயிற்சி பள்ளிகளில் பயின்று வரும் 24 மாணவர்கள் மற்றும் பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் தவில், நாதஸ்வர பயிற்சி பள்ளிகளில் பயின்று வரும் 25 மாணவர்கள், என மொத்தம் 67 மாணவர்கள் பயன்பெறும் வகையில், உயர்த்தப்பட்ட உதவித்தொகையான ரூ. 3 ஆயிரத்தை 18 மாணவர்களுக்கு முதல்வர் மு க ஸ்டாலின் வழங்கி தொடங்கி வைத்தார்.

---

**8. 'வந்தே பாரத்' சொகுசு ரயில்கள் அடுத்த ஆண்டு முதல் தயாரிப்பு:**

வந்தே பாரத் அதிவிரைவு சொகுசு ரயில்கள் அடுத்த ஆண்டு முதல் தயாரிக்கப்படும் என்று ஒருங்கிணைந்த ரயில் இணைப்பு பெட்டி தொழிற்சாலை (ICF) பொதுமேலாளர் A K அகர்வால் கூறினார்.

சென்னை ICF வளாகத்தில் உள்ள டாக்டர் அம்பேத்கர் அரங்கில் நேற்று முன்தினம் 66–வது ரயில்வேவார விழா நடைபெற்றது.

தெற்கு ரயில்வே முன்னாள் பொதுமேலாளர் வசிஷ்ட ஜோகிரி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, கடந்த ஆண்டு சிறப்பாகப் பணியாற்றிய 298 ஊழியர்கள், அதிகாரிகளுக்கு பதக்கம், பாராட்டுச் சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசு வழங்கினார்.

இதில், ICF பொதுமேலாளர் A K அகர்வால் பேசும்போது, "கடந்த ஆண்டு கரோனா பேரிடர் காலத்தில் பல்வேறு சவால்கள் இருந்தும் ICF ஊழியர்கள் சிறப்பாகப் பணியாற்றி, சுமார் 2,000 ரயில் பெட்டிகளைத் தயாரித்துள்ளனர்.

அவற்றில், இலங்கை ரயில்வேக்கான ஏற்றுமதி ரயில் பெட்டிகள், நீலகிரி மலை ரயிலுக்கான புதிய வடிவமைப்புடன் கூடிய பெட்டிகள், எல்எ.ஃச்பி வடிவமைப்பிலான புதிய விஸ்டடோம் சுற்றுலாப் பயணிகள் ரயில் பெட்டி, மும்பை புறநகர் ரயில் சேவைக்கான குளிர்சாதன வசதி செய்யப்பட்ட ரயில் பெட்டிகள் போன்றவை அடங்கும்.

மேலும், இலங்கை ரயில்வேயில் இருந்து ரூ.106 கோடி மதிப்பிலான, குளிர்சாதன வசதி செய்யப்பட்ட டீசல்புறநகர் ரயில் மின் தொடர்களை ஏற்றுமதி செய்யவும் ஆர்டர் கிடைத்துள்ளது.

இத்தாலி தரச் சான்றிதழ்

இந்திய ரயில்வேயின் உற்பத்தித் தொழிற்சாலைகளில் முதல்முறையாக, இத்தாலியின் இன்டெர்டெக் ஸ்பா அமைப்பிடம் இருந்து, ரயில்பெட்டிகள்மற்றும் பாகங்களுக்கான வெல்டிங் தொழில்நுட்பத்துக்கு தரச் சான்றிதழ் கிடைத்துள்ளது.

அடுத்த ஆண்டு செப்டம்பர் முதல் ஒரு மாதத்துக்கு 4 முதல் 5 'வந்தே பாரத்' அதிவிரைவு சொகுசு ரயில்கள் தயாரித்து அனுப்பப்பட உள்ளன. அதேபோல, அடுத்த ஆண்டு தொடக்கத்தில் மேம்படுத்தப்பட்ட வந்தே பாரத் ரயில் உற்பத்தி தொடங்கும்" என்றார்.

---

**9. ராணுவத்திற்குள் தகவல் பகிர்வுக்கான புதிய செயலி; இந்திய ராணுவம் அறிமுகம்**

அசிக்மா (பாதுகாப்பான முறையில் ராணுவத்திற்குள் செய்தியிடல் செயலி) எனும் புதிய தலைமுறை, நவீன, இணைய அடிப்படையிலான செயலியை இந்திய ராணுவம் இன்று அறிமுகப்படுத்தியது. ராணுவத்தின் கார்ப்ஸ் ஆஃப் சிக்னல்ஸ் அதிகாரிகள் குழுவால் முழுக்க உள்நாட்டிலேயே இது உருவாக்கப்பட்டது.

கடந்த 15 ஆண்டுகளாக சேவையில் உள்ள ராணுவ வைட் ஏரியா நெட்வொர்க் தகவல் முறைக்கு பதிலாக ராணுவத்தின் உள் மட்டங்களில் இந்தப் செயலி பயன்படுத்தப்படுகிறது. ராணுவத்திற்கு சொந்தமான வன்பொருளில் இது களமிறக்கப்பட்டுள்ளதோடு எதிர்கால மேம்படுத்தல்களுக்கான வாழ்நாள் ஆதரவோடு திகழ்கிறது.

அனைத்து எதிர்கால தகவல் பகிர்வு தேவைகளையும் இது பூர்த்தி செய்வதோடு மேம்பட்ட பயனர் அனுபவத்தை வழங்குகிறது. பல நிலை பாதுகாப்பு, தகவல் முன்னுரிமை

மற்றும் கண்காணிப்பு உள்ளிட்ட பல்வேறு சமகால அம்சங்களை இந்த செயலி கொண்டுள்ளது.

எதிர்காலத்திற்கு தயாராக இருக்கும் இந்த செயலி, ராணுவத்தின் உடனடி தரவு பரிமாற்றம் மற்றும் தகவல் பரிமாற்ற தேவைகளை பூர்த்தி செய்யும். குறிப்பாக, தற்போதைய புவிசார் அரசியல் பாதுகாப்பு சூழலின் பின்னணியில் இந்திய அரசின் மேக் இன் இந்தியா முயற்சிக்கு இணங்க இது உள்ளது.

குறிப்பாக கொவிட்–19 பரவலுக்குப் பிறகு தானியங்கி முறையை ஒரு முக்கிய முயற்சியாக இந்திய ராணுவம் முன்னெடுத்துள்ளதோடு, காகிதமில்லாத செயல்பாட்டை நோக்கி கணிசமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த முயற்சிகளை அசிக்மா மேலும் மேம்படுத்தும்.

---

**10. 32 ஆண்டுகால தேச சேவைக்குப் பிறகு விடைபெற்ற ஐஎன்எஸ் குக்ரி கப்பல்**

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதலாவது ஏவுகணை தாங்கி கப்பலான ஐஎன்எஸ் குக்ரி, நாட்டிற்கு 32 ஆண்டுகாலம் ஆற்றிய சிறப்புமிகு சேவைக்குப் பிறகு வியாழக்கிழமை 23 டிசம்பர் 2021 அன்று பணியிலிருந்து விடைபெற்றது. இதையொட்டி விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கிழக்கு பிராந்திய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல், பிஸ்வஜித் தாஸ் குப்தா சிறப்பு விருந்தினராக கொண்டார். இந்தக் கப்பலின் இன்னாள், முன்னாள் கமாண்டிங் அதிகாரிகளும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

மஸகான் கப்பல் கட்டும் தளத்தில், 23 ஆகஸ்ட் 1982 அன்று கட்டப்பட்ட இந்தக் கப்பல், அப்போதைய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு கே சி பந்த் மற்றும் காலஞ்சென்ற கேப்டன் மகேந்திரநாத் முல்லாவின் மனைவி திருமதி சுதா முல்லா ஆகியோரால் தேச சேவைக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இந்தக் கப்பல் மேற்கு மற்றும் கிழக்குப் பிராந்திய கடற்படைகளில் சேவையாற்றிய பெருமை உடையதாகும்.

---

**11. பத்திரப்பதிவில் மூத்த குடிமக்களுக்கு முன்னுரிமை! ஜனவரி 1–ம் தேதி முதல் அமல்**

பத்திரப்பதிவில் மூத்த குடிமக்களுக்கு முன்னுரிமை வழங்கும் நடைமுறை ஜனவரி 1–ம் தேதி முதல் அமலுக்கு வருவதாக அரசாணை வெளியிடப்பட்டு உள்ளது.

பதிவுத்துறையின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காக பல சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக இணையதளம் மூலம் பதிவு செய்து, ஒன்றன் பின் ஒருவராக பதிவு செய்யும் வகையில் ஒதுக்கீடு நடைபெற்று வருகிறது. இதனால், வேண்டியவர், வேண்டாதவர் என்ற பாகுபாடு தவிர்க்கப்படுகிறது. சாதாரண மக்களும் குறிப்பிட்ட நேரத்தில் பத்திரப்பதிவு செய்து வருகின்றனர். ஆனால், இந்த நடவடிக்கையால், மூத்த குடிமக்கள் காத்திருக்கும் அவலம் ஏற்பட்டுள்ளது. இதை தடுக்கும் பொருட்டு, தற்போது சில திருத்தங்கள் செய்யப்பட்டு உள்ளன.

மூத்த குடிமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இனி வரும் காலத்தில் எழுதிக்கொடுப்பவர் அல்லது எழுதி வாங்குபவரில் யாரேனும் ஒருவர் எழுபது (70) வயதைக் கடந்தவராக இருக்கும் பட்சத்தில் அவர்கள் தங்களின் வரிசை எண்ணுக்காக காத்திருக்காமல் அலுவலகம் வந்தவுடன் உடனடியாக பதிவு செய்யும் வண்ணம் மென்பொருளில் உரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பான பதிவுகளை ஆதார் அடையாள அட்டை அல்லது உரிய அடையாள அட்டையின் உதவியுடன் வயது சரிபார்த்து, அவர்கள் 70 வயதுக்கு மேற்பட்டவராக இருப்பின், பதிவு நாளன்று அவர்களுக்கு எந்த வரிசையில் டோக்கன் செய்திருந்தாலும் அவர்கள் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்த உடனேயே, பத்திரப்பதிவை செய்ய அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து உடனடியாக ஆவணம் பதிவு செய்யப்படும்.

இந்த அறிவிப்பு எதிர்வரும் 01.01.2022 முதல் நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

**1.** **'சிவப்புக்குடை' என்பது எவ்வகை தொழிலாளர்களின் உரிமைகளைக் குறிக்கும் சின்னமாகும்?**

**அ) பாலியல் தொழிலாளர்கள் ☑**



ஆ) LGBT ஆர்வலர்கள்

இ) சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்

ஈ) விலங்கு ஆர்வலர்கள்

✓ பாலியல் தொழிலாளர்களுக்கு எதிரான வன்முறையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பன்னாட்டு நாள் ஒவ்வோர் ஆண்டும் டிச.17 அன்று அனுசரிக்கப்படுகிறது. இது உலகெங்கிலும் உள்ள பாலியல் தொழிலாளர்களுக்கு எதிரான வெறுப்பு குற்றங்களை முன்னிலைப்படுத்த முயல்கிறது.

✓ 'சிவப்புக்குடை' என்பது பாலியல் தொழிலாளர்களின் உரிமைகளுக்கான முக்கிய அடையாளமாகும். அது டிச.17 அன்று நடைபெறும் நிகழ்வுகளில் பயன்படுத்தப்படுகிறது. இந்தச் 'சிவப்புக்குடை' சின்னம் முதன்முதலில் கடந்த 2001ஆம் ஆண்டில், இத்தாலியின் வெனிஸில் பாலியல் தொழிலாளர்களால் பயன்படுத்தப்பட்டது.

---

**2.** **அண்மையில் குழந்தைத் தொழிலாளர் (தடை மற்றும் கட்டுப்பாடு) (திருத்தம்) விதிகள் – 2021'ஐ வெளியிட்ட மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு



**ஆ) தெலுங்கானா ☑**

இ) மேற்கு வங்காளம்

ஈ) ஒடிஸா

✓ தெலுங்கானா மாநில அரசானது தெலுங்கானா குழந்தைத் தொழிலாளர் (தடை & கட்டுப்பாடு) (திருத்தம்) விதிகள் – 2021'ஐ வெளியிட்டுள்ளது.

✓ இது குழந்தைகளை வெவ்வேறு வேலைகளில் பணி அமர்த்துபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை –யைத் தொடங்க எண்ணுகிறது. இதன் விதிகளின்படி, குழந்தைகள் பள்ளி நேரங்களிலும், இரவு 7 மணி முதல் மறுநாள் காலை 8 மணி வரையிலும் எந்தப் பணியையும் செய்யமாட்டார்கள்.

---

**3.** **பெண்களுக்கான சட்டப்பூர்வ திருமண வயதை__ஆக உயர்த்தும் திட்டத்தை மத்திய அமைச்சரவை நிறைவேற்றியது.**

அ) 19 ஆ) 20

**இ) 21 ☑** ஈ) 25

**21**

✓ பெண்களுக்கான சட்டப்பூர்வ திருமண வயதை ஆண்களுக்கு நிகராக 18இல் இருந்து 21ஆக உயர்த்தும் பரிந்துரையை மத்திய அமைச்சரவை நிறைவேற்றி உள்ளது. ஜெயா ஜெட்லி தலைமையிலான பணிக்குழு கடந்த 2020 டிசம்பரில் NITI ஆயோக்கிற்குச் சமர்ப்பித்த பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

---

**4.** **UNESCO பாரம்பரிய பட்டியலில் கீழ்காணும் எந்த மொழியின் 'சித்திர மொழி' சேர்க்கப்பட்டுள்ளது?**

அ) தமிழ்



**ஆ) அரபு ☑**

இ) உருது

ஈ) ஜப்பானிய மொழி

✓ 'அரபி சித்திர மொழி: அறிவு, திறன்கள் & நடைமுறைகள்' என்பது UNESCO'இன் மனிதகுலத்தின் தொட்டுணர முடியா கலாச்சார பாரம்பரிய பட்டியலில் அதிகாரபூர்வமாக சேர்க்கப்பட்டுள்ளது. இது அரபு கல்வி கூடமைப்பு, கலாசார மற்றும் அறிவியல் அமைப்பின் மேற்பார்வையின்கீழ் சவூதி அரேபியா தலைமையிலான 15 அரபு நாடுகளின் ஒத்துழைப்பில் மேற்கொள்ளப்பட்டது.

---

**5.** **தேசிய காசநோய் மாநாட்டை நடத்திய நகரம் எது?**

அ) சென்னை




**ஆ) புது தில்லி ☑**

இ) பாட்னா

ஈ) வாரணாசி

✓ பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் தேசிய காசநோய் மாநாட்டை புது தில்லி அறிவியல் அரங்கில் ஏற்பாடு செய்துள்ளது. துணைக் குடியரசுத் தலைவர் M வெங்கையா தலைமை விருந்தினராகவும், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் ஸ்மிருதி இரானியும் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியாவும் கலந்துகொண்டனர்.

✓ 2030ஆம் ஆண்டின் SDG காலவரிசைக்கு முன்னதாக, 2025ஆம் ஆண்டளவில் காசநோயை ஒழிப்பதற்கான அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வையை இந்தியப் பிரதமர் அறிவித்தார்.

---

**6.** **எந்த வெளியீட்டு நிறுவனம்/ இணையதளம் 'Allyship' என்பதை ஆண்டின் சொல்லாகக் குறிப்பிட்டுள்ளது?**

**அ) டிக்ஷனரி.காம் ☑**




ஆ) காலின்ஸ்

இ) ஆக்ஸ்போர்டு

ஈ) ரென் & மார்ட்டின்

✓ Dictionary.com 'Allyship' என்பதை 'ஆண்டின் சொல்'லாக அறிவித்துள்ளது. இது சமீபத்திய ஆண்டுகளில் மீண்டும் புதிதாக உருவாக்கப்பட்ட பழைய பெயர்ச்சொல்லாகும்.

✓ இவ்வலைத்தளத்தின்படி, 1800'களின் இடைப்பகுதியில் "Allyship" சொல் முதன்முதலில் வெளிவந்தாலும், கடந்த சில தசாப்தங்களில், இந்தச் சொல் ஒரு நுணுக்கமான மற்றும் ஒரு குறிப்பிட்ட அர்த்தத்தை கொடுக்கும் வகையில் உருவாகியுள்ளது.

---

**7.** **கீழ்காணும் எந்த நாட்டிலிருந்து 6 இலட்சம் AK-203 துப்பாக்கிகளை வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது?**

**அ) ரஷ்யா ☑**



ஆ) பிரான்ஸ்

இ) இஸ்ரேல்

ஈ) அமெரிக்கா

✓ 6,01,427 ஏகே-203 அசால்ட் ரைபில்கள் கொள்முதல் செய்வதற்கான உடன்பாடு கையெழுத்தானது. பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் இந்தியா-ரஷ்யா இடையே கூட்டு முயற்சி பாதுகாப்பு தொழில்துறை நிறுவனங்கள் இதில் கையெழுத்திட்டுள்ளன. இந்நிறுவனங்களில் முறையே 50.5% மற்றும் 49.5% பங்குகள் உள்ளன. இந்த ரைபில்கள் உத்தர பிரதேசத்தின் கோர்வாவில் உள்ள IRRPL தொழிற்சாலையில் தயாரிக்கப்படவுள்ளன.

---

**8.சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் சமீபத்திய தரவுகளின்படி, 2009 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் மின்சாரம் தாக்கி யானைகள் அதிக அளவில் இறந்த மாநிலம் எது?**

**அ) ஒடிஸா ☑**



ஆ) மகாராஷ்டிரா

இ) மேற்கு வங்காளம்

ஈ) குஜராத்

✓ மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் அளித்த தரவுகளின்படி, 2009-2019 வரை நாடு முழுவதும் மின்சாரம் தாக்கி 600 யானைகள் இறந்துள்ளன. இதில் ஒடிஸாவில் 117, கர்நாடகாவில் 116, அஸ்ஸாமில் 105 யானைகள் உயிரிழந்துள்ளன.

✓ அருணாச்சல பிரதேசம், திரிபுரா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் மட்டும் மின்சாரம் தாக்கி எந்த யானையும் இறக்கவில்லை.

---

**9. 'சக்தி குற்றவியல் சட்ட மசோதாவுடன் தொடர்புடைய மாநிலம் எது?**

அ) பீகார்



ஆ) குஜராத்

**இ) மகாராஷ்டிரா ☑**

ஈ) உத்தர பிரதேசம்

✓ மகாராஷ்டிர மாநில அரசு, சக்தி மசோதாவில் திருத்தம் செய்வதற்காக, கூட்டுத் தேர்வுக் குழுவின் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை தாக்கல் செய்தது. மகாராஷ்டிர அரசாங்கத்தின் சக்தி குற்றவியல் சட்டங்கள் (மகாராஷ்டிர திருத்தம்) மசோதா-2020, பாலியல் வன்புணர்வு, அமில வீச்சு போன்ற குற்றங்களுக்கான தண்டனையை அதிகரிக்க முன்மொழிகிறது.

---

**10.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற 'Paxlovid' என்பது எந்த நோய்க்கு எதிரான முதல் அங்கீகரிக்கப்பட்ட மாத்திரை?**

**அ) COVID-19 ☑**



ஆ) நிமோகாக்கல் நோய்

இ) இருதய நோய்

ஈ) எய்ட்ஸ்

✓ COVID-19'க்கு எதிரான முதல் மாத்திரையை அமெரிக்க சுகாதார கட்டுப்பாட்டாளர்கள் அங்கீகரித்துள்ளனர்.

✓ 'பாக்ஸ்லோவிட்' எனப் பெயரிடப்பட்ட இது உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஃபைசர் மருந்து. பாசிட்டிவ் COVID உடன் வீட்டிலிருக்கும் பெரியவர்கள் மற்றும் 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட சிறார்களுக்கு இந்த மருந்து அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. அனைத்து கிரிக்கெட்டில் இருந்தும் ஹர்பஜன் சிங் ஓய்வு: முடிவுக்கு வந்த 23 ஆண்டு கால ஆடுகள வாழ்க்கை**

இந்திய அணியின் சுழற்பந்துவீச்சாளரும், பாஜி என்று அழைக்கப்படுவரான ஹர்பஜன் சிங் அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுவதாக இன்று ட்விட்டரில் அறிவித்தார். 1998-ம் ஆண்டு இந்திய அணிக்குள் அறிமுகமான ஹர்பஜன் சிங் ஏறக்குறைய 23 ஆண்டுகள் இந்திய கிரிக்கெட்டோடு இணைபிரியாமல் பயணித்தார். அவரின் இந்த நீண்ட பயணம் இன்றுடன் முடிவுக்கு வந்தது.

ஹர்பஜன் சிங் கடந்த 1998-ம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிரான பெங்களூரு டெஸ்டில் இந்திய அணியில் தனது 17 வயதில் அறிமுகமாகினார். ஒருநாள் போட்டியில் அதே ஆண்டில் ஏப்ரல் மாதம் ஷார்ஜாவில் நடந்த போட்டியில் நியூஸிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் ஹர்பஜன் சிங் அறிமுகமாகினார். டி20 போட்டியில் 2006ம் ஆண்டு டிசம்பர் 1ம் தேதி ஜோகன்னஸ்பர்க் நகரில் தென் ஆப்பிரி'க்காவுக்கு எதிரான டி20 தொடரில் முதல்முறையாக ஹர்பஜன் அறிமுகமாகினார்.

டெஸ்ட் போட்டிகளில் 100 போட்டிகளுக்கு மேல் விளையாடிய 4-வது இந்திய வீரர் என்ற பெயரெடுத்த ஹர்பஜன் சிங் 103 போட்டிகளில் 417 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். 236 ஒருநாள் போட்டிகளில் ஆடிய பாஜி 269 விக்கெட்டுகளையும், 28 டி20 போட்டிகளில் ஆடி 25 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார். டெஸ்ட் போட்டியில் 2,224 ரன்களையும் அடித்துள்ளார்; இதில் 2 சதங்கள், 9 அரைசதங்கள் அடங்கும். ஒருநாள் போட்டியில் 1237 ரன்களை ஹர்பஜன் சேர்த்துள்ளார்.

பஞ்சாப் ரஞ்சிக் கோப்பை அணிக்கு கேப்டனாக இருந்துள்ள ஹர்பஜன் சிங், சாம்பியன்ஸ்லீக் தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கும் கேப்டனாக இருந்துள்ளார். இவரின் தலைமையில்தான் 2011 சாம்பியன்ஸ் லீக்கை மும்பை இந்தியன்ஸ் அணி வென்றது. ஐபிஎல் தொடரில் மும்பை இந்தியன்ஸ்,

கொல்கத்தா நைட் ரைடர்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ் ஆகிய அணிகளில் ஹர்பஜன் விளையாடியுள்ளார்.

கடந்த 1998-ம் ஆண்டு இந்திய அணியில் அறிமுகமாகினாலும் 2001-ம்ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர்தான் ஹர்பஜன் சிங்கை நிமிர்ந்து பார்க்க வைத்தது. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 3 டெஸ்ட் போட்டிகளில் 32 விக்கெட்டுகளை ஹர்பஜன் சிங் கைப்பற்றினார்.

2001-ம் ஆண்டு கும்ப்ளே காயத்தால் அவதிப்பட்டபோது, இந்திய அணியில் இருந்த சிறந்த சுழற்பந்துவீச்சாளராக ஹர்பஜன் இருந்தார். டெஸ்ட் போட்டியில் ஹாட்ரிக் விக்கெட் வீழ்த்திய முதல் இந்திய சுழற்பந்துவீச்சாளர் என்ற பெருமையையும் ஹர்பஜன் பெற்றார். 2001-ம் ஆண்டு ஹர்பஜன் சிங்கின் ஆட்டத்தைப் பார்த்த பஞ்சாப் அரசு இவருக்கு காவல் துணைக் கண்காணிப்பாளர் பதவி வழங்கியது.

2007-ம் ஆண்டு தோனி தலைமையில் இந்திய அணி டி20 உலகக் கோப்பையை வென்ற இந்திய அணியிலும், 2011-ம் ஆண்டு ஒருநாள் உலகக் கோப்பையை வென்ற இந்திய அணியிலும் ஹர்பஜன் சிங் இடம் பெற்றிருந்தார்.

ஹர்பஜன் சிங் என்றாலே சர்ச்சை என்பதையும் மறக்க முடியாது. 2008-ம் ஆண்டில் ஆஸ்திரேலிய வீரர் சைமண்ட்ஸுடன் மோதலில் இனவெறியுடன் பேசியதாக குற்றம்சாட்டப்பட்ட நிலையில், தடையிலிருந்து ஹர்பஜன் சிங் தப்பித்தார். அதன்பின் ஐபிஎல் தொடரில் ஸ்ரீசாந்தை கன்னத்தில் அறை ஐபிஎல் தொடர்முழுவதும் விளையாட ஹர்பஜன் சிங்கிற்கு தடை விதிக்கப்பட்டது நினைவுகூரத்தக்கது.

---

**2. புதிய வகை ரோஜா பூவுக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் பெயர்**

இந்தியாவின் முன்னணி தோட்டக்கலை நிபுணரான கொடைக்கானலைச் சேர்ந்த எம்.எஸ்.வீரராகவன், புதிய வகை ரோஜா ஒன்றைவளர்த்துள்ளார். இதற்கு, வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதனை கவுரவிக்கும் வகையில் அவரது பெயரை சூட்டியுள்ளார்.

இந்த வகை ரோஜாவானது, மெஜந்தா ஊதா நிறத்தை கொண்டுள்ளது. மேலும் மிகுந்த நோய் எதிர்ப்பு சக்தி கொண்டதாகும். கரும் பச்சை இலைகளுடன் காணப்படும் இதன் செடி, 4 முதல் 5 அடி வரை வளரக்கூடிதாகும்.

உணவுப்பயிர் சாகுபடியில் புதிய அணுகுமுறைகளை கொண்டுவருவதில் பேராசிரியர் சுவாமிநாதன் முன்னோடியாக திகழ்ந்தார். இது உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்து இந்தியாவை தன்னிறைவு அடையச் செய்தது. இந்திய பசுமைப் புரட்சியின் தந்தை என்றும் அவர் அழைக்கப்படுகிறார். இந்நிலையில் பெங்களூருவில் உள்ள நர்சரி ஒன்றில் மற்றொருவகை ரோஜாவை கே.எஸ்.ஜி.சோன் என்பவர் உருவாக்கியுள்ளார். பளபளக்கும் இளஞ்சிவப்பு நிறத்திலான இந்த ரோஜாவுக்கு 'மான்கொம்பு ரோஜா' என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த 2 ரோஜாக்களையும் டெல்லியைச் சேர்ந்த மலர் வளர்ப்பு விஞ்ஞானியும் மத்திய அரசின் தோட்டக்கலை துறை முன்னாள் இயக்குநருமான நரேந்திர தத்லானி, சென்னையில் உள்ள எம்.எஸ்.சுவாமிநாதன் இல்லத்தில் அவரை சந்தித்து வழங்கினார்.

---

**3. மு.க.ஸ்டாலினுக்கு அம்பேத்கர் சுடர் விருது**

விசிகவின் அம்பேத்கர் சுடர் விருது முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு அம்பேத்கர் சுடர் விருதும், மதிமுக பொதுச்செயலாளர் வைகோவுக்கு பெரியார் விருதும் வழங்கப்பட்டது. இவ்விருதினை விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் வழங்கினார்.

மேலும் பேச்சாளர் நெல்லை கண்ணனுக்கு காமராஜர் விருதும், பி.வி.கரியமாலுக்கு அயோத்திதாசர் ஆதவன் விருதும் அல்ஹாஜ் மு. பஷீர் அகமதுக்கு காயிதேமில்லத் பிறை விருதும், க.இராமசாமிக்கு செம்மொழி ஞாயிறு விருதும் வழங்கப்பட்டுள்ளது.

---

**4. இணைய வழக்குகளில் விரைவாக துப்புதுலக்க வசதி; தமிழகத்தில் முதல்முறையாக சென்னையில் 'சைபர் தடய ஆய்வகம்' – அடுத்த மாதம் பயன்பாட்டுக்கு வருகிறது**

இணைய குற்ற வழக்குகளில் விரைவாகவும், துல்லியமாகவும் துப்புதுலக்கும் வகையில் தமிழகத்தில் முதல்முறையாக சென்னையில் அதிநவீன சைபர் தடய ஆய்வகம் உருவாக்கப்பட்டுள்ளது. இது அடுத்த மாதம் பயன்பாட்டுக்கு வர உள்ளது.

தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மோசடி செய்தல், தகவல் தொழில்நுட்ப சேவைகளை முறைகேடாகப் பயன்படுத்தல், இணையம் மூலம் ஏமாற்றுதல், கணினிமற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்களிலிருந்து தகவல்களைத் திருடுதல், மற்றவர்களின்தகவல்களையோ, புகைப்படங்களையோ தவறாகப் பயன்படுத்துவது, மின்னஞ்சல் மற்றும் இன்டர்நெட் கால் மூலம் மிரட்டுவது, இணையவழி பொருளாதாரக் குற்றங்களில் ஈடுபடுவது உள்ளிட்ட சைபர் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன.

மேலும், வாட்ஸ்அப், பேஸ்புக், ட்விட்டர் உள்ளிட்ட சமூக வலைதளதங்களில் அவதூறு பரப்பும் செயல்களும் அதிகமாகி விட்டன.வங்கியிலிருந்து மேலாளர் பேசுவதாகக்கூறி, விவரங்களைப் பெற்று, வாடிக்கையாளர்களின் பணத்தை திருடுதல், பேஸ்புக் மூலம் பணம் மோசடி செய்தல்,வெளிநாட்டில் இருந்து பேசுவதாகக் கூறி, திருமணம் செய்து கொள்வதாக பெண்களுடன் நெருங்கிப் பழகி, அவர்களது புகைப்படங்களை சமூக வலைதளங்களில் வெளியிடுவதாக மிரட்டி பணம் பறிப்பது உள்ளிட்ட குற்றங்களும் அதிகரித்துள்ளன. இது தொடர்பாக காவல் நிலையங்களில் தினமும் புகார்கள் அளிக்கப்படுகின்றன.

2020-ல் இந்தியாவில் சைபர்க்ரைம் தொடர்பாக 50 ஆயிரம்வழக்குகள் பதிவு செய்யப்பட்டுஉள்ளன. முந்தைய ஆண்டைக் காட்டிலும் இது 11.8 சதவீதம் அதிகமாகும்.

ஆன்லைன் மூலம் பெறப்படும் சைபர் க்ரைம் தொடர்பான புகார்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கவும், சமூக வலைதளக் குற்றங்களில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை

எடுக்கவும் வசதியாக, சென்னை போலீஸாருக்கு கணினித்திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

எனினும், சைபர் குற்ற வழக்குகளில் துப்பு துலக்குவதில் காலதாமதம் ஏற்படுவதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலும், சைபர் குற்றங்கள் தொடர்பான வழக்கில் விரைந்து புலன்விசாரணை மேற்கொள்ளவும், சந்தேகமின்றி துல்லியமாக குற்றம்புரிந்த நபர்களை அடையாளம் காணும் வகையிலும் சென்னையில் 'சைபர் தடயங்கள் ஆய்வகம்' அமைக்கப்பட்டுள்ளது.

வேப்பேரியில் உள்ள காவல் ஆணையர் அலுவலகத்தில் உள்ள இந்த ஆய்வகம் அடுத்த மாதம் பயன்பாட்டுக்கு வர உள்ளதாக காவல் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆய்வகத்தில் தடய அறிவியல் துறையினர், காவல் துறையினர் மட்டுமின்றி, தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கும் தனியார் துறையைச் சேர்ந்த இருவரும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

**5. பூஸ்டர் டோஸ், சிறார்களுக்கான தடுப்பூசி: வழிகாட்டு நெறிமுறைகள் வெளியீடு**

சிறார்களுக்கான தடுப்பூசி மற்றும் பூஸ்டர் டோஸ் குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய சுகாதாரத்துறை திங்கள்கிழமை வெளியிட்டுள்ளது.

நாடு முழுவதும் ஒமைக்ரான் வேகமாக பரவி வரும் நிலையில், முன்களப் பணியாளர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் இணை நோயால் பாதிக்கப்பட்டுள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர் டோஸ் தடுப்பூசியும், 15 முதல் 18 வரையிலான குழந்தைகளுக்கு தடுப்பூசியும் ஜனவரி 3ஆம் தேதி முதல் செலுத்தப்படும் என மத்திய அரசு அறிவித்திருந்தது.

இந்நிலையில் மத்திய அரசு வெளியிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறையில் கூறியிருப்பது:

முன்களம், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் இணை நோயுள்ள 60 வயதுக்கு மேற்பட்டோர்:

முன்பே பதிவு செய்யப்பட்டுள்ள கோவின் கணக்கு மூலம் தான் பூஸ்டர் டோஸ் செலுத்தப்படும்.

இரண்டாம் தவணை செலுத்தப்பட்டு 39 வாரங்கள் அல்லது 9 மாதங்களை கடந்தவர்களுக்கு மட்டுமே பூஸ்டர் டோஸ் போடப்படும்.

முன்பு செலுத்தப்பட்ட தடுப்பூசியே பூஸ்டர் டோஸாக ஜனவரி 10ஆம் தேதி முதல் செலுத்தப்படும்.

பூஸ்டர் டோஸ் செலுத்தப்பட்டவுடன் கோவின் சான்றிதழில் மாற்றம் செய்யப்படும்.

ஆன்லைன் மற்றும் தடுப்பூசி மையங்களில் நேரடியாக சென்று பதிவு செய்து பூஸ்டர் டோஸ் செலுத்திக் கொள்ளலாம்.

15 – 18 வரையிலான சிறார்:

2007 அல்லது அதற்கு முன்பு பிறந்தவர்களுக்கு மட்டுமே கரோனா தடுப்பூசி செலுத்தப்படும்.

ஜனவரி 1 முதல் கோவின் இணையதளத்தில் முன்பதிவு செய்யப்படும்.

ஜனவரி 3 முதல் சிறார்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படும்.

சிறார்களுக்கு கோவேக்ஸின் தடுப்பூசி மட்டுமே போடப்படும்.

ஆன்லைன் மற்றும் தடுப்பூசி மையங்களில் நேரடியாக சென்று பதிவு செய்து தடுப்பூசி செலுத்திக் கொள்ளலாம்.

இந்த வழிகாட்டு நெறிமுறைகள் அனைத்தும் ஜனவரி 3, 2022 முதல் அமலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**6. ஏ.ஓ. ஹியூம்: இந்தியர்களின் உரிமைக் குரலை எதிரொலித்த ஆங்கிலேயர்**

பம்பாய் மாகாணத்தில் பம்பாய் அசோசியேஷன், பூனா சர்வோஜனிக் சபா, வங்காளத்தில் இந்தியன் அசோசியேஷன், சென்னையில் மெட்ராஸ் மகாஜன சபா என இந்தியா முழுக்க தனித் தனியாக இந்தியர்களுக்கான உரிமைக் குழுக்கள் இயங்கிவந்த வேளை அது. இந்த அமைப்புகளின் சக்தியை ஒன்றாகத் திரட்டுவதன் மூலம்தான் இந்திய மக்களின் உரிமைக்கான குரல் வலுப்பெறும் என அனைவரையும் 'இந்திய தேசிய காங்கிரஸ்' என்று ஒரே குடைக்குள் திரட்டியவர் ஆலன் ஆக்டேவியன் ஹியூம்.

1829–ல் ஸ்காட்லாந்தில் பிறந்து, இந்தியன் சிவில் சர்வீஸ் பணிக்காக இந்தியா வந்தவர் ஹியூம். 1885–ல், மும்பை நகரின் கோவாலியா குளக்கரையில் உள்ள பள்ளிக்கூடத்தில் டிசம்பர் 28–ல் அவரால் இந்திய தேசிய காங்கிரஸ் தொடங்கப்பட்டது. உலக அளவில் பழமையானதும், இன்று வரை நிலைத்திருக்கக்கூடியதுமான ஒருசில அமைப்புகளுள் இந்திய தேசிய காங்கிரஸும் முக்கியமான ஒன்று. ஆங்கிலேயரின் நடவடிக்கைகளை எதிர்த்துப் புரட்சிகள் எழுந்துவிடாமல் தணிக்கும் 'பாதுகாப்பு வால்வு' போல அமைந்திருப்பதாகத்தான் காங்கிரஸ் அமைப்பின் தொடக்கத்தை இந்தியர்கள் சந்தேகத்துடன் பார்த்தார்கள். ஆங்கில ஆட்சியாளர்களும் ஆரம்பத்தில் அப்படியான மனநிலையில்தான் காங்கிரஸை வரவேற்றனர். ஆனால், அந்த அமைப்புதான் பின்னாளில் ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பெரும் தலைவலியாகி, இந்திய விடுதலைக்கு வித்திட்டு இன்று வரை 146 வருடங்களாக நிலைத்திருக்கிறது.

மாவட்ட அதிகாரியாக இருந்தபோதே, மக்கள் முன்னேற்றத்துக்குக் கல்விதான் அடிப்படைத் தேவை என்பதால், தொடக்கக் கல்வி கிடைப்பதில் பல முன்னெடுப்புகளை எடுத்தார் ஹியூம். ஆங்கிலம் தாண்டி தாய்மொழிக் கல்வியை முன்வைத்தார். இந்திய மொழிகளில் சர்வதேசத் தகவல்களை மேம்படுத்த 'லோகமித்ரா' என்ற இந்தி பத்திரிகையையும், 'முகிப்–இ–ரியா' (Muhib–i–riaya) என்ற உருதுப் பத்திரிகையையும் தொடங்கினார். மேல்படிப்புக்கு உதவித்தொகை பெறும் திட்டத்தைக் கொண்டுவந்தார். அப்போது, வைசிராயாக இருந்த மாயோ, ஹியூமின் மக்கள் நல முன்னெடுப்புகளுக்கு உறுதுணையாக இருந்தார்.

செயலாளராக ஹியூம் பதவி உயர்வு பெற்றவுடன், இந்திய விவசாயிகள் முன்னேற்றத்தில் அதிக ஈடுபாடு கொண்டார். விவசாயிகள், தங்கள் நிலத்தை அடமானம் வைத்து, விவசாயம் செய்து அதிகப்படியான வட்டியைக் கட்ட முடியாமல் தவித்த சூழலில், பெரும் வியாபாரிகள் மட்டுமே பயன்பெறும் வகையில் இருந்த வங்கிகளை அரசு வங்கிகளாக மாற்றி, விவசாயிகளுக்கு உதவத் திட்டம் வகுத்தார். அதற்கு எதிர்ப்புகள் கிளம்பவே கூட்டுறவு வங்கித் திட்டத்தை விவசாயிகளுக்காகக் கொண்டுவந்தார்.

இந்திய விவசாய முன்னேற்றத்தில், பருவமழையும், தட்பவெப்பச் சூழலும் முக்கியப் பங்காற்றுகிறது என்று உணர்ந்த ஹியூம், பருவநிலை சார்ந்த தரவுகளை முறையாகத் தயார்செய்து, பருவநிலையை முன்னதாகவே கணித்து, அதற்கேற்ப விவசாயம் செய்ய வேண்டும் என்ற முடிவை முன்வைத்தார். இன்று வரை செயல்பட்டு வரும் 'இந்திய வானிலைத் துறை' (Indian Meteorological Department) உருவாக்கத்துக்கு 1875-ல் கையெழுத்திட்டவர் ஹியூம். மாதிரிப் பண்ணையை மாவட்டம்தோறும் அமைக்கும் திட்டத்தைத் தொடங்கிவைத்தார்.

மாயோவுக்கு அடுத்து வந்த வைசிராய் நார்த் புரூக், அதற்கடுத்து வந்த லிட்டன் இருவருக்குமே ஹியூமின் திட்டங்களின் மீது கடும் அதிருப்தி இருந்தது. வைசிராய்கள் மீது ஏற்படும் கருத்து வேறுபாட்டையும் ஹியூம் வெளிப்படையாக முன்வைக்கத் தயங்கவில்லை. லிட்டனின் பொருளாதார நிர்வாகத்தில் உள்ள குறையை வெளிப்படையாகச் சுட்டிக்காட்டிய ஹியூமைப் பதவிக் குறைப்பு செய்து, செயலாளர் பதவியிலிருந்து நீக்கினார் லிட்டன். தொடர்ந்து, 1882-ல் சிவில் சர்வீஸ் பணியை ராஜினாமா செய்த ஹியூம், இந்திய தேசிய காங்கிரஸ் அமைப்புக்கான கருத்துருவை வளர்த்தெடுத்தார்.

பெண்களுக்கான திருமண வயதை 10-லிருந்து 12 ஆக உயர்த்த சட்டம் கொண்டுவருவதை ஹியூம் ஆதரித்தபோது, அவர் தொடங்கிய காங்கிரஸ் அமைப்புக்குள்ளேயே பலர் அதை எதிர்த்தனர். அதே காலகட்டத்தில் பெருநிலவுடைமையாளர்கள் காங்கிரஸ் அமைப்பில் இருந்துகொண்டே, ஜனநாயகத்தை ஆதரிக்காத நிலையில் இருந்தனர்.

ஒரு கட்டத்தில், ஹியூம் காங்கிரஸ் மீது நம்பிக்கையிழந்து லண்டனுக்கே திரும்பிவிட்டார். எனினும், இந்தியர்கள் மீது அவர் கொண்ட பற்று போகவில்லை. 'இந்தியன் டெலிகிராப் யூனியன்' தொடங்கி ஆங்கிலேயர்களால் முடக்கப்படும் இந்திய மக்களின் செய்திகளை இங்கிலாந்து, ஸ்காட்லாந்து நாளிதழ்களில் வெளிக்கொணர வழிசெய்தார். சமூகச் சீர்திருத்தம் தொடர்பில் முரண்பாடுகளைக் கொண்டிருந்த காங்கிரஸ், பின்னாளில் தன்னைத் தானே வளர்த்துக்கொண்டது. அனைத்து மக்களுக்குமான சுதந்திரத்தை முன்வைக்கும் வலுவான அமைப்பாக உருவெடுத்தது.

டிசம்பர் 28: இந்திய தேசிய காங்கிரஸ் நிறுவன தினம்

---

**7. கான்பூர் மாநாடு: விடுதலைப் போரின் புரட்சிமுகம்**

இந்தியாவில் செயல்படும் பழமையான அரசியல் கட்சி என்றால் 1885-ல் தொடங்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸ். அதற்கடுத்த நீண்ட வரலாற்றுத் தொடர்ச்சி கொண்ட அரசியல் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி. அது தனது 97-வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது. ரஷ்யப் புரட்சிக்குப் பிறகு இந்திய விடுதலைப் போராளிகள் பலர் இந்திய விடுதலைக்கான, உறுதியான சாத்தியங்கள் குறித்துக் கனவு காண ஆரம்பித்தனர்.

இதன் வழியே நடைபெற்ற புரட்சிகரமான பல எழுச்சிகளுக்குப் பிறகு, இந்தியாவின் பல இடங்களில் கம்யூனிஸ்ட் குழுக்கள் செயல்பட ஆரம்பித்தன. அவற்றைத் தடுக்கும் நோக்கத்துடன் 1924-ல் எஸ்.ஏ.டாங்கே, முசாபர் அகமது, நளினி குப்தா, உஸ்மானி ஆகிய நான்கு பேருக்கும் நான்காண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. கான்பூர் சதி வழக்குப் போடப்பட்டு, கம்யூனிஸ்ட்டுகளை ஒழித்துவிட்டோம் என்று வெற்றிக் களிப்பில் மிதந்தது ஆங்கிலேய அரசு. பிறக்காத கம்யூனிஸ்ட் கட்சியின் மீது தடையும் விதித்திருந்தது. இந்தத் தடையையும் மீறித்தான் அந்தக் கட்சி பிறந்தது.

புகழ்பெற்ற கவிஞரும், விடுதலைப் போராட்ட வீரருமான ஹஸ்ரத் மொஹானி வரவேற்புக் குழுவின் தலைவராகப் பொறுப்பேற்க, தென்னகத்தின் முதல் கம்யூனிஸ்ட் மா.சிங்காரவேலர் தலைமை உரையுடன் அமைப்பின் முதல் மாநாடு தலைமறைவாக கான்பூர் நகரில் நடந்தேறியது. பலர் சதி வழக்குகளால் சிறைச்சாலையில் வாடிவந்த நிலையில், போர்க்குணமிக்க புரட்சியாளர்களும், தேசபக்தர்களும் இணைந்து உருவாக்கியதே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி. ஈடு இணையற்ற தியாகங்களால் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகப் போராடிய தேசபக்தர்கள் புதிய வழியைக் காண இக்கட்சியில் சங்கமித்தனர்.

புகழ்பெற்ற கதார் கட்சியை (கதார் என்றால் புரட்சி என்று பொருள்) சார்ந்த லாலா ஹர்தயால், சர்தார் சிங், ராஷ்பிகாரி போஸ், சோகன்சிங் பாக்னா ஆகியோர் இந்தக் கட்சியில் இணைந்தனர். இந்தியாவை ஆயுதப் போராட்டம் மூலம் கைப்பற்றுவதற்காக வெளிநாட்டிலிருந்து காமகட்டமாரு கப்பல் மூலம் 1915-ல் பிப்ரவரி 15 அன்று வருகைதந்த போராளிகள் பலர் கொல்லப்பட்டனர், அவர்களில் எஞ்சியவர்களும் இந்தக் கட்சியில் இணைந்தனர்.

1922-லிருந்து 1924 வரை இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் நுழைந்த முஹாஜிர்கள் எனப்படும் இஸ்லாமியப் புரட்சியாளர்கள் மீது நான்கு பெஷாவர் சதி வழக்குகள் போடப்பட்டன. இதிலிருந்து பலர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர். நவஜவான் சோஷலிஸ்ட் படையை நடத்திய பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோர் தூக்கிலிடப்பட்ட பிறகு அவருடைய தோழர்கள் அஜய்கோஷ், ஷிவ்வர்மா, சோஹன் சிங் கோஷ் முதலானோர் இக்கட்சியில் இணைந்தனர். சிட்டகாங் ஆயுதக் கிடங்கு தாக்குதலால் பிரபலமான சூரியா சென்னின் சீடர்களும், புரட்சிப் போராளிகளுமான

கணேஷ் கோஷ் மற்றும் கல்பனா தத் ஆகியோரும் இக்கட்சியில் இணைந்தனர்.

ஒத்துழையாமை இயக்கத்துக்கு காந்தி அறைகூவல் விடுத்தபோது, சத்தியாகிரகிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த மறுத்த, கார்வால் ஆயுதப்படை சார்ஜன்ட் சந்திரசிங் கார்வாலி சிறைத் தண்டனைக்குப் பிறகு வெளியே வந்தவுடன் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார். காலனியாதிக்கத்துக்கு எதிராக வெகுண்டெழுந்து போராடிய மணிப்பூர் ஜன நேத்தா (மக்கள் தலைவர்) ராபோர்ட் சிங் சிறை வாசத்தின்போதே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார்.

விடுதலைப் போராட்டப் புரட்சியின் பல்கலைக்கழகங்களாக விளங்கிய அந்தமான், தியோலி, பக்ஸா, ஹிஜ்லி மற்றும் பிற சிறைகளிலிருந்து விடுதலை அடைந்தவர்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர். இவர்கள் மீது வாசிக்கப்பட்ட குற்றப்பத்திரிகையில் பிரிட்டிஷ் இந்திய இறையாண்மையைப் பேரரசிடமிருந்து பறித்துக்கொள்ள இந்தியாவிலிருந்து தங்களுக்குத் தெரிந்த, தெரியாத ஒவ்வொருவருடனும் சேர்ந்து சதி செய்ததாக ஆங்கிலேயர்களின் காவல் துறை குற்றம் சுமத்தியது.

கல்வி கற்க வெளிநாட்டுக்குச் சென்ற எம்.என்.ராய், அபானி முகர்ஜி, வீரேந்திரநாத் சட்டோபாத்யாயா, டாக்டர் பூபேந்திரநாத் தத்தா (சுவாமி விவேகானந்தரின் தம்பி), எம்.பி.டி.ஆச்சார்யா எனும் திருமலாச்சாரி (சோவியத் நாட்டில் லெனினை நேரில் சந்தித்தவர்களில் இவரும் ஒருவர்) ஆகியோருடன் மேலும் சிலர் மாஸ்கோவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை 1920-ல் நிறுவினர். ஆனால், ஒன்றுபட்ட கட்சி வெளிநாட்டில் கட்சி உருவானதை ஒருமனதாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுடன், அதை ஒரு தொடக்க கால முயற்சியாக மட்டுமே எடுத்துக்கொண்டது. 1925 டிசம்பர் 26-தான் கட்சி அமைக்கப்பட்ட தினமாக அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

டிசம்பர் 26: இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிறுவன தினம்

---

**8. நல்லாட்சி பட்டியல்: நாட்டில் குஜராத் முதலிடம்; நீதி, பொதுப் பாதுகாப்பில் தமிழகம் முதலிடம்**

மத்திய நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத் துறை தயாரித்த 2021-ம் ஆண்டு நல்லாட்சிக் குறியீட்டில், நீதி மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பில் தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது. நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத் துறை தயாரித்த 2021-ம் ஆண்டு நல்லாட்சிக் குறியீட்டை, நல்லாட்சி தினத்தையொட்டி புதுடெல்லி விஞ்ஞான் பவனில் மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவு அமைச்சர் அமித் ஷா இன்று (சனிக்கிழமை) வெளியிட்டார்.

நல்லாட்சி குறியீடு பத்து துறைகள் மற்றும் 58 குறிகாட்டிகளை உள்ளடக்கியது ஆகும். நல்லாட்சி குறியீடு 10 துறைகள் மற்றும் 58 குறிகாட்டிகளை உள்ளடக்கியது. அவை: 1)விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகள், 2) வணிகம் & தொழில்கள், 3) மனித வள மேம்பாடு, 4) பொது சுகாதாரம், 5.) பொது உள்கட்டமைப்பு மற்றும் பயன்பாடுகள், 6) பொருளாதார நிர்வாகம், 7) சமூக நலன் & மேம்பாடு, 8) நீதித்துறை மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு, 9) சுற்றுச்சூழல் மற்றும் 10) குடிமக்களை மையப்படுத்திய ஆளுகை. இதில் நீதி மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புப் பிரிவில் ஏ குழுவில் உள்ள மாநிலங்களில் தமிழகம் முதலிடம் பிடித்துள்ளது.

மற்ற பிரிவுகளின் முதலிடம் பிடித்த மாநிலங்கள்: விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகள் – ஆந்திரப் பிரதேசம்; வணிகம் & தொழில்கள் – தெலங்கானா; மனித வள மேம்பாடு – பஞ்சாப்; பொது சுகாதாரம் – கேரளா; பொது உள்கட்டமைப்பு மற்றும் பயன்பாடுகள் – கோவா; பொருளாதார நிர்வாகம் – குஜராத்; சமூக நலன் & மேம்பாடு – தெலங்கானா; சுற்றுச்சூழல் – கேரளா; குடிமக்களை மையப்படுத்திய ஆளுகை – ஹரியானா.

---

**9. அறிவியல் அதிசயங்களை அறிய உதவும் ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது**

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமான நாசா ஜேம்ஸ் வெப் என்ற விண்வெளி தொலைநோக்கியை நேற்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

பூமியிலிருந்து விண்ணில் உள்ள பல நட்சத்திரங்களை அறிவதற்காக விண்வெளியில் தொலைநோக்கியை நிலைநிறுத்த ஆராய்ச்சியாளர்கள் திட்டமிட்டனர். அதன்படி ஹப்பிள் என்ற தொலைநோக்கி பூமிக்கு வெளியே விண்ணில் நிலைநிறுத்தப்பட்டது. அந்த விண்வெளி தொலைநோக்கி மனிதனுக்கு இதுவரை தெரிந்திடாத பல அரிய விண்வெளி தகவல்களை தெரிந்துகொள்ள வழி வகுத்தது.

அதன் அடிப்படையில் நாசா ஆராய்ச்சியாளர்கள் ஜேம்ஸ் வெப் என்ற விண்வெளி தொலைநோக்கியை விண்ணில் செலுத்த திட்டமிட்டனர். 1989-ல் தொடங்கப்பட்ட, ரூ.75 ஆயிரம் கோடி மதிப்பிலான இந்த திட்டம், தற்போதுதான் நிறைவேறியுள்ளது.

இந்நிலையில், இந்த விண்வெளி தொலைநோக்கி அதிநவீன ராக்கெட் மூலம், பிரெஞ்சு கயானாவில் உள்ள ராக்கெட் ஏவுதளத்தில் இருந்து நேற்று விண்ணில் செலுத்தப்பட்டது. பூமியிலிருந்து புறப்பட்ட சில நிமிடங்களுக்குள் இது சுமார் 9,30,000 கிலோமீட்டர் தொலைவில் நிலைநிறுத்தப்பட்டதாக நாசா அறிவித்தது. ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி விண்ணில் ஏவப்படும் காட்சியை ட்விட்டரில் வெளியிட்டுள்ளது நாசா.

1960-களில் நாசாவின் பல விண்வெளி செயல்பாடுகளுக்கு காரணமான முக்கிய விஞ்ஞானியான ஜேம்ஸ் இ வெப்பின் நினைவாக புதிய தொலைநோக்கிக்கு ஜேம்ஸ் வெப் என பெயரிடப்பட்டுள்ளது. தற்போது இந்த தொலைநோக்கி வெற்றிகரமாக விண்வெளியில் செலுத்தப்பட்டுள்ளதால் பிரபஞ்ச ரகசியங்கள், நெபுலாக்கள், நட்சத்திரங்கள் உருவாக்கம், பூமி உருவான விதம் உள்ளிட்ட அரிய தகவல்களை விஞ்ஞானிகளால் பெற முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

**10. 'சம்யுக்த சமாஜ் மோர்ச்சா': பஞ்சாபில் 22 விவசாய அமைப்புகள் இணைந்து அரசியல் அணி தொடக்கம்**

மத்திய அரசின் மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட பஞ்சாபின் 22 விவசாய அமைப்புகள் இணைந்து 'சம்யுக்த சமாஜ் மோர்ச்சா' என்ற பெயரில் புதிதாக அரசியல் அணியைத் தொடங்கியுள்ளன.

கடந்த ஆண்டு மத்திய அரசு நிறைவேற்றிய 3 வேளாண் சட்டங்களுக்கு எதிராக தில்லி எல்லைகளில் 'சம்யுக்த சமாஜ் மோர்ச்சா' உழவர்கள் கூட்டமைப்பு போராட்டத்தில் ஈடுபட்டது. இந்தக் கூட்டமைப்பில் இடம்பெற்றிருந்த பஞ்சாபின் 22 விவசாய அமைப்புகள் இணைந்து 'சம்யுக்த சமாஜ் மோர்ச்சா' என்ற பெயரில் புதிய அரசியல் அணியைத் தொடங்கியுள்ளன.

இந்த அணியின் தலைவராக பாரதிய கிஸான் யூனியன் (ராஜேவால்) அமைப்பின் தலைவர் பல்பீர் சிங் ராஜேவால் பொறுப்பு வகிக்கவுள்ளார்.

---

**11. இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவருக்கு 'சிறந்த தென் ஆப்பிரிக்கர்' விருது**

இந்திய வம்சவாளியைச் சோ்ந்த இம்தியாஸ் சூலிமானுக்கு இந்த ஆண்டுக்கான 'சிறந்த தென் ஆப்பிரிக்கர்' விருது வழங்கப்பட்டுள்ளது.

தென் ஆப்பிரிக்காவைச்சேர்ந்தவர் மருத்துவர் இம்தியாஸ் சூலிமான். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இவர், 'கிஃப்ட் ஆப் தி கிவர்ஸ்' என்ற தன்னார்வ அமைப்பைத் தொடங்கி நடத்தி வருகிறார். இந்த அமைப்பின் மூலம் நிலநடுக்கம் போன்ற இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப்பட்ட 44க்கும் மேற்பட்ட நாடுகள், போரால் பாதிக்கப்பட்ட நாடுகளில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மத்திய கிழக்கு, கிழக்கு ஐரோப்பா, ஆப்பிரிக்க நாடுகள் மட்டுமின்றி இந்தியா, பாகிஸ்தானிலும் இயற்கைப் பேரிடர்களின்போது அந்த அமைப்பு உதவி புரிந்துள்ளது.

இந்நிலையில் தென் ஆப்பிரிக்காவின் தினசரி இணையவழி நாளிதழான 'டெய்லி மேவ்ரிக்' இம்தியாஸ் சூலிமானுக்கு இந்த ஆண்டுக்கான 'சிறந்த தென் ஆப்பிரிக்கர்' விருது வழங்கி கௌரவித்துள்ளது.

தென் ஆப்பிரிக்காவில் குடிமக்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதும் இம்தியாஸுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

**12. இந்திய இளம் எழுத்தாளர்களுக்கான போட்டி– 3 தமிழ் இளம் எழுத்தாளர்கள் தேர்வு**

மத்திய கல்வி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய புத்தக அறக்கட்டளை, விடுதலையின் அமிர்தப் பெருவிழாவின் ஒரு பகுதியாக, பிரதம மந்திரி இளைய எழுத்தாளர் வழிகாட்டுதல் திட்டத்தின்கீழ், 'இந்திய தேசிய இயக்கம்' என்னும் கருப்பொருளில் நடைபெற்ற அகில இந்திய போட்டியின் முடிவுகளை அறிவித்துள்ளது.

உதவித்தொகையுடன் கூடிய இந்த வழிகாட்டுதல் திட்டத்தின்படி, 30 வயதுக்கு குறைந்த 75 இளம் எழுத்தாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

அகில இந்திய போட்டி கடந்த ஜூன் 1-ம்தேதி முதல் ஜூலை 31 முடிய 'மைகவ்' இணைய தளத்தின் மூலம் நடைபெற்றது. நாடு முழுவதிலும் உள்ள எழுத்தாளர்களிடமிருந்தும், வெளி நாட்டு இந்தியர்களிடம் இருந்தும், 22 அலுவல் மொழிகள் மற்றும் ஆங்கிலத்தில் சுமார் 16,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. பல்வேறு குழுக்களைச் சேர்ந்த நிபுணர்கள் போட்டிக்கு வந்த நூல்களை ஆய்வு செய்தனர்.

தேர்வு செய்யப்பட்டுள்ள 75 எழுத்தாளர்களில், 38 பேர் ஆண்கள், 37பேர் பெண்கள்.

இரண்டு பேர் 15 வயதுக்கும் குறைவானவர்கள். 16 எழுத்தாளர்கள் 15–20 வயதுக்கு இடைப்பட்டவர்கள். 21–25 வரம்பில் 32 பேரும், 26–30 வயது வரம்பில் 25 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தேர்வு செய்யப்பட்ட எழுத்தாளர்கள் ஆறு மாத கால வழிகாட்டுதல் பயிற்சி பெறுவார்கள். தேசியப் புத்தக அறக்கட்டளைமூலம் பிரபல எழுத்தாளர்கள் மற்றும் ஆசிரியர் குழுவின் வழிகாட்டுதலில், ஆராய்ச்சி மற்றும் பிரதித் திருத்த ஆதரவு வழங்கப்படும். எழுத்தாளர்களின் நூல்கள் பின்னர் மற்ற இந்திய மொழிகளில் மொழியாக்கம் செய்யப்படும்.

தேர்வு செய்யப்பட்டவர்கள் மாதம்தோறும் ₹50,000 வீதம் ஆறு மாதங்களுக்கு உதவித்தொகை பெறுவார்கள். மேலும் சிறந்த, வெற்றிகரமான பிரசுரங்களுக்கு 10 சதவீத ராயல்டி தொகையும் வழங்கப்படும். தமிழில் நூல்களை எழுதிய ஜே யு சுகானா, ஜி சரவணன், கே கீதா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

---

**13. நெல்சன் மண்டேலா அடைக்கப்பட்டிருந்த சிறை சாவி ஏலம் விட முடிவு**

தென் ஆப்பிரிக்க நாட்டின் முதல் அதிபரான நெல்சன் மண்டேலா அடைக்கப்பட்டிருந்த சிறை அறையின் சாவியை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது.

நிற வெறிக்கு எதிராகப் போராடியவரும், அந்நாட்டின் முதல் அதிபருமான நெல்சன் மண்டேலா வாழ்வில் 27 ஆண்டுகளை சிறையிலேயே செலவிட்டார். ராபன் தீவுகளில் உள்ள சிறைச்சாலையில் நெல்சன் மண்டேலா 18 ஆண்டுகள் அடைக்கப்பட்டிருந்தார்.

அங்கு சிறைக்காவலராக இருந்தவரும், மண்டேலாவின் நெருங்கிய நண்பருமான கிறிஸ்டோ பிராண்ட், நெலசன் மண்டேலா அடைக்கப்பட்டிருந்த சிறை அறையின் சாவியை ஏலம் விட முடிவு செய்துள்ளார். இந்நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்த தென்ஆப்பிரிக்க அரசு, "இந்த சாவி தென்னாப்பிரிக்க மக்களுக்குச் சொந்தமானது" என்று கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

**14. 2004 டிசம்பர்.26 – தமிழகத்தில் சுனாமி தாக்கிய நாள்**

---

**15. நிறவெறிக்கு எதிராக போராடிய பிஷப் டெஸ்மண்ட் மறைவு: பிரதமர் மோடி இரங்கல்**

எமெரிட்டஸ் ஆர்ச்பிஷப் டெஸ்மண்ட் டுட்டு மறைவுக்கு பிரதமர் நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கலைத்

தெரிவித்துக் கொண்டுள்ளார். நிறவெறிக்கு எதிராகப் போராடிய தென்னாப்பிரிக்கப் பேராயர் டெஸ்மண்ட் டுட்டு இன்று காலமானார். அவருக்கு வயது 90. நெல்சன் மண்டேலா தென்னாப்பிரிக்காவின் முதல் கறுப்பின அதிபராக பதவியேற்றபோது வானவில் தேசம் என்ற சொல்லாடலை உருவாக்கி பிரபலப்படுத்தியவர் டுட்டு.

வெள்ளையர்களின் ஆட்சியை எதிர்த்து அமைதி வழியில் போராடியதால், 1984 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு டெஸ்மண்ட் டுட்டுவுக்கு வழங்கப்பட்டது.

---

**16. விஜய் ஹஸாரே: ஹிமாசல் சாம்பியன்: 'விஜேடி' முறையில் வென்றது**

விஜய் ஹஸாரே கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஹிமாசல பிரதேசம் 11 ரன்கள் வித்தியாசத்தில் 'விஜேடி' முறையில் தமிழகத்தை வீழ்த்தி முதல் முறையாக சாம்பியன் ஆனது.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஹிமாசல் வெற்றிக்கு 15 பந்துகளில் 16 ரன்கள் தேவை இருந்த நிலையில், மோசமான வானிலை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது. பின்னா் 'விஜேடி' முறையில் அந்த அணி வென்ாக அறிவிக்கப்பட்டது.

அந்த அணி இன்னிங்ஸில் சதம் விளாசி ஆட்டமிழக்காமல் இருந்த ஷுபம் அரோரா ஆட்டநாயகன் ஆனாா்.

முன்னதாக டாஸ் வென்ற ஹிமாசல பிரதேசம் ஃபீல்டிங்கை தோ்வு செய்தது. பேட் செய்த தமிழகம் 49.4 ஓவா்களில் 314 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. அதிகபட்சமாக விக்கெட் கீப்பா் தினேஷ் காா்த்திக் 8 பவுண்டரிகள், 7 சிக்ஸா்களுடன் 116 ரன்கள் விளாசினாா்.

பாபா இந்திரஜித் 8 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 80, ஷாருக் கான் 3 பவுண்டரிகள், 3 சிக்ஸா்களுடன் 42 ரன்கள் சோ்த்து உதவ, கேப்டன் விஜய் சங்கா் 22, சாய் கிஷோா் 18, ஜெகதீசன் 9, முருகன் அஸ்வின் 7, பாபா அபராஜித் 2, வாஷிங்டன் சுந்தா் 1, சிலம்பரசன் 1 ரன்கள் சோ்த்தனா். சந்தீப் வாரியா் 3 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தா்.

ஹிமாசல் பௌலிங்கில் பங்கஜ் ஜஸ்வால் 4, ரிஷி தவன் 3, வினய் கலேதியா, சித்தாா்த் சா்மா, திக்விஜய் ரங்கி ஆகியோா் தலா 1 விக்கெட் வீழ்த்தினா்.

பின்னா் ஹிமாசல் இன்னிங்ஸில் மோசமான வானிலை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டபோது அந்த அணி 47.3 ஓவா்களில் 4 விக்கெட் இழப்புக்கு 299 ரன்கள் அடித்திருந்தது.

ஷுபம் அரோரா 13 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 136, கேப்டன் ரிஷி தவன் 5 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 42 ரன்கள் சோ்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனா். முன்னதாக அமித் குமாா் 6 பவுண்டரிகளுடன் 74, பிரசாந்த் சோப்ரா 21, நிகில் கங்தா 18 ரன்கள் சோ்த்தனா்.

இறுதியில், விஜேடி முறையில் அந்த அணியின் வெற்றிக்கு 47.3 ஓவா்களில் 289 ரன்கள் வெற்றி இலக்காக நிா்ணயிக்கப்பட்ட நிலையில், அந்த அணி 299 ரன்கள் அடித்திருந்ததால், 11 ரன்கள் வித்தியாசத்தில் ஹிமாசல் வென்றதாக அறிவிக்கப்பட்டது.

---

**17. சேதி தெரியுமா?**

டிச.20: டெல்டா, ஒமைக்ரான் வரிசையில் 'டெல்மைக்ரான்' என்கிற புதிய வேற்றுருவ கரோனா வைரஸ் கண்டறியப்பட்டது.

டிச.21: வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைக்க வழி வகை செய்யும் தேர்தல் சட்டத் திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

டிச.22: எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு காரணமாக பெண்களின் குறைந்தபட்ச திருமண வயதை 18–லிருந்து 21–ஆக உயர்த்தும் சட்ட மசோதா நாடாளுமன்ற நிலைக்குழுவுக்கு அனுப்பப்பட்டது.

டிச.23: பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தடுக்க தமிழகத்தில் 'மீண்டும் மஞ்சப்பை' திட்டத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

டிச.23: 'பேக்ஸ்லோவிட்' என்கிற பெயரில் பைசர் நிறுவனம் உருவாக்கியுள்ள கரோனா மாத்திரையை அவசரப் பயன்பாட்டுக்கு அமெரிக்கா அங்கீகரித்தது.

டிச.23: கர்நாடக சட்டப்பேரவையில் கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் அமளிக்கு இடையே நிறைவேற்றப்பட்டது.

டிச.24: வங்கதேசத் தலைநகர் தாக்காவில் நடைபெற்ற ஐந்து நாடுகள் பங்கேற்ற ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி வெண்கலப் பதக்கத்துக்கான போட்டியில் இந்திய அணி பாகிஸ்தான் அணியை 4 – 3 என்கிற கோல் கணக்கில் தோற்கடித்தது.

டிச.24: 15 வயதுக்குட்பட்ட ஜூனியர் அமெரிக்க ஸ்குவாஷ் ஓபன் கோப்பையில் இந்தியாவைச் சேர்ந்த 13 வயது சிறுமி அனாஹட் சிங் வென்றார். இத்தொடரை வெல்லும் முதல் இந்திய பதின்பருவச் சிறுமி இவர்.

டிச.25: ஜனவரி 3–ஆம் தேதி முதல் 15 –18 வயதுள்ள சிறார்களுக்குத் தடுப்பூசி செலுத்தும் திட்டம் தொடங்கப்படும் எனப் பிரதமர் மோடி அறிவித்தார். மேலும், முன்களப் பணியாளர்களுக்கு ஜனவரி 10 முதல் கூடுதல் தடுப்பூசி செலுத்தப்படும் என்றும் அறிவித்தார்.

---

**18. நீதி ஆயோக் சுகாதாரக் குறியீட்டில் கேரளம் முதலிடம்**

நீதி ஆயோக் வெளியிட்ட சுகாதாரக் குறியீட்டில் கேரளம் மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளது. அந்தப் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாமிடத்தையும், உத்தர பிரதேசம் கடைசி இடத்தையும் பிடித்துள்ளன.

மக்களுக்கு சுகாதார சேவைகளை வழங்குவதில் சிறந்து விளங்கும் மாநிலங்கள் தொடா்பான குறியீட்டை மத்திய அரசின் கொள்கை வகுப்பு அமைப்பான நீதி ஆயோக் ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. அந்த அமைப்பு 4–ஆவது சுகாதாரக் குறியீட்டுப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

கடந்த 2019–20–ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்ட ஒட்டுமொத்த செயல்பாடுகளுக்கான பட்டியலில் பெரிய மாநிலங்கள் பிரிவில், கேரளம் முதலிடத்தையும் தமிழ்நாடு, தெலங்கானா ஆகியவை அடுத்தடுத்த

இடங்களையும் பிடித்துள்ளன. இந்தப் பட்டியலில் உத்தர பிரதேசம், பிகாா், மத்திய பிரதேசம் ஆகியவை கடைசி 3 இடங்களில் உள்ளன.

சிறிய மாநிலங்கள் பிரிவில் மிஸோரம் முதலிடத்தைப் பிடித்துள்ளது. திரிபுரா, சிக்கிம் ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. யூனியன் பிரதேசங்களில் தாத்ரா–நகா் ஹவேலி & டாமன்–டையு முதலிடத்திலும், சண்டீகா் இரண்டாவது இடத்திலும், லட்சத்தீவுகள் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

ஓராண்டில் சுகாதார சேவைகளை சிறப்பாக மேம்படுத்திய பெரிய மாநிலங்களுக்கான பட்டியலில் உத்தர பிரதேசம் முதலிடத்திலும், அஸ்ஸாம் இரண்டாவது இடத்திலும், தெலங்கானா மூன்றாவது இடத்திலும் உள்ளன. சிறிய மாநிலங்களுக்கான பட்டியலில் மிஸோரம், மேகாலயம், நாகாலாந்து ஆகியவை முன்னணியில் உள்ளன.

நீதி ஆயோக் ஒட்டுமொத்த சுகாதாரக் குறியீட்டில் கேரளம் தொடா்ந்து 4–ஆவது ஆண்டாக முதலிடத்தைப் பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த ஆய்வின்போது 24 காரணிகள் ஆராயப்பட்டதாக நீதி ஆயோக் தெரிவித்துள்ளது. மத்திய சுகாதார அமைச்சகம், உலக வங்கி ஆகியவற்றுடன் இணைந்து இந்தக் குறியீட்டை நீதி ஆயோக் தயாரித்துள்ளது.

சுகாதார சேவைகளை வழங்குவதற்கான திட்டங்களை வகுக்கும்போது இந்தப் பட்டியலை மாநில அரசுகள் முன்மாதிரியாகக் கொண்டு செயல்படலாம் என நீதி ஆயோக் துணைத் தலைவா் ராஜீவ் குமாா் தெரிவித்துள்ளாா்.

---

### 19. சுகாதார துறை செயல்பாட்டில் கேரளா முதலிடம், தமிழகம் 2–ம் இடம்: உத்தரபிரதேச மாநிலத்துக்கு கடைசி இடம்

தேசிய அளவிலான சுகாதார துறை செயல்பாட்டில் கேரளா முதலிடத்தைப் பிடித்துள்ளது. தமிழகம், தெலங்கானா அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

மத்திய அரசின் நிதி ஆயோக் அமைப்பு கடந்த 2017–ம் ஆண்டு முதல் சுகாதாரத் துறையில் சிறந்து விளங்கும் மாநிலங்கள் குறித்து ஆய்வு செய்து தரவரிசை பட்டியலை வெளியிட்டு வருகிறது. அதன்படி 2019–20–ம் ஆண்டுக்கான சுகாதார குறியீடு டெல்லியில் நேற்று வெளியிடப்பட்டது.

நிதி ஆயோக் துணைத் தலைவர் ராஜீவ் குமார், தலைமை நிர்வாக அதிகாரி அமிதாப் காந்த், கூடுதல் செயலாளர் ராகேஷ் சர்வால், உலக வங்கியின் மூத்த அதிகாரி ஷீனா சாப்ரா ஆகியோர் சுகாதார குறியீட்டை வெளியிட்டனர்.

நிதி ஆயோக், மத்திய சுகாதாரத் துறை, உலக வங்கி ஆகியவை இணைந்து தயாரித்துள்ள சுகாதார குறியீட்டில் பெரிய மாநிலங்கள், சிறிய மாநிலங்கள், யூனியன்பிரதேசங்கள் என 3 பிரிவுகளில்தரவரிசைப் பட்டியல் வெளியிடப் பட்டுள்ளது.

பெரிய மாநிலங்களின் பட்டியலில் 19 மாநிலங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் கேரளா முதலிடத்தைப் பிடித்துள்ளது. 4–வது முறையாக அந்த மாநிலம்முதலிடத்தை தக்க வைத்திருக்கிறது. தமிழகம் 2–வது இடத்தையும், தெலங்கானா 3–வது இடத்தையும் பெற்றுள்ளன. ஆந்திரா, மகாராஷ்டிரா, குஜராத், இமாச்சல பிரதேசம்,பஞ்சாப், கர்நாடகா, சத்தீஸ்கர், ஹரியாணா, அசாம், ஜார்க்கண்ட், ஒடிசா, உத்தராகண்ட், ராஜஸ்தான், மத்திய பிரதேசம், பிஹார்ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. உத்தரபிரதேசம் கடைசி இடத்தில் உள்ளது.

சிறிய மாநிலங்கள் பட்டியலில் 8 மாநிலங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் மிசோரம் மாநிலம்முதலிடத்தைப் பிடித்துள்ளது. திரிபுரா, சிக்கிம், கோவா, மேகாலயா, மணிப்பூர், அருணாச்சல பிரதேசம், நாகாலாந்து ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

யூனியன் பிரதேசதங்களில் தாத்ரா– நாகர் ஹவேலி மற்றும் டையு–டாமன் முதலிடத்தைப் பிடித்துள்ளது. சண்டிகர், லட்சத்தீவு, புதுச்சேரி, டெல்லி, ஜம்மு–காஷ்மீர், அந்தமான் – நிகோபர் அடுத்தடுத்த இடங்களில்உள்ளன.– பிடிஐ

---

### 20. ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி திட்டத்தில் பணியாற்றிய இந்திய பெண் விஞ்ஞானி

ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி திட்டத்தில் இந்திய பெண் விஞ்ஞானி ஒருவர் பணியாற்றியுள்ள விவரம் தற்போது தெரியவந்துள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமான நாசா, ஐரோப்பா விண்வெளி ஆராய்ச்சிமையம், கனடா ஆராய்ச்சி மையம் ஆகியவை இணைந்து ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியை (ஜேடபிள்யூஎஸ்டி) உருவாக்கி உள்ளது.

தென் அமெரிக்காவின் பிரெஞ்சு கயானாவிலுள்ள கொரு விண்வெளி தளத்திலிருந்து ஏரியன்–5 ராக்கெட் மூலம் இந்த தொலைநோக்கி கடந்த சனிக்கிழமை விண்ணில் வெற்றிகரமாக ஏவப்பட்டு உள்ளது. ரூ.75 ஆயிரம்கோடி செலவில் இந்தத் தொலைநோக்கி வடிவமைக்கப்பட்டுள்ளது.

உலகம் தோன்றியது எப்படி என்பது உட்பட பல்வேறு அறிவியல் அதிசயங்களை இந்த தொலைநோக்கி மூலம் கண்டுபிடிக்க முடியும் என்று நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பொதுவாக நட்சத்திரங்கள் இறந்தாலும் பல ஒளி ஆண்டுகள் தொலைவில் இருப்பதால் அதன் ஒளி நமக்கு கிடைத்துக்கொண்டே இருக்கும். அந்த நட்சத்திரம் இறந்தாலும் அதன் ஒளியை வைத்து அதனை ஆராய முடியும். இப்படி பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் இறந்த நட்சத்திரங்கள் குறித்தும் இந்த ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி ஆராயவுள்ளது.

இந்த விண்வெளி தொலைநோக்கி திட்டத்தில் ஏராளமானவிஞ்ஞானிகள் பணியாற்றியுள்ளனர். இதில் இந்திய விஞ்ஞானி டாக்டர் ஹஷிமா ஹசனும் ஒருவர்.

இந்தியா உட்பட 7 நாடுகளின் விஞ்ஞானிகள் இந்தத் திட்டத்தில் பங்கேற்று இருந்தனர். உத்தரபிரதேச மாநிலம் லக்னோவில் பிறந்த ஹஷிமா ஹசன், இந்தத் திட்டத்தில் பங்கேற்று இந்தியர்களுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இதுகுறித்து டாக்டர் ஹஷிமா கூறும்போது, "ரஷ்யாவின் சார்பில்ஸ்புட்னிக் விண்கலம் ஏவப்பட்டபோது எனது பாட்டி உள்ளிட்ட குடும்பத்தினர் அனைவரும் கண்டு ரசித்தனர். அப்போதே எனக்கு விண்வெளி துறை மீது ஆர்வம் வந்துவிட்டது. நிலவில் மனிதர்கள் இறங்கியபோது நானும் ஒரு நாள் நாசாவில் பணிபுரிவேன் என்று கனவு கண்டேன். அந்தக் கனவு நிறைவேறியுள்ளது. விண்வெளித் துறையில் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொள்ள விரும்புகிறேன்" என்றார்.

மும்பையிலுள்ள டாடா இன்ஸ்டிடியூட் ஃபார் ஃபண்டமண்டல் ரிசர்ச் (டிஐஎஃப்ஆர்) நிறுவனத்தில் பணிபுரிந்து வந்த ஹஷிமா, பின்னர் லண்டன் சென்று ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் அணு அறிவியலில் டாக்டரேட் படிப்பைமுடித்தார். பின்னர் அமெரிக்கா சென்று 1994-ல் நாசாவில் விஞ்ஞானியாக சேர்ந்தார். தற்போது விண்வெளி தொலைநோக்கி திட்டத்தில் இணைந்து இந்தியாவுக்கு பெருமை தேடித் தந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### 21. 2022-இல் மாநகரங்களில் 5ஜி சேவை: தொலைத்தொடர்பு துறை

அடுத்த ஆண்டு முதல் சென்னை, குருகிராம், பெங்களூரு, கொல்கத்தா, மும்பை, சண்டீகா், தில்லி, ஜம்நகா், ஆமதாபாத், ஹைதராபாத், லக்னௌ, புணே, காந்திநகா் போன்ற மாநகரங்கள் மற்றும் பெரு நகரங்களில் 5ஜி அலைக்கற்றை சேவை முதல் கட்டமாக அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

தொலைத்தொடா்பு சேவை நிறுவனங்கள் இந்த மாநகரங்கள் மற்றும் பெரு நகரங்களில் 5ஜி சோதனை மையங்களை அமைத்திருப்பதன் மூலம் இந்த புதிய தொழில்நுட்பம் அறிமுகமாக உள்ளது.

இதுகுறித்து தொலைத்தொடா்புத் துறை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

5ஜி அலைக்கற்றை ஏலம் மற்றும் அதற்கான அடிப்படை விலை, ஏலம் விடப்பட வேண்டிய அளவு, ஏல வழிமுறை ஆகியவற்றில் உள்ள பல்வேறு நடைமுறைகளுக்கு அனுமதி கேட்டு இந்திய தொலைத்தொடா்பு ஒழுங்காற்று ஆணையத்திடம் (டிராய்) கடந்த செப்டம்பரில் பரிந்துரை சமா்ப்பிக்கப்பட்டது. அதன் அனுமதி கிடைத்ததும், தொலைத்தொடா்பு சேவை நிறுவனங்களுக்கு அலைக்கற்றை ஒதுக்கீடு நடைமுறைகள் விரைந்து மேற்கொள்ளப்படும்.

அந்த வகையில், ஏா்டெல், ரிலையன்ஸ் ஜியோ, வோடஃபோன் ஆகிய தொலைத்தொடா்பு நிறுவனங்கள் சென்னை, குருகிராம், பெங்களூரு, கொல்கத்தா, மும்பை, சண்டீகா், தில்லி, ஜாம்நகா், ஆமதாபாத், ஹைதராபாத், லக்னௌ, புணே, காந்திநகா் ஆகிய நகரங்களில் 5ஜி சோதனை மையங்களை அமைத்திருக்கின்றன. அதன் மூலம், இந்த மாநகரங்கள் மற்றும் பெரு நகரங்களில் அடுத்த ஆண்டு 5ஜி தொழில்நுட்பம் முதல்கட்டமாக அறிமுகமாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 22. கலை பண்பாட்டுத் துறை சார்பாக சென்னையில் ஜன.14 முதல் 'நம்ம ஊரு திருவிழா'

தமிழக கலைப் பண்பாட்டுத் துறை வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, 'நம்ம ஊரு திருவிழா' என்ற தலைப்பின் தமிழக பாரம்பரியமான கிராமியக் கலைகளை வெளிப்படுத்தும் 500-க்கும் மேற்பட்ட கலைஞர்களைக் கொண்டு சென்னையில் 7 இடங்களில் ஜன. 14, 15, 16-ம் தேதிகளில் கலை விழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் 7 வெளி மாநில கிராமியக் கலைக் குழுவினரும் பங்கு கொள்ளவுள்ளனர்.

கலை விழாவைச் சிறப்பாக நடத்துவது தொடர்பாகத் தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் அதிகாரிகளுடன் தலைமைச் செயலகத்தில் நேற்று ஆலோசனை நடத்தப்பட்டது.

இதில், சென்னையில் நடத்தப்படும் கலை நிகழ்ச்சியைப் போல, மதுரை, திருச்சி, கோவை ஆகிய இடங்களிலும் நடத்த ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### 23. பெண்களின் தற்காப்புக்காக "அன்மியூட்" இயக்கம் ஐ.ஐ.டி. மாணவர்கள் தொடங்கினர்

சென்னை ஐ.ஐ.டி. மாணவர்கள் சமூக நல இயக்கம் ஒன்றை தொடங்கியுள்ளனர். "அன்மியூட்" என்று அழைக்கப்படும் அந்த திட்டத்தில் மாதவிலக்கின்போது சுத்தமாக இருத்தல் மற்றும் பாலியல் துன்புறுத்தலுக்கு எதிரான தற்காப்பு நடவடிக்கைகள் பற்றி கவனம் செலுத்தப்படுகிறது. இந்த முன்முயற்சியின் மூலமாக, பெண்களை குரல் எழுப்பும்படி தூண்டுவது மாணவர்களின் நோக்கமாகும். மேலும், விழிப்புணர்வு பிரசாரங்களையும் மாணவர்கள் நடத்திட முனைந்துள்ளனர். ஆண்டுதோறும் சென்னை ஐ.ஐ.டி. நடத்தும் 'சாஸ்த்ரா-2022' என்னும் தொழில்நுட்ப திருவிழாவின் ஒரு பகுதியாக தொடங்கப்பட்டுள்ள இந்த இயக்கத்தில் சுடர், கோ ஹைஜீன், கிரை, சாக்யா, ஸ்வயம் போன்ற அரசு சாரா அமைப்புகளுடன் மாணவர்கள் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இந்த நடவடிக்கைகள் கடந்த அக்டோபர் 16-ந்தேதியில் இருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் சாஸ்த்ரா குழுவினர் ஒரு சமூகநல பிரச்சினையை கையில் எடுத்து, அதை சமாளிப்பதற்கான முன்முயற்சியில் ஈடுபடுகின்றனர். இந்த ஆண்டில் சாஸ்த்ரா-2022 என்னும் திட்டத்தின் கீழ், "அன்மியூட்" இயக்கம் ஒன்றை தொடங்கியுள்ளனர். இந்த "அன்மியூட்" இயக்கம் கடந்த அக்டோபர் 24-ந்தேதியன்று நடிகர்

ஆஹ்ஸாஸ் சன்னா முன்னிலையில் காணொலி நிகழ்ச்சியாக தொடங்கப்பட்டது.

---

**24. 'தி இந்து' பத்திரிகையாளருக்கு கோயங்கா விருது**

'தி இந்து' பத்திரிகையின் செய்தியாளர் சிவ் சஹாய் சிங், ராம்நாத் கோயங்கா விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

'தி இந்து' பத்திரிகையின் மேற்கு வங்க மாநிலப் பிரிவில் செய்தியாளராக பணிபுரிபவர் சிவ் சஹாய் சிங். இவர் 2019–ல்ஜார்க்கண்ட் மாநில அரசின் டிஜிட்டல் பொது விநியோக முறைத் திட்டத்தால் அடித்தட்டு மக்கள் ரேஷன் பொருட்களை இழந்தது தொடர்பாக ஒரு கட்டுரையை எழுதியிருந்தார்.

ஆதார் அட்டைகளை ரேஷன் அட்டைகளுடன் இணைக்க முடியாததாலும், ஆதார் அட்டை இல்லாதவர்களும் ரேஷன் பொருட்களை வாங்க முடியாத நிலை ஏற்பட்டதை இந்த கட்டுரை விளக்கியது. பெரும்பாலும் பழங்குடி இனத்தவர் இந்த புதிய டிஜிட்டல்மயமாக்கத் திட்டத்தால் பாதிக்கப்பட்டதை கட்டுரை எடுத்துக்காட்டியிருந்தது.

இந்த கட்டுரைக்காக சிவ்சஹாய் சிங், ராம்நாத் கோயங்காவிருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

'கண்ணுக்கு தெரியாத இந்தியாவை வெளிக்கொணர்தல்' என்ற பிரிவின் கீழ் விருதுக்கு சிவ் சஹாய் சிங் தேர்வு செய்யப் பட்டுள்ளார்.

---

**1.** **குஜராத் மாநில முதலமைச்சர் எந்த நுண்–வலைப்பூ தளத்தின் குஜராத்தி பதிப்பைத் தொடங்கினார்?**

அ) டுவிட்டர்

**ஆ) கூ ☑**

இ) சிங்காரி

ஈ) ரெடிட்

✓ இந்திய பன்மொழி நுண்–வலைப்பூ தளமான 'கூ'வின் குஜராத்தி பதிப்பை குஜராத் மாநில முதல்வர் பூபேந்திர படேல் தொடங்கி வைத்தார். இச்செயலி மக்கள் தங்கள் தாய்மொழியைப் பயன்படுத்தி உள்ளடக்கத்தைப் பகிரவும் மற்றவர்களுடன் இணைக்கவும் உதவுகிறது.

✓ குஜராத்தி பதிப்புடன் 'கூ' இப்போது தமிழ், ஹிந்தி, மராத்தி, கன்னடம், தெலுங்கு, அஸ்ஸாமி, பஞ்சாபி, பெங்காலி & ஆங்கிலம் உள்ளிட்ட பத்து மொழிகளில் கிடைக்கிறது.

---

**2.** **'சில்வர்லைன்' என்ற பகுதி அதிவேக இரயில் திட்டம் அமைக்கப்படுகிற மாநிலம் எது?**



அ) கர்நாடகா

**ஆ) கேரளா ☑**

இ) குஜராத்

ஈ) ஒடிசா

✓ 'சில்வர்லைன்' என்பது கேரள மாநிலத்தில் கட்டப்பட்டு வரும் பகுதி அதிவேக இரயில் திட்டமாகும். இத்திட்டத்தில் மாநிலத்தின் வட மற்றும் தென் முனைகளுக்கு இடையே மணிக்கு 200 கிமீ வேகத்தில் இரயில்களை இயக்குவது அடங்கும். கேரள ரயில் மேம்பாட்டுக்கழகம் செயற்படுத்தும் 'சில்வர்லைன்' திட்டத்துக்கு எதிராக கேரளா முழுவதும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

✓ இதன் திட்ட மதிப்பீடு ₹63,940 கோடி. இந்தத் திட்டத்தின் காலக்கெடு 2025ஆம் ஆண்டு ஆகும்.

---

**3.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற, "அவமானத்தின் தூண்" நினைவுச்சின்னம் அமைந்துள்ள நாடு / பிராந்தியம் எது?**



அ) அமெரிக்கா

**ஆ) ஹாங்காங் ☑**

இ) தைவான்

ஈ) ரஷ்யா

✓ "அவமானத்தின் தூண்" என்பது பெய்ஜிங்கின் தியனன்மென் சதுக்கத்தில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூரும் ஒரு நினைவுச்சின்னமாகும். இது 1997 முதல் ஹாங்காங் பல்கலை வளாகத்தில் அமைந்துள்ள 8 மீட்டர் உயரச்சிலையாகும். இந்த நினைவுச்சின்னத்தில் ஐம்பது துயரம் தோய்ந்த முகங்களும் சித்திரவதைக்கு உடல்களும் செதுக்கப்பட்டுள்ளன.

✓ 1989ஆம் ஆண்டில் தியனன்மென் சதுக்கத்தைச் சுற்றி சீன துருப்புக்களால் கொல்லப்பட்ட ஜனநாயக எதிர்ப்பாளர்–களை நினைவுகூரும் வகையில் இந்தத்தூண் உள்ளது. இச்சிலையை இரவோடு இரவாக கரைக்கும் நடவடிக்கையை ஹாங்காங் பல்கலை மேற்கொண்டது.

---

**4.** **'பெண்களின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதற்கான சட்டத்தை' நிறைவேற்றிய நாடு எது?**



அ) இந்தியா

**ஆ) சீனா ☑**

இ) ரஷ்யா

ஈ) சவூதி அரேபியா

✓ தேசிய மக்கள் காங்கிரஸின் சீனாவின் நிலைக்குழு, 'பெண்களின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின்' வரைவு திருத்தத்தை அறிவித்தது. பணியிடத்திலும் வீட்டிலும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பது இச்சட்டத்தின் நோக்கமாகும்.

---

**5.** **திவால் மற்றும் நொடிப்பு நிலை குறியீட்டை செயல்படு–த்துகிற மத்திய அமைச்சகம் எது?**

அ) நிதி அமைச்சகம்

**ஆ) பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம் ☑**

இ) வெளியுறவு அமைச்சகம்

ஈ) வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

✓ பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம் (MCA) திவால் மற்றும் நொடிப்புநிலை (IBC) குறியீட்டில் சில கடுமையான விதிமுறைகளை முன்மொழிந்துள்ளது. ஒரு தீர்மானத் திட்டத்தை அங்கீகரிக்க அல்லது நிராகரிக்க, திவால் தீர்ப்பளிக்கும் அதிகாரியை IBC முப்பது நாட்களுக்குள் நியமனம் செய்ய வேண்டும் என்று MCA முன்மொழிந்தது.

✓ ஜன.13ஆம் தேதிக்குள் இத்திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துக்களை அரசாங்கம் கோரியுள்ளது.

---

**6.** **இந்திய ரிசர்வ் வங்கி (RBI) சமீபத்தில் எந்தத் தேதி வரை அடையாளக்குறியாக்க விதிகளை நீட்டித்துள்ளது?**



அ) ஜனவரி 1, 2022

ஆ) ஏப்ரல் 1, 2022

**இ) ஜூன் 30, 2022 ☑**

ஈ) செப்டம்பர் 30, 2022

✓ இந்திய ரிசர்வ் வங்கி சமீபத்தில் அடையாளக்குறியாக்க விதிகளை 2022 ஜூன்.30 வரை நீட்டித்துள்ளது.

✓ வணிகத் தளங்களில் அட்டை தரவை அழித்துவிட்டு அடையாளக்குறியாக்கத்தைப் பயன்படுத்துவதற்கான காலக்கெடு மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

✓ வணிகர்கள் மற்றும் பணம் செலுத்தும் நிறுவனங்கள் 2021 டிச.31'க்கு முந்தைய காலக்கெடுவை பூர்த்தி செய்ய இயலாமையை வெளிப்படுத்தியதால், மத்திய வங்கியால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வணிக தளத்தில் அட்டை தரவைப் பதிவுசெய்ய, கோப்பு அடையாளக்குறியாக்க அட்டை பயன்படுத்தப்படுகிறது.

---

**7. இந்தியாவில், 'தேசிய நுகர்வோர் உரிமைகள் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**




அ) டிசம்பர் 20

ஆ) டிசம்பர் 22

**இ) டிசம்பர் 24 ☑**

ஈ) டிசம்பர் 25

- ✓ இந்தியா முழுவதும் ஆண்டுதோறும் டிசம்பர்.24ஆம் தேதி தேசிய நுகர்வோர் உரிமைகள் நாளாக கொண்டாடப்படுகிறது. இது தேசிய நுகர்வோர் நாள் என்றும் அழைக்கப்படுகிறது.
- ✓ நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமானது இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்ற தேதியான 1986 டிச.24 இந்நாளில் நினைவுகூரப்படுகிறது.
- ✓ நுகர்வோரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இந்த நாளின் நோக்கம். உலக நுகர்வோர் உரிமை நாள் ஆண்டுதோறும் மார்ச்.15 அன்று கொண்டாடப்படுகிறது.

---

**8.** பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்க திட்டத்தை (PMEGP) செயல்படுத்துகிற நிறுவனம் எது?

**அ) KVIC ☑**

ஆ) NSIC

இ) NABARD

ஈ) SIDBI

- ✓ காதி மற்றும் கிராமப்புறத் தொழில்கள் ஆணையம் (KVIC) பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்க திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. சமீபத்தில். KVIC, உத்தர பிரதேச மாநிலத்தின் பண்டேல்கண்ட் பகுதியில் சுயதொழில் நடவடிக்கைகளைத் தொடங்கியது.
- ✓ ஜான்சி மாவட்டம் மற்றும் புந்தேல்கண்ட் பகுதியின் சில பகுதிகளில் உள்ள கிராமப்புற கைவினைஞர்களுக்கு பானை வனையும் மின்சார சக்கரம், தேனீ வளர்ப்பு பெட்டி மற்றும் அகர்பத்தி எந்திரம் ஆகியவற்றை MSME இணை அமைச்சர் வழங்கினார்.

---

**9. சத்தீஸ்கர் மற்றும் தில்லிக்குப் பிறகு தனது ஆரம்பப் பள்ளிகளில் 'மகிழ்ச்சி பாடத்திட்ட'த்தைத் தொடங்கவுள்ள மாநில அரசு எது?**



அ) பீகார்

ஆ) குஜராத்

இ) மகாராஷ்டிரா

**ஈ) உத்தர பிரதேசம் ☑**

- ✓ உத்தர பிரதேசத்தில் உள்ள 150 தொடக்கப் பள்ளிகளில் ஒரு சோதனைத் திட்டமாக 'மகிழ்ச்சி பாடத்திட்ட'த்தைத் தொடங்க உத்தர பிரதேச மாநில அரசு முடிவு செய்துள்ளது. இது மாணவர்களை இயற்கை, சமூகம் மற்றும் நாட்டின் மீது அதிக ஈடுபாடு கொண்டவர்களாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ சத்தீஸ்கர் மற்றும் தில்லிக்கு அடுத்தபடியாக நாட்டின் மூன்றாவது மாநிலமாக உத்தர பிரதேசம் 'மகிழ்ச்சி பாடத் திட்டத்தை செயல்படுத்தும். 1–8ஆம் வகுப்பு மாணவர்களு –க்கு இந்தப் பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

---

**10. திரைப்படங்கள்மீதான தணிக்கையை நிறுத்துவதாக சமீபத்தில் அறிவித்த நாடு எது?**




**அ) ஐக்கிய அரபு அமீரகம் ☑**

ஆ) பஹ்ரைன்

இ) ஓமான்

ஈ) ஈரான்

- ✓ இனி திரையரங்குகளில் வெளியாகும் திரைப்படங்களை தணிக்கை செய்ய மாட்டோம் என ஐக்கிய அரபு அமீரகம் அறிவித்துள்ளது. வெளிநாட்டினரை ஈர்க்கும் ஒரு தாராளவாத மையமாக நாட்டை உயர்த்துவதற்கான ஒரு முயற்சியாக இது பார்க்கப்படுகிறது.
- ✓ அதிகாரிகளின் கூற்றுப்படி, "படங்கள் அவற்றின் சர்வதேச பதிப்பின்படி திரையரங்குகளில் திரையிடப்படும்".

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மேலும் 2 கொரோனா தடுப்பூசிகளுக்கு மத்திய அரசு அனுமதி**

கரோனா தொற்றுக்கு எதிரான போராட்டத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் கோர்பிவேக்ஸ், கோவோவேக்ஸ் ஆகிய தடுப்பூசிகளின் அவசரகாலப் பயன்பாட்டுக்கு இந்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு இயக்குநரகம் (டிசிஜிஐ) அனுமதி அளித்துள்ளது.

கரோனா தொற்று சிகிச்சைக்கான மால்னுபிராவிர் மாத்திரையின் அவசரகாலப் பயன்பாட்டுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த நோவோவேக்ஸ் நிறுவனம் கோவோவேக்ஸ் கரோனா தடுப்பூசியைத் தயாரித்தது. அத்தடுப்பூசியை அதிக எண்ணிக்கையில் தயாரித்து, குறைந்த, நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கு விநியோகிப்பதற்காக சீரம் நிறுவனத்துடன் நோவோவேக்ஸ் கடந்த ஆண்டு ஆகஸ்டில் ஒப்பந்தம் மேற்கொண்டது. அத்தடுப்பூசியின் அவசரகாலப் பயன்பாட்டுக்கு உலக சுகாதார அமைப்பு கடந்த 17–ஆம் தேதி ஒப்புதல் வழங்கியிருந்தது.

ஹைதராபாதைச் சேர்ந்த பயாலஜிகல்–இ நிறுவனம், கோர்பிவேக்ஸ் தடுப்பூசியை மத்திய உயிரி தொழில்நுட்பத் துறையுடன் இணைந்து தயாரித்தது. இது முழுவதும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 3–ஆவது கரோனா தடுப்பூசியாகும். அமெரிக்காவைச் சேர்ந்த மெர்க் நிறுவனம், கரோனா தொற்றால் பாதிக்கப்படுவோருக்கு சிகிச்சை அளிப்பதற்காக மால்னுபிராவிர் மாத்திரையைத் தயாரித்தது.

பரிந்துரையும் அனுமதியும்: கோவோவேக்ஸ், கோர்பிவேக்ஸ் ஆகிய தடுப்பூசிகளையும், மால்னுபிராவிர் மாத்திரையையும் இந்தியாவில் பயன்படுத்த அனுமதி அளிக்குமாறு மத்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு

அமைப்பின் (சிடிஎஸ்சிஓ) தடுப்பூசி நிபுணா்கள் குழு மத்திய அரசுக்குப் பரிந்துரை வழங்கியிருந்தது.

அப்பரிந்துரையை டிசிஜிஐ ஏற்றுக் கொண்டு, 3 மருந்துகளின் அவசரகாலப் பயன்பாட்டுக்கும் செவ்வாய்க்கிழமை அனுமதி வழங்கியது. இது தொடா்பாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சா் மன்சுக் மாண்டவியா ட்விட்டரில் வெளியிட்ட பதிவில், ''ஒரே நாளில் 3 மருந்துகளின் அவசரகாலப் பயன்பாட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கோா்பிவேக்ஸ், கோவோவேக்ஸ் தடுப்பூசிகளையும், மால்னுபிராவிா் மாத்திரையையும் கட்டுப்பாடுகளுடன் பயன்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதியானது கரோனா தொற்றுக்கு எதிரான உலகின் போராட்டத்தை மேலும் வலுப்படுத்தும். அப்போராட்டத்தை பிரதமா் நரேந்திர மோடி முன்னின்று நடத்தி வருகிறாா். இந்தியாவின் மருந்து நிறுவனங்கள் ஒட்டுமொத்த உலகுக்கும் பலனளிப்பவையாக உள்ளன.

'ஹாா்ரிக்' தடுப்பூசி: ஆா்பிடி புரதப் பிரிவை அடிப்படையாகக் கொண்டு உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதல் கரோனா தடுப்பூசி, கோா்பிவேக்ஸ். உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 3–ஆவது தடுப்பூசியாக அது விளங்குகிறது. நானோபாா்டிகல் தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட கோவோவேக்ஸ் தடுப்பூசியை சீரம் நிறுவனம் உற்பத்தி செய்யவுள்ளது.

மால்னுபிராவிா் மாத்திரையானது 18 வயதைக் கடந்தவா்களுக்கான கரோனா சிகிச்சையிலும், அத்தொற்றின் பாதிப்பு தீவிரமடைய வாய்ப்புள்ளவா்களுக்கான சிகிச்சையிலும் பயன்படுத்தப்படவுள்ளது. அந்த மாத்திரையை இந்தியாவில் 13 நிறுவனங்கள் தயாரித்து விநியோகிக்கவுள்ளன'' என்று குறிப்பிட்டுள்ளாா்.

பயன்பாட்டு முறைகள்: கோா்பிவேக்ஸ் தடுப்பூசியை 28 நாள்கள் இடைவெளியில் இரு தவணைகளாகச் செலுத்த வேண்டும். கோவோவேக்ஸ் தடுப்பூசியை 21 நாள்கள் இடைவெளியில் இரு தவணைகளைச் செலுத்த வேண்டும். இரு தடுப்பூசிகளையும் 2 முதல் 8 டிகிரி செல்ஷியஸ் வெப்பநிலையில் சேமித்துவைக்க வேண்டும்.

மால்னுபிராவிா் மாத்திரையை மருத்துவா்கள் பரிந்துரைத்தால் மட்டுமே பயன்படுத்த வேண்டும். 18 வயதைக் கடந்தவா்களுக்கு மட்டுமே அந்த மாத்திரை பரிந்துரைக்கப்பட வேண்டும். நாளொன்றுக்கு இரு மாத்திரைகளை எடுத்துக் கொள்ளலாம். தொடா்ந்து 5 நாள்களுக்கு மேல் அந்த மாத்திரையைப் பயன்படுத்தக் கூடாது.

அனுமதிக்கப்பட்டுள்ள தடுப்பூசிகள்: நாட்டில் கோவிஷீல்ட், கோவேக்ஸின், ஸ்புட்னிக்–வி ஆகிய கரோனா தடுப்பூசிகள் ஏற்கெனவே மக்களுக்குச் செலுத்தப்பட்டு வருகின்றன. மாடா்னா, ஜான்சன்&ஜான்சன், சைகோவ்–டி ஆகிய தடுப்பூசிகளின் அவசரகாலப் பயன்பாட்டுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தாலும் அவை இன்னும் பயன்பாட்டுக்கு வரவில்லை.

தடுப்பூசிகள் வரிசையில் கோா்பிவேக்ஸ், கோவோவேக்ஸ் ஆகியவை இணைந்துள்ள நிலையில், நாட்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ள கரோனா தடுப்பூசிகளின் எண்ணிக்கை 8–ஆக அதிகரித்துள்ளது.

---

**2. தேசிய அளவிலான மீன் பிடிப்பில் தமிழகம் முதலிடம்**

தமிழகம் முழுவதும் 5,500 விசைப்படகுகள், 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நாட்டுப்படகுகள் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. தேசிய அளவிலான மீன்பிடியில் கடந்தாண்டு குஜராத் முதலிடத்தில் இருந்தது. ஒன்றிய கடல் மீன் ஆராய்ச்சி கூட கணக்கெடுப்பின்படி, நடப்பாண்டு மீன் பிடிப்பில் தமிழகம் முதலிடம் பிடித்துள்ளது.

தமிழக கடற்கரையின் நீளம் 1,071 கி.மீ. இதில் ராமநாதபுரம் மாவட்ட கடற்கரையின் நீளம் 237 கி.மீ. மாவட்டத்தில் 1,600க்கும் மேற்பட்ட விசைப்படகுகள், 5,700க்கும் மேற்பட்ட நாட்டுப்படகுகளில் மீன்பிடி தொழில் நடந்து வருகிறது. கடந்த 2018ல் தமிழகத்தில் 7.18 லட்சம் டன், 2019ல் 7.75 லட்சம் டன் மீன்கள் பிடிபட்டன. 2020–21ல் 10 லட்சம் டன் மீன்கள் பிடித்து குஜராத் மாநிலத்தை பின்னுக்கு தள்ளி தமிழகம் முதலிடம் பிடித்துள்ளது. ராமநாதபுரம் மாவட்டம் 2.64 லட்சம் டன் மீன்கள் பிடித்து மாநிலத்தில் முதலிடத்தில் உள்ளது.

---

**3. பாபே, அலெக்ஸியாவுக்கு விருது**

துபை உலக கால்பந்து விருதுகளின் 12–ஆவது எடிஷனில், 2021–ஆம் ஆண்டுக்கான சிறந்த கால்பந்து வீரராக பிரான்ஸின் கிலியன் பாபே, சிறந்த வீராங்கனையாக ஸ்பெயினின் அலெக்ஸியா புடெலாஸ் தோ்வாகினா்.

துபையில் உள்ள புா்ஜ் கலீஃபாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஆண்டின் சிறந்த கோல் ஸ்கோரா் மற்றும் ரசிகா்கள் வரவேற்பை பெற்ற வீரருக்கான மாரடோனா விருதை போலந்தின் ராபா்ட் லெவாண்டோவ்ஸ்கி பெற்றாா். அதிக கோலடித்த வீரருக்கான விருது போா்ச்சுகலின் கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு வழங்கப்பட்டது.

ஆடவா் பிரிவில் சிறந்த கிளப்பாக செல்சியும், மகளிா் பிரிவில் சிறந்த கிளப்பாக பாா்சிலோனாவும் தோ்வாகின. சிறந்த தேசிய அணியாக இத்தாலி விருது பெற்றது. சிறந்த தடுப்பாட்ட வீரராக லியோனாா்டோ போனுச்சி (இத்தாலி), சிறந்த கோல்கீப்பராக கியான்லுகி டோனாருமா (இத்தாலி), சிறந்த பயிற்சியாளராக ராபா்டோ மான்சினி (இத்தாலி) தோ்வாகினா்.

---

**1.** INS கேசரி, சமீபத்தில் எந்த நாட்டுக்கு உணவு உதவி மற்றும் பாதுகாப்பு உதவிகளை வழங்கியது?

அ) மடகாஸ்கர்

**ஆ) மொசாம்பிக் ☑**

இ) மாலத்தீவுகள்

ஈ) மியான்மர்



✓ சாகர் திட்டத்தின் கீழ், இந்திய கடற்படையின் INS கேசரி போர்க்கப்பல், மொசாம்பிக் நாட்டின் மபுடோ துறைமுகத்து –க்கு 500 டன் உணவு பொருட்கள் மற்றும் உதவிப்பொரு –ட்களை கொண்டுசென்றது.

✓ அதோடு, மொசாம்பிக் இராணுவத்துக்கு அளிக்க இரண்டு அதிவிரைவு படகுகள் மற்றும் தற்காப்பு பாதுகாப்பு தளவாடங்களையும் கொண்டுசென்றது. முன்னதாக INS கேசரி மாலத்தீவுகள், மொரிசியஸ், சீஷெல்ஸ், மடகாஸ்கர் மற்றும் கொமோரோசு ஆகிய நாடுகளுக்கு மனிதாபிமான மற்றும் மருத்துவ உதவிகளை வழங்கியது.

---

**2.** **அண்மையில் குடியரசுத்தலைவரால் PN பணிக்கரின் சிலை திறந்து வைக்கப்பட்டது. அவருடன் தொடர்புடைய இயக்கம் எது?**

அ) பெண்கள் அதிகாரமளித்தல்

**ஆ) எழுத்தறிவு மற்றும் நூலகம் ☑**

இ) குழந்தை வளர்ச்சி

ஈ) சுத்தமான தண்ணீர்



✓ கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள P N பணிக்கர் சிலையை குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் திறந்துவைத்தார். P N பணிக்கர் கேரளத்தில் எழுத்தறிவியக்கம் & நூலகங்களை மேம்படுத்துதற்காக 1945'இல் 'கிரந்தசாலா சங்கம்' தொடங்கினார்.

✓ "வாசித்து வளர்ச்சியடைவீர்" என்று பொருள்படும் "வாயிச்சு வளர்க" என்ற செய்திக்காக அவர் புகழ்பெற்றார். எழுத்தறிவு இயக்கத்தை ஒரு பிரபலமான சமூக–கலாசார இயக்கமாக மாற்றினார்.

---

**3.** **மிகவும் தீவிரமான காந்தப்புலம்கொண்ட சிதைந்த நியூட்ரான் நட்சத்திரத்தின் பெயர் என்ன?**

அ) மீட்டியோர்

**ஆ) மேக்னடார் ☑**

இ) பிளேசர்

ஈ) குவாசர்



✓ ராட்சத நட்சத்திரங்கள் வீழ்ச்சியடையும் போது, அவை நியூட்ரான் நட்சத்திரங்களை உருவாக்குகின்றன. மேலும் இந்த நியூட்ரான் நட்சத்திரங்களில் சில, காந்தப்புலங்கள் எனப்படும் மிகவும் தீவிரமான காந்தப்புலத்துடன் ஒரு சிறிய குழுவை உருவாக்குகின்றன.

✓ இன்ஸ்டிடியூட் ஆஃப் ஆஸ்ட்ரோபிசிக்ஸ் தலைமையில், வானியலாளர்கள் சமீபத்தில் 'GRB2001415' என்றவொரு திடீர் ஒளியை ஆய்வுசெய்தனர். 2020 ஏப்ரல்.15 அன்று நிகழ்ந்த அது ஒரு வினாடியில் பத்தில் ஒரு பங்கு மட்டுமே நீடித்தது. ஓர் ஆய்வின்படி, வெளியிடப்பட்ட அந்த ஆற்றல் நமது சூரியன் 1,00,000 ஆண்டுகளில் வெளியிடும் கதிர்வீச்சு ஆற்றலுக்குச் சமமாகும்.

---

**4.** 'குப்பைகளற்ற நகரங்களுக்கான நட்சத்திர மதிப்பீடு வழிமுறை – கருவித்தொகுப்பு 2022'ஐ வெளியிட்ட **மத்திய அமைச்சகம் எது?**

அ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

**ஆ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑**

இ) விவசாய அமைச்சகம்

ஈ) வனம், சுற்றுச்சூழல் அமைச்சகம்




✓ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் குப்பைகளற்ற நகரங்களுக்கான நட்சத்திர மதிப்பீடு வழிமுறை – கருவித்தொகுப்பு 2022'ஐ வெளியிட்டது.

✓ 2021 அக்டோபர்.1 அன்று "குப்பைகளற்ற நகரங்களை" உருவாக்குவதற்காக, ஸ்வச் பாரத் மிஷன்–அர்பன் 2.0'ஐ பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். நட்சத்திர மதிப்பீடு வழிமுறையின்படி ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பையும் குறைந்தபட்சம் மூன்று நட்சத்திர குப்பை இல்லா நகரமாக மாற்றுவதே இதன் நோக்கமாகும்.

---

**5.** **அண்மையில், 'சிர்கான் ஹைப்பர்சோனிக் ஏவுகணை அமைப்பை' அறிமுகப்படுத்திய நாடு எது?**

அ) சீனா

**ஆ) இரஷ்யா ☑**

இ) UK

ஈ) இஸ்ரேல்



✓ கடற்புற மற்றும் தரைசார் இலக்குகளை தாக்கக்கூடிய 'சிர்கான் ஹைப்பர்சோனிக் ஏவுகணை அமைப்பை' ரஷ்யாவின் தற்காப்புப் படை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது. உக்ரைன் எல்லையில் தொடர்ந்து பதற்றம் நிலவிவரும் நிலையில் இந்தச் சோதனை நடத்தப்பட்டது.

---

**6.** எந்த மாநிலத்தின் விளம்பரத் தூதராக இந்திய **கிரிக்கெட் வீரர் ரிஷப் பந்த் நியமிக்கப்பட்டுள்ளார்?**

**அ) உத்தரகாண்ட் ☑**

ஆ) உத்தர பிரதேசம்

இ) பீகார்

ஈ) மேற்கு வங்காளம்



✓ இந்திய கிரிக்கெட் வீரர் ரிஷப் பந்த் உத்தரகாண்ட் மாநிலத்தின் விளம்பரத் தூதராக நியமிக்கப்பட்டு, விளையாட்டுகளை ஊக்குவிக்கவும், மாநில இளையோர் இடையே மனநல விழிப்புணர்வு ஏற்படுத்தவும் உள்ளார். இது தொடர்பாக உத்தரகாண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி அறிவித்துள்ளார். 24 வயதான அவர் உத்தரகாண்ட் மாநிலத்தின் ஹரித்துவார் மாவட்டத்தில் பிறந்தவர்.

---

**7.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற பராலன் தீவுகள் தேசிய வனவுயிரி புகலிடம் அமைந்துள்ள நாடு எது?**

**அ) அமெரிக்கா ☑**



ஆ) ரஷ்யா

இ) ஜப்பான்

ஈ) இத்தாலி

- ✓ அமெரிக்காவின் கலிபோர்னியா கடற்கரை ஆணையம், பாரலன் தீவுகளின் தேசிய வனவுயிரி புகலிடத்தில் எலி விஷத்தை காற்றில் விடுவதற்கான திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. தீவுகளில் எலிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதன்மூலம் அரிய கடற்பறவைகளைக் காக்–கும் முயற்சியாக இது பார்க்கப்படுகிறது.

---

**8.** **சர்வதேச புலம்பெயர்ந்தோர் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ) டிசம்பர் 18 ☑**




ஆ) டிசம்பர் 21

இ) டிசம்பர் 24

ஈ) டிசம்பர் 27

- ✓ உலகளாவிய குடியேற்றத்தின் பிரச்சனை & சவால்களை சமாளிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர்.18 அன்று சர்வதேச புலம்பெயர்ந்தோர் நாள் அனுசரிக்கப்படுகிறது.
- ✓ ஐநா பொதுச்சபையானது 1999ஆம் ஆண்டில் அனைத்து புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஒரு சர்வதேச தீர்மானத்தை உருவாக்கியது. "Harnessing the potential of human mobility" என்பது நடப்பு 2021ஆம் ஆண்டில் வரும் இந்நாளிற்கான கருப்பொருளாகும்.

---

**9.** **1 மில்லியன் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்துகளை ஐநாடுகள் அவையின் ஆதரவுபெற்ற COVAX திட்டத்திற்கு நன்கொடையாக வழங்குவதாக அறிவித்துள்ள நாடு எது?**

அ) ரஷ்யா

**ஆ) இஸ்ரேல் ☑**

இ) இந்தியா

ஈ) பிரான்ஸ்

- ✓ ஐநாடுகள் அவையின் ஆதரவுபெற்ற COVAX திட்டத்திற்கு 1 மில்லியன் கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை வழங்குவதாக இஸ்ரேலிய அரசாங்கம் அறிவித்துள்ளது.
- ✓ அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகள் வரும்வாரங்களில் வழங்கப்படும் என இத்தாலியின் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஆப்பிரிக்க நாடுகளுடன் இஸ்ரேலின் உறவுகளை வலுப்படுத்தும் ஒரு பகுதியாக இந்த முடிவு பார்க்கப்படுகிறது.
- ✓ கென்யா, உகாண்டா மற்றும் ருவாண்டா உட்பட பல ஆப்பிரிக்க நாடுகளுடன் இஸ்ரேல் நெருங்கிய உறவைக் கொண்டுள்ளது. கடந்த ஆண்டு சூடானுடனான உறவை இஸ்ரேல் ஏற்படுத்தியது.

---

**10.** **UNESCO கலாசார பாரம்பரிய பட்டியலில் ஆசியாவில் இருந்து முதன்முறையாக சேர்க்கப்பட்ட திருவிழா எது?**

அ) தைவான் ஒளிவிளக்குத் திருவிழா

ஆ) ஆருத்ரா தரிசனம், தில்லை நடராஜர் கோவில்

இ) ஓணம் பண்டிகை



**ஈ) துர்கா பூஜை ☑**

- ✓ UNESCO தனது 'மனிதகுலத்தின் தொட்டுணரமுடியா கலாசார பாரம்பரியங்கள் பட்டியலில்' துர்கா பூஜையை சேர்த்துள்ளது. UNESCO'இன் பதினாறாவது குழுவானது பாரிஸில் நடைபெற்ற தொட்டுணரமுடியா கலாசார பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கான அதன் கூட்டத்தில், கொல்கத்தாவில் உள்ள துர்கா பூஜையை அப்பட்டியலில் சேர்த்தது. இது, ஆசியாவிலிருந்து இந்த மதிப்புமிக்க பட்டியலில் சேர்க்கப்பட்ட முதல் திருவிழாவாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சிறந்த கல்வி நிறுவனங்களுக்கான 'அடல்' தரவரிசை பட்டியல் வெளியீடு: தமிழகத்தைச் சேர்ந்த 13 கல்வி நிறுவனங்கள் இடம்பெற்றன**

உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர்கள், ஆசிரியர்களின் கண்டுபிடிப்பு திறன், தொழில்முனைவோரை உருவாக்கும் திறன், ஸ்டார்ட் அப் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு, 'புதுமை கண்டுபிடிப்பில் சாதனை படைத்த கல்வி நிறுவனங்களுக்கான அடல் தரவரிசை' என்ற திட்டத்தை மத்தியகல்வித் துறை, அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் மூலம் செயல்படுத்தி வருகிறது.

கண்டுபிடிப்புகளுக்கான காப்புரிமைக்கு பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை, புதுமை தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்கான சிறப்புக் கட்டமைப்பு வசதி போன்ற அம்சங்கள் தரவரிசைக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

2021–ம் ஆண்டுக்கான தரவரிசைக்கு 1,438 கல்வி நிறுவனங்கள் விண்ணப்பித்திருந்தன. வழக்கமாக, தொழில்நுட்பம் சார்ந்த கல்விநிறுவனங்களுக்கு மட்டுமே 5 பிரிவாக தரவரிசை வெளியிடப்படும். ஆனால், நடப்பாண்டு முதல் தொழில்நுட்பம் சாராத கல்வி நிறுவனங்கள் 2 பிரிவாக இணைக்கப்பட்டு, மொத்தம் 7 பிரிவுகளாக தரவரிசை பட்டியல் தயாரிக்கப்பட்டது. இப்பட்டியலை மத்திய கல்வித் துறை இணையமைச்சர் சுபாஷ் சர்கார் நேற்று வெளியிட்டார்.

அதன்படி, சிறந்த மத்திய கல்வி நிறுவனங்கள் பட்டியலில் சென்னை ஐஐடி தொடர்ந்து 3–வது முறையாக முதல் இடத்தைப் பிடித்துள்ளது. 2–வது இடத்தை மும்பை ஐஐடி, 3–வது இடத்தை டெல்லி ஐஐடி பிடித்தன.

மாநில பல்கலைக்கழக பிரிவில் பஞ்சாப் பல்கலைக்கழகம் முதல் இடத்தையும், கோவையில் உள்ள அவினாசிலிங்கம் பல்கலை. 5–வது இடத்தையும், சேலம்

பெரியார்பல்கலைக்கழகம் 10–வது இடத்தையும் பிடித்துள்ளன.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகள் பிரிவில் 2–வது இடத்தில் பிஎஸ்ஜி தொழில்நுட்பக் கல்லூரியும், 4–வது இடத்தில் தியாகராஜர் பொறியியல் கல்லூரியும் உள்ளன. தனியார் நிகர்நிலை பல்கலை. பிரிவில் எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (4–வது இடம்), கலசலிங்கம் ஆராய்ச்சி கல்வி நிறுவனம் (6), வேலூர் விஐடி (8) ஆகியவை இடம் பெற்றுள்ளன.

தனியார் கல்லூரிப் பிரிவில் ஆர்.எம்.கே. பொறியியல் கல்லூரி2–வது இடத்தையும், ஸ்ரீகிருஷ்ணாபொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி 3–வது இடத்தையும் பிடித்துள்ளன. அதேபோல, தொழில்நுட்பம் சாராத கல்வி நிறுவனங்களின் பிரிவில் பிஎஸ்ஜி கலை, அறிவியல் கல்லூரி 4–வது இடத்திலும், திருச்சி ஹோலிகிராஸ் கல்லூரி 5–வது இடத்திலும் உள்ளன.

---

**2. சுற்றுலா ஆலோசனைக் குழு பெயா் மாற்றம்: தமிழக அரசு உத்தரவு**

தமிழ்நாடு சுற்றுலா ஆலோசனைக் குழு சீரமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவானது, தமிழ்நாடு சுற்றுலா மேம்பாடு மற்றும் வளா்ச்சிக் குழு என பெயா் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவு விவரம்:–

மறுசீரமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு சுற்றுலா மேம்பாடு மற்றும் வளா்ச்சிக் குழுவின் துணைத் தலைவராக, அரசு முதன்மைச் செயலாளரும், உறுப்பினா் செயலாளராக சுற்றுலா வளா்ச்சிக் கழகத்தின் நிா்வாக இயக்குநரும் நியமிக்கப்பட்டுள்ளனா். இந்திய சுற்றுலா முகவா்கள் சங்கம், இந்திய சுற்றுலா சேவை நிறுவன சங்கம், தமிழ்நாடு சுற்றுலா சந்தை, தென்னிந்திய ஹோட்டல்கள், உணவகங்கள் சங்கம், தமிழ்நாடு சுற்றுலா சுற்றுப் பயணம் விருந்தோம்பல் சங்கம், இந்திய தொழில் வா்த்தக சபைகளின் கூட்டமைப்பு, இந்திய தொழில் கூட்டமைப்பு, தென்னிந்திய தொழில் வா்த்தக சபை, தென்னிந்திய கூட்டங்கள், சலுகைகள், மாநாடுகள், கண்காட்சி ஏற்பாட்டாளா்கள் சங்கம் உள்ளிட்ட சுற்றுலா மையப்படுத்திய சங்கங்கள் இடம்பெற்றிருக்கும்.

சுற்றுலா மேம்பாடு மற்றும் வளா்ச்சிக்கான ஆலோசனைகளை வழங்கும் குழு உறுப்பினா்களின் பதவிக் காலம் இரண்டு ஆண்டுகளாகும் என்று தமிழக அரசின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**3. சிபிஐ இணை இயக்குநராக வித்யா குல்கர்னி நியமனம்**

சென்னை மண்டல சிபிஐ இணை இயக்குநராக வித்யா குல்கர்னியை நியமித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழகக் காவல் துறையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை ஐஜியாகப் பணியாற்றியவர் வித்யா குல்கர்னி. இந்நிலையில், அவர் கடந்த நவம்பரில் மத்திய அரசு பணிக்குச் சென்றார். இதற்கிடையே அவரை சென்னை மண்டல சிபிஐ இணை இயக்குநராக நியமித்து மத்திய பணியாளர் தேர்வாணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இவருடன் ஒடிசா காவல்துறை ஐபிஎஸ் அதிகாரி ஞான்சிஷியாம் உபாத்யா, மகாராஷ்டிரா காவல்துறை ஐபிஎஸ் அதிகாரி நாவல் பஜாஜ் ஆகியோரும் சிபிஐ இணை இயக்குநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

---

**4. உயர் நீதிமன்ற அரசு வழக்கறிஞருக்கு 2021ம் ஆண்டுக்கான சிறந்த புவிசார் குறியீடு விருது**

புவிசார் குறியீடு பதிவில் வழக்கறிஞர் சஞ்சய் காந்தி முக்கிய பங்கு வகித்துள்ளார். தஞ்சாவூர் தட்டு, காஞ்சிபுரம் பட்டு உள்ளிட்ட பல்வேறு பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற்றுத் தந்துள்ளார். சென்னை ஐகோர்ட்டில் அரசு வக்கீலாக பதவி வகித்து வரும் இவருக்கு தஞ்சாவூரில் நடைபெற்ற இந்திய ஏற்றுமதி பொருட்களில் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற அரசு விழாவில் இதற்கான விருதை தஞ்சாவூர் மாவட்ட கலைத்தட்டு தயாரிப்பாளர்கள் சங்கம் வழங்கியது. இவர் அறிவுசார் சொத்துரிமை சங்கத்தின் தலைவராக பதவி வகித்து வருகிறார். இந்த நிகழ்ச்சியில் புவிசார் குறியீடு சட்டத்தின் கீழ் 500க்கும் மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பயனாளிகள், கைவினை மற்றும் கைத்தறி துறை கலைஞர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

---

**1. கீச்சன் செவெல், எந்த நாட்டுக் காவல்துறையின் முதல் பெண் தலைவராக ஆனார்?**

அ) ஆஸ்திரேலியா



ஆ) ஜெர்மனி

**இ) அமெரிக்கா ☑**

ஈ) பின்லாந்து

✓ நியூயார்க் நகரத்தின் அடுத்த காவல்துறை ஆணையராக கீச்சன்ட் செவெல் நியமிக்கப்பட்டுள்ளார். இதன்மூலம் அமெரிக்காவின் காவல்துறைக்கு தலைமைதாங்கும் முதல் பெண்மணி என்ற பெருமையை அவர் பெற்றார்.

✓ கீச்சன் செவெல், நீள் தீவு காவல் அதிகாரியாவார். 49 வயதான அவர் நியூயார்க் காவல்துறை ஆணையராக பணியாற்றும் மூன்றாவது கறுப்பினத்தவர் ஆவார்.

---

**2. YouGov மேற்கொண்ட சர்வதேச ஆய்வின்படி, உலகில் அதிகம் போற்றப்படும் மனிதர் யார்?**

அ) எலோன் மஸ்க்



ஆ) இரஜினிகாந்த்

இ) நரேந்திர மோடி

**ஈ) பராக் ஒபாமா ☑**

✓ YouGov மேற்கொண்ட சர்வதேச ஆய்வின்படி, அமெரிக்க முன்னாள் அதிபர் பராக் ஒபாமா, உலகின் மிகவும் போற்ற –ப்படும் மனிதர்களில் தனது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளார்.

✓ இந்த ஆய்வுக்காக, முப்பத்தெட்டு நாடுகளைச் சேர்ந்த 42,000 பேரிடம் யாரை அதிகம் போற்றுகிறீர்கள்? என்று கேட்கப்பட்டது. ஆடவர் பட்டியலில் பில் கேட்ஸ் 2ஆவது இடத்திலும், சீன அதிபர் ஜி ஜின்பிங் 3ஆவது இடத்திலும் உள்ளனர். இந்தியப் பிரதமர் மோடி மிகவும் போற்றப்படும் மனிதர்கள் பட்டியலில் எட்டாவது இடம் பிடித்துள்ளார். மகளிருள் மிச்செல் ஒபாமா முதலிடம் பிடித்துள்ளார்.

---

**3. பிரதமர் கிருஷி சிஞ்சாயி யோஜனா என்பது எந்த மத்திய அமைச்சகத்தின் முதன்மைத் திட்டமாகும்?**

**அ) ஜல் சக்தி அமைச்சகம் ☑**

ஆ) உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

இ) உணவு பதப்படுத்துதல் அமைச்சகம்

ஈ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

Government of India
Ministry of Jal Shakti
Department of Water Resources,
River Development & Ganga Rejuvenation

✓ ₹93,068 கோடி செலவில் 2021–26ஆம் ஆண்டிற்கான பிரதம மந்திரி கிருஷி சிஞ்சாய் யோஜனாவை (PMKSY) செயல்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. 2015–16'இல் PMKSY தொடங்கப்பட்டது.

✓ துரிதப்படுத்தப்பட்ட நீர்ப்பாசனப் பயன் திட்டம், ஹர் கெத் கோ பானி மற்றும் நீர்நிலை மேம்பாட்டுக் கூறுகள் ஆகிய 3 கூறுகள் 2021–26'இல் தொடர்வதற்கு அனுமதிக்கப்பட் –டுள்ளன. துரிதப்படுத்தப்பட்ட நீர்ப்பாசனப் பயன் திட்டம் ஜல் சக்தி அமைச்சகத்தாலும் ஒரு சொட்டு – அதிக பயிர் திட்டம் மற்றும் நுண்ணீர் பாசனத்திட்டம் வேளாண் அமைச்சகத்தாலும் நீர்நிலை மேம்பாட்டுத் திட்டம் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தாலும் செயல்படுத்தப்படுகிறது.

**4. லக்வார் பல்நோக்கு திட்டம் அமையவுள்ள மாநிலம் எது?**

அ) உத்தரப்பிரதேசம்



**ஆ) உத்தரகாண்ட் ☑**

இ) ஹிமாச்சல பிரதேசம்

ஈ) பஞ்சாப்

✓ இந்தியப்பிரதமர் மோடி தலைமையிலான நடுவண் அமைச்சரவை உத்தரகாண்ட் மாநிலத்தில் யமுனை ஆற்றில் லக்வார் பல்நோக்குத் திட்டத்தைக் கட்டுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. உத்தரகாண்ட் ஜல் வித்யுத் நிகாம் லிட்மூலம் கட்டப்படும் அணை மற்றும் நிலத்தடி மின் நிலைய கட்டுமானம் இந்தத் திட்டத்தில் அடங்கும். இந்தத் திட்டம் உத்தரகாண்ட், தில்லி, இராஜஸ்தான், ஹரியானா மற்றும் ஹிமாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு மிகுந்த பயனளிக்கும்.

---

**5. ஜெனரல் பிபின் இராவத்தின் மறைவைத் தொடர்ந்து, பணியாளர்கள் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?**

**அ) M M நரவனே ☑**



ஆ) கரம்பீர் சிங்

இ) R K S பதௌரியா

ஈ) விஜய் குமார் சிங்

✓ ஜெனரல் பிபின் இராவத்தின் மறைவைத் தொடர்ந்து, இந்திய ராணுவத்தளபதி மனோஜ் முகுந்த் நரவனேவை, ராணுவப் பணியாளர்கள் குழுவின் தலைவராக இந்திய அரசு நியமித்தது.

---

**6. ஆறு அணு உலைகள் அமைக்கப்படவுள்ள ஜெய்தாபூர் அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ) மகாராஷ்டிரா ☑**



ஆ) உத்தர பிரதேசம்

இ) பீகார்

ஈ) மேற்கு வங்காளம்

✓ மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள ஜெய்தாபூரில் ஆறு அணு உலைகளை அமைக்க மத்திய அரசு 'கொள்கை அளவில்' ஒப்புதல் அளித்துள்ளது. தலா 1,650 MW திறன்கொண்ட ஆறு அணுமின் உலைகள் பிரான்சின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் நிறுவப்படும். இது 9,900 மெகாவாட் (MW) திறன்கொண்ட இந்தியாவின் மிகப்பெரிய அணுசக்தி உற்பத்தி தளமாக இருக்கும்.

---

**7. 2021'இல் "அனைத்திந்திய மேயர்கள் மாநாட்டை" நடத்திய நகரம் எது?**

அ) சென்னை




ஆ) திருவனந்தபுரம்

**இ) வாரணாசி ☑**

ஈ) நாக்பூர்

- ✓ வாரணாசியில் நடந்த "அகில இந்திய மேயர் மாநாட்டை" இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி காணொலிக்காட்சி மூலம் தொடங்கி வைத்தார். "புதிய நகர்ப்புற இந்தியா" என்ற கருப்பொருளின் கீழ் நடத்தப்பட்ட இந்த மாநாட்டில், நாட்டின் பல்வேறு மாநிலங்களிலிருந்து 120 மேயர்கள் பங்கேற்றனர்.

---

**8.** **உலகின் முதல் 'AI வழக்கறிஞரை' உருவாக்கிய நாடு எது?**



அ) அமெரிக்கா

**ஆ) சீனா ☑**

இ) ரஷ்யா

ஈ) இந்தியா

- ✓ செயற்கை நுண்ணறிவைப் (AI) பயன்படுத்தி வாதாடக் கூடிய உலகின் முதல் எந்திரத்தை சீன விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். அவ்விஞ்ஞானிகளின் கூற்றுப்படி, இந்த "AI வழக்கறிஞரால்" 97 சதவீதத்திற்கும் மேலான துல்லியத்துடன் மக்களைத் தண்டிக்க முடியும். இது வாய் மொழி விளக்கமும் அளிக்கும்.

---

**9.** **"இந்தியா ஔட்" பிரச்சாரத்துடன் தொடர்புடைய நாடு எது?**




அ) இலங்கை

ஆ) மியான்மர்


**இ) மாலத்தீவுகள் ☑**

ஈ) நேபாளம்

- ✓ மாலத்தீவின் முன்னாள் அதிபர் அப்துல்லா யாமீன் தலைமையில் "இந்தியா ஔட்" பிரச்சாரம் நடைபெற்றது. சமீபத்தில், மாலத்தீவில் உள்ள அரசியல் கட்சிகள் இந்தப் பிரச்சாரத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தன. "இந்தியா ஔட்" என்ற முழக்கம் கடந்த மூன்று ஆண்டுகளாக சமூக ஊடகங்களில் காணப்படுகிறது.
- ✓ 'இந்தியா ஔட்' பிரச்சாரமானது மாலத்தீவில் தற்போதைய பாதுகாப்பு ஒத்துழைப்பின்மூலம் ஒரு இராணுவ தளத்தை நிறுவ இந்தியா எண்ணுகிறது என்ற குற்றச்சாட்டுகளை மையமாகக் கொண்டுள்ளது.

---

**10.** **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற "சைக் திட்டம்" உருவாக்கப்பட்டு வருகிற நாடு எது?**



**அ) அமெரிக்கா ☑**

ஆ) UK

இ) ரஷ்யா

ஈ) இஸ்ரேல்

- ✓ 2022ஆம் ஆண்டில் ஏவப்படவுள்ள 'சைக் திட்டத்தில்' NASA செயல்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் இலக்கு செவ்வாய் மற்றும் வியாழன் இடையே உள்ள முக்கிய பட்டையில் உள்ள 'சைக்' என்றும் அழைக்கப்படும் உலோகம் நிறைந்த சிறுகோள் ஆகும். இந்த இடத்திற்கு இதுவரை வேறு எந்த விண்கலமும் சென்றதில்லை.
- ✓ இவ்விண்கலம் 2026ஆம் ஆண்டில் சிறுகோள் இருக்கும் பட்டையைச் சென்றடையும். ரேடார் தரவுகளில் இருந்து, அச்சிறுகோள் உருளைக்கிழங்கு வடிவில் இருப்பதும், அது அதன் பக்கத்தில் சுழல்வதும் கவனிக்கப்பட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பிரதமர் மோடி பெயரில் சிக்கிமில் புதிய சாலை திறப்பு**

சிக்கிமில் பிரதமர் நரேந்திர மோடி பெயரில் புதிய சாலை புதன்கிழமை திறக்கப்பட்டது. அந்த மாநில ஆளுநர் கங்கா பிரசாத் இந்தச் சாலையைத் திறந்துவைத்தார்.

சோம்கோ ஏரி, நாதுலா எல்லைப் பகுதி ஆகியவற்றை சிக்கிம் தலைநகர் காங்டாக்குடன் இந்தச் சாலை இணைக்கிறது. இதற்கு முன்பு இதே பகுதிகளுக்கு இடையிலான சாலை ஜவாஹர்லால் நேரு சாலை என்று அழைக்கப்பட்டு வந்தது.

இப்போது அந்தப் பகுதிகளுக்குச் செல்ல புதிய இருவழிச் சாலை உருவாக்கப்பட்டு, அதற்கு 'நரேந்திர மோடி மார்க்' என பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்தச் சாலை மூலம் காங்டாக்–சோம்கோ ஏரி இடையிலான பயணத் தொலைவு 15 கி.மீ. குறைந்துள்ளது.

---

**2. அம்பைக்கு சாகித்ய அகாடமி விருது; பால புரஸ்கார் விருதுக்கு மு.முருகேஷ் தேர்வு**

தமிழின் முக்கியமான பெண் எழுத்தாளர் அம்பைக்கு இந்த ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது. குழந்தை இலக்கியப் பிரிவில் வழங்கப்படும் பால புரஸ்கார் விருது இந்த ஆண்டு கவிஞர் மு.முருகேஷுக்கு வழங்கப்படுகிறது.

நாட்டின் 24 மொழிகளில் இலக்கியத்தில் சிறந்த பங்களிப்பு செய்துவரும் படைப்பாளிகளுக்கு மத்திய அரசு ஆண்டுதோறும் சாகித்ய அகாடமி விருதுகளை வழங்கி கவுரவித்து வருகிறது. 2021-ம் ஆண்டு சாகித்ய அகாடமி விருது பெறும் எழுத்தாளர்களின் பட்டியலை மத்திய அரசு இன்று வெளியிட்டுள்ளது. இதில் தமிழகத்தைச் சேர்ந்த சிறுகதை எழுத்தாளர் அம்பைக்கு இந்த ஆண்டு சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது. அம்பை எழுதிய 'சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை' என்ற சிறுகதை தொகுப்புக்காக இந்த விருது வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழில் பெண்ணியம் சார்ந்து படைப்புகளை எழுதி வருபவர்களில் முக்கியமானவர் அம்பை. தமிழில் இயங்கிவரும் எத்தனையோ பெண் படைப்பாளிகள் மத்தியில் சமரசமில்லாத பெண்ணியக் கோட்பாட்டைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். தனது படைப்புகளின் மூலம் பெண்ணியம் சார்ந்த வலிமிகுந்த உணர்வுகளை கூர்மையோடும் அழகியலோடும் வெளிப்படுத்திய வகையில் அம்பையே முதல் இடத்திலும் முன்னோடியாகவும் நிற்கிறார். அவரது 'அம்மா ஒரு கொலை செய்தாள்', 'காட்டில் ஒரு மான்', 'வீட்டின் மூலையில் ஒரு சமையலறை', 'சிறகுகள் முறியும்' போன்ற படைப்புகள் வாழ்க்கையில் பெண்ணுக்கான இடத்தையும்

வெளியில் சொல்ல இயலாத மன இயல்புகளையும் ஆழ்ந்த சிரத்தையோடு வெளிப்படுத்தியுள்ளன.

அம்பை, மு.முருகேஷ் நூல்கள்விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அம்பையின் நூல் 'சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை' அம்பையின் ஏழாவது சிறுகதைத் தொகுப்பாகும். இந்நூலை காலச்சுவடு பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

பால புரஸ்கார் விருது: ஜப்பானியக் கவிதை வடிவமான ஹைக்கூ தளத்தில் நீண்டகாலமாக இயங்கி தனக்கென்று ஒரு இடத்தைத் தக்கவைத்துக்கொண்டிருப்பவர் கவிஞர் மு.முருகேஷ். பின்னர் சிறுவர்களுக்கான நூல்களைப் படைப்பதிலும் ஈடுபடத் தொடங்கினார்.

'பூவின் நிழல்' உள்ளிட்ட 8 கவிதை நூல்களும், 'விரல் நுனியில் வானம்' எனத் தொடங்கி 'குக்கூவென...' வரை 11 ஹைக்கூ நூல்களையும், 'இருளில் மறையும் நிழல்கள்' என்ற சிறுகதை நூலையும் முருகேஷ் படைத்துள்ளார். இதுமட்டுமின்றி, 'பெரிய வயிறு குருவி' தொடங்கி 'சின்னச் சிறகுகளால் வானம் அளப்போம்' வரை 18 குழந்தைகளுக்கான நூல்களைப் படைத்துள்ளார். மேலும் பிற நூல்கள் வரிசையில் 20 என ஏராளமான நூல்களின் ஆசிரியராக முருகேஷ் திகழ்கிறார்.

மு.முருகேஷ், 'அம்மாவுக்கு மகள் சொன்ன உலகின் முதல் கதை' என்ற குழந்தை இலக்கிய நூலுக்காக இம்முறை பால புரஸ்கார் விருது பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

---

### 3. திருப்புமுனை தினம்! | இந்திய விடுதலைப் போராட்டத்தின் திருப்புமுனை தினம் குறித்த தலையங்கம்

பல முக்கியமான வரலாற்று நிகழ்வுகளை நினைவுகூர்வதன் மூலம்தான் நமது இளைய தலைமுறையினருக்கு தேசப்பற்றையும் தேசிய உணர்வையும் ஊட்ட முடியும். இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தின் பல நிகழ்வுகள், சுதந்திர இந்தியாவில் சரித்திரப் புத்தகங்களுடன் நின்றுவிடுகின்றன. பள்ளிக்கூடங்களில்கூட அவை குறித்த பதிவுகள் இல்லாமல் இருப்பது பெரும் அவலம்.

இன்றைய டிசம்பர் 31–ம் தேதிக்கு, இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிக முக்கியமான இடம் உண்டு என்பது பலருக்கும் தெரிந்திருக்காது. அப்படியே தெரிந்திருந்தாலும் அவர்கள் அதை அநேகமாக மறந்துபோயிருப்பார்கள்.

இந்தியா விடுதலை பெற்ற ஆகஸ்ட் 15–ஆம் தேதிக்கு இருப்பது போன்ற முக்கியத்துவம் டிசம்பர் 31–ஆம் தேதிக்கும் உண்டு. உணர்ச்சிக் கொந்தளிப்பில் ஆழ்ந்த அந்த நாளை, வரலாற்று ஆய்வாளர்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தின் திருப்புமுனை தினமாகவே கருதுவார்கள்.

1929 டிசம்பர் 31–ம் தேதி லாகூர் ராவி நதிக்கரையில் பெரும்திரளாகக்கூடிய தொண்டர் கூட்டத்துக்கு நடுவில், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட இருந்த பண்டித ஜவாஹர்லால் நேரு மூவர்ணக் கொடியை ஏற்றிய நிகழ்வு மறந்து விடக்கூடியதா என்ன? அதற்கு முன்பும் பின்பும் நடந்த சம்பவங்களின் நீட்சியாகத்தான் 1947 ஆகஸ்ட் 15 சுதந்திர தினத்தை நாம் பார்க்க வேண்டும்.

1927–இல் இந்திய அரசியல் கட்சிகளை கலந்தாலோசிக்காமல் பிரிட்டிஷ் காலனிய அரசு ஜான் சைமன் குழுவை அமைத்தது. அந்த சைமன் குழுவுக்கு எதிராக இந்தியா முழுவதும் மக்கள் பெரும் திரளாக எதிர்ப்பு தெரிவித்தனர். அந்தப் போராட்டத்தின்போது லாலா லஜபதி ராய் மீது போலீஸ் தடியடி நடத்தியதில் அவர் பலத்த காயமடைந்தது மக்களின் ஆத்திரத்தை மேலும் அதிகரித்தது.

இர்வின் பிரபு இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்குவதாக அறிவித்தார். அதை இந்தியத் தலைவர்கள் பலர் வரவேற்றனர். ஆனால் பிரிட்டனில் அதற்கு எதிர்ப்பு அதிகரித்ததால் தனது முடிவை மாற்றிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது.

இதற்கிடையில் 'முழுமையான சுதந்திரம்' என்கிற அறைகூவலை பகத் சிங் விடுத்திருந்தார். பண்டித நேருவும், நேதாஜி சுபாஷ் சந்திர போஸும் அதை ஆதரித்தனர். லாகூரில் கூட இருந்த காங்கிரஸ் மாநாட்டில் பூர்ண சுதந்திரம் கோரிக்கையை நிறைவேற்றுவது என்று முடிவெடுக்கப்பட்டது.

அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டுக்கு லாகூர் நகரம் தயாராகிக் கொண்டிருந்தது. அப்போது லாகூரிலுள்ள பார்ஸ்டல் சிறையில் பகத் சிங், ராஜ குரு, சுக தேவ் ஆகியோர் அடைக்கப்பட்டிருந்தனர். லாலா லஜபதி ராயை தாக்கியதற்கு பழிவாங்கும் நோக்கில் நடத்திய கொலைக்காக அவர்கள் மரண தண்டனை கைதிகளாக அடைக்கப்பட்டிருந்தனர். 1929 டிசம்பர் மாதம் அதே பார்ஸ்டல் சிறையில் இன்னும் பல விடுதலைப் போராளிகளும் அடைக்கப்பட்டிருந்தனர்.

சிறையில் இருந்த விடுதலைப் போராளிகள் லாகூர் மாநாட்டில் நிறைவேற்றப்பட இருக்கும் பரிபூரண சுதந்திரம் தீர்மானத்தால் உற்சாகம் அடைந்திருந்தனர். கடுமையான தடையுத்தரவுகளையும் மீறி லாகூர் நகரம் காங்கிரஸ் மாநாட்டுக்காகவும், அதில் நிறைவேற்றப்பட இருக்கும் பூர்ண ஸ்வராஜ் தீர்மானத்தை ஆதரித்தும் மகிழ்ச்சியில் திளைத்திருந்ததாக பல வரலாற்று ஆய்வாளர்கள் பதிவு செய்திருக்கிறார்கள்.

டிசம்பர் 30 நள்ளிரவில், ராவி நதிக்கரையில் ஜவாஹர்லால் நேரு மூவர்ணக் கொடியை ஏற்றுவதாக இருக்கிறார் என்கிற செய்தியும், அங்கிருந்தபடி பூர்ண ஸ்சுவராஜ் கோஷத்தை அவர் முன்வைப்பார் என்கிற தகவலும் பார்ஸ்டல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த விடுதலைப் போராட்ட போராளிகளை எட்டியதும் அவர்கள் ஒரு முடிவெடுத்தனர். தண்டனைக் கைதி ஒருவர் மூலம் பகத் சிங்கிடம் தொடர்பு கொண்டார் ஒரு போராளி. அன்று நள்ளிரவில் ஜவாஹர்லால் நேரு ராவி நதிக்கரையில் மூவர்ணக் கொடியை ஏற்றும்போது பார்ஸ்டல் சிறைச்சாலையில் உள்ள விடுதலைப் போராளிகள் அனைவரும் அதை வரவேற்றுக் கொண்டாட வேண்டும் என்கிற அந்தக் கோரிக்கையை பகத் சிங்கும் வரவேற்றார். சிறைச்சாலையில் இருந்த போராளிகள் அனைவருக்கும் தகவல் பரவியது.

நள்ளிரவு 12 மணி, ராவி நதிக்கரையில் பெருந்திரளான மக்கள் கூட்டத்துக்கு நடுவே காங்கிரஸ் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட இருந்த ஜவாஹர்லால் நேரு மூவர்ணக் கொடியை ஏற்றினார். அதே நேரத்தில் பார்ஸ்டல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த அத்தனை விடுதலைப் போராளிகளும் ஒரே குரலில் "வந்தே மாதரம், வந்தே மாதரம்' என்று முழங்கத் தொடங்கினர். அங்கிருந்த காவலர்கள் அவர்களை அமைதியாக இருக்கும்படி கெஞ்சிப் பார்த்தும் விண்ணைப் பிளக்கும் அந்த கோஷம் அடுத்த அரை மணி நேரத்துக்கு ஒலித்தது.

ஆச்சர்யம் அதுவல்ல. லாகூர் பார்ஸ்டல் சிறைச்சாலையைப் போலவே, மேற்கு வங்கத்து அலிப்பூர் சிறைச்சாலையிலும், இந்தியாவின் தென்கோடியிலுள்ள கண்ணனூர் சிறையிலும், ஏனைய பல சிறைகளிலும் 1929 டிசம்பர் 31–ம் தேதி அதேபோல வந்தே மாதரம் கோஷம் எழுப்பப்பட்டதே, எப்படி? யார் சொல்லி அவர்களுக்குத் தகவல் போனது?

இப்போதுபோல தகவல் தொடர்புகள் இல்லாத, ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முற்பட்ட அந்த காலத்தில் விடுதலை வேட்கையும் தேசிய உணர்வும் அவர்களை இணைத்திருக்க வேண்டும்.

மகாகவி பாரதி கூறிய,

'முப்பது கோடி முகம்உடையாள் – உயிர்

மொய்ம்புற ஒன்று உடையாள் – இவள்

செப்பு மொழி பதினெட்டுடையாள், எனில்

சிந்தனை ஒன்று உடையாள்'

என்பதன் பொருள் விளங்குகிறது!

---

**4. பிரமோஸ் ஏவுகணை விற்பனை: இந்தியா–பிலிப்பின்ஸ் விரைவில் ஒப்பந்தம்**

பிலிப்பின்ஸ் நாட்டுக்கு அதிநவீன பிரமோஸ் ஏவுகணைகளைத் தயாரித்து வழங்குவதற்காக, அந்நாட்டுக்கும் இந்தியாவுக்கும் இடையே விரைவில் ஒப்பந்தம் இறுதியாகவுள்ளது.

இந்த ஒப்பந்தம், இந்தியா–பிலிப்பின்ஸ் இடையேயான உறவில் மிகப்பெரிய முன்னேற்றமாகக் கருதப்படுகிறது.

தென்சீனக் கடலில் ஆதிக்கம் செலுத்தும் வரும் சீனாவை எதிர்கொள்வதற்காக பிலிப்பின்ஸ் அரசு தனது கடற்படையின் பலத்தை அதிகரிக்க முடிவு செய்துள்ளது. இதற்காக, இந்தியாவிடம் இருந்து சூப்பர்சானிக் வகை பிரமோஸ் ஏவுகணைகளை அந்நாட்டு அரசு கொள்முதல் செய்யவுள்ளது.

இதுகுறித்து தகவலறிந்த வட்டாரங்கள் வியாழக்கிழமை தெரிவித்ததாவது: பிரமோஸ் ஏவுகணைகளைக் கொள்முதல் செய்வதற்காக, பிலிப்பின்ஸ் அரசின் பட்ஜெட் மேலாண்மைத் துறை சிறப்பு நிதியாக ரூ.189 கோடி, ரூ.224 கோடி ஆகியவற்றைத் தனித்தனியே ஒதுக்கீடு செய்துள்ளது. இது, பிலிப்பின்ஸ் கடற்படைக்குத் தேவையான தளவாடங்களைக் கொள்முதல் செய்வதற்கான முதல்கட்ட நிதியாக இருக்கும்.

ஏவுகணை கொள்முதல் தொடர்பாக, இரு நாட்டு அரசுகளுக்கு இடையே பேச்சுவார்த்தை இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. அடுத்த சில வாரங்களில் அதிகாரபூர்வமாக ஒப்பந்தம் இறுதியாகும் என்று அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்திய– ரஷிய கூட்டு நிறுவனமான பிரமோஸ் ஏரோஸ்பேஸ், சூப்பர்சானிக் வகை பிரமோஸ் ஏவுகணைகளைத் தயாரித்து வருகிறது. ஒலியைவிட கிட்டத்தட்ட 3 மடங்கு வேகத்தில் செல்லும் இந்த ஏவுகணைகளை கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள், விமானங்கள் மற்றும் நிலப்பரப்பில் இருந்து செலுத்த முடியும்.

---

**5. கனடா: 3 இந்திய வம்சாவளியினருக்கு தேசிய விருது**

கனடாவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 3 பேர் அந்த நாட்டின் இரண்டாவது மிகப் பெரிய தேசிய விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:

இந்திய வம்சவளியைச் சேர்ந்த விஞ்ஞானி வைகுண்டம் ஐயர் லக்ஷ்மணன், தொழிலதிபர் பாப் சிங் தில்லான், மருத்துவர் பிரதீப் மெர்ச்சண்ட் ஆகியோர் கனடாவின் இரண்டாவது பெரிய தேசிய விருதான 'ஆர்டர் ஆஃப் கனடா' வுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டுக்கான விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 135 பேரின் பட்டியலில் அவர்களும் இடம் பெற்றுள்ளனர்.

தங்களது துறைகளில் அவர்கள் ஆற்றி வரும் சாதனைகள், அர்ப்பணிப்பு உணர்வு, நாட்டு முன்னேற்றத்துக்கு அளிக்கும் பங்களிப்பு, இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையே பாலமாகச் செயல்படுவது போன்ற காரணங்களுக்காக அவர்களுக்கு அந்த விருது வழங்கப்படுவதாக தேர்வுக் குழு தெரிவித்துள்ளது.

இவர்களில் வைகுண்டம் ஐயர் லக்ஷ்மணன் புகழ்பெற்ற விஞ்ஞானியும் புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்தி வருபவரும் ஆவார்.

நவ்ஜீத் சிங் தில்லான் என்றும் அழைக்கப்படும் பிரபல மனைவணிக தொழிலதிபர் பாப் சிங் தில்லான், சமூக சேவைகளுக்கு நன்கொடைகள் அளித்து வருகிறார்.

குழந்தைகள் மருத்துவத்தில் பிரதீப் மெர்சண்ட் மிகவும் பிரபலமாக செயல்பட்டு வருகிறார் என்று பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

---

**1. சமீப செய்திகளில் இடம்பெற்ற 'ரேணுகாஜி அணை திட்டம்' அமையவுள்ள மாநிலம் எது?**

அ) மகாராஷ்டிரா

**ஆ) ஹிமாச்சல பிரதேசம் ☑**

இ) குஜராத்

ஈ) பீகார்



✓ ₹6,700 கோடி மதிப்பிலான 'ரேணுகாஜி அணை திட்ட'த்திற்கு ஹிமாச்சல பிரதேசத்தின் மண்டியிலிருந்து பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். கிரி ஆற்றின் திட்டம் நிறைவேறியதும், 40 MW மின்னுற்பத்தி நிலையத்தில் 200 மில்லியன் அலகு மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

✓ அணையின் நீர்த்தேக்கக் கொள்ளளவு 498 மில்லியன் கன மீட்டராக இருக்கும், இது, தில்லியின் குடிநீர்த் தேவையில் 40 சதவீதத்தை பூர்த்தி செய்யும்.

---

**2. எந்த மத்திய அமைச்சகத்தின் கீழ், 'போதைப்பொருள் தடுப்புப் பிரிவு' செயல்படுகிறது?**

அ) மத்திய நிதி அமைச்சகம்

**ஆ) மத்திய உள்துறை அமைச்சகம் ☑**

இ) மத்திய வெளியுறவு அமைச்சகம்

ஈ) மத்திய பாதுகாப்பு அமைச்சகம்

✓ நாட்டிலிருந்து போதைப்பொருளை ஒழித்தற்கு அனைத்து மாநிலங்களும் அந்தந்த அதிகார வரம்புகளில் பிரத்யேக போதைப்பொருள் தடுப்பு பணிக்குழுவை உருவாக்கி அறிவிக்குமாறு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கேட்டுக்கொண்டுள்ளார். அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி, இப்பணிக்குழு மாநில அளவில் நார்கோ ஒருங்கிணைப்பு மைய செயலகமாக செயல்பட முடியும்.

---

**3. சாஹிப்சாதா திவாஸ் கொண்டாடப்படும் இந்தியாவின் முதல் மாநிலம் எது?**

**அ) உத்தர பிரதேசம் ☑**

ஆ) மத்திய பிரதேசம்

இ) அஸ்ஸாம்

ஈ) நாகாலாந்து



✓ உத்தரபிரதேச மாநிலம் சமீபத்தில் குருகோவிந்த் சிங்கின் 4 மகன்களின் (சாகிப்சாதாஸ்) தியாகத்தின் நினைவாக சாகிப்சாதா நாளை அனுசரித்தது. சீக்கிய குருக்களின் தியாகம் பள்ளிப் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்று முதல்வர் யோகி ஆதித்யநாத் அறிவித்த 2020ஆம் ஆண்டு முதல் சாகிப்சாதா திவாஸ் அனுசரிக்கப் –படும் இந்தியாவின் முதல் மாநிலமாக உபி ஆனது.

---

**4. இந்திராவதி புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடமெது?**

அ) கர்நாடகா

**ஆ) சத்தீஸ்கர் ☑**

இ) பீகார்

ஈ) மேற்கு வங்காளம்



✓ சத்தீஸ்கர் மாநிலத்தில் இந்திராவதி புலிகள் காப்பகம் சுமார் 2799.08 சதுர கிமீ பரப்பளவில் அமைந்துள்ளது.

✓ சமீபத்தில், 400 சகிமீட்டருக்கும் அதிகமான பரப்பளவைக் கொண்ட இந்தக் காப்பகத்தில் புலிகள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. சமீபத்திய தரவுகளின்படி, அக்காப்பகத்தில் 3 புலிகள் இருந்தன.

---

**5. சமீப செய்திகளில் இடம்பெற்ற எட்வர்ட் ஓ வில்சன் யார்?**

**அ) உயிரியலாளர் ☑**

ஆ) விண்வெளி வீரர்

இ) கிரிக்கெட் வீரர்

ஈ) நடனமாடுபவர்



✓ 'எறும்பு மனிதன்' என்று அன்புடன் அழைக்கப்படும் எட்வர்ட் ஓ வில்சன், ஹார்வர்ட் உயிரியலாளர் மற்றும் பூச்சியியல் வல்லுநர் ஆவார். அவர் சமீபத்தில் தனது 92 ஆம் வயதில் இறந்தார். உயிரியலாளரான இவர் இரண்டு முறை புலிட்சர் பரிசு பெற்ற எழுத்தாளர் ஆவார். 1975'இல் வெளியிடப்பட்ட "Sociobiology: The New Synthesis" என்ற நூலிற்காக உலகம் முழுவதும் கவனத்தைப் பெற்றார்.

---

**6. எத்தனை ஐரோப்பிய நாடுகளைச் சாராத நாடுகள் Europol'இல் உறுப்பினராக உள்ளன?**

அ) 0

**ஆ) 10 ☑**

இ) 20

ஈ) 30

✓ தென் கொரியா அண்மையில் ஐரோப்பாவிற்கு வெளியே யூரோபோலில் இணைந்த 10ஆவது நாடாக மாறியுள்ளது. இது பயங்கரவாதம் மற்றும் பிற சர்வதேச குற்றங்களை எதிர்த்துப் போராடும் ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) சட்ட அமலாக்க ஒத்துழைப்பு நிறுவனமாகும்.

✓ தென் கொரியாவின் தேசிய காவல்துறை முகமை (NPA) இதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன்மூலம் யூரோபோலுடன் இணைந்தது. அது 27 ஐரோப்பிய ஒன்றிய நாடுகளால் ஒருமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

---

**7. அண்மையில் ஒடிஸா கடற்கரையில் பரிசோதனை செய்யப்பட்ட 'பிரலே' என்றால் என்ன?**

**அ) குறுகிய தூரம் செல்லும் எறிகணை ☑**

ஆ) கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை

இ) வான்வழி ஏவப்படும் எறிகணை

ஈ) கப்பவழி ஏவப்படும் எறிகணை



✓ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தால் (DRDO) உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தரையிலிருந்து செலுத்தக்கூடிய 'பிரலே' எறிகணை, ஒடிஸா கடற்கரைப் பகுதியில் உள்ள Dr ஏ பி ஜே அப்துல் கலாம் தீவிலிருந்து வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

✓ இந்த ஏவுகணை திட எரிபொருள் ராக்கெட் மோட்டார் மற்றும் பல்வேறு புதிய தொழில்நுட்பங்கள் அடிப்படையில் இயங்கக் கூடியது. இது 150 முதல் 500 கிமீ தொலைவு

வரை பாய்ந்துசென்று தாக்கக்கூடியது என்பதோடு நடமா–டும் சாதனத்திலிருந்து செலுத்தக் கூடியதாகும்.

---

**8. போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐநா அலுவலகத்தின்படி, அபின் உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள நாடு எது?**



**அ) ஆப்கானிஸ்தான் ☑**

ஆ) இலங்கை

இ) இஸ்ரேல்

ஈ) ஈரான்

✓ போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐநா அலுவலகத்தின்படி, அபின் உற்பத்தியில் ஆப்கானிசுதான் முதலிடத்தில் உள்ளது.

✓ நடப்பு 2021ஆம் ஆண்டில், உலகளவில் சட்டவிரோதமாக உற்பத்தி செய்யப்பட்ட ஹெராயினில் 90 சதவீதத்துக்கும் அதிகமானது ஆப்கானிஸ்தானுடையதாகும். இதன்மூலம் 2001 முதல், உலகின் மிகப்பெரிய சட்டவிரோத போதைப் பொருள் உற்பத்தியாளராக ஆப்கானிஸ்தான் உள்ளது.

---

**9. கலகக்காரர்களிடமிருந்தே சேதமடைடைந்த சொத்துக்–களுக்கான பணத்தை வசூலிக்கும் மசோதாவை சமீபத்தில் நிறைவேற்றிய மாநிலம் எது?**



அ) குஜராத்

**ஆ) மத்திய பிரதேசம் ☑**

இ) உத்தர பிரதேசம்

ஈ) பஞ்சாப்

✓ கலகக்காரர்களிடமிருந்தே சேதமடைடைந்த சொத்துக்க–ளுக்கான பணத்தை வசூலிக்கும் மசோதாவை மத்திய பிரதேச மாநில அரசு சமீபத்தில் நிறைவேற்றியது.

✓ கலவரங்கள் அல்லது மக்கள் போராட்டங்களின்போது ஏற்படும் சொத்துசேதம் தொடர்பான வழக்கை விசாரிக்கும் தீர்ப்பாயம் அமைப்பதற்கும் இம்மசோதா வகை செய்கிறது. இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (OBC) இடஒதுக்கீடு இல்லாமல் பஞ்சாயத்து தேர்தல் நடத்தப்படாது என்று அம்மாநில சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

**10. "ரேடியோ உஜாலா பஞ்சாப்" என்பது எந்த மத்திய சிறையின் பண்பலையாகும்?**



அ) பாட்டியாலா மத்திய சிறை

**ஆ) லூதியானா மத்திய சிறை ☑**

இ) அமிர்தசரஸ் மத்திய சிறை

ஈ) ஜலந்தர் மத்திய சிறை

✓ பஞ்சாபின் லூதியானா மத்திய சிறை தற்போது தனது சொந்த வானொலி அலைவரிசையான "ரேடியோ உஜாலா பஞ்சாப்பைத்" தொடங்கியுள்ளது. இச்சிறையில் உள்ள சிறைவாசிகள் மட்டுமே இந்த ரேடியோ சேனலை நடத்துவார்கள். மேலும் வானொலி நிகழ்ச்சி தொகுப்பாளர்–களாக பணிபுரியும் சிறைவாசிகள் பயிற்சி பெற்றுள்ளனர்.

✓ இந்தத் திட்டம் கைதிகளுக்கு மறுவாழ்வு மற்றும் நலன்புரி வாய்ப்புகளை வழங்குவதை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 2021–இல் இந்தியாவில் 126 புலிகள் உயிரிழப்பு**

இந்தியாவில் நடப்பு ஆண்டில் 126 புலிகள் உயிரிழந்துள்ளதாக தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் தெரிவித்துள்ளது.

இது தொடா்பாக அந்த ஆணைய அதிகாரிகள் மேலும் கூறியுள்ளதாவது:

கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு அதிக எண்ணிக்கையில் புலிகள் உயிரிழந்துள்ளன. இதற்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. வனப் பகுதிகளில் கண்காணிப்பை அதிகரிப்பது, புலிகளை வேட்டையாடுபவா்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்வது உள்ளிட்டவை மூலம் புலிகளைக் காக்க கூடுதல் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மத்திய பிரதேசத்தில் இந்த ஆண்டில் அதிகபட்சமாக 44 புலிகள் உயிரிழந்துள்ளன. இதில் விஷம் வைத்துக் கொல்லப்பட்டது போன்ற சம்பவங்களும் நிகழ்ந்ததாக குற்றச்சாட்டு உள்ளது. ஆனால், அதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. எனினும், இந்தக் குற்றச்சாட்டு தொடா்பாக ஆய்வு நடைபெறுகிறது.

புலிகள் உயிரிழப்பு தொடா்பாக சம்பந்தப்பட்ட மாநில அரசுகளும், தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையமும் தனித்தனியாக விசாரணை நடத்துவது வழக்கம். நாட்டில் உள்ள மொத்த புலிகளில் 30 சதவீதம் புலிகள் சரணாலயங்களுக்கு வெளியே உள்ளன. இதனால், அவற்றின் பாதுகாப்பை உறுதி செய்வதில் பல்வேறு சிரமங்கள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

மத்திய பிரதேசத்துக்கு அடுத்தபடியாக மகாராஷ்டிரத்தில் 26 புலிகளும், கா்நாடகத்தில் 16 புலிகளும் இந்த ஆண்டில் உயிரிழந்தன என்று அதிகாரிகள் தெரிவித்தனா்.

---

**2. உருக்கு துறை செயலராக சஞ்சய் குமார் சிங் பொறுப்பேற்பு**

மத்திய உருக்குத் துறை செயலராக சஞ்சய் குமாா் சிங் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளாா்.

இதுகுறித்து மத்திய உருக்குத் துறை அமைச்சகம் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

உருக்கு அமைச்சக துறையின்புதிய செயலராக சஞ்சய் குமாா் சிங் இன்று (டிச.30) பொறுப்பேற்றுக் கொண்டாா். இவா் இதற்கு முன்பாக, நிா்வாகம் மறுசீரமைப்பு & பொது குறைதீா், ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியா் நலத் துறையின் செயலராக பொறுப்பு வகித்தவா்.

மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த சஞ்சய் குமார் சிங், 1987–ஆம் ஆண்டு ஐஎஸ் பணிக்கு தேர்வானவர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### 3. தமிழ்த்தாய் வாழ்த்து இனி அரசின் மாநில பாடல்!

அப்படி தமிழர்களின் சுவாசமாக திகழும் ஒப்புயர்வற்ற உயர்தனி செம்மொழியாம் இலக்கண, இலக்கிய வளங்கள் நிறைந்த தமிழ் மொழியை தாயாக போற்றும் தமிழர்கள், உள்ளம் மகிழ தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை பாடுவது வழக்கம்.

"நீராரும் கடலுடுத்த நிலமடந்தை கெழிலொழுகும், சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில், தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும், தக்கசிறு பிறைநுதலும் தரித்தனறும் திலகமுமே, அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற, எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே, தமிழணங்கே, உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து, வாழ்த்துதுமே, வாழ்த்துதுமே, வாழ்த்துதுமே, " என்ற பாடலை பாடும்போது தமிழர்களின் நாடி நரம்புகளில் எல்லாம் தமிழ் உணர்வுகள் தழைக்கும்.

இந்த தமிழ்த்தாய் வாழ்த்துக்கு 100 ஆண்டுகளுக்கு மேல் வரலாறு உண்டு. 1913–ம் ஆண்டு கரந்தை தமிழ்ச்சங்கத்தின் 3–ம் ஆண்டு அறிக்கையில் நீராரும் கடலுடுத்த என்ற தமிழ்த்தாய் வாழ்த்து பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது. 1914–ம் ஆண்டு முதல், கரந்தை தமிழ்ச்சங்கத்தின் ஆண்டு விழாக்களில் எந்த நிகழ்ச்சிகள் என்றாலும் சரி தொடக்கத்தில் இந்த பாடலை பாடியே மகிழ்ந்தார்கள். 1967–ல் மறைந்த பேரறிஞர் அண்ணா முதல்–அமைச்சராக பொறுப்பு ஏற்ற நேரத்தில், கரந்தை தமிழ்ச்சங்க நிர்வாகிகள் அண்ணாவிடம் இதை மாநில பாடலாக அறிவிக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். அண்ணா இதுகுறித்து பரிசீலனை செய்து ஆணை பிறப்பிக்கும் முன்பே மறைந்தார். தொடர்ந்து ஆட்சிக்கு வந்த மறைந்த முதல்–அமைச்சர் கருணாநிதி பதவி ஏற்றவுடன், 1970–ம் ஆண்டு நவம்பர் 23–ந்தேதி இந்த பாடலை அனைத்து அரசு நிகழ்ச்சிகளின் தொடக்கத்திலும் பாடும் வாழ்த்து பாடலாக அமையும் என்று கூறி, தொடர்ந்து மெல்லிசை மன்னர் விஸ்வநாதன் இசை அமைக்க, பின்னணி பாடகர்கள் டி.எம்.சவுந்தரராஜன், பி.சுசீலா ஆகியோர் பாடும் 'நீராரும் கடலுடுத்த' என்ற தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் இசை தட்டுகளாக வெளியிடப்பட்டு, அரசு விழாக்களில் பயன்படுத்தப்பட்டு வந்தது.

மனோன்மணியம் சுந்தரனார் இயற்றிய இந்த பாடல் அன்று முதல் எல்லா அரசு நிகழ்ச்சிகளிலும் இசை தட்டுகள் மூலம் ஒலிபரப்பப்பட்டது. இத்தகைய சூழ்நிலையில் சமீபத்தில் ஐகோர்ட்டில் தொடரப்பட்ட ஒரு வழக்கில் நீதிபதி, "தமிழ்த்தாய் வாழ்த்து ஒரு இறைவணக்க பாடல் தான். தேசிய கீதம் அல்ல. இந்த பாடலை பாடும்போது அனைவரும் எழுந்து நிற்கவேண்டும் என்று எந்தவித சட்டமோ, நிர்வாக உத்தரவோ இல்லை" என்று கூறினார். இந்த உத்தரவு வந்த உடனேயே, தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படும்போது அனைவரும் எழுந்து நிற்கவேண்டும் என்ற வகையில், ஒரு அரசாணை வெளியிட முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார். இந்த உத்தரவில், "நீராரும் கடலுடுத்த" தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் தமிழக அரசின் மாநில பாடலாக அறிவிக்கப்படுகிறது. 55 வினாடிகளில் முல்லைப்பாணியில் (மோகன ராகத்தில்) இந்த பாடல் பாடப்படவேண்டும்.

தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் அனைத்து கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளிட்ட பொது அமைப்புகளின் நிகழ்ச்சிகளிலும் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படவேண்டும். இதில் முக்கியமாக, இந்த வாழ்த்து பாடலை இசை தட்டுக்கள் கொண்டு இசைக்கப்படுவதை தவிர்த்து, பயிற்சி பெற்றவர்களால் வாய்ப்பாட்டாக பாடவேண்டும். இந்த பாடல் பாடப்படும்போது அனைவரும் தவறாமல் எழுந்து நிற்கவேண்டும் என்று அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது. பேரறிஞர் அண்ணாவிடம் வைத்த கோரிக்கை மு.க.ஸ்டாலினால் நிறைவேற்றப்பட்டுள்ளது மிகவும் வாழ்த்துக்குரியது. வரவேற்புக்குரியது. தமிழ் மக்கள் நெஞ்சில் தாய்மொழி உணர்வை தட்டி எழுப்ப இந்த உத்தரவு வழிதிறந்துவிட்டது. இந்த பாடலை ஏதோ ஓரிருவர் மட்டுமல்லாமல் அனைத்து விழாக்களிலும் கலந்துகொள்பவர்கள் ஒருசேர பாடினால்தான் போற்றுதலுக்குரியதாக இருக்கும்.

---

### 4. புத்தாண்டில் முதன்முதலாக சிறிய ரக எஸ்.எஸ்.எல்.வி. ராக்கெட்டை விண்ணில் செலுத்துகிறது, இஸ்ரோ

கொரோனா வைரஸ் தொற்றால் நடப்பு 2021–ம் ஆண்டில் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம், இஸ்ரோவின் விண்வெளி திட்டங்களும் பாதித்துள்ளன. இதன் காரணமாக புத்தாண்டில் புதிய வேகம் காட்டுவதில் இஸ்ரோ முழு முனைப்பாக உள்ளது.

விண்வெளிக்கு வீரர்களை அனுப்பி வைக்கும் ககன்யான் திட்டம், புத்தாண்டில் குறிப்பிடத்தக்க திட்டமாக உள்ளது. முற்றிலும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட விண்கலத்தில் விண்வெளிக்கு வீரர்களை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வீரர்களை அனுப்புவதற்கு முன்பாக புத்தாண்டில் ஜூன் மாதத்துக்கு பின்னும், ஆண்டின் இறுதியிலும் என 2 முறை ஆள் இல்லாத விண்கலத்தை விண்ணில் செலுத்த ஏற்பாடு செய்யப்படுகிறது.

அதன்பின்னர், விண்வெளி வீரர்கள் (இந்திய விமானப்படையின் 3 அதிகாரிகள்) விண்கலம் மூலம் 2023–ம் ஆண்டு விண்வெளிக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். இதன் மூலம் புத்தாண்டில் ககன்யான் திட்டம் சிறகுகளை விரிக்கும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. .

ககன்யான் திட்டப்பணிக்காக 4 இந்திய விமானப்படை அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தற்போது பயிற்சியில் உள்ளனர். அவர்களைப் பற்றிய விவரங்கள் ரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. இந்திய ஏவுகணை வாகனத்தில் விண்வெளி வீரர்களை குறைந்த புவி சுற்றுப்பாதைக்கு அனுப்பி அவர்களைப் பாதுகாப்பாக பூமிக்குத் திரும்பக்கொண்டு வரும் திறனை

அடைவதுதான் ககன்யான் கனவு திட்டத்தின் நோக்கம் ஆகும்.

சூரியனை ஆய்வு செய்வதற்காக ஆதித்யா எல்–1 என்ற திட்டத்தை இஸ்ரோ கையில் வைத்துள்ளது. கொரோனாவால் தாமதமாகி வந்த இந்த திட்டமும் புத்தாண்டில் தொடங்கப்படும். ஆதித்யா–எல்1 திட்டம், பூமியிலிருந்து 15 லட்சம் கிலோ மீட்டர் தொலைவில் உள்ள லாக்ரேஞ்ச் பாயிண்ட்– 1 (எல்–1) –ஐச் சுற்றி ஒரு ஒளிவட்டப் பாதையில் செருகப்படும். இது இஸ்ரோவின் 2–வது உயர்நிலை விண்வெளி இலக்குப் பணியாகும்.

புத்தாண்டின் 3–வது காலாண்டு அதாவது செப்டம்பர் மாதத்திற்கு பிறகு சந்திரயான்–3 திட்டத்தை இஸ்ரோ தொடங்க இருக்கிறது. ஏற்கனவே சந்திரயான் 1 திட்டத்தின் மூலம் நிலவின் மேற்பரப்பில் நீர் இருப்பதற்கான ஆதாரங்களைக் கண்டறிவது உட்பட முக்கிய கண்டுபிடிப்புகள் அரங்கேறின.

சந்திரயான் 2 திட்டத்தில், நிலவில் தரையிறங்கி ஆய்வு செய்யும் கருவியான லேண்டர் மற்றும் ரோவர் விபத்துக்குள்ளான நிலையில், ஆர்பிட்டர் மட்டும் நிலவின் மேல்பரப்பில் சுற்றி வட்டமிட்டு ஆய்வு செய்து வருகிறது. அதை சந்திரயான்–3 திட்டத்தில் பயன்படுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது. அதற்கான பணிகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டு உள்ளனர். இது சந்திரயான்–2 போன்ற கட்டமைப்பு தான், ஆனால் அதில் ஆர்பிட்டர் இருக்காது. சந்திரயான்–2–ன் போது ஏவப்பட்ட ஆர்பிட்டர் சந்திரயான்–3–க்கு பயன்படுத்தப்படும். சந்திரயான்–3 திட்டம் 2022–ம் ஆண்டு செயல்படுத்தப்படும்.

குறைந்த புவி சுற்றுப்பாதைக்கு செயற்கைகோள்களை வெற்றிகரமாக விண்ணில் செலுத்துவதில் முன்னோடியாக விளங்கும் இஸ்ரோ, சிறிய செயற்கைகோள்களை எளிதாக விண்ணில் செலுத்துவதற்காக எஸ்.எஸ்.எல்.வி. என்ற சிறிய வகை ராக்கெட்டை உருவாக்கி வருகிறது.

இதனை புத்தாண்டின் முதல் காலாண்டில் விண்ணில் செலுத்த திட்டமிடப்பட்டு உள்ளது. எஸ்.எஸ்.எல்.வி. வகை ராக்கெட்டை பொறுத்தவரையில் 500 கிலோ மீட்டர் தூர சுற்றுப்பாதையில் 500 கிலோகிராம் எடை கொண்ட செயற்கைகோளை சுமந்து செல்லும் திறன் கொண்டதாகும்.

நானோ மற்றும் மைக்ரோ செயற்கைகோள்களை சுமந்து செல்லும் வகையில், மூன்று நிலைகளுடன் அனைத்து திட வாகனமாக எஸ்.எஸ்.எல்.வி. ரக ராக்கெட்டை உருவாக்க ரூ.169 கோடி ஒதுக்கப்பட்டு பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. புத்தாண்டில் இஸ்ரோ புதிய சகாப்தங்களை படைக்கும்.

மேற்கண்ட தகவல்களை இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

---

### 5. பிரபல நியூசிலாந்து கிரிக்கெட் வீரர் ஓய்வு அறிவிப்பு

பிரபல நியூசிலாந்து கிரிக்கெட் வீரர் ராஸ் டெய்லர் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

வரும் சனிக்கிழமை தொடங்கவுள்ள வங்கதேச அணிக்கு எதிரான நியூசிலாந்தின் டெஸ்ட் தொடருக்கு பிறகு டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாகவும், அடுத்த ஆண்டு பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் நடைபெறவுள்ள ஆஸ்திரேலியா மற்றும் நெதர்லாந்து அணிகளுக்கு எதிரான நியூசிலாந்தின் ஒருநாள் தொடருக்கு பிறகு ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாகவும் அறிவித்துள்ளார்.

37 வயதாகும் ராஸ் டெய்லர் இதுவரை 445 சர்வதேச போட்டிகளில் விளையாடியுள்ளார். 18,074 ரன்கள் எடுத்த அவர் 40 சதங்களை விளாசியுள்ளார். மூன்று வகை சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலும் 100 ஆட்டங்களுக்கு மேல் விளையாடிய முதல் சர்வதேச வீரர் என்ற பெருமையையும் ராஸ் டெய்லர் பெற்றுள்ளார்.

---